233



ஊ
ஊஉ,845 ஐ5
எ47.21
208 ஊ25



நடனம்: நடராஜ், உமா & சரஸா

டைரக்ஷன்: ஆர். சந்தர்

கதிர்காம க்ஷேத்திரத்தை முதல் முறையாகத்
திரையில் கண்டு களியுங்கள்

சித்ரகலாவின்

மகத்தான
முதல் வெளியீடு.

ஸ்ரீ குமாரகுரு

டைரக்ஷன்
ஜே. ஸின்ஹா

இப்பொழுது பல
இடங்களில்
வெற்றிகரமாக
நடைபெறுகிறது

நீங்கள் பார்த்தீர்களா?

OFFICE OF TH
28 OCT 194
MADRAS

தயாராகின்றன.

அல்லி .... டைரக்ஷன் R. பிரகாஷ்
தாய் நாடு .... T.S. மணி
அசோகமாலா .... J. ஸின்ஹா

CHITRAKALA MOVIETONE LTD.
MADURA

மைசூர் சமஸ்தானம்
கூர்க், தென் கன்னடம்
பம்பாய் மாகாணம்
(பம்பாய் நகரம் தவிர)

ஸ்ரீ குமரகுருவின்
— விநியோக உரிமை —
கர்நாடகா பிலிம்ஸ்
பெங்களூர் ஸிடி

மங்களகரமான தீபாவளியன்று "எக்கோ"
ரேடியோ மூலம் கேட்டு ஆனந்தம்
அடையுங்கள்

NEW "EKCO" Radios

Model A24 & 26 AC. Sets
5 Valves & 6 Valves

6 Valves 5 PRE SET Bush Buttons

கொலம்பியா & எச். எம். வி.
ரிகார்டுகள்

எலக்ட்ரிக் & மோட்டார்
சாமான்கள்

பெரான்டி & ஜெனித்
ரேடியோக்கள்

இடைக்குமிடம்:—

குப்தா கார்ப்பொரேஷன்
தபால் பெட்டி 35, 17A/428, அருணாசல ஆசாரி தெருவு
சேலம்

208425
சென்னை-600 008

பக்தியை நாடும் ரத்தின ஜோடி!

2 மகோன்னத இசைச்சித்திரங்கள்!!

பக்த

வேமன்னா

பக்த

சாருகதாஸ்

தமிழ் புராணப் படங்கள்

நடிகர்கள் :

பி. யு. சின்னப்பா

கே. மாலதி

(தெலுங்கு சுமதி புகழ்)

எம். ஆர்.

சந்தானலெட்சுமி

பி. பி. ரெங்காச்சாரி

நகைச்சுவை

வி. குமாரசாமி

என். ராஜலெட்சுமி

பி. எஸ். ஞானம்

நடிகர்கள் :

எம். எம்.

தண்டபாணிதேசிகர்

டி. பிரேமாவதி

எம். ஆர்.

சந்தானலெட்சுமி

நகைச்சுவை

வி. குமாரசாமி

என். ராஜலெட்சுமி

பி. எஸ். ஞானம்

★

பாட்டு :

பாபநாசம் சிவன்

டைரெக்ஷன் :

எஸ். நோடானி

தயாரிப்பு :

ரத்னா ஸ்டுடியோஸ்

சேலம்

தமிழ்நாடு, ஸிலோன், மலபார், தென்கன்னடம், பிரஞ்சு இந்தியா,
புதுக்கோட்டை, திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களுக்கு....

தந்தி: "திலகம்"

திலகம் பிக்சர்ஸ்

சேலம்

தபால் பெட்டி நெ. 74

குறைந்த விலையில் பல ரகங்கள்

மதராஸிலும் மற்ற ஜில்லாக்களிலும் உள்ள கூட்டுறவு சங்கக் கடைகளில் சரக்குகள் வெகு சீக்கிரம் விற்பனையாகின்றது. புதிய புதியதாய் அப்பொப்பொழுதுள்ள பாஷனுக்குத் தகுந்தபடி சரக்குகள் கடைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஒரு சிரமமுமில்லாமல் உங்கள் தேவைக்கு சரியானவைகளை எங்களிடமிருக்கும் பலவித ரகங்களில் வாங்கிக்கொள்ளலாம்.

மதராஸ் கூட்டுறவு கைத்தறி துணிகள் வாங்குவதில், நீண்டகால உழைப்பு, கடைசிவரை அழகு, சோபை, அன்றாட உபயோகத்தின் நன்மை, இவைகளைத்தவிர நேராக உங்களுக்கு விற்கப்படுவதால், இதர வியாபாரிகள் லாபத்தைப் போக்கி, குறைந்த விலையில் கிடைப்பதை மறந்து விடாதீர்கள்.

கைத்தறியிலிருந்து நேராக உங்களுக்குத்தான் வேஷ்டிகள் புடவைகள் சட்டைகள் டவல்கள் பிரின்ட்ஸ் சிங்கம்ஸ் சின்ட்ஸ் வீடு அலங்கரிக்கத் துணிகள் மேஜை துணிகள் படுக்கை விரிப்புகள் கைக்குட்டைகள் லுங்கிகள் அங்கவஸ்திரங்கள் கொசுவலைகள் க்வில்ட்ஸ் தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ் கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கொவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 6-A. உட்ஸ் ரோட், மவுண்ட் ரோட், P. O., மதராஸ்.

We send our

heartiest Deepavali Greetings

to all our Customers and

patrons and Wish them one and all

many happy returns

☆

Inserted By :

V. PERUMALL CHETTY & SONS

HIGH CLASS STATIONERS

HOE & CO.

QUALITY PRINTERS OF REPUTE FOR DECADES

MADRAS PENCIL FACTORY

MANUFACTURERS OF PERFECT PENCILS

பங்கஜா மில்ஸ்

லிமிடெட்

(1932-A ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: கோயமுத்தூர்

கோயமுத்தூரில், பேர்பெற்ற மில்களின் வரிசையில்
சேர்ந்த இம்மில் தக்க அநுபவஸ்தர்களால்
நிர்வகிக்கப் பெற்று வருகிறது

ஸ்பின்னிங்

80-நெ. வரை ரிங்கு நூல்

மற்றும் இதே இனத்தில் டப்ளிங்கும் தயாரிக்கப்
படுகிறது. வருடந்தோறும் பங்குதார்கட்கு நல்ல
வட்டி தரப்பட்டு வந்துள்ளது

இந்திய முதல்
இந்திய தொழிலாளர்
இந்திய நிர்வாகம்

↓

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசிய தொழில் ஸ்தாபனமாகும்

ஆதலால், இந்த மில் நூலை அனைவரும் ஆதரியுங்கள்

Managing Agents and Secretaries:—

C.S. RATNASABAPATHI MUDALIAR & SONS,

COIMBATORE

பீதாம்பர மாளிகை

"SILK PARADISE"

☆

எங்களிடம்

ஸ்பெஷலாக

கைத்தறியினுல்

தயாரிக்கப்பட்ட

எல்லாவித

பட்டு & நூல்

ஜவுளி தினுசுகள்

கிடைக்கும்

☆

மதராஸ் பளயகாட் கம்பெனி லிட்.,

3, 4, அம்மன் சன்னதி தெரு,

மதுரை

தலைமை ஆபீஸ் : 31, அரண்மனைக்காரன் தெரு, மதராஸ்

கிளைகள் : கொளும்பு, கண்டி & ரங்கூன்

பாசரஸ்

21

பதிப்பாசிரியர்கள்
எம்.எஸ்.பாசு
ஸ்ரீமதி சாசுவதி பாசு

BASARAS KARYALAYAM

45-46, Armenian St., : : Madras 1

Phone 4037

விரைவில் தயாராகிறது!

ஸ்ரீ கண்ணா பிலிம்ஸ்

(புரோப்ரைடர்ஸ் C.K. & சன்ஸ் புதுக்கோட்டை)

தயாரிக்கும்

திருமழிசை

- ஆழ்வார் -

- இசையரசு -

M.M. தண்டபாணி தேசிகர்

- மற்றும் -

R. பாலசுப்பிரமணியம் — S.V. சுப்பையா
K.K. பெருமாள் — M.R. சுவாமிநாதன்
T.S. துரைராஜ் மாஸ்டர் பத்மநாபன்
M.S. வேலப்பன் வித்வான் சீனிவாசன்
நாராயணசுவாமி — — ப்ரேமாவதி —
தேவசேனா — குமாரி கல்யாணி
சிவபாக்கியம் — — — லக்ஷ்மி

நடிப்பது

கதை வசனம்: P.S. செட்டியார்
பாட்டு: பாபநாசம் சிவன்
சங்கீதம்: S.V. வெங்கட்ராமன்
நடனம்: R.T. கிருஷ்ணமூர்த்தி
ஸ்டுடியோ: ஸோபனசலா

தனபால்

PANI PUBLICITIES

G. K. Vale & Co.

MADRAS & BANGALORE

Specialists in

STUDIO PORTRAITS

இந்த ஈரல் குலை கட்டி வியாதியை ஜம்மியின் **"லிவர்க்யூர்"** தான் நிச்சயமாக குணப்படுத்தும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

மைலாபூர் :: :: மதருஸ்

விரைவில் தயாராகிறது!

ஸ்ரீ கண்ணா பிலிம்ஸ்

(புரோப்ரைட்டர்ஸ் C.K. & சன்ஸ் புதுக்கோட்டை)

தயாரிக்கும்

திருமழிசை

- ஆழ்வார் -

- இசையரசு -

M.M. தண்டபாணி தேசிகர்

- மற்றும் -

R. பாலசுப்பிரமணியம் S.V. சுப்பையா
K.K. பெருமாள் M.R. சுவாமிநாதன்
T.S. துரைராஜ் மாஸ்டர் பத்மநாபன்
M.S. வேலப்பன் வித்வான் சீனிவாசன்
நாராயணசுவாமி ப்ரேமாவதி
தேவசேனா குமாரி கல்யாணி
சிவபாக்கியம் லக்ஷ்மி

நடிப்பது

கதைவசனம்: P.S. செட்டியார்
பாட்டு: பாபநாசம் சிவன்
சங்கீதம்: S.V. வெங்கட்ராமன்
நடனம்: R.T. கிருஷ்ணமூர்த்தி
ஸ்டூடியோ: ஸோபனசலா

தனபால்

PANI PUBLICITIES

G. K. Vale & Co.

MADRAS & BANGALORE

Specialists in

STUDIO PORTRAITS

இந்த ஈரல் குலை கட்டி வியாதியை ஜம்மியின் "லிவர்க்யூர்" தான் நிச்சயமாக குணப்படுத்தும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

மைலாபூர் :: :: மதருஸ்

இந்த இதழில்

பக்கம்

சமர்ப்பணம் ... 14

புதுயுக மனிதன் ... 16

மதுவிலக்கும் பொது ஜன ஆதரவும் ... 17

கலைமகளும் விஞ்ஞான தேவியும் ... 25

பிச்சைக்காரி ... 31

சாமாவின் சபதம் ... 49

ஹம்சாநந்தி ... 55

ஆண் அழகா? பெண் அழகா? ... 65

தங்கச் சிலை ... 74

தீபாவளி 1946ல் ... 83

விழித்த முகம் ... 84

க்யூ வரிசை ... 96

மழையே நில் ... 105

குழந்தை ... 109

பாவம் கோதண்டராமன் 110

அந்த வாழ்வு! ... 116

இளங்கோ வரைந்த
நாட்டியராணி ... 117

புலிக்குப் பிறந்தது ... 122

கிரிஜா எப். ஏ. ... 129

கையெழுத்தும்
தலையெழுத்தும் ... 136

ருத்ரம்மா ... 141

விடுதலை ... 159

ஸில்க் ஜாகெட் ... 166

நாடகம் நடக்கிறது ... 174

கைகேயியின்
பெருந்தன்மை ... 182

சர்வதேச மஹா
சபைகள் ... 192

ரயிலில் ... 200



சமர்ப்பணம்

இப்பொழுது நாம் விடும் மூச்சு சுதந்திர மூச்சு ; நாம் பேசும் பேச்சு சுதந்திரப் பேச்சு. நாம் சுதந்திரக் கோட்டையின் தலைவாசலில் நிற்கிறோம். இந்திய மக்களின் உண்மைப் பிரதிநிதியான ஜவஹர்லால் நேரு சுதந்திர அரசாங்கத்தின் தலைவராக விளங்குகிறார். அரை நூற்றாண்டுக்கு மேலாக அஹிம்ஸா முறையில் சத்தியப் போர் புரிந்து காந்திமகான் நம்மைப் பூரண சுதந்திரத்திற்குத் தயார் செய்து விட்டார்.

இந்த மங்களகரமான சம்பவத்தைப் புனிதமான தீபாவளி தினத்தன்று **பாசரசூ தீபாவளி மலர்** வெளியிட்டுக் கொண்டாடத் தீர்மானித்து மலர் வேலையைத் துவக்கினோம்.

பல இடைஞ்சல்களையும், இடையூறுகளையும் கடந்து ஒருவாறு மலர் வெளியாவது சாத்தியமாயிற்று.

இந்த வருஷத்துச் சுதந்திர தீபாவளி மலர் பிரமாதமாக இருக்கவேண்டும் என்று கனவு கண்டோம். அந்தக் கனவு எவ்வளவு தூரம் பலித்திருக்கிறது என்பது மலரின் இலக்கிய மணத்

தைப் பொறுத்தது. வழக்கம் போல் பிரபல எழுத்தாளர் பலர் நமக்கு விஷயதானம் செய்து மலருக்கு விசேஷ மணம் ஊட்டி யிருக்கின் றனர்.

நமது பிரத்தியேக ஓவிய நிபுணர் "குஞ்சரன்" தீட்டிய அற்புதச் சித்திரங்கள் இந்த மலர் முழு வதும் பிரகாசிக்கின்றன.

இந்த பாசரசு மலரில் விடுபட்டுப் போன சில விசேஷ அம்சங்களைக் குறித்து நேயர்கள் ஏமாற்ற மடையும்படி விட நாங்கள் தயாரா யில்லை. எல்லா அம்சங்களையும் சேர்த்து "**கலை**" விசேஷ மலரில் எதிர் பார்க்கலாம் என்று நேயர்களுக்கு உற்சாக மூட்டுகிறோம்.

ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும் முன்னாலேயே சொல்லி வைக்கிறோம்.

கலை விசேஷ மலரின் விலை ரூ. 10! விலையைக் கண்டு மிரண்டு விடாதீர்கள். கலைக்காக எவ் வளவு கொடுத்தால்தான் என்ன?

வரப்போகும் கலை விசேஷ மலரை ஞாபகப்படுத்திக் கொண்டு இந்த மல ரில் உள்ள குறைகளை யெல்லாம் நேயர்களை மறந்துவிடும்படி கேட்டுக் கொண்டு மலரை உங்களிடம் சமர்ப்பிக்கிறோம்!



ஜே ஹிந்த்!

புதுயுக மனிதன்

யோகி சுத்தானந்த பாரதியார்

[இராகம் : குந்தலவராளி] [ஏக தாளம்]

திரிகி விட்ட மீசையும்,
திண்மலைப் புயங்களும்,
பரிதி போன்ற விழிகளும்,
பார்த்தன் போன்ற பார்வையும்

உறுதியான கைகளும்,
ஊக்கமான கால்களும்,
பொறுமையான செஞ்சொலும்,
பொருமையற்ற நெஞ்சமும்,

வீரர் போற்றும் வீறுடன்
விரோதியஞ்சும் தீரமும்,
சீற்சிறந்த செல்வமும்
சிறந்த செய்ய கல்வியும்

மதிமிகுந்த செய்கையும்,
மறுவிலாத வாய்மையும்,
விதியை வெல்லும் ஆற்றலும்,
விளங்குந் தெய்வ மானிடன்...

பொதுநலப் புலவனை
பூர்ணசக்தி மானவன்
புதுயுகப் புனிதனைப்
புகழ்ந்து போற்றி வாழ்த்துவோம்.

மதுவிலக்கும் பொதுஜன ஆதரவும்

கனம் மந்திரி எம். பக்தவத்ஸலம்

கள் குடி கூடாதென்பது நம் நாட்டில் எல்லோரும் ஒப்புக்கொள்வது. நம் மதங்கள் யாவும் குடியைக் கண்டிக்கின்றன. குடிக்கின்றவர்கள் கூட குடியை யாதரிக்க முன் வருவதில்லை. எனவே மது விலக்கு வேண்டுமென்பது ஏகோபித்த பொதுஜன அபிப்பிராயம். ஆனால் கள்குடி நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து கொண்டே தானிருக்கிறது. குடிப்பழக்கம் இருந்ததால் தான் நம்முன்னோர்களும் அதைக் கண்டித்தார்கள். குடிப்பழக்கத்தினால் விளையும் தீமைகளை நேரில் கண்டே அதைக் கண்டித்தார்கள். ராமாயணத்திலும், மகாபாரதத்திலும், சிலப்பதிகாரத்திலும் குடிப்பழக்கம் எவ்வாறு பெரிய மனிதர்களையும் இழிவுபடுத்தியதென்று எடுத்துக்காட்டப்படுகிறது. பண்டைக் காலத்தில், இப்பழக்கம் மக்களின் பகுத்தறிவுக்கே விடப்பட்டது. தற்கால அரசாங்க முறையில் மது விற்பனை வியாபாரத்தை சர்க்காரே கைக்கொண்டு, தன் வருவாயின் ஒரு பகுதியாக ஆக்கிக்கொண்டது. ஆகையால்தான் சர்க்காரே மதுவை யொழிக்கவேண்டுமென்ற கிளர்ச்சி கிளம்பியது. மேலும், வெகுகாலமாக வேரூன்றிய ஒரு சமூகப் பழக்கத்தை யகற்றவேண்டுமானால், சர்க்காரின் நிர்ப்பந்த முறைகளால்தான் அது முடியும். சீர்படுத்த, நிர்ப்பந்தம் செய்வதில் தவறுதலொன்று மில்லை. எழுத்தறிவு ஊட்ட கட்டாயக் கல்வி வேண்டியதுதானே. எனவே குடிப்பது குற்றமென்ற விலக்குச் சட்டம் செய்ய சென்னை ஜனநாயக சர்க்கார் 1937-வது ஆண்டிலேயே

முன் வந்தது. குடியால் கிடைக்கும் வருமானத்தையும் கைவிட சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது. சர்க்கார் வகுக்கும் திட்டங்களை நிறைவேற்ற எவ்வளவோ பணம் வேண்டியிருக்கிறது. செலவை சமாளிக்கப் புதியவரி போடுவது, மக்களைத்தான் பாதிக்கும். எனினும், குடிப் பழக்கத்தால் பிடிக்கப்படும் மக்களின் நன்மையை யுத்தே சித்து, அவர்கள் தயங்காமல் அளிக்கும் கலால் வரு மானத்தை விட்டுவிட சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. மது விலக்கு ஏற்படுத்துவதால், சர்க்காருக்கு நஷ்டம் வருமான வகையில் மட்டு மல்ல. வெகுநாள் பழக் கத்தை அறவே ஒழிக்க எடுத்துக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளுக்கும் சர்க்கார் செலவு செய்யவேண்டி யிருக்கிறது. அவ்வளவும் செய்வது சர்க்காரின் பொறுப்பு என்றே மக்கள் உணர்கின்றார்கள். எவ்வளவு நஷ்ட மானாலும் செலவானாலும், மாகாணமெங்கும் இப் பொழுதே கள் கடைகளை மூடவேண்டுமென்று மக்கள் கோருகிறார்கள். ஆனால் வருமானக் குறைவும் செலவும் ஒருபுறமிருக்க, மதுவிலக்குச் சட்டத்தை வெற்றிகரமாக அமுலுக்குக்கொண்டு வருவது சர்க்கார் கவனம் செலுத்த வேண்டிய விஷயங்களில் ஒன்று. இதிலுள்ள கஷ்டத்தை யொட்டிதான் சென்னை சர்க்கார் அக்டோபர் 1-ந் தேதி எட்டு ஜில்லாக்களில் மட்டும் மதுவிலக்கு ஏற்படுத்தியது. சேலம் வடஆற்காடு, சித்தூர், கடப்ப போன்ற பழைய மதுவிலக்கு ஜில்லாக்களில், மூடி, திறக்கப்பட்ட கள் கடைகள் மீண்டும் மூடப்பட்டன என்று எங்கும் குதூ கலம். ஏழைக் குடும்பங்கள், குடியில்லாது மிச்சப்படும் காசைக்கொண்டு என்ன வாங்குவது என்று இப்பொழு திருந்தே யோசனை செய்ய ஆரம்பித்திருப்பார்கள். ஆனால், ஒரு பக்கம் கள்ளறக்கன் ஒழிந்தானென்று சந்தோஷமானால், மற்றொரு பக்கம் குடிப்பழக்கத்தினரின் துயரம் பழைய குடிக்காரர்களின் தொல்லையைப் பயன் படுத்திக்கொள்ள ஒரு சாரார் கிளம்புவார்கள். அவர் கள்தான் கள்ள வியாபாரிகள். முன்பு திருட்டுச் சாரா யம் காய்ச்சிப் பணம் சம்பாதித்தார்கள். பிறகு கள்ள மார்க்கெட்டு வியாபாரம் செய்து கொள்ளை லாபம் அடித்தார்கள். இப்பொழுது மதுவிலக்கு ஜில்லாக்களில் குடிப்பழக்கத்தினரின் தொல்லையைப் பயன் படுத்திக்

கொண்டு திருட்டு வியாபாரம் செய்ய முற்படலாம். இதைத் தடுப்பதென்றே சர்க்கார் உறுதி கொண்டிருக்கிறது. இதற்கு இடங்கொடாமலிருப்பது பொது மக்களின் பொறுப்பு மாகும். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற எட்டு ஜில்லாக்களில் கள் கடை சாராயக் கடைகள் மூடப்பட்டதால், சர்க்காரின் கலால் வருமானத்தில் ஐந்து கோடி ரூபாய் இவ்வாண்டிலேயே குறைந்துபோய் விட்டது. சீக்கிரத்திலேயே மதுவிலக்கு சட்டத்தை மாகாணமெங்கும் பரப்பும்போது, சர்க்காரின் வருமானத்தில் பெரும்பகுதி போய்விடும். அதுமட்டு மில்லாமல் மதுவிலக்குச் சட்டத்தை நிறைவேற்றுவதிலேயே, சர்க்காருக்குச் செலவாகிறது. ஆனால் சென்னை சர்க்காருக்கோ, பொதுமக்களுக்குப் பல வசதிகளை ஏற்படுத்த ஏராளமாக பொருள்தேவை பல திட்டங்கள் தயாரித்துக்கொண்டிருக்கின்றார்கள். வெகுகாலமாக கவனம் செலுத்தப்படாத நீர்பாசன வசதிகளை ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுவதற்குமட்டும் கோடிக்கணக்காகப் பணம் வேண்டும். எனினும், மதுவிலக்கை சர்க்கார் ஏன் கொண்டுவரவேண்டும்? கள் கடை சாராயக்கடைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறவரையில் மக்களுக்கு எத்தனை திட்டங்கள் நிறைவேறியும் அவை பலனளிக்காதென்பதுதான் சர்க்காரின் துணிபு. ஒரு வியாதியின் மூல காரணத்தை யுணர்ந்து அதை வேருடனறுக்காமல், எவ்வளவு விலையுயர்ந்த டானிக்குகள் கொடுப்பினும், நோயாளிக்கு எவ்வித குணமுமேற்படாது. அவ்வாறே, கள் குடியினின்று ஏழை மக்கள் விடுபடாத வரையில், அவர்களின் பொருளாதார நிலைமை உயராது. மேலும் ஒரு கிராமத்தில் குடிப்பவர்கள் ஒரு சிலரென்றாலும், அது அக்கிராமத்தையே பாதிக்கிறது. எனவே, குடியை ஒழிப்பதில் குடிப்பவர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கு மட்டும் அக்கரையில்லை. குடி குடியாதவர்களின் பொருளாதார நிலையைப் பாதிப்பதுபோல், மதுவையகற்றுவதில் குடியாதவர்களுக்கும் அக்கரை வேண்டும்.

சென்றமுறை, மதுவிலக்கு சில ஜில்லாக்களில் அமுலுக்கு வந்தபோது, பொதுமக்கள் அளவுகடந்த உத்ஸாகம் காட்டினார்கள். மற்ற ஜில்லாவிலுள்ளவர்கள் தாங்

கள் எப்பொழுது அந்த பாக்கியத்தை யடைவோமென்று ஏங்கினூர்கள். சேலம் ஜில்லாவில் மது விலக்கினுல் விளைந்த நன்மைகளை அதிகாரிகள் விளக்கினூர்கள். பொருளாதார மாறுதலை ஆராய வந்த சர்வ கலாசாலை மாணவர்களும், கடன் பட்டிருந்த ஏழை குடும்பங்கள் எவ்வாறு கடனைத் தீர்த்து பணத்தை மிச்சம் செய்து சேமித்து, தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொண்டார்கள் என்று எடுத்துக்காட்டினூர்கள் குடிப்பழக்கத்தால் பீடிக்கப்படாதவர்களும் மதுவிலக்கின் பலனை அனுபவித்தார்கள். எனினும், குடி அடியோடு மதுவிலக்கு ஜில்லாக்களைவிட்டு அகலவில்லை. சில விடாக்குடியர்கள் ஆற்றைக்கடந்து அப்புறம் போய் குடித்துவிட்டு வந்தார்கள். ஒரு சிலர் திருட்டுச் சாராயம் காய்ச்சி, தாங்களும் குடித்து பணமும் சம்பாதித்து வந்தார்கள். குற்றச் செயல்களையகற்ற மதுவிலக்கு என்றல் மதுவிலக்குக் குற்றம் என்று புதிய குற்றம் தோன்றியது. அக்குற்றத்தை செய்கின்றவர்களுக்கும் தண்டனையளிக்கப்பட்டது. இப்பொழுதும் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படுகின்ற குற்றவாளிகளுக்கென்று சர்க்காருக்கு விசேஷ சிறைச்சாலைகள் கூடவேண்டி இருக்கிறது. சர்க்கார் தம் வருமானத்தையும் விட்டுக்கொடுத்து பூர்ண மதுவிலக்கு ஏற்படுத்தியும், திருட்டுத்தனமாகக் குடிக்கின்றூர்களென்றல், மதுவிலக்குச் சட்டம் வந்து என்ன பயன்? சர்க்கார் கடைகள் மட்டும் மூடப்பட்டால் போதாது. ஏழை மக்களை கள் குடியினின்று மீட்கவேண்டுமென்பதே சர்க்காரின் நோக்கம். மது விலக்கை எல்லோரும் குதூகலத்துடன் வரவேற்றும், அதன் நன்மைகளை பல குடும்பங்கள் அனுபவித்தும், ஏன் கள்ளறக்கன் அடியோடு மாளவில்லை. அந்த அறக்கனைக் கொல்லுவது சுலபமாகவில்லை. மாண்டவன் உயிர்பிழைத்து எழுந்திருக்கிறன். கிராமத்திலிருந்து அடிபட்டு விழுந்து, காட்டுக்கும் மலையடிவாரத்திற்கும் சென்று மறைகிறன். அங்கிருந்து இரவில் சஞ்சாரம் செய்கிறன். அவனுடைய ஆயுதங்கள், பழைய குடியை நினைத்துக்கொண்டு, மீண்டும் குடிக்கப்பார்க்கின்றவர்களும், திருட்டுச் சாராயம் காய்ச்சி, இந்த இழிவான முறைகளில் பணம் சம்பாதிக்கப் பார்க்கிற கசடர்களுமே. ஒரு புனித கைங்கர்யத்திற்கு

பாதகம் விளைவிக்கும் இவர்கள் சமூக விரோதிகள்; இவர்களுக்கு இடங்கொடாமலிருப்பது எல்லோருடைய கடமையுமாகும். சர்க்கார் எவ்வளவு கடுமையான சட்டம் விதிகளும் செய்கின்ற போதிலும், அவை மட்டும் போதுமா? கொலைக்குப் பழி தூக்கிலிடும் சட்டம் அமுலிலிருக்கும் பொழுதும், கொலைக்குற்றம் நிற்கவில்லை. அல்லது குற்றங்களைக் கண்டு பிடித்து ஒழுங்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு அதிகாரிகளாலும் குற்றங்களை அடியோடு தவிர்க்க முடியாது. ஒரு குற்றத்திற்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. குற்றஞ் செய்ததாக நிரூபிக்கப்பட்டவன் சிறைக்கு மனுப்பப்படுகிறான். எனினும். புதிதாகக் குற்றஞ் செய்கின்றவர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்ளலாமென்று நம்பியே தொடர்ந்து குற்றஞ்செய்கிறார்கள். அவர்களும் அகப்பட்டுக் கொண்டால். மற்றவர்கள தப்பித்துக் கொள்ளலாமென்று நினைக்கின்றார்கள். இவ்வாறு குற்றம் தவிர்க்கப்படாமல் செய்யப்படுகிறது மது விலக்குச் சட்டம் அமுலுக்குக் வந்ததில் கள் சாராயக்கடைகள் மூடப்பட்டு, குடி ஒழிந்தது ஒரு புறம்; மற்றொருபுறம், சில விடாக்குடியர்கள் ரகசியமாகக் குடித்து வருவது; வேறு சிலர் ரகசியமாக மதுவை உற்பத்தி செய்து வியாபாரம் நடத்துவது; அகப்பட்டுக் கொண்ட சிலர் தண்டிக்கப்பட்டு சிறை வாசம் செய்வது; இதுதான் மதுவிலக்கின் உருவமென்றாலும், சர்க்கார் தம் மதுவிலக்குக் கொள்கையினின்று விலகப் போவதில்லை. ஆனால், மதுவிலக்கின் பரிபூரண பலனை ஏழை மக்கள் அனுபவிக்க வேண்டுமென்பது சர்க்காரின் கவலை; அதுவே பொது மக்களின் அக்கறை. எனவே திருட்டுச் சாராயம் காய்ச்சுவதற்கும் ரகசியமாகக் கள் இறக்குவதற்கும். மறைந்து குடிப்பதற்கும் சற்றுப் நாம் இடங் கொடுக்கக்கூடாது. ஆனால் இதைச் சர்க்காரும் சர்க்கார் அதிகாரிகளுமே சாதிக்க முடியாது. இந்தப் புனித கைங்கர்யத்திற்கு. பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. அது இல்லையென்றால் மது விலக்குத் திட்டத்தில் முழுவெற்றி ஏற்படாது. எங்கு பார்த்தாலும் உத்ஸாகம் காணப்படுவது உண்மைதான். மதுவிலக்கு ஜில்லாக்களில் மக்கள் காட்டுகிற ஆர்வாரத்தையும்

வெற்றிகரமாக நடத்தவேண்டுமென்ற கவலையையும் நானே நேரில் கண்டேன். ஆனால் இதுமட்டும் போதாது. அதிகாரிகள் மூலம் எதிர்பார்க்கப்படுகிற வேலைகளை பொது மக்களே மேற்கொள்ளவேண்டும் ஒரு கிராமத்தில் இன்னும் யார் குடிக்கின்றார்கள், அல்லது குடிக்கப் பார்க்கின்றார்கள், என்பது அதிகாரிகளை விட, கிராம வாசிகள்தான் நன்கு தெரிந்து கொள்ள முடியும். இன்னும், குடிக்கின்றவன் எங்குபோய் குடித்து வருகிறான் என்பது கிராமத்திலுள்ளவர்களுக்கே சுலபமாகப் புலப்படும். இரகசியப் போலீசாரைவிட. கிராமவாசிகளே, இது விஷயத்தில் புலன் விசாரிக்கக்கூடியவர்கள். கிராமக்கட்டுப்பாட்டை, கெட்டவழியில் பயன்படுத்திக் கொள்ளுவதால், எத்தனை கொடுங்குற்றங்கள் கண்டு பிடிக்கப்படாமல், குற்றவாளிகள் மேலும் சமூகத்திற்குக் குற்றஞ் செய்ய தப்பித்துக்கொள்ளுகிறார்கள். அவ்வாறே, எங்கு திருட்டுச் சாராயம் காய்ச்சினாலும். கிராமவாசிகளுக்குத் தெரியாமல் போகாது. வேண்டுமென்றே, கண்டுபிடிக்க அக்கரை கொண்டவர்கள் தெரிந்து கொள்ளலாம். விவரங்கள் புலப்பட்டதும், அதிகாரிகளுக்குத் தெரிவித்து நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளச்செய்யலாம். குற்றம் இனி எப்படியும் கண்டு பிடிக்கப் படுமென்று ஏற்பட்டால், யார் குற்றஞ் செய்யத் துணிவார்கள். யாரை ஏமாற்றினாலும், உள்ளூர் வாசிகளை ஏமாற்ற முடியாதென்பது குற்றவாளிகளுக்குத் தெரியும். ஆனால், சிலர் நினைக்கலாம், "நமக்கு ஏன் இந்தத்தொல்லை? குற்றஞ் செய்கின்றவர்கள் நம்மை பாதிக்கவில்லை. ஏன் நாம் அவர்களைக் காட்டிக்கொடுக்கவேண்டும்?........." என்று மதுவிலக்குக் குற்றம் செய்யப்பட்டு கள் குடி தாண்டவமாடுகிறதென்றால், அது எல்லோரையும்தான் பாதிக்கும். தவிர, இந்த கொடிய குற்றஞ் செய்கின்றவர்களைப்பற்றி தெரிந்தும், வெளிப்படுத்தவில்லை என்றால். மகாபாதகமென்றே சொல்லவேண்டும். எங்கோ திருட்டுச் சாராயம் காச்சப்படுகிறதென்று தெரிந்தால் அதைப்பற்றி புலன் விசாரித்து அதை வெளிப்படுத்துவது, கிராமவாசிகளின் கடமையாகும். இதைச் செய்யாதது ஒரு குற்றமென்றே சொல்லுவேன். இது விஷயத்தில் தாட்சண்யத்திற்கு சற்றும்

இடமில்லை. சமூகத்திற்கு விரோதமாக பாதகத் தொழிலைப்புரிகின்றவர்களிடம் ஏன் அனுதாபம்? கிராமவாசிகள் கண்ணும் கருத்துமாக இருந்து, இக்குற்றங்களை வெளிப்படுத்துவது, இக்குற்றவாளிகளுக்கே நன்மைபுரிவதாகும். கிராமத்தில், தாட்சண்யமின்றி ஊக்கத்துடன் கவனிக்கின்றார்கள் என்று தெரிந்தால், யாரும் திருட்டுச்சாராயம் காய்ச்சத் துணியமாட்டார்கள். நிச்சயமாக கண்டு பிடிக்கப்படுவார்களென்றால், கிடைக்கும் தண்டனை அவர்களை அச்சமுறச் செய்யும். தப்பித்துக்கொள்ள முடியாதென்பதை மட்டும் அவர்கள் உணரச் செய்யவேண்டும். எங்கோ மறைந்து காட்டிலும், மலையடிவாரத்திலும் மறைந்து காய்சினாலும், தேடி பிடித்து விடுவார்களென்று கள்ளரக்கனின் சகாக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

அவ்வாறே குடியர்கள் விஷயத்திலும் சற்றும் இரக்கத்திற்கு இடமில்லை. அவர்களின் விமோசனத்திற்கு ஒரு சட்டம். அந்தச் சட்டத்தை நிறைவேற்ற, சர்க்கார் ஏராளமாகப் பணம் செலவு செய்கின்றார்கள் ; தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியையும் இழந்து விடுகின்றார்கள். இவ்வளவு செய்தும் திருட்டுத்தனமாக ஒரு சிலர் குடிப்பது பெருங்குற்றம். இவர்கள் மீது தாட்சண்யத்திற்கு இடமில்லை. இவர்கள் தங்கள் குடும்பங்களுக்கு மட்டுமல்லாமல், சமூகத்திற்கும் சர்க்காருக்கும் கொடிய விரோதிகள். மாண்ட கள் அறக்கனுக்கு உயிர் பிச்சை கொடுக்கின்ற இவர்களை, கிராமவாசிகள் தயங்காமல் வெளிப்படுத்த வேண்டும். இவர்களே திருட்டுச் சாராயம் காய்ச்சுகின்ற பாதகர்களுக்கு ஆதரவளிக்கின்றவர்கள். எனவே, இவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதில் தவறுதலொன்றுமில்லை. ஆனால், இக் குடியர்களின் சங்கடத்தை சற்று நாம் கவனிப்போம். பழக்கத்தை விடுவது எல்லோருக்கும் கஷ்டம். அதிலும் கெட்ட பழக்கத்தை விடுவது ரொம்ப கடினம். நல்ல பழக்கம் போனால், சுலபமாக திரும்பி வராது ; கெட்டப்பழக்கமோ சுலபமாக விடுவதில்லை ; நம்மையறியாமல் நம்மை மீண்டும் பற்றிக்கொள்ளப் பார்க்கும்போதுதான், பழைய குடியன் எங்காகிலும் கிடைக்காதா வென்று அலைகிறான். இவனைப்பார்த்து,

பேபி ருக்மணி, குமாரி ருக்மணி, மிஸ் ருக்மணி எல்லாம் இவர் தான்



பேபி ருக்மணி, குமாரி ருக்மணி, மிஸ் ருக்மணி எல்லாம் இவர் தான்

சித்ரகலாவின் நக்ஷத்திரம் எம். ஆர். சுந்தரி



தமிழ்ப்பட உலக "செல்லம்"

"சரி, பாடவாரம்பிக்கலாமே!" சரவணபவா பிக்சர்ஸ்
ஏகம்பவாணனில் சீனு

"நாம் இருவர், நான் ஒன்று டெலிபோன் ஒன்று"—"நாம் இருவர்"ஸ்
ஸ்ரீமதி டி. ஏ. ஜெயலக்ஷ்மி

தமிழ்ப்பட உலகத்து ஒரே வில்லன் பாஸ்யு

திருமழிசை ஆழ்வாரில் தேவசேனா

கைகளைத் தூக்கி, கண்களைச் சுழற்றி நடனம் ஆடுகிறார் குமாரி கல்யாணி
"திருமழிசை ஆழ்வாரில்"

கைகளைத் தூக்கி, கண்களைச் சுழற்றி நடனம் ஆடுகிறார் குமாரி கல்யாணி
"திருமழிசை ஆழ்வாரில்"

கலைமகளும் விஞ்ஞானதேவியும்

பி. ஸ்ரீ.

"இந்துக்களுக்கு விஞ்ஞான மனப்பான்மை கிடையாது, மறுலோக மனப்பான்மைதான் உண்டு" என்று வாதிப்பவர்களை நாம் அடிக்கடி சந்திக்கிறோம். "வானம் பார்த்த வண்ணம் பூமியில் நடப்பவர்கள் இடறி விழுவார்கள், வழுக்கி விழுவார்கள்; நகர வீதிகளிலே மோட்டார் எமனுக்கு இரையாவர்" என்றெல்லாம் பரிகசிக்கிறார்கள். ஆனால் இத்தகைய குற்றச்சாட்டு நியாயமானதன்று. இந்து அறிஞர்களின் வேதாந்த மனப்பான்மை, விஞ்ஞான மனப்பான்மைக்காவது லௌகிக ஞானத்திற்காவது முரண்பட்டதன்று. இந்தியாவின் கலைமகள் விஞ்ஞான தேவியாகவும் காட்சியளித்தாள் என்று கருதுவது தவறாகாது.

பண்டைக்காலத்திலேயே இந்தியா விஞ்ஞான மனப்பான்மையை வளர்த்து வந்தது. இந்தியாவின் பழைய நாகரிகம் எகிப்து நாகரிகத்திற்காவது, பழைய சுமேரிய நாகரிகத்திற்காவது பிற்பட்டதன்று: மொஹெஞ்-சதரோவிலும் ஹரப்பாவிலும் கண்டு பிடித்த புதை பொருள்கள் இந்தியாவின் அதிபுராதன விஞ்ஞான மனப்பான்மைக்கும் சான்று தருகின்றன அப்புதை பொருள்களிலிருந்து, சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியர்களின் வாழ்க்கை நாகரிக முறையில் ஒழுங்கு செய்யப்பெற்றிருந்ததென்று தெரிகிறது. அவ்வாழ்க்கை முறை, அக்காலத்திலேயே ஓரளவு விஞ்ஞான வளர்ச்சி இருந்திருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுகிறது

ஐரோப்பா வர்ணப் பூச்சும் கொச்சைப் பேச்சுமாக இருந்த காலத்திலேயே நம்மக்கள் சிந்து நதிக்கரையிலும்

கங்கா தீரத்திலும் காவேரி தாமிரபருணி தீரங்களிலும் நாகரிக வாழ்க்கை நடத்தி வந்தார்கள். இது இங்கே பழமை விரும்பிகள் பேசும் பெருமைப் பேச்சன்று. கணிதம் வான நூல், ரஸாயனம், உலோக நூல், மருத்துவ நூல் முதலான அறிவுத் துறைகளில் துணிவாக இறங்கி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தவர்களை 'வானம் பார்த்து நடந்து வழுக்கி விழுந்தவர்கள்' என்ற சிறுமைப் பேச்சைக் கண்டிக்கத்தான் இப்படியும் பெருமையை ஞாபகப் படுத்திக் கொள்கிறோம். இந்த ஞாபகம், இந்தியாவின் புதிய விஞ்ஞானப் பெருமைக்கும் ஒரு தூண்டுகோலாக உதவக்கூடியது தான்.

பொதுவாகக் கூறுமிடத்து, தென்னிந்தியர் அதிக அளவில் விவசாயம் வாணிபம், முதலான தொழில் முறைகளையும், வட இந்தியா அதிக அளவில் தத்துவ சாஸ்திரம், கணிதம், வான நூல் முதலான கலைகளையும் வளர்த்து வந்தன என்று ஊகிக்கலாம்.

தத்துவ சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற இந்தியர்கள் கணித சாஸ்திரத்திலும் உன்னத நிலையையடைந்து பீஜ கணிதத்திலும் வான சாஸ்திரத்திலும் பல நூற்றாண்டுகளாக உலகத்திற்கே வழிகாட்டி வந்தார்கள். க்ஷேத்திர கணிதத்தில் கிரீஸ் வழிகாட்டியது போல், இந்தியா பீஜ கணிதத்திலும், பொதுவாகக் கணிதத்தின் முக்கிய அம்சங்களிலும் வழிகாட்டியாக விளங்கியது. பீஜ கணிதத்தை உண்மையாகக் கண்டு பிடித்தவர்கள் இந்திய அறிஞர்கள்தாம் என்பதை ஆராய்ச்சிக்ரகாரர் ஒப்புக்கொள்கிறார்கள்.

கி. பி 5-ம் நூற்றாண்டில் ஆரியபட்டர் பிரசித்தி பெற்ற வானசாஸ்திரியாகத் திகழ்ந்தார். அடுத்த நூற்றாண்டில் வராகமிகிரரும், அதற்கு அடுத்த நூற்றாண்டில் பிரம்மகுப்தரும் வானசாஸ்திர அறிவை வளர்த்து வந்தனர். திருஞானசம்பந்தர் வாழ்ந்த ஏழாம் நூற்றாண்டிலேதான் வானசாஸ்திரியான பிரம்மகுப்தரும் வாழ்ந்தார். வான சாஸ்திர அறிவு திருவள்ளுவர் காலமாகிய ஐந்தாம் நூற்றாண்டு முதல் ராமாநுஜர் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் நமது நாட்டிலே வளர்ந்தோங்கி வந்தது.

ரஸாயன சாஸ்திரத்திலும் பழைய இந்தியர்கள் சிரத்தை கொண்டிருந்தனர். அணுவைப்பற்றிய ஆராய்ச்சியை ஏதோ ஒரு விதமாய்ச் செய்திருந்தார்களென்று ஊகிக்கலாம். கி.பி. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த நாகார்ஜுனன் பல ஆண்டுகளாக ரஸாயன ஆராய்ச்சி செய்து பல ரசாயன நூல்களையும் எழுதி வைத்திருக்கிறுன்.

வைத்தியத் துறையோ கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே நம்மவர்களுக்குப் பரிசயம்தான். ஆதி வேதமாகிய ரிக் வேதத்திலே வைத்திய மூலிகைகளின் உபயோகம் பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆயுர்வேதம் என்று வைத்திய நூலுக்குப் பெயர் வழங்குவதிலிருந்தே நம்மவர்கள் ஆயுளையும் ஆரோக்கியத்தையும் போற்றினுர்கள் என்றும், வைத்தியத்தை வேத சமானமாக மதித்தார்களென்றும் அறிந்துகொள்ளலாம். சாரகர் என்ற வைத்திய சாஸ்திரியும், சுஷ்ருதர் என்ற ரண வைத்தியரும் கிறிஸ்துவுக்கு முன் வாழ்ந்தவர்கள். வைத்தியக் கலையும் பன்னிரண்டாம் நூற்றுண்டுவரையில் நமது நாட்டிலே ஆராய்ச்சி முறையில் வளர்ந்தோங்கியது. நமது வைத்தியக் கலை எகிப்து, கிரீஸ், ரோம், அரேபிய நாடுகளிலும் பரவியது.

கி. பி, பதின்மூன்றும் நூற்றுண்டுவரையில்—அலாவுடின் கில்ஜியின் படைத் தலைவனுன மாலிக்காபூர் தென்னிந்தியாவிற்குள் படையெடுத்து வந்த காலம் வரை—விஞ்ஞான ஆராய்ச்சி தடைப்படவில்லை என்று கருதலாம்.

அன்னியர் படையெடுப்பு, உள்நாட்டுப் படையெடுப்பு முதலான காரணங்களால் விஞ்ஞான வளர்ச்சி குன்றிப் போயிற்று. மகம்மதியர் ஆட்சியிலும் மொகலாயர் ஆட்சியிலும் பழைய நூல்களுக்கு வியாக்கியானங்கள் ஏற்பட்டன. ஆனல் அசல் ஆராய்ச்சி தடைப்பட்டதென்றே கருத வேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவின் க்ஷீணகதியைத் துரிதப்படுத்தியது; அடிமைத்தளை நமது நாட்டிலே விஞ்ஞான தேவிக்கும் இடமில்லாமல் செய்து விட்டது.

ஐரோப்பாவில் விஞ்ஞானதேவி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாய் வளர்ந்து வந்த காலத்திலும், நம்மவர்கள் குமாஸ்தாக் கல்வியைக் கற்று அடிமை - மனப் பான்மையைத்தான் வளர்த்துக்கொண்டார்கள்.

19-ம் நூற்றூண்டின் இறுதியை ஐரோப்பாவின் பகுத்தறிவு - யுகம் என்று சொல்லலாம். அக்காலத்திலே சொற்ப அளவில் சிற்சிலர் விஞ்ஞான முயற்சிகளை இந்நாட்டில் மேற்கொள்ளத் துணிந்தபோதிலும் அவை விசேஷ நற்பயன் அளிக்கவில்லை. இந்த இருபதாம் நூற்றூண்டுத் தொடக்கத்திலேதான் தென்னிந்தியப் பேரறிஞரான ஸர். சி வி. ராமன் முதலானவர்கள் விஞ்ஞான தேவியை உள்ளபடி ஆராதித்து இந்தியாவுக்குப் புகழ் தேடிக் கொடுத்தனர். நோபல் பரிசுபெற்ற சர். ஸி. வி. ராமன் பெயர் இன்று உலகப் பிரசித்தி பெற்றிருக்கிறது. தத்துவ சாஸ்திரம், சமய ஞானம் முதலான துறைகளில் மட்டுமல்ல, விஞ்ஞானத் துறையிலும் இந்தியா எந்த நாட்டுக்கும் பின்வாங்க வேண்டா என்பதை இன்றைய உலகம் நன்கு உணர்ந்திருக்கிறது.

இப்போது வைரமணிகளை ஆராய்ந்து வரும் ஸர். சி. வி ராமனும், கணித மேதாவியான (காலஞ் சென்ற ராமானுஜம்) போன்றவர்களும் தென்னிந்தியாவின் பெயரையும் புகழையும் விஞ்ஞானத் துறையில் பிரசித்தமாக்கி விட்டார்கள் என்பதை அறியாதார் யார்?

அமெரிக்காவும் ஐரோப்பாவும் அடைந்திருக்கும் விஞ்ஞான முன்னேற்றத்தை இந்தியா இன்னும் அடையவில்லை என்பது உண்மைதான். எனினும் விஞ்ஞான தேவியின் வழிபாடு நாளடைவில் நமது நாட்டிலும் அதிகரிக்குமென்பது திண்ணம். விஞ்ஞானத்தை மறந்த கலைமகளால் மாத்திரம் நமது நாடு முன்னேற முடியாது.

ஆனால் கலைமகள் விஞ்ஞான தேவிதானா? இயற்கையோடு போராடி எத்தனையோ வெற்றிகளை அடைந்து வரும் விஞ்ஞான சக்தி சென்ற யுத்தத்திலே எவ்வளவு அழிவைச்செய்து விட்டது.

அறிவிலே உயர்ந்த மனிதன் ஒழுக்கத்திலே உயர்ந்து விளங்குகிறானா? அறிவு வன்மை ஒழுக்க வன்மையைத் தூண்டுகிறதா? "ஓ பரிகசிக்கும் வாழ்க்கையே! நீ

எங்கே போகிறாய், அதிருப்தியுள்ள ஆத்மாவே ஏன் அப்படிப் போகிறாய்' என்று அமெரிக்காவின் நவயுகக் கவிஞரான வால்ட் விட்மன் கேட்கிறான். இக்கேள்விக்குத் தற்கால நாகரிகம் என்ன பதில் அளிக்க முடியும்? "வேகமாக ஓடிவந்தேன்; ஆகாய விமான வேகத்திலே வந்து விட்டேன். ஆம், நாசப் படுகுழியை நோக்கி. அப்படுகுழியின் ஓரத்திற்கே வந்துவிட்டேன்" என்று தான் நாகரிகம் பதில் சொல்லமுடியும்.

இந்த விஞ்ஞான நாகரிகம் நமது நாட்டிலும் பழைய மும்மூர்த்திகளை மகுடபங்கஞ் செய்துவிட்டுப் பொருள் போகம் வேகம் என்ற புதிய மும்மூர்த்திகளை வழிபடுமாறு தூண்டுகிறது. கலைஞர்கள் வழிபடும் உண்மை நன்மை அழகு என்ற மும்மூர்த்திகளையும் மகுடபங்கஞ் செய்து துரத்திவிடப் பார்க்கிறது. சென்ற முப்பது வருஷங்களாக விஞ்ஞானம் மேற்கே வளர்ந்து வளர்ந்து தான் வளர்த்த நாகரிகத்தையே கொலைசெய்துவிடப் பார்க்கிறது; நமது நாட்டிலும் சுயநலத்தைப் பெருக்கி, நமது குலதனமாகிய ஆத்ம ஞானத்தையும் அழித்துவிடப் பார்க்கிறது.

ஏகாதிபத்தியம், எதேச்சாதிகாரம், முதலாளிவர்க்கம், நிறத்திமிர், இனத்திமிர் முதலான எத்தனை கோர சிருஷ்டிகளை விஞ்ஞானதேவி படைத்து விட்டிருக்கிறாள்! ஜீவகாருண்யம் அல்லது அஹிம்ஸா தர்மம் பலவீனமாகவும் கோழைத்தனமாகவும் கருதப்படுகிறது. 'மத நம்பிக்கையே மூட நம்பிக்கைதான்! என்று கருதப்படுகிறது. மதத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் போராட்டம் நடைபெற்று வருவதாகவும், அப்போராட்டத்தில் விஞ்ஞான தேவி சமய ஞானத்தைக் கொன்றுவிட்டதாகவும் பிரசாரம் செய்யப்படுகிறது. 'கடவுளே புரோகிதனுடைய சிருஷ்டிதான்!' என்ற கொள்கை நமது நாட்டிலும் பரவி வருகிறது. ஆசையைப் பெருக்கி இன்ப வாழ்வு வாழ்வதும், 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்!' என்று கருதுவதும் புதிய புருஷார்த்தமாக உபதேசிக்கப் படுகிறது. இதனால், சுதந்திரம் உதயமாகிவரும் இந்நாளிலும் நமது நிலை பரிதவிக்கத் தக்கதாகவே இருக்கிறது.

விஞ்ஞானத்துடன் கவிதை முதலான கலைகளையும் நமது பண்பாட்டுக்கு இசைந்தபடி வளர்த்துக்கொள்வது இந்நிலைக்கு ஒரு மருந்தாகும். சமயஞானம் கலைஞானத்திற்கு இன்றியமையாதது என்பதையும் நன்குணர்ந்து கொள்ள வேண்டும். "சமயம் என்பது உள்முகமாகச் செல்லும் கலைதான்! கலை என்பது வெளிமுகமாகச் செல்லும் பக்திதான்" என்று கூறிய பெரியாரின் கொள்கை உண்மையினும் உண்மையானது.

விஞ்ஞானம் அறிவைக் கூர்மை செய்யும் ஆம். மூளையை அபாயமாய்க் கூர்மை செய்துவிடும் கலையும் சமயமும்தான் இதயத்தைப் பண்படுத்த வேண்டும். உண்மையைக் கண்டுகொள்வது விஞ்ஞான தேவியின் ஏகபோக உரிமையன்று கலைகளும் உண்மையின் அம்சங்களைக் காண்கின்றன. உயர்ந்த கவிஞனும், பக்தனும், ஞானியும் தங்கள் உள்ளொளியின் பயனாக உண்மையைக் கண்டு கொள்கிறார்கள். ஆம், பகுத்தறிவு கொண்டு விஞ்ஞானிகள் சிரமப்பட்டுக் காணும் உண்மையைப் பளிச்சென்று கண்டு கொள்கிறார்கள்.

உண்மைக்கு எத்தனையோ முகங்கள், எத்தனையோ குரல்கள்! கலைஞனும், கவிஞனும், சமய ஞானியும், விஞ்ஞானியும் உண்மையைப் பிரதிபலிப்பவர்களே! அதை அறிஞர்கள் பலவாகக் கூறுகின்றனர்" என்று பழைய வேத முனிவர் கூறியது இந்த விஞ்ஞான யுகத்திலும் நல்வழி காட்டத் தக்கதுதான்.

எங்கும் நிறைந்த உண்மைப் பொருளை உணர்ந்து பன்மையில் ஒருமையும் ஒருமையில் பன்மையும் கண்டு பக்தியுடனும் தியாகபுத்தியுடனும் வாழ்வதே பெருவாழ்வு—உண்மையான நாகரிக வாழ்வு. போக வாழ்வைக் காட்டிலும் தியாக வாழ்வே மேலானது; செருக்கைக் காட்டிலும் பணிவே சிறந்தது, பொருளைக் காட்டிலும் அருளே மேலானது என்ற நம்பிக்கையுடன் வாழ்வது ஒரு மனிதனது தனி வாழ்விற்கு மட்டிலுமல்ல, சமுதாய வாழ்விற்கும் தேசியப் பெருவாழ்விற்கும் இன்றியமையாதது. இத்தகைய வாழ்வே கலைமகளின் உண்மையான வழிபாடாகும்,

பிச்சைக்காரி

கி. வா. ஜகந்நாதன்

1

உடம்பு முழுவதும் புண்ணுடன் குழந்தை வீரிட்டுக் கத்திக்கொண்டிருந்தது அதன் தாய் பாலில்லாத மார்பில் அதை அணைத்துக் கொண்டு என்ன பிரயோஜனம்? ஒரு கணத்தில் அந்தக் குழந்தைக்கு வயிறு நிறையப் பாலூட்ட வேண்டுமென்றுதான் அவள் தாயுள்ளம் நினைத்தது. ஆனால் உடம்பில் வலு வில்லையே! அவள் வயிறு நிறையச் சாப்பிட்டால்தானே பால் சுரக்கும்? அவள் நான்கு நாளாகப் பட்டினி. வெற்றிலை பாக்குக் கடைக்குப் பக்கத்தில் அவள் நின்று கொண்டிருப்பாள். அங்கேவரும் கனவான் யாராவது ஒரு சீப்பு மலைப் பழத்தை வாங்கி வெகு வேகமாக வாயில் ஒவ்வொன்றாக உரித்துப்போடுவான். அதைக் கண்களை அகல விரித்துக் கொண்டு அவள் பார்ப்பாள். அந்த மனிதன் அவள் பக்கம் கண்ணைத் திருப்புவானா? திருப்பினாலும் அவள் உருவம் அவன் பார்வைக்குத் தட்டுபடுமா, என்ன?

ஒவ்வொன்றாக அவன் விழுங்கினால் அவளுக்கு எப்படிப் பசி தீரும்? பாவம்! மனசினாலே அத்தனை பழத்தையும் தானே தின்றதாகப் பாவனை செய்து கொள்வாள். நாக்கில் சிறிதளவு நீர் சுரக்கும். அதோடு சரி. ஆனால் ஒரு விஷயத்தை அவள் கற்றுக்கொண்டிருக்கிறாள். கனவான் தோலை உரித்துப் போட்டுவிடுவான். அதை எடுத்துச் சுவைப்பாள். அவளும் சரி, அந்தக்

தோலும் சரி சமூகத்தினரால் எறிந்து விட்ட நிலையில் இருக்கும் வஸ்துக்கள்! இரண்டும் உறவாடுவது பொருத்தந்தானே!

போதாக்குறைக்கு அவளுக்கு இந்தப் புண் சுமை, குழந்தையென்ற உருவத்தில், வந்திருக்கிறது. மாட மாளிகையில் ஆறு வேளை உண்ணும் சீமாட்டிகளைப் போல அவள் இந்தக் குழந்தை வேண்டுமென்று தவமா கிடந்தாள்? இல்லை, யாரோ ஒரு பிச்சைக்காரன் தந்த பிரசாதம் அது. அவளும் மனித உணர்ச்சி உள்ளவள் தானே? வயிற்றுப்பசிக்கு வேண்டியது கிடைக்கவில்லை யென்றால் மற்றொரு பசியும் அவிந்து விடுமா? அவளுக் குக்கட்டின புருஷன் என்று நியதியர்க யாரும் இல்லை. அவளுக்குத் தகப்பனார் என்று குறிப்பிட்டுச் சொல்ல யாரும் இல்லாத போது புருஷன் என்ற ஒருத்தனை மாத்திரம் வரையறுத்துக் கொள்ள வசதி இல்லை. சமூ தாயம் இந்தப் பரம்பரை உரிமையை அவர்களுக்கு விதித் திருக்கிறது.

யாரோ ஒருவனுடன் சில நாள் இருந்தாள். அவனும் அவளும் பசியடங்கினபோது வந்த ஏப்பம் போலக் குழந்தை பிறந்தது. அவளுக்கு எப்படி "அப்பா" என்று சுட்டிக்காட்ட ஒருவன் இல்லையோ, அப்படியே இந்தக் குழந்தைக்கும் இல்லை. காதல் புரிந்த பிச்சைக்காரன் ஒரு வார நேசத்தோடு போய்விட்டான். பிறகு அவனைப் பற்றி அவளுக்கோ, அவளைப்பற்றி அவனுக்கோ கவலை யில்லை.

குழந்தை பிறந்த பிறகு அவள் தாயுணர்ச்சி இயற் கையிலேயே அவளைப்பற்றிக் கொண்டது. மாடமாளிகை களில் வாழும் நாகரிக நாரீமணிகள் தவம் செய்து குழந்தைகளைப் பெறுவார்கள். வேண்டாமல் வந்த குழந்தைகளையும் கண்ணில் ஒரு சொட்டு நீர் விடாமல், குப்பையை எறிவது போல, மலத்தைக் கழிவது போலக் கழித்து விடுவார்கள். அவள் குழந்தைக்குத் தவம் செய் யவுமில்லை; பிறந்த பிறகு அதை எறியவுமில்லை.

வயிறு புடைத்துப் போய் அழுதவண்ணமாக இருந் தது குழந்தை! வயிறு புடைத்திருப்பதாகத் தோன்

றுகிறதே ஒழிய, உண்மை வேறு. உடம்பு முழுவதும் எலும்பும் தோலுமாக ஒட்டியிருப்பதால் வயிறு மாத்திரம் புடைத்தது போல இருக்கிறது. அந்தச் சின்னஞ் சிறு குழந்தைக்குக்கூட வாழைப்பழத் தோல் தின்னும் கலை தெரிந்திருந்தது.

யார் வீட்டிலாவது விசேஷம் நடந்தால் எச்சில் இலை போடுவார்களே, அதற்கு நாய்களும் பிச்சைக்காரர்களும் போட்டியிடுவார்கள். அந்தப் போராட்டத்திற்குக் கூட இப்போது வழி இல்லாமற் போய் விட்டது. வீட்டுக்குள் நூற்றுக்கணக்கான பேர் சாப்பிட்டாலும் வெளியிலே இலைபோடுவதில்லை. ரேஷன்காரன் வந்து கணக்கெடுத்து விட்டால் என்ன செய்வது? அத்தனை இலைகளையும் என்ன பண்ணுவார்களோ? பகவானுக்கே வெளிச்சம்! எறிகிற வஸ்துவுக்குக் கூடப்பஞ்சம் வந்து விட்டது.

அவள் என்னதான் செய்வாள்? எங்கெங்கே மனிதர் கூட்டம் கூடுகிறதோ அங்கெல்லாம் தன் காட்சிப் பொம்மையாகிய குழந்தையையும் சுமந்து கொண்டு போய் உட்கார்ந்துகொள்வாள். திருவாதிரைத் திருநாள். நடராஜப் பெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிந்த திருநாள், கோயிலுக்குள் ஜே ஜே என்று கூட்டம். எப்போதும் மூன்றணு விற்கும் தேங்காய் அன்று ஐந்தணு. இப்படியும் கடைகளில் போதிய அளவு தேங்காய்கள் இல்லை. வாழைப்பழம் என்று பேருக்குக் காம்பிலே ஒட்டிக்கொண்டிருக்கும் வஸ்துக்களையெல்லாம் அன்று பக்தர்கள் விலைகொடுத்து வாங்கினுர்கள்.

வருஷத்துக்கு ஒருநாள் திருவாதிரை. "அடே, திருவாதிரையைப் போல எத்தனையோ உத்ஸவங்களும் வருஷத்துக்கு ஒருநாளாக அடுத்தடுத்து வருகின்றனவே! மொத்தத்தில் வாழ்நாளில் பாதி திருநாளாகவே வைத்திருக்கிறுர்களே!" என்று கேட்கலாமா? "வருஷத்துக்கு ஒரு நாள்: வருஷத்துக்கு ஒருநாள்" என்ற பல்லவியைப் பாடுவது நிற்கவே நிற்காது.

அந்த ஒருநாளில் ஆனந்தமயமான மூர்த்தி ஆனந்தமயமான தாண்டவத்தைச் செய்தான். என்றைக்கோ ஒரு நாள் செய்தான். அதை வருஷந்தோறும் கொண்

டாடுகிறார்கள் ' குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயில் குமிண் சிரிப்பும்'' உடையவனாக நடனமாடினான் பெருமான்.

இப்போதும் அப்படியே ஆடுகிறானா? கோயிலுக் குள்ளே அவனைக் கட்டிப் பொம்மைக் கோலஞ் செய்து சுமந்து தூபதீபம் காட்டி, '' ஹரஹர '' என்று கன்னத் தில் அடித்துக் கொள்ளுகிறார்களே, அந்தப் பக்தர் களுக்கு இன்னும் நடராஜப்பெருமான் ஆனந்தத் தாண் டவம் புரிகிறான் என்ற நிச்சயம் உண்டா?

அதோ, கோயில் வாசலிலே புண் அழுகும் உருவம் படைத்த பிண்டத்தை மடியிலே கிடத்திக் கொண்டு வயிறு ஒட்டி வாயுலர்ந்த ஒரு பிச்சைக்காரி உட்கார்ந் திருக்கிறாளே, அவளைக் கண்டும் ஆண்டவன் ஆனந்தத் தாண்டவம் புரிவானா? உள்ளே தேவார திருவாசக முழக்கம்; பழமும் தேங்காயும் குவிகின்றன. வெளி யிலே, வெறும் எலும்புக்கூடுகள் இரண்டு கிடக்கின்றன.

'' தர்மப் பிரபுக்களே, காலணாக் கொடுங்களேன் '' என்று தொண்டையின் அடியிலிருந்து தொனியை எழுப்பிக்கொண்டு அவள் கேட்கிறாள். பாடத் தெரிந்த பரதேசிகளும், கொட்டாப்புளி போலக் கொழுத்திருக்கும் சோம்பேறிகளும் அந்த யாசகத்திருவாசலில் போடும் சப்தத்தில் அவள் தொனி எங்கே கேட்கப்போகிறது?

அவளுக்கு நடராஜ தரிசனம் வேண்டாமா? வேண் டாம். ஒரு காலணா விழுந்தால் போதும். ஒரு முறை கைலாசம் போன இன்பம் உண்டாகும் அவளுக்கு.

குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது; களைத்துப் போய் மயக்கம் போட்டிருக்கலாம். அதை கவனிக்க டாக்டரா வரப்போகிறார்? பிச்சைக்காரி ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். யோசனை ஒன்றும் செய்ய வில்லை. நாளைக்கு இன்ன முயற்சி செய்ய வேண்டு மென்ற திட்டம் இருந்தால்தானே யோசனை எழும்? வானம் சுத்த சூன்யமாக இருந்தது போலவே, அவள் உள்ளமும் சூன்யமாக இருந்தது. அது மரத்துப்போய் விட்டது. சென்றதை நினைந்து துக்கப்படவோ, வரு

வதைக நினைந்து சந்தோஷப்படவோ அதற்குத் யில்லை. ஜீவன்முக்த நிலை என்பது இது தானே!

பொத்தென்று ஏதோ சப்தங் கேட்டது. நினைப்பும் மறப்பும் அற்ற அவஸ்தையிலிருந்து இறங்கி வந்தாள். அவளுக்கு முன்னால் ஓரணாக் காசு ஒன்று விழுந்து கிடந்தது. கையிலெடுத்துக்கொண்டே முன்னே பார்த்தாள் "அதை எடுத்துக்கொள்" என்ற இளங் குரலைக் கேட்டாள். யாரோ பையன், பத்து வயதுக்குள் இருக்கும், இந்தத் தர்மத்தைச் செய்திருக்கிறான். அவள் ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் அவன் உள்ளே போய் விட்டான். முழுசாக ஓரணாவைப் போட்ட அந்தப் பையன்தான் அவளுக்குத் தெய்வமாகப் பட்டான். உள்ளே இருக்கும் தெய்வத்தைப்பற்றி அவளுக்கு அக்கரை இல்லை. முகத்தில் சிறிது மலர்ச்சி உண்டாயிற்று.

2

இன்று ரஸிக ரஞ்சனி சபையில் ஏதோ உதவிக் கச்சேரியாம். மைலாப்பூர் பங்களாக்களில் ஒரு பெண்மணி பாக்கியில்லை; மாம்பலம், நுங்கம்பாக்கம், திருவல்லிக்கேணி, பட்டணம் எல்லாப்—பகுதிகளிலிருந்தும் கூட்டம் வந்திருக்கிறது. பத்து ரூபாய், இருபது ரூபாயென்று கொடுத்து டிக்கெட் வாங்கி யிருக்கிறார்கள் கனவான்கள். பிரசித்தமான ஒருவர் கட்டப்போகிற அநாதை விடுதிக்காக அந்தக் கச்சேரி நடைபெறுகிறது. சினிமா நட்சத்திரம் ஒன்று அன்று புது ராகத்தைப் பொழியப் போகிறது. கேட்க வேண்டுமா உத்ஸவத்திற்கு? ஆறு பெருக்கெடுத்துப் போவது போலக் கூட்டம் போய்க்கொண்டேயிருக்கிறது. சங்கீதத்தைக் கேட்கவும், அதன் மூலமாகத் தர்ம கைங்கரியத்துக்கு உதவிசெய்யவும் போய்க்கொண்டிருக்கிறது. நகரத்து ஜவுளிக் கடையில் எத்தனைவிதமான ஆடைவகைகள் உண்டென்பதைக் காணவேண்டுமானால், கடைகளுக்குப் போக வேண்டாம். அந்த இடத்தில் அரைமணி உட்கார்ந்து பார்த்தால் போதும். சினிமாச் சுருள் ஓடுவதுபோலே உங்கள் கண்முன் நாகரிக ஆடைகள் ஓடிக்கொண்டிருக்கும். இந்தியாவிலே பஞ்சமென்று யார் சொன்னார்கள்? இந்த ரஸிகர்களுடைய

கூட்டத்தைப் பார்த்துவிட்டு அப்படிச் சொல்லும் பைத்தியக்காரர்களும் இருப்பார்களா? ஆடைக்கும் ஆபரணத்துக்கும் நடமாடும் காட்சிச் சாலையாக இருக்கும் எத்தனை வனிதாரத்தினங்களைப் பார்க்கிறோம்! சிரிப்பும் கோலாகலமும் குதூகலமும் நிரம்பின பெரிய மனிதர்கள் எத்தனை பேர் காட்சி அளிக்கிறார்கள்? கலையுலகத்தை நிறுத்துப் பார்க்கும் இளைஞர்கள் எத்தனை பேர் அங்கே வருகிறார்கள்! இந்திர லோகத்தில் இந்தக் காட்சி உண்டா?

அங்கேதான் அவள் வழி ஓரத்திலே நின்றுகொண்டிருந்தாள்; பிறகு உட்கார்ந்து கொண்டாள். ஆடை, அணி, சோறு, சுகம், சிரிப்பு, உத்ஸாகம்—என்பவைகளுக்கு அப்பாற்பட்டவள் அவள். மடியிலே கிடக்கும் எலும்புக்கூட்டின் அழுகைச் சங்கீதந்தான் அவளுக்குத் தெரியும். ரஸிகர்கள் கூட்டத்துக்கும் அவளுக்கும் எந்த விதத்திலும் சம்பந்தமே இல்லை. ஆனாலும் ரஸிகர்களின் ஆடை அணிகளின் பெருமையை அளக்க அவள் அளவுகோலாக உதவுவாள்; அளந்து பார்ப்பவர்களுக்கு ரஸிகர் கூட்டத்தினிடம் மதிப்புத் தோன்றுமா? அவமதிப்பு எழுமா? அது அளப்பவர்களைப் பொறுத்தது. நமக்கு எதற்குப் பொல்லாப்பு!

கச்சேரி ஆரம்பிப்பதற்குமுன் இடம் பிடித்துக் கொள்ள வேண்டுமென்ற வேகத்தில் எல்லோரும் போய்க்கொண்டிருக்கிறார்கள். சபைக்கு உள்ளே மேடையின் மேல் கலையானது தர்மத்துக்கு அஸ்திவாரம் போடப்போகிறது. கலாரஸிகர்கள் தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக வேகமாகப் போகிறார்கள். அவர்கள் கண்களில் பிச்சைக்காரி விழுவதென்பது சாத்தியமா? அவ்வளவு தூரத்துக்கு அவர்கள் கலைக்கண்கள் கெட்டுப் போய்விடுமா!

"டிக்கெட் விலை ஐந்து ரூபாய்; அதை வாங்க ஒரு ரூபாய் லஞ்சம் கொத்தேன்" என்கிறான் ஒருவன்.

"எங்கள் வீட்டுக்கு நாலு டிக்கெட்டுகள் வந்தன. நான் ஒருத்திதான் வந்தேன். வேறேயாருக்கும் மற்ற டிக்கெட்டுகளைக் கொடுக்கக் கூடாதென்று அப்பா

சொல்லி விட்டார். இலவசமாக யாரும் இன்றைக்குப் போகக் கூடாதாம்! தர்மகாரியம் அல்லவா?'' என்பது ஒரு மடமங்கையின் குயிலனைய குரல்

இளம் சிறுவன் ஒருவன் சொல்லுகிறான்: 'அம்மா' அதோ பார். அந்தப் பிச்சைக்காரி சாப்பிட்டு ஒரு மாசம் ஆகியிருக்கிறது போல இருக்கிறதே!''

''சரிதாண்டா! பைத்தியம், இந்த அவலக்ஷணத்தை யெல்லாம் பார்க்கத்தான் வந்தாயா? வா வேகமா கச்சேரி ஆரம்பித்து விடுவார்கள்' இப்படி அவனை அதட்டி இழுத்துச் சென்றாள் அவன் தாய்.

அவன் நகரவில்லை. ''இதோ வருகிறேன்'' என்று நழுவினான். அவள், ''நீ எக்கேடு கெட்டால் என்ன? நான் போகிறேன்'' என்று போய் விட்டாள்.

பிச்சைக்காரிக்கு இன்னும் ஓர் அணுக் கிடைத்தது. நிமிர்ந்து பார்த்தாள். திருவாதிரையில் அணுவைப் போட்ட அதே பையன். ''சாமி... ....'' மேலே ஒன்றும் அவன் காதில் விழவில்லை; போய்விட்டான்.

3

அவர்கள் நட்பு வளர்ந்து வந்தது; நட்பு என்று சொல்வது பொருத்தமாக இல்லை. இருவரும் ஒரு நிலையில் இருப்பவர்கள் அல்லவே! அவன் அவளிடம் இரக்கங்காட்டினான்; தன்னையறியாமலே இரங்கினான். ''இந்தா அம்மே; எங்கள் பள்ளிக்கூடத்துக்குத் தினம் மத்தியான்னம் ஒரு மணிக்குவா. உனக்குக் காசு தருகிறேன்'' என்று ஒரு நாள் அவளிடம் சென்னான். அது முதல் தவறாமல் பி. எஸ்., ஹைஸ்கூலின் வாசலில் அவள் வந்து காத்துக்கொண்டிருந்தாள். மணிக்கணக்கு அவளுக்கு எங்கே தெரியப்போகிறது? பத்து மணிக்கே வந்து விட்டாள். பணம் கிடைக்கும் என்ற ஆவலால் வெயிலில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். ஒருமணிக்குக் கோபாலன் வந்தான். ஆம், அவன் பெயர் தான். பசுக்களிடத்திலும் குழந்தைகளிடத்திலும் கருணைபூக்கும் கண்ணனுடைய அழகிய பெயர். 'அதோ, அந்த ஆல மரத்து நிழலிலே உட்கார்ந்திருக்கலாமே! வெயிலிலே

குழந்தையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே!'' என்றான் அவன்.

இதென்ன! அவளுக்குக்கூட அந்தக் குழந்தையிடம் அத்தனை கரிசனம் இருக்காது போலிருக்கிறதே! அவளுக்கு வெயிலும் தெரியவில்லை, நிழலும் தெரியவில்லை. அந்தச் சிறு பிள்ளையினுடைய முகந்தான் அவள் உள்ளத்திலே குடிகொண்டிருந்தது.

அன்று அவன் இரண்டணாக்கொடுத்தான் அது முதல் அதுவே வழக்கமாகிவிட்டது. நாலைந்து நாள் வந்த நிதானத்தால் அவளுக்கு ஒருமணி இன்னநேர மென்ற காலவரையறை திட்டமாகத் தெரிந்தது அரை மணிக்கு முன்னாலே அவள் வந்து பக்கத்திலுள்ள ஆலமரத்து நிழலில் காத்திருப்பாள். ஒருமணிக்குப் பிள்ளைகளெல்லாம் வெளியிலே வரும்போது ஆவலாகக் கோபாலனை எதிர்பார்ப்பாள். அவன் நேரே ஆலமரத்தடிக்கு வந்து பிச்சைக்காரிக்கு இரண்டணாக்கொடுப்பான் அவள் குழந்தையைப் பற்றி விசாரிப்பான். மற்றப் பையன்களெல்லாம் அதே ஆலமரத்தடியிலே சுடச்சுட நிலக்கடலை விற்கும் வியாபாரியிடம் போவார்கள்; கடலை வாங்கித் தின்பார்கள். மாம்பழத்தைத் துண்டு போட்டு விற்கும் கிழவியிடம் போவார்கள்; அதை வாங்குவார்கள். அந்த ஆலமரம் இந்தச் சில்லறை வியாபாரத்துக்கும். இளம் பிள்ளையின் தர்மத்துக்கும் நிழல் கொடுத்துக்கொண்டு நின்றது. அதன் நிழலிலே எங்கோ பிறந்து காற்றையும் வெயிலையும் தோழர்களாகப் பெற்ற பிச்சைக்காரிக்கும். மாளிகையின் நிழலிலே வளரும் கோபாலனுக்கு மிடையே ஒரு வகையான பாசம் இறுகி வந்தது.

அந்த வேளையில் எல்லாப்பிள்ளைகளும் கடலையும் மாம்பழமும் வாங்கித்தின்று கொண்டிருக்க அவன் மட்டும் பிச்சைக்காரிக்கு அணாவைக் கொடுத்துவிட்டுப் பேசிக்கொண்டிருப்பதென்றால் அது விநோத மல்லவா? அதுவும் ஒரு நாளைப் போலவே, தினந்தோறும் இது நடந்து வருகிறது. குழந்தைகளுக்கு இது பெரிய வேடிக்கை யாகிவிட்டது. 'என்னப்பா அந்தப் பிச்சைக்காரி யாரப்பா? உனக்கும் அவளுக்கும் என்ன சொந்தம்?

எதற்காக அவளுக்குப் பணம் கொடுக்கிறாய்?'' என்று ஒரு பையன் கேட்டான்.

"சொந்தக்காரர்களுக்குத்தான் உபகாரம் செய்ய வேணுமா? பாவம்! பிச்சைக்காரி; கஷ்டப்படுகிறாள். அதற்காகக் கொடுக்கிறேன்'' என்பான் கோபாலன்.

"எத்தனையோ பிச்சைக்காரர்கள் இருக்கும்போது இவளுக்கு மாத்திரம் கொடுப்பானேன்?''

"இவள் தான் தினமும் வருகிறாள்.''

"இவள் எதற்காக வருகிறாள்?''

"நான் கொடுக்கிறதனாலே.''

"நீ எதற்காகக் கொடுக்கிறாய்?''

இந்தக் கேள்வியும் பதிலும் மாறி மாறி முடிவடையாமலே நீளும். ஒரு பையன் கிண்டலாகப் பேசுவான். மற்றொருவன் கோபம் வரும்படி பேசுவான்.

அந்தப் பிச்சைக்காரியிடம் எதற்காக அவனுக்கு அத்தனை பற்று? அவளுக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு? அவனுக்கே விளங்காத கேள்விகள் இவை. ஆனால் அவளுக்கு இரண்டணாக் கொடுப்பதனால் அவள் அடையும் ஆனந்தம் இருக்கட்டும்; அவனுக்கே அலாதியான திருப்தி. அவன் மனசு அப்படி என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

ஒருநாள் தன் சிநேகிதர்களின் அலைக்கழிப்புத் தாங்காமல் அவன் சொன்ன பதில் தூரத்திலிருந்தபடியே கேட்டுக்கொண்டிருந்த வாத்தியார் ஒருவருடைய மனசை உலுக்கி விட்டது. "எனக்கு அம்மா இல்லை. அம்மாவைப் பார்த்ததே இல்லை. செத்துப் போனவர்கள் மறுபடியும் பிறந்து யாரிடம் பாசம் வைத்திருக்கிறார்களோ, அவர்களிடம் வருவார்கள் என்று சொல்கிறார்களே. அப்படி இந்தப் பிச்சைக்காரியும் வந்திருக்கிறாள் என்று நினைக்கிறேன்'' என்றான். இது அவன் ஏதோ காரணம் சொல்வதற்காகச் சொன்னது. அவனுக்குப் பத்து வயசு. அம்மா செத்துப் போய் ஒன்பதரை வருஷங்களே ஆயின. அதற்குள் அவள் பிறந்து இத்தனை வயசுள்ள

பிச்சைக்காரி ஆகிவிட்டாளா? ஆக முடியுமா? இந்த நியாயங்களை யெல்லாம் அவன் யோசிக்கவில்லை. என்னவோ சொல்லி வைத்தான். ஆனால் அதனூடே உண்மை இல்லாமற் போகவில்லை. தாய் என்று ஒருவரிடத்தில் அன்புவைக்கும் பாக்கியம் அவனுக்கு இல்லை. அப்படிப்பட்ட அன்பு அவனுக்குக் குறைவாகவே இருந்தது. சாக்ஷாத் தாயினிடம் வைக்கும் பிரியத்தை அப்படியே மற்றோரிடத்தில் வைத்ததாகச் சொல்ல முடியாது. ஆனாலும் அந்தக் குறையை நிரப்பிக்கொள்ள அவன் உள்ளம் ஏங்கிக் கிடந்தது. பிச்சைக்காரியினிடம் காட்டும் இரக்கம்—அன்பு—அதற்கு ஈடு செய்ய வந்தது போலும்!

இது எப்படியாக இருந்தாலும், அவனுக்கு அவளிடத்திலே, உருவத்தையும் நிலையையும் தரித்திரத்தையும் அவலக்ஷணத்தையும் எலும்பையும் தோலையும் கடந்து நிற்கும் ஓர் அன்பு, கருணையென்று சொல்லுங்கள், தர்ம புத்தியென்று சொல்லுங்கள்; ஈரமென்று சொல்லுங்கள்—ஓர் உயர்ந்த உணர்ச்சி ஏற்பட்டது.

"ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடம் இல்லையே! அவள் கஷ்டப்படுவாளே" என்ற கவலை கூட அவனைப் பற்றியது. அதன் விளைவாகச் சனிக்கிழமையன்று அவளுக்கு நாலணாக்கிடைத்தது.

4

விஷயம் பையன்களோடு நிற்கவில்லை. வாத்தியார்கள் காதுக்கும் எட்டியது. அவர்கள் "பைத்தியம்!" என்றுதான் அவனை மதித்தார்கள். கோபாலன் வீட்டுக்கும் இந்தத் தர்மச்செய்தி சென்றது. பக்கத்து வீட்டுப் பையன் இந்த அதிசயத்தைத் தன் பாட்டியிடம் சொன்னான். அவள் கோபாலனுடைய சிறிய தாயார் காதில் போட்டாள். அந்த அம்மாள் கிருஷ்ணமூர்த்தி அய்யரின் இரண்டாந்தாரம்; கோபாலனுக்கு மாற்றாந் தாய்.

நெருப்புப்பற்றிக்கொண்டது. "உங்கள் அருமந்த பிள்ளையைப் பார்த்தீர்களா? பிறக்கிறபோதே தர்மப் பிரபு ஆகிவிட்டான். நோட்டுக்கென்றும் புஸ்தகத்துக்கென்றும் வாங்கிக்கொண்டுபோகிற காசை யாரோ பிச்

சைக்காரிக்குக் கொடுக்கிருளும்!' என்ற அறிக்கையில் ஆரம்பித்தது போர்.

கிருஷ்ணமூர்த்தி ஐயர் முதலில் நம்பவில்லை. பிறகு உண்மையை உணர்ந்தார். அவர் தர்மபுத்தி உள்ளவரே. அன்னதான சமாஜத்துக் காரியதரிசி ஆனால் என்ன? தினந்தோறும் தர்மம் செய்ய முடியுமா? பிச்சைக்காரிக்கு நிரந்தரமாகச் சம்பளம் ஏற்படுத்திக் கொடுப்பதாக வல்லவா இருக்கிறது அவன் செய்கிற காரியம்? அவனுக்குச் சம்பளம் வேறு. அவளுக்குச் சம்பளம் வேரு? இதென்ன பைத்தியக்காரத்தனம்? பைத்தியக்காரத்தனமா? மடத்தனம். மடத்தனமா? அதிகப்பிரசங்கித்தனம், அயோக்கியத்தனம், திருட்டுத்தனம்!—அவர் விமரிசனம் ஆலமரம்போல விழுதுமேல் விழுது விட்டுப் படர்ந்தது.

அவனைக் கேட்டார். அவன் சாக்குப் போக்குச் சொன்னான் "நீங்கள் கொடுக்கிற காசுக்கு நான் ஒன்றும் வாங்கித்தின்கிறதில்லை; அவளுக்குக் கொடுத்து விடுகிறேன்" என்ற உண்மையைக் கக்கினான்.

"நீ தின்னுமல் அவளுக்கு யார் கொடுக்கச் சொல்கிருர்கள்? பட்டினிகிடந்து உனக்கு உடம்புக்கு வந்தால் என்ன செய்கிறது? டாக்டருக்கு வேறு பணம் கொடுக்க வேண்டிவரும். முட்டாள்!" என்று கண்டித்தார். அவன் பதில் ஒன்றும் சொல்ல வில்லை.

தர்மம் நடந்து கொண்டுதான் இருந்தது. கிருஷ்ணமூர்த்தி ஐயர் தாம் கொடுப்பதைக் குறைத்துக் கொண்டார். எது கொடுத்தாரோ, அதை அப்படியே பிச்சைக்காரிக்குக் கொடுத்துவிடுவான். "முன் போல உனக்குக் கொடுக்க முடியவில்லை. எனக்கே காசு கிடைக்கிறதில்லை" என்று அவன் அழாக் குறையாகச் சொல்வான். "கொடுக்கிறது போதும் சாமி; எனக்கு எது கிடைக்குமோ, அது தான் கிடைக்கும்," என்று அவள் ஆறுதல் தொனியோடு பேசுவாள்.

கொஞ்ச நஞ்சம் காசு கொடுப்பதையும் அவன் தகப்பனார் நிறுத்திக்கொண்டார். புஸ்தகம், சம்பளம்

நோட்டு எல்லாவற்றிற்கும் ரசீது வாங்கிக்கொள்வார். மிச்சம் பிடிக்க வசதியில்லை.

"அவன் என்ன செய்வான்? அவளுக்கு நாலுநாளாக ஒன்றும் கொடுக்கவில்லை. யாரோ ஒரு சிநேகிதனிடம் எட்டணுக் கடன் வாங்கி ஒவ்வொரணுவாகக் கொடுத்து வந்தான். எட்டணு எத்தனை நாளைக்கு வரும்? பிச்சைச்காரி கிடைத்ததை வாங்கிக் கொண்டாள். அவள் அதிகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவன் தான் கவலைப்பட்டான். நாளைக்கு வேண்டுமே என்ற விசாரம் அவளுக்கு இல்லை. ஆனால் அவளுக்காக அவன் விசாரப்பட்டான்.

கடன் வாங்கினதைத் திருப்பிக்கொடுக்க வேண்டும். இது ஒன்று. இரண்டாவது மேற்கொண்டு அவளுக்குக் காசு கொடுத்து வரவேண்டும். இதற்கு என்ன செய்வது? வீட்டிலிருந்து பணத்தைத் திருடலாமா? இந்த நினைவு வந்த போது அவன் உடம்பு நடுங்கியது. "கூடவே கூடாது" என்று தீர்மானம் செய்து கொண்டான். வேறு இடங்களில் திருடுவதைப்பற்றிய எண்ணமே அவன் உள்ளத்தில் எழவில்லை.

இந்தச் சமயத்தில் தான் அவனுக்கு ஒரு புதிய உலகம் தென்பட்டது. ஒரு நாள் தன் தகப்பனுருடன் புரசவாக்கம் போயிருந்தான். பஸ் ஸ்டாண்டில் ஐயங்கார்ப் பையன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். "ஸார், எனக்குச் சம்பளம் கொடுக்கப் பணமில்லை ஸார். ஏதாவது கொடுங்கள்" என்று பஸ்ஸிலிருந்து இறங்கின கிருஷ்ணமூர்த்தி ஐயரைக் கேட்டான். அவர் அவன் முகத்தைப்பார்த்துச் சிரித்துக்கொண்டே நாலணுவை எடுத்துக்கொடுத்து விட்டு நடந்தார். போகும் போது, 'பாவம்! பையனைப் பார்த்தால் ஸஷ்டுவாக இருக்கிறுன். படிக்க வைத்தால் நன்றுகப் படிப்பானென்று தெரிகிறது. ஏழை வீட்டிலே பிறந்திருக்கிருன்" என்று தம் அனுதாபத்தை வெளியிட்டார்.

இந்தச் சம்பவம் கோபாலன் உள்ளத்திலே பதிந்தது. சுத்தமாகத் தலையை வாரிக்கொண்டிருந்தான் அந்தப் பையன்; நெற்றியில் திருமண் தரித்திருந்தான். அவன்

முகத்தைப்பார்த்து நாலணுக் கொடுத்தார் தகப்பனர். ஏழைப் பிச்சைக்காரனுக இருந்தால் காலணுக் காசு போட்டிருப்பாரா என்பது சந்தேகம், பையன் கேட்டதும் பிச்சைதான்; பிச்சைக்காரன் கேட்பதும் பிச்சை தான். ஆனல் இருவருக்கு மிடையே எத்தனை வித்தியாசம்!

அவன் சிந்தனை எங்கெங்கோ ஓடியது. ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தான். அவன் முகம் மலர்ந்து. தீர்க்க முடியாத சங்கட மொன்றைத் தீர்க்கும் வழி கண்டு பிடித்தவனைப் போலப் பெரு மூச்சுவிட்டான்.

5

"நாளைக்கு என் சிநேகிதன் வீட்டுக்குப் போய்ப் பாடம் படிக்கப் போகிறேன். கணக்கில் எனக்குப் போதாது. அவன் கெட்டிக்காரன். ஞாயிற்றுக் கிழமை ஞாயிற்றுக் கிழமை அவன் வீட்டுக்குப் போய்ப் படித்து விட்டு வருகிறேன்" என்று நயமாகத் தகப்பனரிடம் சொன்னன் கோபாலன்.

அவருக்குத் தம் பையன் பிச்சைக்காரியை மறந்து விட்டதாக ஞாபகம். நல்ல பிள்ளையாகிக்கொண்டு வருகிருனென்ற சந்தோஷத்தில் அனுமதி கொடுத்துவிட்டார். அவனே அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான். புரசவாக்கத்தில் அந்த அய்யங்கார் பையன் செய்த காரியத்தை அவனும் செய்யத்தொடங்கினன். மயிலாப்பூரிலேயே செய்தால் அப்பாவுக்குத் தெரிந்து போய்விடும். ஆகையால் திருவல்லிக்கேணிக்குப் போனன்.

அது அவன் நினைத்தபடி அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை. யாசகம் பண்ணும் துணிவு வரவில்லை நாக்கு எழும்ப மாட்டேனென்கிறது. உடல் வியர்க்கிறது. பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டான். சிறிது நேரம் வெறுமனே வருபவர்களையும் போகிறவர்களையும் பார்த்துக்கொண்டே நின்றுன். யாரைக் கேட்பது? யாரைக் கேட்காமல் இருப்பது? என்ன கேட்பது? "சம்பளம் கொடுக்கப் பணம் இல்லை" என்று தான் கேட்கவேண்டும்.

துணிவை அதிகமாக்கிக்கொண்டான். பஸ்ஸிலிருந்து இறங்கினவர்களைப் பார்த்துக்கொண்டு நிற்பதைவிட்டு விட்டு ஒருவரை அணுகினான். அவனுக்குப் பக்கத்தில் வந்ததுதான்; மேலே வாய் எழும்பவில்லை. பேசாமல் நின்றான். அவர் தம் பாட்டில் போய் விட்டார். இது இரண்டாவது கட்டம். மூன்றாவது கட்டத்தையும் துணிவாக அணுகினான் : முயன்றான் ; வென்றான்.

யாரோ ஒரு கதர் ஜிப்பா போட்ட கனவானிடம் போய், ' சம்பளம் ....'' என்று கேட்டுவிட்டு நின்றான் ; வாக்கியத்தை முடிக்கவில்லை. அவன் கண்களில் நீர் ததும்பியது. புதிய காரியத்தில் தைரியம் வராததற்குக் காரணம். அவரோ, அவன் உண்மையிலே கஷ்டப்படுகிறவனென்று நினைத்துக் கொண்டார். "என்ன வேண்டும் ?" என்று அன்பொழுகக் கேட்டார். "சம்பளம் கொடுக்கப் பணம் இல்லை" என்று உருப் போட்டு வைத்திருந்ததைத் தட்டுத் தடுமாறி ஒப்பித்தான். அவன் தொண்டைக் கரகரத்தது குரல் தடுமாறியது. அவ்வளவும் அவனுக்கு அனுகூலமாகவே முடிந்தன. அந்த மனுஷருடைய உள்ளத்திலே கருணை சுரக்கச் செய்தன. முழுசாக ஒரு ரூபாய் அவன் கையில் விழுந்தது. அவன் திடுக்கிட்டுப் போனான். நம்பக்கூட முடியவில்லை. ஒரு ரூபாய்! எட்டு நாளைக்குக் கொடுக்கலாம் —அந்தப் பிச்சைக்காரிக்குத்தான்.

அவன் அந்தத் தொழிலைப் பழகிக் கொண்டான். ஆனாலும் தர்மத்தின்பொருட்டுத்தான் பழகினான். பஸ் அடியில் யாசகம் ; ஆலமரத்தடியில் தர்மம்.

தந்திரம் செய்ய வேண்டுமென்று வந்து விட்டால் அதற்கு ஏற்ற அறிவும் தானாக வந்துவிடுகிறது. அவன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரே இடத்துக்குப் போவதில்லை. சென்னப்பட்டணத்தில் இடத்துக்குத்தானா குறைச்சல்! அவனுடைய முகவிலாசமும் தோற்றமும் சிலருக்குச் சந்தேகத்தை உண்டாக்கின ; சிலருக்கு இரக்கத்தை எழுப்பின ; சிலருக்குக் கோபத்தை உண்டாக்கின. அவன் எத்தனையோ அனுபவங்களைப் பெற்றான். அவமதிப்பை அடைந்தான். ஒவ்வொரு தடவையும்

அவன் உள்ளம் போராடியது. ஆனாலும் விடாப் பிடியாகத் தன் காரியத்தைச் சாதித்தே வந்தான்.

அதிகப்படிக் காசுவந்தால் சிலநாள்பிச்சைக்காரிக்குப் கூடக் கொடுப்பான். ஒவ்வொரு நாளும் அவளுக்குத் தவருமல் பணம் கொடுக்கத் தக்கபடி அவன் கணக்குப் போட்டுப் பார்த்துக்கொள்வான். தன் தகப்பனாரிடம் சொன்னபடி தன் பள்ளிக்கூடத்துக் கணக்கை அவன் போடா விட்டாலும், இந்தக் கணக்கைப் போட்டு வந்தான்.

திடீரென்று முக்கியமான தகவல் வந்ததால் கிருஷ்ணமூர்த்தி அய்யர் வெளியூருக்குப் புறப்பட்டார். காலை 9-மணி வண்டிக்கு. அதற்கு முன்பே கோபாலன் தன் வேலைக்குப் போய்விட்டான். அவனுக்கு தகப்பனார் ஊருக்குப் போவது தெரியாது. அவர் எழும்பூர் ஸ்டேஷனுக்கு முன்னால் பஸ்ஸிலிருந்து இறங்கும்போது கூட அவன் பார்க்கவில்லை. முன்பஸ்ஸிலிருந்து இறங்கிய ஒருவரிடம் அவன் நாடகம் நடித்துக்கொண்டிருந்தான். அவர் சில கேள்விகளைக் கேட்டார். அவன் பதில் சொல்லிக்கொண்டிருந்தான். கிருஷ்ணமூர்த்தி அய்யர் பின்பஸ்ஸில் இறங்கியவர் அவன் முதுகைத்தான் பார்க்கமுடியும். வண்டிக்கு நேரமாய் விட்டதென்று வேகமாக இறங்கின அவர் கோபாலன் அங்கே கை நீட்டிக்கொண்டு நிற்பதைக் கண்டார். "எங்கள் அப்பா ஏழை; சம்பளம் கொடுக்கப் பணம் இல்லை.........." என்ற வார்த்தைகள் அரைகுறையாக அவர் காதில் விழுந்தன. அவர் ரத்தம் கொதித்தது. "ஏய்!" என்று அவரையறியாமல் வாய் கூவியது. அடுத்த கணம் நிதானித்துக்கொண்டார். அந்தச் சமயத்தில் அவனைக் கூப்பிட்டாலும் பேசினாலும் மானம் போய் விடும் என்ற நினைவு வந்தது. ஒரேகணம் இந்தத் தடுமாற்றம். 'பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று வேகமாக ஸ்டேஷனுக்குள் நுழைந்து விட்டார்.

அவர் கூப்பிட்டது கோபாலன் காதில் அரை குறையாகத்தான் விழுந்தது. தன் தகப்பனாரென்று நினைக்கவில்லை. அப்போதுதான் அவன் நாடகம் பலிக்கிறசமயம். எதிரே நின்றவர் பணப்பையை எடுத்துப் பணம் கொடுக்க வந்தார். அதை வாங்கிக்கொண்டு திரும்பினான். ஸ்டே

னுக்குள் கைப் பையுடன் நுழைந்துக் கொண்டிருந்த தகப்பனுரைப் பார்த்துவிட்டான். 'ஏய்!' என்ற சப்தம் இப்போது தெளிவாக ஞாபகத்துக்கு வந்தது. அவர் தாம் கூப்பிட்டிருக்க வேண்டும்.

அவன் தலை சுழன்றது. கால் தடுமாறியது. கையுங் களவுமாக அகப்பட்ட திருடனைப்போல மார்பு படபட வென்று அடித்துக்கொண்டது. அப்படியே பக்கத்தி லுள்ள ஹோட்டல் சுவரோடு சாய்ந்து விட்டான்.

மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது அவன் ஹோட்ட லுக்குள் இருந்தான யாரோ ஒருவர் விசிறிக்கொண்டிருந் தார் மெல்ல ஒவ்வொன்ருக நினைவுக்குக் கொண்டுவந் தான். அவன் உள்ளத்தில் அச்சம் ஆணியடித்தாற்போல் பதிந்து விட்டது. அதிலிருந்து பயங்கரமான காட்சிகள் பிரிட்டன.

அருகில் இருந்தவர் விலாசம் விசாரித்துக்கொண்டு அவனை அவன் வீட்டில் கொண்டு போய் விட்டுவர ஏற்பாடுசெய்தார். அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அவனைச் சும்மாவிட வில்லை. ஜுரத்தைக் கொண்டு வந்துவிட்டது.

* * *

கிருஷ்ணமூர்த்தி ஐயர் ரெயிலில் ஏறினுர். அவர் மனசில் சற்று முன் கண்ட காட்சியும் ஏறிக்கொண்டது. முதலில் அவருக்கு அங்கேயே அவனைப் பலிவைக்க வேண்டுமென்ற கோபம் வந்தது. ஆனுல் வண்டியில் ஏறின பிறகு நிதானமாக யோசித்தார். அவன் எதற் காக இப்படிச் செய்கிருன்? அவனுக்குப் பணம் எதற்கு? சம்பளம் பணம் கொடுக்க அவர் என்றைக்கும் தடை சொன்னதே இல்லையே! பிச்சைக்காரியின் ஞாபகம் அப்போது அவருக்கு வந்தது. உண்மையும் புலப்பட்டது. ஆம். அவனுக்குப் பணம் வேண்டும். பள்ளிக்கூடச் சம்பளத்துக்காக அல்ல. அவளுக்குக் கொடுக்க. அந்த விஷயத்தில அவருடைய பணந்தான் அவனுக்குக் கிடைக்கவில்லையே! "எங்கள் அப்பா ஏழை!" என்ற வார்த்தைகள் அவர் காதில் விழுந்த பொழுது அவருக்கு ஆத்திரம் வந்தது. இப்போது, பழைய ஞாபகங்களை

வைத்துக்கொண்டு பார்க்கும்போது, அவருக்கு வேறு விதமான எண்ணங்கள் எழுந்தன. அந்த விஷயத்தில் அவர் பணம் உபயோகப்பட வில்லையே! அந்த மட்டில் அவர் ஏழைதானே ?

அவர் அன்னதான சமாஜக் காரியதரிசி அதாவது பலரிடம் பணம் கேட்டுச் சேர்த்துத் தர்மம் பண்ணுகிறார். அவன் செய்வதும் அதுதானே ? அவர் ரசீது, கணக்குப் புஸ்தகம், சட்டை, தலைப்பாகை இவைகளுடன் சந்தா, நன்கொடை என்ற பெயரோடு யாசகம் செய்கிறார். அவன் நேரடியாக யாசகம் செய்கிறான். அவர் யாசகம் செய்து பிச்சைக்காரர்களுக்குச் சோறு போடுகிறார். அவன் யாசகம் செய்து பிச்சைக்காரிக்குக் கொடுக்கிறான். பிச்சைக்காரிக்காக அவன் பிச்சைக்காரனாக இருக்கிறான்.

அவர் அவனுக்கு வேண்டியதைக் கொடுத்திருந்தால், அவன் செய்வது தர்மம் என்ற உண்மை யுணர்ச்சியோடு அவனுக்குத் தடை போடாமல் இருந்திருந்தால்.

வண்டி போகிற வேகத்தில் அவர் மனம் யோசித்துக் கொண்டிருந்தது. முதலில் உண்டான கோபம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்தது. தாம் செய்தது தவறு என்ற ஞாபகம் தலை காட்டியது. பிச்சை யெடுத்தாவது தர்மம் செய்யவேண்டும் என்ற சங்கற்பத்தின் உயர்வு சிறிது சிறிதாகப் புலப்பட்டது. அவனைக் கண்டித்தது தவறு என்ற முடிவுக்கு வந்தார்.

வெளியூரில் இரண்டு நாள் இருந்து வேலையை முடித்துக்கொண்டு மயிலாப்பூருக்கு வந்தார். வீட்டுக்குள் நுழைந்தார். கோபாலன் பிச்சையேற்கும் தொழிலை மாற்ற வேண்டுமென்ற தீர்மானத்தோடு நுழைந்தார். உள்ளே கோபாலன் ஜுரவேகத்தால் பிதற்றிக்கொண்டிருந்தான்.

“அம்மா தான், அப்பா, என் அம்மா அடிக்காதே. நான் அவளோடே போய் விடுகிறேன், உன் பிள்ளை பிச்சை யெடுக்கக் கூடாது. அவள் பிள்ளையாக அவளோடே போகிறேன்.”

இதைத்தான் குழறியும் இடையிலே விட்டு விட்டும் அவன் பிதற்றினன்.

அந்த வார்த்தையினூடே உள்ள கருத்தின் ஆழம் அவருக்குத் தெளிவாகப் புலப்பட்டது. அவர் உள்ளம் கரைந்தது. கண் கலங்கியது. படுக்கைக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தார். "கோபாலா!" என்று நாக் குழறினபடியே என்றும் இல்லாத ஆசையுடன் அவன் தலையைத் தடவிக் கொடுத்தார்.

வெளியிலே "சாமீ" என்று துக்கங் கலந்த குரல் கேட்டது. வேலைக்காரன் யாரையோ அதட்டிக்கொண்டிருந்தான். "அந்தப் பிள்ளையை இந்தப் பாவிக் கண்ணுலே ஒரு தடவை பார்க்கிறேன் சாமி; கபாலிதான் அந்தப் பிள்ளையைக் காப்பாற்ற வேண்டும்" என்றுமட்டும் அந்தக் குரல் கேட்டது.

ஆலமரத்துப் பிச்சைக்காரிதான்; இரண்டு நாள் அவனைக் காணுததால் விஷயத்தைத் தெரிந்து கொண்டு வீடு தேடிக் கண்டு பிடித்து வந்திருக்கிருள். துக்கத்தோடு தன் சொந்தப் பிள்ளையைக் காணும் தாய்க்கு எத்தனை பரிவுண்டோ அத்தனைபரிவோடு வந்திருக்கிருள்.

கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவளை உள்ளே அழைத்து வரச் சொன்னர். "சாமி, கோபாலு" என்று துக்கத்தை அடக்கமாட்டாமல் அவள் கூவினுள். அந்தக் குரலைக் கேட்டு கோபாலன் கண் விழித்தான்.

"என் கண்ணே, இதோ அவள் வந்திருக்கிருள். அவளுக்கு நான் பணம் கொடுக்கிறேன். நீயே உன் கையால் கொடு. இனிமேல் உன் இஷ்டப்படியே அவளுக்கு எது வேண்டுமானுலும் கொடு" என்று கண்ணீர் வழியக் கிருஷ்ணமூர்த்தி அய்யர் கூறினர்.

கோபாலன் முகத்தில் லேசாக ஒரு புன்னகை படர்ந்தது!

சாமாவின் சபதம்

குஞ்சரன்

"என்னடா சொல்றே."

"முடியவே முடியாது."

"என்னடா முடியாது?"

"கலியாணம் செய்து கொள்ள முடியாது."

"அப்படியானல் கட்டை பிரம்மசாரியாக இருக்கப் போகிருயாக்கும்?"

"அப்படி அர்த்தமில்லே. அந்தப் பெண்ணைப்பண்ணிக் கொள்ள முடியாது. அவ்வளவு தான்."

"பின்னே அவா வீட்டுக்கு நடையா நடந்து அவா மனுஷாளோடே எழுஞ்சையே."

"அந்தப் பெண் மீது ஒரு குற்றமுமில்லே. ஆனல் அவளே என் மனைவியாகக் கொள்வதற்கு நான் தயாராயில்லே."

"அடெ மடையா! நீ அவா வீட்டுக்குப் போயிண்டு வந்திண்டிருக்கையேன்னு அந்தப் பெண் ஜாதகத்தை வாங்கிப் பார்த்து பொருத்தம் சரியாயிருக்குன்னு திட்டம் பண்ணியாச்சு. உன் பி.ஏ. படிப்பு பூரா செலவையும் அவாளா ஏற்றுக்கொள்ளுரா சீர் செளத்தியெல்லாம் நன்ணுச் செய்யரேங்கரா! நீ என்னடான்ணு எகிரு எகிருன்னு எகிறயே."

"எல்லாம் வாஸ்தவம் தான் அண்ணு, படிப்புக்குப் பணம் தரான்ணு என் எதிர் காலத்தை விக்ரயம் பண்ண நான் தயாராயில்லே. இது சத்தியம்."

" என்னடா நீ தான் பேசறயா? இல்லாட்ட சதா நாவல் படிச்சி யிருக்கயே அதன் பலனடா இது?"

" எதாயிருந்தா லென்ன; என் மனதுக் கிசைந்த பெண்ணைத் தவிர வேறு யாரையும் மனதில் கூட நினைக்க மாட்டேன்."

" சரி. உன்னை சொல்லிப் பிரயோசனம் இல்லை. குடும்பத்துக் கேத்த பிள்ளையா யிருப்பேன்னு உன்னை கருத்தாக வளர்த்த என் புத்தியையும், நம்ப அப்பா புத்தியையும் ஜோட்டாலே அடிச்சுக்கணும். என் முன்னலே நிக்காதே; எட்டிப்போடா கழுதை."

" அண்ணு மன்னிக்கணும். விவாகம்கறது வியாபார மில்லை......"

" போடா போ! ஊருலே வேறு ஒருத்தரும் கலியாணம் பண்ணிக்கல்லை. உன் வேதாந்தம் உன் மட்டோடெ இருக்கட்டும்."

* * *

இண்டர்மீடியட் பாஸ் பண்ணி விட்டு பி. ஏ. க்கு பட்டிணத்தில் ஏதாவது ஒரு காலேஜில் சேருவதற்கு வந்திருந்த சாமிநாதனுக்கும் அவன் தமையனார் விசுவநாதய்யருக்கும் நடந்த சம்பாஷணை இது. இவர்கள் மாயவரத்திற் கருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள். விசுவத்திற்கு சென்னையில் செகரடேரியட்டில் ரூ. 100-சம்பளம். அவருடைய சம்ரட்சணையில்தான் சாமா இது வரையில் படித்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் கிராமத்தில் அண்டை வீட்டு ரங்கநாதய்யர் குடும்பத்தாரும் சாமாவின் குடும்பத்தாரும் அன்னியோன்யமாய்ப் பழகி வந்தார்கள். ரங்கநாதய்யருக்கு விசாலம் என்று 16 வயது நிரம்பிய பெண் இருந்தாள். லீவு சமயத்தில் சாமா ஊருக்கு வந்தால் சதா ரங்கநாதய்யர் வீட்டில் தான் இருப்பான் என்று சொன்னல் மிகையாகாது. விசாலத்தை உத்தேசித்துத்தான் சாமா அவர்கள் வீட்டிற்குச் செல்கிருன் என்று நினைப்பது இயல்பு தான். இது தான் உண்மை என்று எண்ணி சாமாவின் பெற்ருேர்கள் அவனுக்கும் விசாலத்திற்கும் " முடிச்சு" போட

நிச்சயம் செய்ததிலும் ஆச்சரியமில்லை. இந்த சாமா சாரத்தை சென்னையிலுள்ள தன்னுடைய ஜேஷ்ட குமாரன் விசுவத்திற்குத் தெரிவித்து, தம்பியிடம் சொல்லி திட்டம் செய்யும்படி ரங்கநாதய்யர் எழுதினர். இதை ஒட்டி விசுவம் செய்த முயற்சிதான்| மேலே விவரிக்கப் பட்ட சம்பாஷணை.

* * *

விசுவத்தின் வீட்டருகில் ஒரு புத்தக சாலை இருந்தது. அதன் அதிபர் ராமஸ்வாமி ஐயருக்கும் விசுவத்திற்கும் நெருங்கிய சிநேகம். அதனல் சாமா ஒழிந்த நேரத்தி லெல்லாம் புத்தக சாலையிலுள்ள நவீனங்களைப் படிப்பான். இளம் வயது தானே! கதைகளிலுள்ள காதல் ரஸம் அவனை ஆகர்ஷித்ததில் ஆச்சரிய மில்லை. கிராமத்திலிருக்கும் பொழுது விசாலம்தான் பெண்மையின் உச்சம் என்று சாமா எண்ணினன். பட்டணத்திற்கு வந்தது விரிந்த உலகத்தையும் பெண்மையின் பல ரக பிரதிநிதிகளையும் பார்க்கப் பார்க்க மனமும் விசாலத்தை விட்டு நகர்ந்து விசால மடைந்தது. லட்சியங்கள் மாறின. தனக்கு ஏற்ற நாயகி எப்படி இருக்க வேண்டும் என்கிற கற்பனை வளர்ந்தது. கற்பனைக்கும் தனக்கென பெரியோர் வரித் திருக்கும் கட்டழகிக்கும் மலைக்கும் மடுவுக்கு முள்ள வித்தியாச மிருப்பதாக சாமா எண்ண ஆரம்பித்தான்.

* * *

அண்ணு கோபத்திற்காளான பிறகு சாமாவிற்கு வீட்டிற்குள் போவதற்கே லஜ்ஜையாயிருந்தது. மறு படியும் அண்ணு கோபித்துக் கொள்ளுவாரோ என்கிற அச்சம். ஆகையால் புத்தக சாலையிலேயே தன் நேரத்தில் பெரும் பகுதியையும் கழித்தான். ஆனல் படிப்பில் புத்தி ஓட வில்லை. காலேஜில் சேர்ந்து பி. ஏ. படிக்க வேண்டு மானல் அண்ணு தயவு வேண்டும். அவர் இஷ்டப்படி நடக்கா விட்டால் அந்த தயவு கிடைக்காது. கேவலம் படிப்புக்காக வாழ்க்கை லட்சியத்தைக் கைவிட முடிய வில்லை. இண்டர்மீடியட்டுடன் படிப்பை நிறுத்தி விட்டு எங்காவது ஒரு ஆபீஸில் குமாஸ்தாவாக அமர்ந்தால் எந்த மோஹினி தன்னைக் கண்டு மயங்குவாள் என்கிற கவலை

வேறு சாமாவைப் பிடுங்கித் தின்றது. தானாகவே அண்ணா விடம் சென்று சரணாகதியடைந்து அவர் வழியே செல்ல லாம் என்றால் அதற்கும் மனம் இடம் தரவில்லை. இவ் வாறாக ஊண் உரக்கமின்றி தன்னை மறந்த நிலையில் இருக் கையில் "என்னடா சாமா நிஷ்டையிலிருக்கிறாயா?" என்ற குரல் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த் தான்; புஸ்தகசாலை அதிபர் ராமஸ்வாமி ஐயரைக் கண் டான். உடனே எழுந்திருந்து "ஒண்ணுமில்லை மாமா" என்று அசடு வழிய பதில் சொல்லி விட்டு பேந்தப் பேந்த விழித்தான்.

* * *

சாமா கலியாணத் தகராறு ராமஸ்வாமி ஐயருக்குத் தெரியும். ஏனெனில் விசுவமும் அவரும் அத்யந்த நண்பர் கள். அதனால் சாமாவைக் கிண்ட ஆரம்பித்தார் ராமஸ் வாமி ஐயர்.

"என்னடா சாமா உனக்குக் கலியாணமாமே."

"இல்லையே?"

"உங்க அண்ணா சொன்னாரே."

"அண்ணா சொல்றார். கல்யாணம் செய்துக்கப் போற வன் நான்னா."

"அப்படின்னா வேண்டாம்னுட்டியா? ஏன் வேண் டாம்னுட்டே?"

"எனக்குப் படிப்புக்குப் பணம் தரான்னுட்டு அவா வீட்டுப் பெண்ணை நான் கலியாணம் பண்ணிக்கொள் ளனுமாம்."

"அப்படின்னா, நீ படிப்பதற்கு என்ன ஏற்பாடு?"

"ஒண்ணுமில்லே."

"உங்க அப்பாவிற்கு உன்னை மேலே படிக்க வைக்க அந்தஸ்து இருக்கா?"

"இல்லை."

"அப்படின்னா படிக்கப் போறியா, குமாஸ்தா வேலைக்கு மனுப்போட்டிருக்கயா? படிக்கணும்னு ஆசை

யிருக்கு. அதுக்கு ஒத்தாசை பண்றவாளாத்துப்பெண்ணை கலியாணம் பண்ணிக் கொள்ள வலிக்கிறதா ?"

"இல்லே......"

"என்னடா இல்லே! உன் அந்தஸ்துக்கும் யோக்யதைக்கும் எந்த அப்ஸரஸ் வந்து உன்னைக் கலியாணம் பண்ணிக்குவா? கண் மூடிக் கண் திறக்கச்சே லட்சாதிபதியாவதும் திடீரென ஒரு கட்டழகி தோன்றிக் கைபிடிப்பதும் கதையிலும் கனவிலும் தானப்பா நடக்கும். இது உலகம்டா. நினைச்சுப்பாரு."

சம்பாஷணை இந்த நிலைக்கு வந்ததும் சாமா மௌனமாயிருந்தான். ராமஸ்வாமி ஐயரும் அதற்கு மேல் அதிகமாக போவது உசித மில்லை என்று நிறுத்திக் கொண்டு சாவதானமாக ஆரம்பித்தார்.

"சாமா! நான் சொல்றது புரிஞ்சுதா? உன் அப்பாவும் அண்ணாவும் நீ எப்படியாவது நன்னுயிருக்கணும், உயர் பதவிக்கு வரணும்னுதான் பாடுபடரு. அந்தப் பெண்ணையும் நீ பார்த்திருக்கையாம்; அதன் நடவடிக்கை, குலம், கோத்திரம் எல்லாம் நன்னுயிருக்குன்னு சொல்ரு. கண்ணை மூடிண்டு பெரியவா சொல்றதைக் கேளு," என்ருர்.

சாமாவுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. ராமஸ்வாமி ஐயர் "என்ன? அண்ணாட்ட சொல்லி முகூர்த்தம் வைக்கச் சொல்லட்டுமா?"

"சரி" என்ருன் சாமாவும்.

* * * *

கலியாணம் கிராமத்தில் ஜாம் ஜாம் என்று நடந்தது சாமாவும் சந்தோஷமாகவே கிரகஸ்தாசிரமத்தை மேற்கொண்டான்.

* * * *

கலியாண மகோற்சவம் முடிந்து பத்து நாட்களாகிவிட்டன. சாமா காலேஜில் சேருவதற்காக சென்னைக்கு புறப்பட வேண்டும். கலியாணத்திற்கு முன் சாமாவிற்கும் அவன் அண்ணாவிற்கும் நடந்த வாக்கு வாதத்திற்குப்

பிறகு இருவரும் ஒருவருடன் மற்ருெருவர் முகம் கொடுத்துப் பேசிக் கொள்வதில்லே. ஆகையால் பையனை தானே அழைத்துச் சென்னையில் விட்டு விட்டு வர வேண்டும் என்று எண்ணி சாமாவின் தந்தை பையனை "என்டா காலேஜ் திறக்கற நாளாச்சே. மெட்ராஸுக்குப் புறப்பட வேண்டாமா?" என்ருர்.

"ஏற்பாடு பண்ணி விட்டேன். நாளை புறப்படுகிரும்" என்ருன் சாமா.

"என்னடா புறப்படுகிரும் என்று பன்மையிலே பேசறே. நான் வரலாம் என்று இருந்தேன்."

"நீங்க சிரமப்படா தெங்கோ அப்பா! என் மச்சினன் சங்கரன் வந்து சகல ஏற்பாடுகளும் செய்யறேன்னுட்டான்."

"என்னடா 'என்னுடைய எதிர்காலத்தை கலியாணத்திற்காக விக்ரயம் செய்திடமாட்டேன்' சபதம் செய்தாயே இப்ப என்னடான்னு கலியாணமாகி பத்து நாளாகல்லே அங்கேயே ஐக்கியமாகி விட்டாயே."

"அப்பா உலகம் அப்படித்தானிருக்கும். நீங்க பாட்டுக்கு 'கிருஷ்ணு ராமா' ன்னுட்டு இருங்கோ எல்லாம் தானே நடக்கும."

"ஆமாண்டாப்பா உனக்குத் தெரிந்த உலகம் எனக்குத் தெரியுமா?"

ஹம்சாநந்தி

பி. கே. முத்துஸாமி

ஊரே அதைப்பற்றிப் பேசிக்கொண்டது. பத்திரிகைகளெல்லாம் அரசியல் விஷயங்களை அன்று வொருதினம் மறந்துவிட்டு பெரிய எழுத்துக்களில் "செயின்ட் மேரீஸ் சம்பவம்" என்று தலைப்புக்கள் கொடுத்தும் பிரமாதப்படுத்தின.

ராக விசிறிகள், பல்லவிப் புலிகள், துக்கடா தாசர்கள் இன்னும் அந்த சங்கீத மண்டபம் கட்டிய இன்ஜினியர்கள் எல்லோருமே ஆச்சர்யப்பட்டுப் போனார்கள்!

மற்றும் விவரிக்கப்போனால் அந்த அல்லோல கல்லோலத்தைப்பற்றி தார் ரோடுகள் தங்களை உருக்கிக் கொண்டு அனுதாபப்பட்டன. மோட்டார்கார்கள் பரிதாபகரமாக ஓல மிட்டுக்கொண்டு இங்குமங்கும் ஓடின

பாட்டுக்கச்சேரி ஆரம்பமானவுடன் தன் கச்சேரியையும் ஆரம்பித்து விடவேண்டும் என்று அதெற்கென்றே அங்கிருந்த ஒன்றிரெண்டு குழந்தைகள் கூட அழ மறந்து போய் வாயில் விரலைப்போட்டுக்கொண்டு வருத்தப்பட்டன.

ஏன் ? ஏன் ? ஏன் ?

* * *

இப்படி மூன்று 'ஏன்கள்' போட்டு கேட்கவேண்டிய விஷயந்தான் இது.

அணுகுண்டு வேகத்தில் முன்னுக்கு வந்து கொண்டிருந்த பிரபல சங்கீத நக்ஷத்திரம் ஆனந்தி எப்பவும் போல ஆனந்தமாக செயின்ட்மேரிஸ் மண்டபத்தில் பாடிக் கொண்டிருந்தாள் அன்று.

வழக்கமான ஜபா—சகாக்கள், சபையில் எள்விழ இடமில்லாத கூட்டம். பாடவாரம்பித்து அரைமணி நேரங்கூட ஆகவில்லை. ரஸிகர்களில் ரொம்பப்பேர்களுக்கு ஏககாலத்தில் கைகளையும், கண்களையும், கால்களையும், கழுத்துக்களையும் வலிக்க வாரம்பித்துவிட்டது. அவர்கள் எத்தனை தரந்தான் கரகோஷம் செய்வது? அவர்களையறியாமல் எழும்பிக் குதிப்பது ? எட்டி எட்டிப் பார்ப்பது ?

பாடகி பிலஹரி ராகத்தின் சாயைய அப்படி நாஸுக்காகக் காண்பித்துவிட்டு கீர்த்தனம் பாடி முடித்திருந்தாள். திடீரென்று சபையின் நடுவே இருந்து ஒரு குரல் "ஹம் சாநந்தி ராக ஆலாபனம்" என்று பாடகியை நோக்கி ஒலித்தது.

ஆனந்தி குரல் வந்த திக்கை உற்று நோக்கினாள். அடுத்த நிமிஷம் மேடையிலிருந்து "ஹா !" வென்று அலறிக்கொண்டு சுருண்டு விழுந்தாள். பேச்சு மூச்சில்லை.

அந்தக்குரலின் சொந்தக்காரன் வலைபோட்டுத்தேடினார்கள். அலசி எடுத்துப் பார்த்தார்கள். "பிடி! பிடி!!" என்று கத்தினார்கள். அவன் அகப்படவில்லை.

அவன் யார் ?

அவளுக்கும், அவனுக்கும் என்ன ? கதையே அது தான் : ஆனால் நேயர்களை 10-வருஷங்களுக்கு முன்னால் அழைத்துக்கொண்டு போவதுடன் ஒரு சின்னஞ் சிறு ஓட்டு வில்லை வீட்டிற்குள்ளும் அழைத்துக்கொண்டுபோக வேண்டியிருக்கிறது.

அப்பொழுது ஆனந்தி சின்னஞ்சிறு பெண்ணாக தத்திக் குதித்துக்கொண்டிருந்தாள். ஆடுவதும், பாடுவதும், ஓடுவதுமே அவள் உலகம்.

அவள் வயதான தாய் திலகம் பார்த்தாள். தன் மகளின் குரலினிமைக்கும், முக வெட்டிற்கும், அவளுக்கு சங்கீதம் சொல்லிவைத்து ஏன் ஒரு 'வாணி' யாக்கக் கூடாது என்று நினைத்தாள். அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பாக அம்மா பெண் ஆனந்தியின் கையைப் பிடித்துக் கொண்டு ஒரு குருவை நாடிப்போனாள்.

அந்தக் காலத்தில் பிரபல சங்கீத சாகரம் பல வாணிகளையும், பாகவதர்களையும் சிருஷ்டித்து அனுப்பிவைத்த கலாபீடம்.

அங்கே போய்ச் சேர்ந்தார்கள் இருவரும். " ஆனந்தியை ஏற்றுக்கொண்டு ஆளாக்கி வைக்கும் பொறுப்பு தங்களுடையது " என்று விருப்பமாக விழிகளை உருட்டிச் சொன்னாள் திலகம்.

கருத்த தாடிகளுக்கு நடுவே ஆசீர்வதிப்பது போல இளஞ் சிரிப்பு ஒன்று தோன்றி மறைந்தது. ஆனந்தி அவரது சிஷ்யையானாள்.

முதல் நாள் பாடம் ஆரம்பமான போது சிவானந்தம் சாய்ந்தபடி தாடியை உருவிக்கொண்டே " கைலாஸம் ! கைலாஸம் !!" என்று கூப்பிட்டார்.

" இதோ வந்துவிட்டேன் !" என்பதற்குப் பிறகு ஒரு வாலிபன் பால் வடியும் முகத்துடன் பரபரப்புடன் அவரருகே வந்தான்.

ஆனந்தி நாணிக் கோணிக்கொண்டு இரண்டடி தூர மாக எடுத்து வைத்தாள். கண்கள் மருண்டபடி "யார் இந்த கைலாஸம்?" என்று கேட்க வாரம்பித்தன.

சிவானந்தம் புரிந்து கொண்டு சொன்னார்: "ஆனந்தி! இவன் என் வளர்ப்புப் பிள்ளை. இவன் தான் எனது பிரதிநிதியாக உனக்கு பாடம் சொல்லிக் கொடுக்கப்போகிறான். எல்லாம் என் மேற்பார்வையில் தான்.........சங்கீத உலகில் ஆண், பெண், உணர்ச்சி களுக்கோ வித்தியாசங்களுக்கோ இடமில்லை. அது அவைகளையெல்லாம் மீறியது, என்ன சரிதானே?"

ஆனந்தியின் மௌன அசைவு சரி என்று பதிலளித் தது. சங்கீத சிஷை அமோகமாக ஆரம்பமாயிற்று.

* * *

அன்று மாலை சங்கீத சிஷை முடிந்து ஆனந்தி தன் விடுதிக்குப் போனவுடன் அவளுக்கு குப்பென்று வியர்த் தது. அவள் வாய் இரு முறை "என் வாத்தியார் கைலாசம்!" என்று சொல்லி ஆனந்தப்பட்டது. ஆஹா! எப்பேர்ப்பட்டவர்......எவ்வளவு நன்றாகச் சொல்லிக் கொடுக்கிறார். அத்துடன் அந்த களை சொட்டும் முகம்..." இப்படியெல்லாம் தனக்குள்ளேயே பேச ஆரம்பித்து விட்டாள்.

சங்கீதம் சொல்லிக்கொள்ள வந்த இடத்தில் காதல் வந்து இப்படி பயமுறுத்தும் என்று அவள் எதிர்பார்த் தாளா, என்ன!

கைலாசத்தின் வாலிப உள்ளத்திலும் புயல் அடிக் காமலில்லை. இது வரை எவவளவோ பெண்களுக்கு ஆனந்தியைப்போன்ற நவயுவதிகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறான். ஆனால் இன்று வந்த ஆனந்தி அவன் உள்ளத்தை என்னபாடு படுத்தினாள்? அவனை குரு பீடத்திலிருந்து கெல்லி எடுத்து அவளது இதயத்தில் குடி எற்றிக்கொண்டு விடுவாள் போலிருக்கிறதே! பாடங்களை என்னமாகப் புரிந்து கொள்கிறாள். அத்துடன் அந்த இரண்டு கண்கள் என்னமோ என்னிடம் வேண்டு கின்றனவே, அது என்ன.........

இப்படியாக அவஸ்தைப்பட்டான்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு இரவு இந்த இரண்டு அவஸ்தைகளுக்கும் குளத்தங்கரையில் அல்லிச் செடிகளுக்கருகே முடிவு ஏற்படப்பார்த்தது.

ஆனந்தி படிக்கட்டில் அமர்ந்தபடி ஹம்சாநந்தியை ஆலாபனம் செய்து கொண்டிருந்தாள். அவளை மறக்கச் செய்த அந்த ஆலாபனை விண்ணையும் மண்ணையும் மறக்கச் செய்தது.

அப்படி எவ்வளவு நேரம் மெய்மறந்து எதைப்பாடிக் கொண்டிருந்தாளோ அவள் அறியாள். அவளை யாரோ அன்புடன் "ஆனந்தி!" என்று சொல்லி தட்டி எழுப்பிய பிறகு தான் துள்ளி எழுந்தாள்.

குரு கைலாசம் அவளருகே நின்றபடி "பேஷ்! ஆனந்தி ரொம்ப பேஷ்!" என்று சொல்லிப் பாராட்டியதுடன் கையைப் பிடித்து அருகே இழுத்து உள்ளங்கையில் அதர அன்பளிப்பு ஒன்றும் கொடுத்தான்.

ஆனந்தி இரண்டாம் முறையாகத் தன்னை மறந்தாள். தன் ஜன்மம் சாபல்யமடைந்து விட்டதாகக் கருதினாள். அவன் மேல் துவண்டு விழுந்தாள்.

அந்த இன்பம் ஐந்தே நிமிஷந்தான் நீடித்தது. பெரிய குருநாதர் சிவானந்தர் அகஸ்மாத்தாக குளக்கரை பக்கம் வந்தவர் அக்காட்சியைக் கண்டு ஸ்தம்பித்துப் போனார்.

கைலாசம் காதலின் பெயரால் குரு ஸ்தானத்தைக் களங்கப்படுத்தி விட்டதாக அங்கிருந்து அகற்றப்பட்டான். பேதைப் பெண் என்ற பெயரால் ஆனந்திக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டது. இருந்தாலும் கைலாசத்தை மறக்க அவளால் இயலவில்லை.

* * *

காலப் பறவை இறக்கைகளை படபடவென்று அடித்துக்கொண்டு 5, 6 வருடங்களை விரட்டி மடிந்தது.

ஆனந்தியின் சங்கீத சிட்சையெல்லாம் ஒரு தினுசாக முடிந்து அரங்கேற்றத்துக்கு நாள் குறிப்பிட்டிருந்தது. அன்றைய தினத்தில் அவள் பேருக்கு ரிஜிஸ்தர் தபால் ஒன்று வந்தது. அதில்.

என் ஆனந்திக்கு.........

இந்தப் பாபியை மறந்திருக்க மாட்டாய் என்று நம்புகிறேன். ஹம்சாநந்தி ராக ஆலாபனம் செய்து அகில உலகத்தையும், அல்லிக் குளத்தையும் அடியேனையும் மயங்க வைத்த ஆனந்தியை அப்படிப்பட்டவளாகக் கருதவில்லை. நான் என்னமோ தெரியாத் தனமாக வாலிப உணர்ச்சியால் பந்தப்பட்டு குற்றவாளியானேன். இருந்தாலும் என் மகத்தான தவறுதலை உணருகிறேன்.

உன் குருவான நான் இந்தப் புனித தினத்தில் உன்னைப் பாவிக்கும் காணிக்கை ஒன்று உண்டு. உன் அரங்கேற்ற வைபவ நாளான இன்று என்பொருட்டு எக் காரணத்தைக் கொண்டும் அந்தப் பாழாய்ப்போன ஹம் சாநந்தி ராகம் பாடுவதில்லை என்று திட சங்கல்பம் செய்து கொள்ளு. ஒரு சமயத்தில் உன் இருதயத்தையே ஒழித்துவிடப் பார்த்த நீ இதுகூட எனக்குச் செய்ய மாட்டாயா ?

உன்னை நம்புகிறேன். பாட்டுலகில் பிரபல நட்சத் திரமாக உன்னை மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கும்.

கைலாஸம்.

* * *

அன்று முதல் ஆனந்தி ஹம்சாநந்தியை மறந்து விட் டாள். எந்தக் கச்சேரியிலும் பாடுவதில்லை. ஆனால் அன்று செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் பாடிக்கொண் டிருக்கும்போது எழுந்த அந்தக் குரல் யாருடையது ? ஒருவேளை கைலாஸமே.........

நினைத்தாள், தவித்தாள், மயங்கி விழுந்தாள்............

உலகிற்கு ஒரு குரல் வெகு தூரத்திலிருந்து பதிலளிக் கிறது:

“ குருவினிடம் சீடனுக்கு அசையாத பக்தி இருக்க வேண்டும். குருவின் ஒழுக்கம் எப்படி இருந்தாலும் சரி, சீடன் மோக்ஷமடைய அந்த குரு பக்தியே போதும். ”

மெச்சத்தகுந்த எம்பிராய்டரி
வேலைப்பாடுகள்

பட்டு & நூல்

ஜவுளிகள்

கண்ணைக் கவரும் வேலைப்பாடுகளுடன் கூடிய அநேக எம்பிராய்டரி பார்டர்களில் ஏராளமாக தீபாவளிக்கென்றே ஸ்பெஷலாக வந்து குவிந்துள்ளன. இன்றே ஒரு முறை விஜயம் செய்து உங்களுக்குப் பிடித்தமான ரகங்களைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளுங்கள்.

தங்களது குன்றாத ஆதரவை என்றும் நாடுகிறோம்

★

கிருஷ்ண ஸில்க் ஹவுஸ்

1, சன்னதி தெரு, மைலாப்பூர்
மதராஸ்

கலை வளர்க! கலைஞர்கள் வாழ்க!

கலாரஸிகர்கட்கும், பொதுமக்களுக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்

நாடகப்புரவலர், நாடகக் கலாமணி வைரம்

அருணாசலம் செட்டியாரவர்களின்

காரைக்குடி

ஸ்ரீ ராம பால கான விநோத சபா

(நிறுவியது 15-7-1943)

மூன்றே ஆண்டுகளில் முன்னேற்றமடைந்து முத்தமிழ் இன்பத்
தேனினைச் சொரிந்து ஆன்றோர், சான்றோர் அனைவரும் போற்றும்
அற்புத உத்தமப் பற்பல நாடகங்கள்

திருமழிசை ஆழ்வார்	புகழேந்திப் புலவர்
பக்த-சாருகதாஸர்	வினையின் விளைவு
விஜய நகர சாம்ராஜ்யா	மோஹினி லீலா
தாக சாந்தி	மணவிலங்கு
செயின்ட்-பிலோமினு	சிவன் சக்தி
குடும்ப வாழ்க்கை	வைரம்
எதிர்பார்த்தது	மணி
ஏகம்பவாணன்	சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை

தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் வெற்றிக்கொடி நாட்டி
இப்போது

சென்னை மவுண்ட் ரோடு

S. V. S. நியூ தியேட்டரில்

(வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் சமூக நாடகம்)

குடும்ப வாழ்க்கை

தினசரி மாலை 6-15 மணி வியாழன் மட்டும் இரவு 9-15 மணி
பிரதி ஞாயிறுகளில் இரண்டு ஆட்டம்
முதல் பகல் 3 மணி இரண்டாவது மாலை 6-30 மணி

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு
23-10-46 புதனன்று இரண்டு ஆட்டங்கள்
முதலாவது பகல் 3 மணி இரண்டாவது 6-30 மணி

விரைவில் வெளிவருகிறது!

ஸ்ரீ கமல் தயாரிப்பு

மகாத்மா உதங்கர்

(தமிழ்)

கொத்தமங்கலம் சீனு
விஜயகுமாரி
பேபி கமலா
டி. ஆர். ராமச்சந்திரன்
கே. ஆர். செல்லம்
வித்வான் ஸ்ரீனிவாஸன்
கோபிநாத்

டைரக்ஷன்: புட்டு அய்யர்

கதை, வசனம் பி. எஸ். ராமய்யா

பாடல்கள் சிவன்

For Particulars :

ANDHRA-CEDED	—	Royal Film Exchange-Sec'brd
MALABAR	—	Swamy Films, Kottayam
N.A., S.A., CHINGLEPET	—	Harnath Pictures, Vellore
COIMBATORE-SALEM	—	N. M. R. Picture Cirit, Salem
Other Areas	—	T. P. Sundaram

BALAJI NAGAR, MADRAS

பட்டுப் புடவை

தீபாவளிக்கென்று ஸ்பெஷலாக பட்டு சேலைகளும் இதர ஜவுளிகளும் நூதன நாகரிக டிசைன்களில் ஏராளமாக வந்து குவிந்துள்ளன.



உங்களது தேவைக்கு முந்துங்கள்.

★

M. நடேச அய்யர் & கோ.,

9, வடக்கு மாட வீதி

மயிலாப்பூர் :: மதராஸ்

பொ. திருகூட சுந்தரம் பிள்ளை

இந்தக் கேள்வியைப் பல நண்பர்களிடம் கேட்டேன். யாரிடத்தில் கேட்டாலும் அவர்கள் சிரிக்கின்றார்கள். அதன் பொருள் யாது? இதுகூடத் தெரியாதவர்கள் உலகில் உண்டோ? 'யானை பார்க்க வெள்ளெழுத்தா?' என்பதேயாகும்.

ஆகவே, ஆண்களிடம் கேட்டால் அவர்கள், 'இதிலென்ன சந்தேகம், பெண்கள்தான் அழகு, இதை எல்லோரும் அறிவார்களே,' என்று கூறுகிறார்கள்.

பெண்களிடம் கேட்டால் அவர்களும், 'நாங்கள்தான் அழகு, இன்னும் உங்களுக்கு இது தெரியவில்லையா?' என்று கேட்கிறார்கள்.

ஆகவே, ஆண்கள் பெண்கள் எல்லோரும் ஏகமுகமாகப் பெண்ணையே அழகு என்று கூறுகிறார்கள். ஆயினும், அவர்கள் கூறுவது சரிதானா?

இந்தச் சந்தேகத்தை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று யோசித்தேன். அழகு விஷயங்களில் அதிகமாக ஈடுபடுகிறவர்களிடத்தில் கேட்டால்தான் தெரியும் என்று முடிவு செய்தேன். அழகில் ஈடுபடுகிறவர்கள் கவிஞர்கள்தாம் என்பதில் சந்தேகமில்லை. அதனால் அவர்களிடமே கேட்கலானேன்.

முதலில் திருவள்ளுவரிடம் கேட்டேன். தலைவன் தலைவியைப் பார்க்கிறான். தலைவி தலைவனைப் பார்க்கிறாள். இருவருடைய கண்களும் நோக்கு ஒக்கின்றன. வதுவை செய்து கொள்கின்றனர். அதனால் கவிஞர் ஆணும் அழகு பெண்ணும் அழகு என்று கூறுவதாகத் தோன்றும்.

ஆனால் காதலன்தான் பெண்ணின் அழகை
"முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு,"

என்று பலபட வர்ணிக்கின்றானே தவிர, காதலி ஆணின் அழகை வர்ணிக்கக் காணோம். ஆதலால் தலைவன் தலைவியின் அழகில் ஈடுபட்டுக் காதல் செய்ய ஆரம்பிக்கின்றான் என்பதில் சந்தேகமில்லை. அப்படியானால் பெண் எதற்காகக் காதலிக்கின்றாள்? காதலனுடைய அழகைக் கண்டா? அதைப்பற்றி யாதொன்றும் வள்ளுவர் கூறவில்லை. அப்படிக் கூறாததால் அவளுடைய காதலுக்கு அவனுடைய அழகு காரணமன்று; வேறு ஏதோதான் காரணம் என்று எண்ணவேண்டியதாக இருக்கின்றது. சாதாரணமாக, 'ஆண்கள் அழகை விரும்புவார்கள், பெண்கள் வீரத்தை விரும்புவார்கள்,' என்று கூறுவார்கள். அதுதான் காரணமோ திருக்குறளில் காணப்படும் இந்த வித்தியாசத்திற்கு?

அடுத்ததாகக் கவிச் சக்கரவர்த்தி கம்பரிடம் கேட்டேன். அவர் ராமனை "அந்தமில் அழகன்" என்றும் சீதையை "வரம்பில் பேரழகினாள்" என்றும் கூறுகின்றார். அத்துடன்,

"நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்;
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கு மன்னதே,"

என்று கூறவும் செய்கிறார். அதனால் அவர் ஆண் பெண் இருவரும் சரிசமமான அழகுடையவர்கள் என்று எண்ணுவதாகவே தோன்றுகிறது.

ஆனால் அவர் ராமனைத்தான் பாதாதிகேச பரியந்தம் உறுப்பு உறுப்பாக வர்ணிக்கிறார். அப்படி வர்ணித்ததோடு நிற்காமல் அந்த வர்ணனை அடங்கிய பாகத்தை

வேறு பெயரிட்டழைக்காமல் "சுந்தர காண்டம்" என்று அழைக்கவும் செய்கிறார். இதை நோக்கும்போது கம்பர் சீதையைவிட ராமனையே அதிக அழகுடையவனாகக் கருதுகின்றார் என்று தோன்றும்.

ஆனால் உண்மை அதுவாகக் காணோம். ராமனைப் போல் சீதையை விரிவாக வர்ணிக்காதபோதிலும் அவளையே அதிகமான அழகுடையவள் என்று கூறுவதாகவே தோன்றுகிறது.

வர்ணிக்கக்கூடிய அழகாயிருந்தால்தானே வர்ணிப்பார்.

"ஆதரித்து அமுதில்"கோல் தோய்த்து
அவயமமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லால்
மதனற்கும் எழுத ஒண்ணா."

அழகுடையவளை எப்படி வர்ணிக்க முடியும்? அதனால் "அழகு இவளைத் தவம் செய்து பெற்றதுகாண்" என்று ஒரேமொழியில் கூறி நம்முடைய கற்பனா சக்திக்கு விட்டு விடுகிறார்.

அதுமட்டுமா? சீதையைக் காண்பதற்கு ஆண்களுக்குத்தான் ஆயிரம் கண்கள் வேண்டும் என்பதில்லை. பெண்களுக்கும்கூட வேண்டியதே என்று சூர்ப்பனகை கூறுகின்றாள் :—

"பண்புற நெடிது நோக்கிப்
படைக்குநர் சிறுமையல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை
யில்லையாம் என்று நின்றாள்
கண்பிற பொருளிற் செல்லாக்
கருத்தெனில் அஃதே, கண்ட
பெண்பிறந் தேனுக்கென்றால் என்படும்
பிறருக் கென்றாள்."

ஆகவே, கம்பரும் பெண்ணையே அழகு என்று கூறுவதாகத் தெரிகிறது.

இவர்கள் இருவரும் பழம் பசலிகள். இக்காலத்து நவீன கவிஞரைக் கேட்போம் என்று எண்ணினேன்.

பாரதியாலரக் கேட்டேன். அவரும் பாஞ்சாலி யின் அழகை வர்ணிக்கிருரே தவிர, பாண்டவரின் அழகை வர்ணிக்கக் காணும். அதுபோலவே கண்ண ஞகிய காதலன் அழகை வர்ணியாமல் கண்ணஞகிய காத லியின் அழகைத்தான் வர்ணிக்கிருர். இறுதியில்,

" மலரினில் நீலவானில்
மாதரார் முகத்தி லெல்லாம்
இலகிய அழகை ஈசன்
இயற்றினன்,"

என்று முடிவு கட்டுகின்ருர். ஆகவே அழகில் ஈடுபடும் கவிஞர்கள் பெண்ணேயே அழகு என்று ஏக மனதாகக் கூறுகிருர்கள்.

ஆனலும் எனக்குச் சந்தேகம் தீர்ந்தபாடில்லே. ஆண் பெண்ணேப் பார்க்கும்பொழுதும், பெண் ஆணேப் பார்க்கும் பொழுதும் உணர்ச்சி உண்டாகின்றது. உணர்ச்சி வயப்பட்டால் உண்மையைக் காண முடியாது.

அனுமன் தான் ராமனே வர்ணிக்கின்ருன். ஆயினும் அவனும் பக்தி என்னும் உணர்ச்சி ததும்பி நிற்பவனு கவே காணப்படுகின்ருன். அதனல் உணர்ச்சியை விட்டு விட்டுக் காய்தல் உவத்தல் அகற்றி ஆராய்ந்தாலே உண்மை விளங்கும்.

நாம் இயற்கைக் காட்சிகளே அனுபவிக்கிருேம். அப்பொழுது அவற்றின் அழகில் மட்டும் ஈடுபட்டிருக்கி ருேமேயன்றி நமக்கு அப்பொழுது வேறு எவ்விதமான உணர்ச்சியும் கிடையாது. அப்பொழுது எது அழகா யிருக்குமோ அதைத்தான் அழகானது என்று கூறு வோம். பிற உணர்ச்சிகள் ஏற்பட்டால்தான் நம்முடைய அழகுணர்ச்சி மழுங்கிப் போகும். அப்பொழுது அழ கில்லாததையும் அழகானதாகச் சொல்ல ஆரம்பித்து விடுவோம்.

கோழிகளேப் பாருங்கள். அவற்றில் சேவல் அழகா? பெட்டைக் கோழி அழகா? முட்டை விற்பனேயில் ஆசை யிருந்தால் தான் பெட்டைக் கோழியை விரும்புவோமே யன்றி அழகை மட்டும் அனுபவிக்க விரும்பினல், சேவ

லேத்தான் பார்ப்போம், அதைத் தான் அழகு என்று கூறு வோம். சிறு குழந்தைகளுக்குக் கோழிகளைப் பார்க்கும் பொழுது அழகுணர்ச்சியைத் தவிர வேறு உணர்ச்சி கிடையாது. இன்னும அவர்களுக்கு முட்டையைப் பற்றிய ஆசை உண்டாகவில்லை. அதனால் குழந்தைகளிடம் எது அழகு, சேவலா? பெட்டைக் கோழியா? என்று கேட்டால் "அப்பா சேவல் தான் அழகு, அதன் கொண்டையைப்பார். எவ்வளவு அழகாயிருக்கிறது?" என்று கூறும்.

அப்படியே சகல ஜீவராசிகளையும் ஆராய்ந்தால் ஆண் தான் அழகாக இருக்கக் காண்போம். சாதாரணமாக நம்முடைய வீடுகளில் சற்றும் பயமின்றி வந்து கூடு கள் கட்டுகின்றனவே சிட்டுக்குருவிகள். அவற்றுள் எது அழகு—ஆணா, பெண்ணா? பெண் ஒரே தவிட்டு நிறம். பெண் குருவியைச் சிறிய பெட்டைக் கோழி என்றும் பெட்டைக் கோழியைப் பெரிய பெண் குருவி என்றும் கூறிவிடலாம். இப்படி அழகற்ற தன்மையில் இரண்டும் சமானமாக இருப்பதைக் காணலாம். ஆனால் ஆண் குருவியோ நிறத்திலும் வேறு, கழுத்தில் காணப்படும் வெண்மை கருமையிலும் வேறு. ஆண்குருவியைத் தான் அழகு என்று எல்லோரும் கூறுகிறார்கள்.

மயில் பார்த்திருக்கிறோம். அதில் எது அழகு? அரை நிமிஷம் கூடக் காத்திருக்க வேண்டாம். உடனே பதில் வந்து விடும் ஆண் தான் என்று. அதில் சந்தேகமே கிடையாது. ஆண் தான் அழகு. பெண் அழகே யில்லை என்று கூடக் கூறிவிடலாம். இரண்டிற்கும் மலைக்கும் மடுவுக்கு முள்ள தாரமுண்டு.

பட்சிகள் வேண்டாம். மிருகங்களைப் பார்த்தாலும் ஆண் தான் அழகு என்ற உண்மை விளங்கும். நம்மோடு தினந்தோறும் பழகும் மாட்டைப் பார்ப்போம். காளை தான் அழகு. வண்டியிலும் ஏரிலும் பூட்டும் காளைகளைக் கூறவில்லை. கோயிற்காளைகள்தான் உண்மையான காளை கள். அவைகளைப் பார்த்தால் போதும், என் கூற்றின் உண்மை விளங்கும்.

காட்டிலிருந்து கொண்டுவந்துள்ள யானையைப் பார்த்தாலும் சிம்மத்தைப் பார்த்தாலும் அப்படியேதான். ஆண் யானையின் பக்கத்தில் பெண்யானை அழகாகவே தெரியாது. ஆண் சிங்கம் தான் மிருகேந்திரன்.

இன்னும் காட்டிலுள்ள பல மிருகங்களைப் பார்த்தாலும் ஆண் அழகு என்பதே உறுதியாகும். மானில் எது அழகு? கலைமான் தான். அதனால் தானே அதன் கொம்பை நாம் நம்முடைய வீட்டில் அணி பொருளாக உபயோகித்து வருகின்றோம்.

ஆகவே இயற்கையானது, ஆண் அழகா பெண் அழகா என்னும் கேள்விக்குக் கவிஞர்களைப் போலவும் மற்றவர்களைப் போலவும் விடையிறுக்காமல் வேறு விதமாகவே இறுக்கின்றது. அப்படி மற்ற ஜீவ சிருஷ்டிகளில் ஆணே அழகாயிருந்தால் மக்களிடையே மட்டும் பெண் அழகாயிருக்க வேண்டிய காரணம் என்ன?

இந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்வதற்கு ஏற்றவர்கள் மக்கள் அல்லர். பிறகு ஜீவ சிருஷ்டிகளே. நாம் அவற்றைப் பார்த்து அழகுணர்ச்சியின் காரணமாக அவற்றுள் ஆண் தான் அழகு என்ற கூறுகின்றோம். அதே போல் அவைகளிடம் மக்களைப்பற்றிக் கேட்டால் அவைகளும் ஆண் அழகு என்று கூறுமேயன்றிப் பெண்ணை அழகு என்று கூறா. ஆண் மகன் தான் மீசை தாடி முதலியவற்றோடு கம்பீரமாகத் தோன்றுகிறான். அதனாலேயே அவனைக் "காளை" என்றும் "சிம்மம்" என்றும் கூறுகிறார்கள். சீதையும்

"போதகம் நடப்ப நோக்கியே
புதிய தோர் முறுவல் பூத்தாள்."

ஆதலால் எந்த ஜீவராசியிடம் கேட்டாலும் மக்களில் ஆணைத்தான் அழகு என்று கூறும்.

அப்படியானால் நாம் மட்டும் பெண்ணை அழகென்று கூறுவானேன்? மற்ற ஜீவராசிக்குள்ள அறிவு நமக்குக் கிடையாதோ? அதுவன்று விஷயம். சேவலிடம் ஆண் மகன் அழகா, பெண் மகள் அழகா என்று கேட்டால் ஆண் மகனையே அழகு என்று கூறும், அதே

போல் சகல ஜீவராசிகளிலும் ஆணையே அழகாக மதிக்கும். ஆயினும் அதே சேவலிடம் கோழிகளில் எது அழகு என்று கேட்டால் "பெட்டைக் கோழிதான், அதில் என்ன சந்தேகம், அதன் நிறத்தைப்பார். இந்தப் பழுப்பு நிறத்துக்கு இணை வேறுண்டோ. அதன் நடையைப்பார். அன்னத்தின் நடையை மெச்சுகிறீர்களே. அன்னமும் எங்கள் ஜாதிதானே, அதுவும் இவளிடம் தானே நடக்கக் கற்றுக் கொண்டது. அதன் மூக்கைப் பார்.

"மூக்கொக்கும் பொன்னென்றாலும்
வாக்கொக்கும் பொருள் ஒவ்வாவால்
வழுத்தலாம் உவமை உண்டோ?"

என்று தன் காதலியின் அழகை வர்ணிக்க ஆரம்பித்து விடும். அழகுத் தெய்வத்தின் வடிவமும் பெட்டைக்கோழி தான் என்று கூடச் சாதிக்கும்.

அப்படியே தான் சகல ஜீவராசிகளும் தத்தம் இனத்தில் பெண்ணையும் மற்ற இனங்களில் ஆணையும் அழகாகக் கூறும். அதேமாதிரி தான் நம்மிலும் ஆண்கள் பெண்களையே அழகாகக் கூறுகின்றோம்.

இப்படித் தம் இனத்தில் பெண்ணையும் பிற இனத்தில் ஆணையும் அழகாகக் கூறுவதன் காரணம் யாது? காதல் உணர்ச்சி பெண்ணை அழகாகக் கருதுகின்றது. இதுதான் உண்மையான விஷயம்.

அப்படியானால் பெண்களும் பெண்களையே அழகாகக் கூறுவானேன்? அதற்குக் காரணம் ஆண்கள் அவ்விதமான எண்ணத்தை ஆயிரக் கணக்கான வருஷங்களாகக் கூறிக் கூறி அவர்களிடம் உறையும்படி செய்து விட்டதுதான் சுத்தமான அறிவுடன் ஆராய்ந்தால் ஆணும் சரி, பெண்ணும் சரி, ஆணைத்தான் அழகாக எண்ணுவார்கள்.

மக்களில் ஆணும் பெண்ணும் பெண்ணையே அழகுடையவளாகக் கூறிய போதிலும் தினசரி வாழ்க்கையில் நாம் நம்மையறியாமலே ஆணைத்தான் அழகாகக் கருதி நடந்து வருகின்றோம். ஆணுக்கு அழகு செய்கின்றோமா, பெண்ணுக்கு அழகு செய்கின்றோமா?

ஆண் அழகு நிறைந்திருப்பதால் ஆணை விடப் பெண்ணையே அழகான ஆடை ஆபரணங்களைக் கொண்டு அலங்காரம் செய்கிறார்கள்.

ஆணுக்கு அலங்காரம் செய்ய வேண்டியதில்லை. யாரே அழகுக் கழகு செய்வார். இயற்கை தந்த அழகுச் சின்னங்களை யெல்லாம் நாம் நீக்கி விட்ட இந்தக் காலத் திலுங் கூட ஆண்கள் அலங்காரம் செய்யா விட்டாலும் அழகாகவே தோன்றுகிறார்கள்.

அதனால் தான் கவிஞர்கள் எல்லோரும் "பெண்" என்று குறிப்பிடும் பொழுதெல்லாம் பெண் என்று கூறாமல் நேரிழை—ஏந்திழை —அணியிழை—பூமாண்குழ லாள்—மருவொன்று கூந்தலாள் —மாழையண் கணி— என்றே கூறுகிறார்கள். ஆனால் ஆணையோ வீரன் என்றோ அறிஞன் என்றோ தான் கூறுகிறார்கள்.

கணவனும் மனைவியும் ஒன்றாகச் சேர்ந்து வெளியே போகும்போது பாருங்கள். கணவன் தலையை வாரிவிட் டிருக்கிறான். வெள்ளை வேஷ்டி. வெள்ளைச் சட்டை- முடிந்தது அவனுடைய அலங்காரம். ஆனால் அவனு டைய மனைவிக்கு எத்தனை அலங்காரங்கள். ஆடையில் எத் தனை நிறங்கள். அணியில் எத்தனை விதங்கள். சந்திரன் போன்ற முகமாச்சே. கன்னத்தில் பௌடர் பூசுவதும் நெற்றியில் பொட்டு இடுவதும் உதட்டில் சாயம் தீட்டுவ தும் எதற்கு? உறுப்பு உறுப்பாக நகைகளைத் தொங்க விடுவானேன்? இப்படிக் கணவன் அலங்காரம் செய்யா மல் மனைவிமட்டும் அலங்காரம் செய்வதன் ரகசியம் யாது? ஆணுக்கு இயற்கை அழகிருப்பதும் பெண் ணுக்கு அது இல்லாததும் தான். இதனால்தான் வேதநாயகம் பிள்ளை,

"இடையில் மயக்குவது சாலியன் சேலை
இருகாதில் சொலிப்பது தட்டான் கைவேலை
கடையிலே விற்பது கொண்டைப் பூமாலை
கன்னிக்குச் சொந்தமெல்லாம் வெறும் தோலே"

என்று பாடி யிருக்கிறார்.

இந்த மாதிரி இயற்கை பெண்ணைவிட ஆணையே அழ காகச் சிருஷ்டித்திருப்பதற்குக் காரணம் யாது? இயற்

கைக்குப பெண்ணிடம் வெறுப்போ அன்பு குறைவோ கிடையாது. அதற்குப் பதிலாக அவளிடம்தான் அதிகமான அன்பு. அவளைக்கொண்டுதான் உலகத்தை அழியாமல் நடத்தவேண்டி யிருக்கிறது. அதனால் பெண் சாதாரணமான பிள்ளையைப் பெற்றுவிடக் கூடாது: சிறந்த அழகும் ஆற்றலும் உள்ள குழந்தைகளையே பெற வேண்டும். அதனால் பெண்ணானவள் பல அழகான ஆண்களைப் பார்த்து அவர்களுள் தன்னுடைய கணவனாக இருந்து தலைசிறந்த குழந்தையைப் பெறக் கூடிய பேரழகனையே தெரிந்து கொள்ளவேண்டும். அதற்காகவே பழைய காலத்தில் சுயம்வரம் என்பது ஏற்பட்டதாகும். இந்தமாதிரியான சுயம்வரம் இப்பொழுதும் பட்சிகளிடமும் மிருகங்களிடமும் நடப்பதைக் காணலாம்.

ஆகவே உண்மையில் ஆண்தான் அழகு.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25, சைனா பஜார் : : மதராஸ்

தங்கச் சிலை

எஸ். சங்கரன்

அந்த சிலை உல்லாஸ ராஜகுமாரனுடையது. "சந்திரனைப் புடித்துத் தா!" என்று அழும் குழந்தைகளுக்கு ராஜகுமாரன் சிலையைக் காட்டி, "அவனைப் பார் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கிறான்," என்று சமாதானப்படுத்துவார்கள் தாய்மார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் அதைப் பார்த்துத் திருப்தி யடைந்தனர். தான் எதைச் செய்தாலும் தோல்வியையே அடைந்து வந்த ஒருவன், "போகட்டும்! இவன் ஒருவனாவது சந்தோஷமாயிருக்கிறானே!" என்று சமாதானப்படுத்திக் கொண்டான். நகரசபை அங்கத்தினர் ஒருவர், "சிலை என்னமோ அழகாய்த்தானிருக்கிறது. ஆனால் அவ்வளவு பிரயோஜனமாயிருக்கும் என்பது தான் சந்தேகம்!" என்றார். தான் மிகவும் கெட்டிக்காரத்தனமாகப் பேசுவதாக அவருக்கு எண்ணம்.

ஒரு இரவு அந்த நகரத்திற்கு ஒரு குருவி வந்தது. அதன் சகாக்கள் எல்லோரும் பல நாட்களுக்கு முன்பே அந்நகரை விட்டுப் போய்விட்டன. ஆனால் இந்தக் குருவி மட்டும் உடனே போகவில்லை. ஆற்றங்கரை

யில் வளர்ந்திருந்த ஒரு நாணலின் மீது அதற்குக் காதல் உண்டாயிற்று. நாணல் தன் உடம்பை ஒய்யாரமாக வளைத்து வளைத்து நடனமாடினது குருவிக்கு மிகவும் பிடித்திருந்தது. "நான் உன்னைக் காதலிக்கிறேன் என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டது குருவி. நாணல் வெட்கி முகத்தை அப்புறம் திருப்பிக் கொண்டது. அதுமுதல் குருவி அதனுடன் கொஞ்சிக் குலாவ ஆரம்பித்தது. போயும் போயும் நாணலுடன் குருவி உறவு கொண்டாடுவது மற்ற குருவிகளுக்குப் பிடிக்கவில்லை. நாணலுடன் வாழ முடியுமா? அதற்குப் பணம், அந்தஸ்து ஏதாவது உண்டா? இத்தனைக்கும் அதன் உறவினர் எவ்வளவு என்றன அதன் நண்பர்கள். தரத்காலம் வந்ததும் எல்லாம் கிளம்பிவிட்டன. சின்னஞ் சிறு குருவி மட்டும் நாணலுடனேயே காலத்தைக் கழித்து வந்தது. நாட்கள் செல்லச் செல்ல காதல் வாழ்க்கை கசந்து விட்டது. மேலும் நாணல் இளங்காற்றுடன் சல்லாபம் செய்வது குருவிக்குப் பிடிக்கவில்லை. கட்டிப்போட்டது போல ஒரே இடத்திலிருப்பதும் அலுத்துவிட்டது. பலதேசங்களுக்குப் பறந்து சென்றுகாணற்கரியே காக்ஷிகளைக் காண வேண்டும் என்று ஆசைப்பட்டது குருவி. "நீயும் என்னுடன் வா," என்று நாணலை அழைத்தது குருவி. நாணல் அதற்கு இசையவில்லை. ஆகவே அதனிடம் விடை பெற்றுக்கொண்டு குருவி தனியாகக் கிளம்பிற்று.

வானத்தில் சுற்றிச்சுற்றிப் பறந்து அந்த ராஜன் சிலையண்டை வந்து சிலையின் இரு பாதங்களுக்கும் நடுவில் குருவி சௌக்கியமாக உட்கார்ந்து கொண்டது. "நல்ல வீடு; நல்ல படுக்கை; தங்கக்கட்டிலில் படுத்துத் தூங்க பாக்கியம் செய்திருக்க வேண்டும்," என்று கூறிக் கொண்டு தூங்குவதற்கு ஆயத்தம் செய்தது. அப்பொழுது அதன் மேல் ஒரு சொட்டுத் தண்ணீர் விழுந்தது. "என்ன ஆச்சரியம்! வானத்தில் நக்ஷத்திரங்கள் மின்னுகின்றன, மழை எங்கே வந்தது இப்பொழுது?" என்று நினைத்துக் கொண்டது குருவி. சிறிது நேரம் பொறுத்து இன்னும் ஒரு சொட்டு ஜலம் மேலே விழுந்தது. "சரி எங்கேயாவது இடம் தேடவேண்டியதுதான்," என்று அங்கிருந்து

புறப்படப் போகும் சமயத்தில் இன்னும் ஒரு துளி ஜலம் விழுந்தது. அண்ணாந்து பார்த்தது குருவி. சிலையின் இரு கண்களிலிருந்தும் தாரை தாரையாக நீர் வழிந்து கொண்டிருந்தது.

"அட! யார் நீ!" என்று சிலையைக் கேட்டது.

"நான் தான் சந்தோஷ இளவரசன்," என்றது சிலை.

"அப்படியானால் ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது குருவி.

"நான் உயிரோடிருந்த காலத்தில் எப்பொழுதும் உல்லாசமாகப் பொழுது போக்கினேன். கண்ணீர் என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது. துன்பம் என்று நான் காதில் கூடக் கேட்டறியேன். பகல் முழுதும் விளையாடி இரவு முழுவதும் களியாட்டங்களில் ஈடுபட்டு நாட்களைக் கழித்தேன். அரண்மனைத் தோட்டத்தைச் சுற்றிப் பெரிய பெரிய சுவர் எழுப்பியிருந்ததால் அதற்கு வெளியே என்ன நடக்கிறதென்று கூட எனக்குத் தெரியாமலிருந்தது. அப்படி இருந்தேன். அப்படியே இறந்தேன். இப்பொழுது இந்த உச்சாணி இடத்தில் என்னை வைத்து விட்டதால் நகரத்தில் ஜனங்கள் கஷ்டப்படுவதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. என் ஹிருதயம் ஈயத்தால் செய்யப் பட்டிருந்தாலும் அந்தக் கஷ்டங்களைக்கண்டு அழாமலிருக்க முடியவில்லை" என்றது சிலை. பிறகு மறுபடியும் கூறிற்று, "அதோ! தொலை தூரத்திற்கப்பால் ஒரு குறுகிய தெருவில் வீடு ஒன்றிருக்கிறது. திறந்திருக்கும் ஜன்னல் வழியாக உள்ளே மெலிந்த ஸ்திரீ ஒருத்தி வேலை செய்து கொண்டிருப்பதைக் காண்கிறேன் அவள் வதனம் ஒட்டி உலர்ந்திருக்கிறது. விரல்களெல்லாம் ஊசிபட்டு புண்ணாயிருக்கின்றன. அவள் ஒரு தையற்காரி. நாளைய தினம் அரண்மனையில் நடக்கப் போகும் விருந்தில் மஹாராணி அணிந்து கொள்ளப் போகும் வெல்வெட் உடையில் அவள் பூவேலை செய்துகொண்டிருக்கிறாள். மூலையில் கயிற்றுக்கட்டிலில் அவள் மகன் ஜுரத்தினால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறான். அவனுக்கு தாகமெடுக்கிறது. ஆரஞ்சுபழம் வேண்டுமென்று தாயைத் தொந்தரவு செய்கிறான். பாவம்! அவனுக்குக்

கொடுப்பதற்கு அவளிடம் ஒன்றுமில்லை. குருவியே! நீ எனக்கு ஒரு உபகாரம் செய்வாயா? அசைய முடியாத படி என்னை இங்கே பதித்து விட்டார்கள். என் கத்திப் பிடியில் பதிந்திருக்கும் மாணிக்கத்தை எடுத்து அவளிடம் சேர்ப்பாயா?" என்றான்.

குருவி, "என் நண்பர்களெல்லாம் முன்னடியே போய் விட்டார்கள். நைல் நதியில் பெரிய தாமரைப் பூக்கள் மலர்ந்திருக்கும். அவைகளுடன் ஆனந்தமாக அவர்கள் பேசிக்கொண்டு என்னை எதிர்பார்த்துக்கொண் டிருப்பார்கள். நான் உடனே போக வேண்டும்," என்று சொல்லிற்று.

"சின்னஞ் சிறு குருவியே! ஒரே ஒரு இரவு மட்டும் என்னுடன் தங்கி யிருந்து இந்த உபகாரம் செய். பையன் தாகத்தைத் தணிக்க முடியாமல் தாய் வருந்துகிறாள்," என்று கெஞ்சிக் கேட்டான் ராஜகுமாரன். அவன் பரிதாபகரமான வேண்டுகோள் குருவியின் மனத்தைக் கவர்ந்தது. "சரி, இங்கே குளிர் அதிகமாகத்தான இருக்கிறது. இருந்தாலும் உனக்காக ஒரு இரவுமட்டும் தங்கிச் செல்கிறேன்," என்று சொல்லிற்று.

பிறகு குருவி வாளின் கைப்பிடியிலிருந்த மாணிக்கத்தைக் கொத்தி எடுத்துக்கொண்டு பறந்து சென்றது. அரண்மனை உப்பரிகை மேலே பறந்து சென்றது. காற்று வாங்குவதற்காக மஹாராணி உப்பரிகையில் உலாவிக்கொண்டே, "நாளைக்கு நான் அணிந்துகொள்ளப் போகும் வெல்வெட் உடை எல்லோருடைய கவனத்தையும் என்பக்கம் திருப்பப் போகிறது. அதில் தைக்கப் பட்டிருக்கும் புஷ்பங்கள் புதுமாதிரியானவை. காலையில் சீக்கிரம் கொண்டு வந்துவிடுவாள் என்று நம்புகிறேன். என்ன செய்வது? தையற்காரிகள் வரவர சோம்பேறிகளாய் விட்டார்கள். குறித்த காலத்தில் துணிகளைக் கொண்டு வருவதில்லை" என்று கூறிக்கொண் டிருந்தாள். குருவி கடைசியில் குறிப்பிட்ட வீட்டைச் சேர்ந்தது. தாயார் களைப்புற்று தூங்கிக்கொண்டிருந்தாள். உஷ்ணம் தாங்காமல் பையன் படுக்கையில் புறண்டுகொண் டிருந்தான். மாணிக்கத்தை அவனருகில் வைத்துவிட்டு

தன் சிறகுகளால் கொஞ்ச நேரம் பையனுக்கு விசிறிக் கொண்டிருந்தது குருவி. பிறகு ராஜகுமாரனிடம் வந்து நடந்தவைகளைக் கூறிற்று. "இங்கிருந்து புறப் படும்பொழுது அதிக குளிரா யிருந்தது, ஆனால் இப் பொழுது உடம்பு வெதுவெதுப்பாக இருக்கிறது" என்றது.

"நீ செய்திருக்கும் நல்ல காரியத்தின் பலன்தான் இது," என்றான் ராஜகுமாரன். அதை நினைத்துக் கொண்டே குருவி தூங்கி விட்டது. மறுநாட் காலையில் குருவி நதியில் குளித்துவிட்டு வந்தது. அதைக் கவனித்த பறவை சாஸ்திர நிபுணர் ஒருவர் "இந்தக் குளிர் காலத்தில் குருவி எப்படி வந்தது?" என்று ஆச்சரியப்பட்டார். பிறகு அதைப்பற்றி ஒரு பெரிய ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தார். அது ஒரு வருக்கும் புரியவில்லை. ஆகையால் எல்லோரும் அதைப் புகழ்ந்தனர்.

அடுத்தநாள் காலை ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போவ தால் குருவி எல்லா இடங்களையும் பறந்து பார்த்துவிட்டு ராஜகுமாரனிடம் விடை பெற்றுக்கொள்ள வந்தது. ஆனால் அவன், "குருவி! குருவி! இன்று ஒருநாள் மட் டும் என்னுடன் தங்கிவிட்டுப் போ. கொஞ்ச தூரத்தில் ஒரு தெருவில் வீடு ஒன்றிருக்கிறது. அதில் ஒரு ஆசிரியன் எழுதிக்கொண்டிருக்கிறான். அவனுக்கு உற்றார் உற வினர் ஒருவருமில்லை. தன்னந்தனியே காலத்தைக் கழித் துக்கொண் டிருக்கிறான். இப்பொழுது அவன் சிருஷ்டிப் பது ஒரு நாடகம். ஆனால் அவன் வயிறு காலியா யிருக் கிறது. அந்த வீட்டில் குளிர்போக்க உஷ்ணம் இல்லை. பசியால் மூர்ச்சைப் போட்டு விழும் தருவாயில் இருக்கி றான் அந்த ஆசிரியன். என் கண்களைத் தவிர அவனுக் குக் கொடுப்பதற்கு என்னிடத்தில் வேறொன்று மில்லை. தயவுசெய்து ஒரு கண்ணைக் கொத்தி எடுத் துச் சென்று அவனிடம் சேர்க்க மாட்டாயா? அதை விற்று அவன் பசியையும் குளிரையும் போக்கிக்கொள் வான்" என்றான். குருவிக்கு அழுகை வந்தது. "அது மட்டும் என்னால் முடியாது." என்று மறுத்துவிட்டது.

கடைசியில் ராஜகுமாரன் கட்டாயப்படுத்தவே, குருவி ஒரு கண்ணைப் பெயர்த்து எடுத்துச் சென்றது.

அந்த வீட்டில் ஆசிரியன் தூக்கந் தெளிந்து எழுந்து பார்த்ததும் குருவி கொண்டுவந்து போட்ட நீலக்கல் தென்பட்டது. "கடைசியில் ஜனங்கள் என்னைக் கொண்டாட ஆரம்பித்து விட்டார்கள் என்று தெரிகிறது. இதுதான் முதல் பரிசு போலிருக்கிறது," என்று சந்தோஷப்பட்டான்.

மறுநாள் காலை குருவி ஊரைவிட்டுப் போகத் தீர்மானம் செய்துகொண்டு ராஜகுமாரனிடம் வந்தது. ராஜகுமாரன், "இன்றுதான் கடைசிநாள், இன்றைக்குமட்டும் நீ என்னுடன் இருந்துவிட்டாயானால் பிறகு நான் உன்னைத் தொந்திரவு செய்ய மாட்டேன்; இருக்க மாட்டாயா?" என்று கேட்டான்.

"முடியாது! குளிர்காலம் சமீபித்து விட்டது. கூடிய சீக்கிரத்தில் பனிபெய்ய ஆரம்பித்து விடும். நான் இனி இருக்க முடியாது. என் நண்பர்கள் வெகு நாட்களாக என்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நான் கட்டாயம் போகவேண்டும். திரும்பி வரும் பொழுது நீ கொடுத்துவிட்ட கண்ணிற்குப் பதிலாக நல்ல மாணிக்கக் கல் கொண்டு வந்து தருகிறேன். என்னைப் போகவிடு" என்று சொல்லிற்று குருவி. ராஜகுமாரன் குருவியை விட்டபாடில்லை. "இதோ இவ்விடத்திற்கு சமீபத்தில் ஒரு ஏழைக்குழந்தை அழுது கொண்டிருக்கிறது. அதன் தகப்பன் ஒரு குடிகாரன். சாமான் வாங்கிவரக் கொடுத்திருந்த காசை அந்தக் குழந்தை தொலைத்து விட்டது. வீட்டுக்கு வெறுங் கையுடன் போனால் அதை அடித்துக் கொன்று விடுவான் தகப்பன். குளிரில் நடுங்கிக்கொண்டிருக்கிறது அது. தயவுசெய்து என் மற்றொரு கண்ணை எடுத்துக் குழந்தையிடம் கொடு. பிறகு அதன் தகப்பன் குழந்தையை அடிக்கமாட்டான். மேலும் அதை விற்று அவன் அதற்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொடுப்பான்," என்று வெகு விநயத்தோடு கூறினான் ராஜகுமாரன்.

“ அந்த மீதிக் கண்ணையும் இழந்தால் நீ குருடனாகி விடுவாய், நான் அது செய்ய மாட்டேன்,” என்றது குருவி. ஆனால் ராஜகுமாரன் மேலும் வற்புறுத்திக் கூறவே வேறு வழி யில்லாமல் குருவி வெகு வருத்தத்துடன் அவ்வாறே செய்தது. சந்தோஷத்துடன் குதித்துக்கொண்டு வீடு சென்றது குழந்தை.

“ இப்பொழுது நீ குருடனாகி விட்டாய். நான் இனி உன்னுடனேயே இருந்துவிடப் போகிறேன்,” என்றது குருவி. “வேண்டாம், உனது நண்பர்கள் உனக்காகக் காத்துக்கொண் டிருப்பார்கள். நீ அவர்களிடம் போய் விடு,” என்றான் ராஜகுமாரன்.

ஆனால் குருவி அது செய்ய மறுத்துவிட்டது. பிறகு ஒவ்வொருநாளும் நாலா பக்கங்களிலும் பறந்து சென்று ஆங்காங்குதான் கண்ட அதிசயங்களை ராஜகுமாரனிடம் வந்து குருவி சொல்லும். “குருவியே உலகத்தின் அதிசயங்களைவிட நம் நகரத்தில் கஷ்டப்படும் ஏழைகளின் வாழ்க்கை மிக்க அதிசயமா யிருக்கும். துன்பத்தைவிடச் சிக்கலானது வேறில்லை. ஆகையால் அவைகளைப் பற்றி நீ எனக்குக் கூறினால் நன்றாயிருக்கும்,” என்றான் ராஜகுமாரன்.

குருவி நகரத்தின் எல்லா பாகங்களுக்கும் பறந்து சென்றது. பணக்காரர்கள் மாளிகைகளில் வாழ்ந்து வந்தனர். ஏழைகள் உண்ண உணவின்றி தெருக்களில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தனர். நெருங்கிய தெருக்களில் மெலிந்த சிறுவர்கள் ஆகாரத்திற்காக அங்கும் இங்குமாக அலைந்துகொண் டிருந்தார்கள். குழந்தைகள் பாலங்களினடியில் பதுங்கிக்கொண் டிருந்தனர். ஆனால் நகரச் சேவகன் அவர்களை அங்கிருந்து விரட்டி விட்டான். குருவி ராஜகுமாரனிடம் வந்து தான் கண்ட எல்லாவற்றையும் விவரமாகக் கூறிற்று. “என் உடம்பு முழுவதும் தங்கத் தகட்டினால் மூடப்பட்டிருக்கிறது. அதனால் எனக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை: கஷ்டப்படும் ஜனங்களுக்கு இதில் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொடுத்தால் எவ்வளவோ உபகாரமா யிருக்கும்,” என்றான் ராஜகுமாரன். குருவியும் அவ்வாறே செய்து வந்.

கோணை புதுமலர் நிலையத்திலிருந்து பல அற்புதங்களைச் செய்துவரும்
ஸ்ரீ ஆர். திருஞானசம்பந்தம்

வடநாட்டு நடிகையல்ல. "விஜயலக்ஷ்மி"யில்
ஸ்ரீமதி. எம். வி. ராஜம்மா

தது. கடைசியில் ராஜகுமாரன் உடம்பில் இருந்த அவ்வளவு தங்கமும் தீர்ந்துவிட்டது. அவன் உருவம் விகாரமாகக் காணப்பட்டது. உடம்பு கறுத்து விகாரமடைந்தது. கண்கள் குழிந்து ஒளி யிழந்தன. ஏழை ஜனங்கள் துன்பம் நீங்கிச் சுகமடைந்தனர்.

பனிகாலம் வந்தது. மரங்கள் பனியினால் மூடப்பட்டு வெள்ளை வெளேரென்று காக்ஷி யளித்தன. ஜனங்கள் பனிக்குல்லாவும் தடித்த கம்பளியும் அணிந்து வீடுகளில் தங்கி யிருந்தனர். குருவியினால் குளிரைத் தாங்க முடியவில்லை. ஆனால் அது ராஜகுமாரனை விட்டுப் பிரியவில்லை. கடைசியில் இனி உயிரோடிருக்க மாட்டோம் என்று அதற்குத் தெரிந்து விட்டது. மிக்க சிரமபட்டு ராஜகுமாரன் தோள்மேல் ஏறி அவன் காதில் ஈன குரலில், "ராஜகுமாரா! நான் போகிறேன்" என்றது.

"ரொம்ப சந்தோஷம். கடைசியில் இப்பொழுதாவது நீ உன் நண்பர்களுடன் சேர்ந்து கொள்ளப் போகிறாயே! போவதற்குமுன் எனக்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டுப் போ!" என்று கூறினான் ராஜகுமாரன்.

குருவி, "ராஜகுமாரா! நான் போவது சாவின் வீட்டிற்கு. நான் இனி பிழைக்க மாட்டேன். என் உயிர் போகப் போகிறது" என்று சொல்லி ராஜகுமாரன் வாயில் ஒரு முத்தம் கொடுத்து விட்டு 'பொத்' தென்று அவன் காலடியில் விழுந்து இறந்தது.

அதே சமயத்தில் ராஜகுமாரனுடைய ஈய ஹிருதயமும் 'படக்' கென்று இரண்டாக முறிந்தது.

மறுநாள் காலை நகரசபைத் தலைவர் சபையின் அங்கத்தினர்களுடன் அவ்வழியாக வந்தார். "இந்தச்சிலை எவ்வளவு விகாரமாயிருக்கிறது" என்று கூறினார் ஒருவர்.

"ஆமாம், தங்கத் தகடுகளெல்லாம் போய்விட்டன. மணிகளும் உதிர்ந்து விட்டன. பிச்சைக்காரன் சிலையைப் போலல்லவா இருக்கிறது" என்று மற்றவர் ஆமோதித்தனர்.

ஆகவே எல்லோரும் அந்தச்சிலையை எடுத்துவிட்டு நகரச்சபைத்தலைவர் சிலையை அங்கே வைக்கவேண்டு மென்று அபிப்ராயப்பட்டனர். சிலையின் உலோகத்தை நெருப்பிலிட்டு உருக்கினான் கருமான். பிளவுபட்ட ஈய ஹிருதயம் மட்டும் நெருப்பில் உருகவில்லை. அதை அருகி லிருந்த குப்பைத்தொட்டியில் விட்டெறிந்தான். அங்கே தான் செத்துப் போன குருவியின் உடலும் கிடந் தது.

ரீடா

அழகிய கேசத்தை வளர்க்கிறது

ரீடா கேசத்தின் ஆரோக்கியத்திற்கான ஒரு புது வழி. கேசத்திற்கு இயற்கையான சத்துவத்தை மயிர்க்கால் வழியாக அளிக்கிறது. பொடுக்கைப் போக்கி வழுக்கையைத் தடுத்து அழகு வாய்ந்து நீண்டு பட்டைப்போல் பளபளப்புள்ள கேசத்தை வளர்க்கிறது. அந்தமில்லாத சிகைக்கு மேனி கொடுத்து அலை அலையாக மயிர் உண்டாக்கும்.

ஒருபுட்டி ரீடா வாங்கி கேசத்திற்கு புது உயிரளித்து புதுமெனியை உண்டாக்குங்கள்
ரீடா எங்கும் கிடைக்கும்.
ஒரு புட்டியின் விலை 15 அணா

RITA
HAIR TONIC

தீபாவளி 1946-ல்....

அகிலன்

1, ஒளி, ஒளி, ஒளியடா !—அதோ
ஒளி உதயம் பாரடா !
ஒளியும் இருளும் உருண்ட போரில்
ஒடுங்கியது இருள் காணடா !

2, மனித வாழ்வை வாட்டும் பொய்யும்
மடமை தீமை ஒழியவே
புனித நன்னாள் புலர்ந்ததென்று
புலமை பொங்கப் பாடடா !

3, அசுர மில்லை, அச்ச மில்லை,
அடிமை யில்லை யின்றடா !
அரச நீதி அரி அணையில்
அமர்ந்த நம்மை வாழ்த்தடா !

4, வீடு தோறும் விளக்கு வைத்து
விடுதலை கொண் டாடுவோம் !
நாடு, நகரம், நாலு திக்கும்
நல்ல செய்தி சொல்லுவோம் !

5, நாட்டை விட்டு ஓட்டி விட்டோம்
நம்மைத் தின்ற நாய்களை !
வேட்டு வைத்து விரட்டு பேயை !
வீண ரக்கன் வீழ்ந்தனன்.

6, வீழ்ந்த துன்பம், வீழ்ந்த நோயும்,
வீழ்ந்த தொல்லை யாவுமே !
ஆழ்ந்த இன்பம் பெற்று நாமும்
ஆனந்தக் கூத் தாடுவோம் !

7, உடல் குளித்து, உடை உடுத்து,
உண வுடன் மகிடுவோம்.
மடல் அவிழ்ந்த மலர்கள் துவி
மன்னன் பாதப் போற்றுவோம் !

விழித்த முகம்

ஆர்வி

விடியற்காலையில் வழக்கத்துக்கு மாருகவே பல ராமன் அன்று விழித்துக்கொண்டான். "ஏது இவ்வளவு அகாலத்தில் தான் விழித்துக்கொண்டது?" என்று அவன் எண்ணிக் கொண்டே கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டான்.

வீடு முழுவதும் பிரகாசமாய் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. மற்றவர்கள் அவனுக்கு முன்பே எழுந்து விட்டார்கள். ஆமாம்; அன்று தான் தீபாவளி. முன்னெல்லாம் போலவா தீபாவளி அவ்வளவு ஆர்ப்பாட்டமும் குதூகலமுமாய் இருந்தது! ஆயினும் அவன் சம்பந்தப்பட்டவரையில் அது இன்னும் சுவை குன்றிக் காணப்பட்டது.

"மாமனர் வீட்டுக்கு ரெயிலில் போய் இறங்கிக் கொண்டாடாத தீபாவளி என்ன தீபாவளி? ஆவலுடன் இரண்டு கருவிழிகள் எதிர்பார்த்து நின்று வரவேற்காத தீபாவளி என்ன தீபாவளி?" என்று அவன் தன் உத்ஸாகத்தை வேண்டுமென்றே குறைத்துக் கொண்டான்

"மாப்பிள்ளை வீட்டு வாசலில் மோட்டாரைவிட்டு இறங்குகிருன். ஜன்னல் வழியே அவனை இரண்டு விழிகள் முகமன் கூறி வரவேற்பதை அவனது திருட்டுப் பார்வை சந்திக்கிறது. பிறகு மாலையில் மாடியில் அவன் தனியே உட்கார்ந்திருக்கிருன். பின்னல் வேண்டுமென்றே அசைப்பதால் கேட்கும் வளைகளின் ஒலி கல கல வென்று கேட்கிறது. திரும்பிப் பார்க்கக்கூடாது என்று அவனுக்குத் திடீரென்று ஒரு குறும்புத்தனம். அந்த வளைக்கரங்கள் ஒலிப்பதை நிறுத்திவிட்டன. சந்தடியே இல்லை. அவள் கோபித்துக் கொண்டு போய்

விட்டாளோ என்று அவன் கலங்குகிறான். ஆனால் மெல்லிய இளம் கைகள் இரண்டு படமெடுத்து வருவது போல் அவன் கண்களைப் பொத்த வருகின்றன. அவன் தன் முரட்டுக் கைகளால் அவற்றைப்பற்றி அவளை முன்னால் இழுக்கிறான் அவள், 'ஐயோ-கையை வலிக்கிறது' என்று பசப்புகிறாள். "நாளும் கிழமையுமாய் ஐயோ என்கிறாயே" என்கிறான் அவன். அவள் கொஞ்சம் துடுக்குக்காரி. "அன்பே-என்று சொல்லட்டுமா?' என்கிறாள். 'இதற்கு என்ன கேள்வி?' என்கிறான் அவன். காரணமின்றி அவர்கள் இருவரும் மெய்மறந்து சிரிக்கிறார்கள். இவ்விதமெல்லாம் பத்திரிகைகளில் படிக்கிறோமே. அப்படித் தனக்கும் நடந்திருந்தால்—?"

பலராமன் சிரித்துக்கொண்டே, "வாழ்க்கையின் ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு கனவுதான்" என்று சொல்லிக் கொண்டான்.

ஆனால் அந்தக் கனவு—தன் தாம்பத்திய வாழ்க்கைக்கு அடிகோலிய அந்த தினம்—எவ்வளவு இன்பமாய் இருந்தது அன்று! அதுமட்டும் எல்லோருக்குமே ஏற்பட்டு விடுகிறதா?

* * *

1

அஸ்தமன வேளை; ஜிலு ஜிலு வென்று தென்றல் வீசியது. தோட்டத்திலிருந்து ஜாதிப் புஷ்பங்களின் நறுமணம் கம்மென்று கலந்து மனத்தைப் பரவசத்திலாழ்த்தியது. துவாதசிச் சந்திரன் ஒளியின்றிக் களையிழந்து வான வீதியில் காணப்பட்டான். பலராமனுக்கு இப்போது அதன் காரணம் வெட்ட வெளிச்சமாய்த் தோன்றியது. மெத்தையின் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக்கொண்டு நிற்கும் மங்கையின் முன்பு துவாதசிச் சந்திரன் அல்ல, பூர்ணிமைச் சந்திரனும் களையிழந்துதான் போவான் என்று அவன் மனம் எண்ணமிட்டது.

பெயர்தான் பலராமனே ஒழிய அவன் பயராமனாய்த் தான் இருந்தான். ஏனெனில் வாயிற்படியில் காலை வைத்துவிட்டு மென்று மென்று விழுங்கிக் கொண்டிருந்தான். விநாயக மூர்த்தியிடம் அந்தக் காரியத்தைச் செய்

வதாக ஒப்புக்கொண்டது எவ்வளவு பிசகு என்பதை இப்போதே அவன் உணர்ந்தான். அவனுக்கு வீட்டி லிருப்பவர்களை அழைப்பது அப்படி ஒரு பெரிய பிரச்னை யாய் இருந்தது. வேலைக்காரனே தோட்டக்காரனே யாராவது அங்கே இருந்திருந்தால் அவன் வந்த காரியம் எவ்வளவு சுலபமாய் முடிந்திருக்கும்? ஆனால் ஒருவரும் காணப்படவில்லை.

'யார் வீட்டில்?' என்று கூப்பிடுவதா, 'அம்மா' என்று கூப்பிடுவதா, இல்லாவிட்டால் வீட்டுக்கு அனுப்பி வைத்த விநாயகமூர்த்தியையே குறிப்பிட்டு, 'ஸார்' என்று கூப்பிடுவதா? என்ன தொல்லை!

பலராமன் தயங்கித் தடுமாறினான். 'அம்மா' என்று கூப்பிட அவனுக்கு ஆக்ஷேபணை ஒன்றுமில்லை. ஆனால் அந்த 'அம்மா' தன்னைவிட சிறுவயதுள்ளவளாய் இருப் பது தான் அந்த ஆக்ஷேபணையைக் கிளப்புவதாய் இருந் தது.

மெத்தையிலிருந்த பெண் அவன் வந்ததைக் கவனித் தாளோ, கவனிக்கவில்லையோ-கீழே இறங்கிவரக் காணோம். அவன் வந்த காரியம் மிகவும் அவசரமானது. நிலைமை மிகவும் தர்யசங்கடமாய் இருந்தது அவனுக்கு

கதவைச் சாத்தியிருந்தாலாவது படபடவென்று இடிக்கலாம் ஆனால் அது திறந்தேதான் கிடந்தது. மெது வாகப் படியை விட்டுக் கீழே இறங்கி வாசலில் வந்து நின்றான். அங்கே முன்பு நின்றிருந்த பெண்ணை இப் போது காணோம். மௌனம் நிலவியிருந்த மேன்மாடியில் ரேடியோவின் பாட்டு ஆரம்பமாகியிருந்தது. அவள் அதைவிட்டு எங்கே எழுந்திருக்கப் போகிறாள்? 'வீட்டைத் திறந்து போட்டுவிட்டு மாடியில் என்ன ரேடியோ வேண்டிக் கிடக்கிறது?' என்று அவன் அலுத்துக்கொண்டான். அவன் வீடாயிருந்தால் இப்படி நடப்பதை அவன் அனுமதிக்கமாட்டான். ஆனால் இது அவனுடைய முதலாளியின் பங்களாவாயிற்றே? யாரை என்ன சொல்லமுடியும்?

கடைசியாகக் கீழே ஹால் பக்கத்தில் ஏதோ வெள்ளையாகத் தெரிந்தது. பலராமன் கவனித்தபோது

மாடியிலிருந்த பெண்தான் கீழே வந்துவிட்டு உள்ளே போனாள் என்பதைக் கண்டான். 'நல்ல பெரிய மனிதர்கள் வீடு-வந்தவனை யார், எங்கே என்று கேட்க நாதி இல்லையே' என்று அவன் ஆத்திரப்பட்டான்.

'கோழைகளுக்கு இந்த உலகத்தில் இடம் இல்லை' என்ற மேடைப் பிரசங்கம் ஒன்று அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. அந்தப் பேச்சை முதல் நாள் ஒரு பொதுக் கூட்டத்தில் கேட்டபோது அவனும் வீரனாகவே இருந்தான். அவன் சொல்வது முற்றிலும் உண்மை என்றே ஆமோதித்தான். 'ஆனால் எந்த வீரனும் இந்த மாதிரி இடத்தில் தயங்கித்தான் நிற்கவேண்டும்' என்று தன்னைச் சமாதானம் செய்து கொள்ள விரும்பியது அவன் மனம். 'ஒரு மனிதனை வீரன் என்று யார் நிர்ணயம் செய்வது?' என்ற கேள்வியில் அவன் ஆத்திரம் சிறிது அடங்கியது.

நிதானமாக மறுபடியும் படியேறினான். வாசற்படியையும் தாண்டினான். மெத்தைப் படிக்கட்டுக்குப் போய் அவளை நேரிலேயே பார்த்துவிடுவது என்ற தீர்மானம் வாசற்படி நெருங்கும் வரை உறுதியாய் இருந்தது. ஹாலையும் விலையுயர்ந்த ஆசனங்களையும் அழகிய மோஸ்தரில் அலக்கரிக்கப் பெற்ற அந்த அறையையும் பார்த்த பின்னர் அந்த உறுதி குலைந்துவிட்டது. கேட்காமல் கொள்ளாமல் நுழைவது, எந்த வீரனும் செய்யக் கூடிய காரியமில்லையே? அதுவும் ஒரு பெண் மட்டுமே தனிமையில் மேல்மாடியில் இருக்கும் போது இருபத்திரண்டே வயதுள்ள பலராமனைப் போன்ற நாசூக்கான வாலிபன் எவ்விதம் உள்ளே நுழைவது?

2

மீண்டும் அவன் மனம் ஆத்திரமடைந்தது. விநாயகமூர்த்தி தன்னை அனுப்பியதுதான் அந்த ஆத்திரத்துக்குக் காரணம். அவன் ஏன் முதலில் ஒப்புக் கொண்டான்? விநாயகமூர்த்தி அவனுடைய முதலாளி என்பது ஒருபுறம் இருக்கட்டும்; அவன்தான் அவருடைய முழு நம்பிக்கைக்கும் பாத்திரமானவன் என்பதை அவனும் ஓரளவு உணர்ந்திருந்தான். மற்றவர்களை விட்டு விட்டு அவர்

தன்னையே குறிப்பாக அழைத்து அவனுக்கு எவ்வளவோ பெருமையாய் இருந்தது. வீட்டு இரும்புப் பெட்டியின் சாவிக் கொத்தைக் கையில் கொடுத்தபோது மற்றக் குமாஸ்தாக்களுக்குப் பொருமையாய் இருந்தது. அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை என்ற காட்சி அவனை வண்ணாத்திப் பூச்சிபோல பூங்காற்றில் தவழச் செய்து விட்டது. 'செக்' புஸ்தகத்தை விநாயகமூர்த்தி மறந்து போய் வீட்டில் வைத்துவிட்டு வந்தது ஒரு பெரிய பாக்கியம் என்று கூட அவன் எண்ணினன். எல்லாவற்றையும் விட அந்தக் கடைசி வாக்கியம் அவன் மன அலைகளை உல்லாசத்திலாழ்த்தியது: "இப்படியும் இந்தக் காலத்தில் ஒரு பிள்ளை இருப்பாயோ, சைகிள் கூட விடத் தெரியாமல்? டிரைவிங் தெரிந்தால் என் வண்டியில் வேணுமானல் போய் விட்டு வா" என்று விநாயகமூர்த்தி கேட்டுக் கொண்டார். சைகிளே விடத் தெரியாதவனுக்கு மோட்டார் எங்கே விடத் தெரியப்போகிறது என்பது அவருக்குத் தெரியாதா, என்ன?

"அவசிய மில்லை. அரைமைல் தானே. நான் நடந்தே போய் விட்டு வேகமாய் வந்து விடுகிறேன். நாழி கடத்த மாட்டேன்" என்று சொல்லிவிட்டு அவன் 'ஜிவ்' வென்று கிளம்பிவிட்டான்.

கெட்டிக்காரன் என்று பெயர் எடுக்கவேண்டிய அவனை இப்படிப் பட்ட சந்தர்ப்பத்திலா அவர் அனுப்ப வேண்டும்?

அவனுக்கு அவர் வீட்டுச் சமாசாரங்கள் எல்லாம் ஓரளவுதான் தெரியும். அவருக்கு ஒரு குமாரத்தி உண்டென்பதும் அவளுக்கு இன்னும் விவாக மாகவில்லை என்பதும் அவளுடைய அழகுக்கு இணை அவளேதான் என்பதும் ஏற்கனவே தெரிந்திருந்த விஷயங்கள்தான் விநாயகமூர்த்தியின் மனைவி சமீபத்தில் இறந்து போன போது காரியாலயமே அங்கு அடியோடு திரண்டிருந்தது. சில்லறை மூட்டையுடன் பலராமன்தான் அந்த இரண்டு மூன்று தினங்களும் ஓடியாடி வேலை செய்திருந்தான். ஆயினும் துக்கத்தில் மூழ்கியிருந்த அந்தப் பெண்ணிடம் ஒரு முறை கூடப் பேசும்படி அவனுக்கு நேர்ந்ததில்லை. பல முறை அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்திருக்கிறார்

கள். காரியாலயத்தில் இந்தப் பையனுக்கு ஏதோ ஒரு முக்கியமான வேலை என்பதுக்கு மேல் அவளுக்கு ஒன்றும் தெரியாது. அதற்குப் பிறகு அவன் இப்பொழுது தான் வீட்டுப்பக்கம் வந்திருக்கிறான். தன்னிடம் விநாயக மூர்த்திக்கு நம்பிக்கை இருக்கிறதை எண்ணிப் பூரித்துப்போன அவன் உள்ளம் வரும் வழியிலெல்லாம் அந்தப் பெண்ணையும் பார்க்க நேரிடலாம் என்று குதூகலமும் அடைந்தது. பொதுவாக அன்று அவன், 'எந்த புண்ணியவான் முகத்திலோ விழித்திருக்கவேண்டும்' என்று நினைத்துக் கொண்டேதான் வீட்டுப் யடியில் காலை வைத்தான்.

ஆனால் இப்போது படும் அவஸ்தையை அநுபவித்த அவன் மனம், 'புண்ணியவான் சரியாக முகத்தைக் காட்டவில்லை போலிருக்கிறது' என்று அவனையே கிண்டல் செய்தது.

சமூகத்தில் பெண்களின் நிலைக்குக் கண்ணீர் சிந்தும் சீர்திருத்தக்காரர்கள் கூட அந்தச் சந்தர்ப்பத்தில் அவனைப் பார்த்திருந்தால் பெண்களுக்காகக் கண்ணீர் சிந்துவதைச் சற்று நிறுத்திவிட்டு அவனுக்காகக் கொஞ்சம் கண்ணீர் விடாமல் இருக்கமாட்டார்கள்.

முதல் நாள் மேடைப் பிரசங்கம் கேட்டுவந்த வீரனை பலராமனுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. தன்னுடைய நற்பெயருக்கு ஹானி ஏற்பட்டுவிடும் போலிருப்பதை யார்தான் சகித்துக் கொள்வார்கள்? அந்த மேடைப் பிரசங்கி கூட்டத்திலிருந்த பெண்மணிகளை நோக்கி, "சகோதரிகளே" என்று சமத்காரமாக அழைத்தான். தடி அடிப்பட்ட ஒரு தோட்டி ஸ்திரீயைச் சுட்டிக்காட்டி, "இந்தச் சகோதரி" என்று கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தினான்.

ஆனால் சகோதரி என்று அழைக்க பலராமன் எவ்வளவோ தடவை முயன்றும் அவனால் 'ச' என்றுகூட உச்சரிக்கமுடியவில்லை. "நாடக மேடையிலோ, பொது மேடையிலோ அப்படி அழைப்பது சரியாகத் தோன்றுகிறதே தவிர தினசரி வாழ்க்கையில்-" என்று அவன் மனம் சங்கை கொண்டது.

இப்படி வாசற்படிக்கும் வராந்தாவுக்குமாக அவன் எவ்வளவோ தடவை குறுக்கு மூலே பாய்ந்துவிட்டான். திறமையில்லாத சிறுவன் பந்தற்கால் விளையாட்டில் ஒரு வரையும் பிடிக்க முடியாமல் திரும்பித் திரும்பி நடுவே சுற்றிக் குழம்புவதைப் போல அவன் திகைத்தான். பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு காலே விட்டு மற்ெருரு காலுக்கு சிறுவர்கள் தாவுவதைப் போல அவள் மறுபடியும் கீழே வந்து விட்டு உள்பக்கம் படியேறிச் செல்வதைக் கண்டு அவன் மனம் அலேபாய்ந்தது. உடனே அவன் கால்களும் வாசற்படியைவிட்டு உள்ளே தாண்டின.

3

அவள் அவனேக் கவனிக்காமலே படியேறிக்கொண்டிருந்தாள். உண்மையில் அங்கே அவன் இருப்பது அவளுக்குத் தெரியாது. கடைசிப் படி ஏறி விட்டாள். அடுத்த நிமிஷம் அவள் உள்ளே மறைந்துவிடப் போகிருள். மெத்தைப் படியண்டை வந்து விட்ட பலராமனுக்கு என்ன செய்வது. எப்படி அவள் கவனத்தைத் திருப்புவது என்பது புரியவில்லே. திகைத்து நின்ற அவனுக்குக் கடைசியாக அதிருஷ்ட வசமாக ஒரு யோசனே உதித்தது. விநாயகமூர்த்தி அவனிடம் கொடுத்திருந்த சாவிக் கொத்து அவன் கையிலேயே இருந்தது. அதை நன்ருக ஓசைப் படும்படி குலுக்கினன்.

முன்பின் பழக்கமில்லாத ஒரு மங்கையை ஓர் ஆடவன் அழைத்துப் பேசுவதற்கு இப்படி ஒரு சாதனம் இல்லாமல் போயிருந்தால்-? சாவி பழைய பண்பாட்டைக் காப்பாற்றியதோடு அவனேயும் வெற்றி கொள்ளச் செய்தது.

அவள் சப்தம் கேட்டதும் திரும்பினள். அண்ணார்ந்து பார்த்தபடியே சாவிக் கொத்தைக் குலுக்கிய வாலிபனேக் கண்டு திகைத்துப் போய் விட்டாள். அந்த வாலிபனே அவள் பார்த்திருப்பது உண்மைதான்; மறந்து விடவில்லே. ஆனல் இந்த நேரத்தில் எங்கிருந்து வந்து முளேத்தான் இவன்? ஏன் வந்தான்?......

திகைப்பைக் காட்டிய அவள் கண்கள் அவளது லாவண்யத்தை அதிகரிக்கச் செய்தன. கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் அவளை அப்படி விழி என்று சொன்னால் இவ்வளவு அழகாக அவளால் விழிக்க முடியுமா? விழிக்கத்தான் வருமா?

அவள் தான் முதலில் பேச வேண்டியதாயிற்று. அன்று பூராவும் நிற்கவேண்டி வந்தாலும் பலராமனால் வாய்திறந்து பேசுவதென்னவோ முடியவே முடியாது. கோழை என்று அழைத்தாலும் அவன் ஏற்றுக் கொள்ளத் தயார்தான்.

"எங்கே வந்தீர்கள்?" என்று கேட்டாள் அவள். வார்த்தைக்கு வார்த்தை அவள் தயங்கினாள். பயமோ, லஜ்ஜையோ, என்னவோ அவளுக்கே தெரியவில்லை.

"இல்லை....." என்று இழுத்தான் அவன்.

நிதானமாகத்தான் சொல்லட்டுமே, 'எது இல்லை; எது இருக்கிறது' என்று அவள் பேசாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். கண்கள் இப்போது ஆவல் நிறைந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தின. பெரிய மனிதர் வீட்டுப் பெண் என்ற அகம்பாவம் சிறிதுமில்லை.

"இல்லை...." என்றான் அவன் மீண்டும். நெஞ்சு அடைத்துக் கொண்டுவிட்டது போலிருந்தது. வெறுமே அவள் அர்த்தமில்லாமல் தலையை அசைத்தாள், படிகளில் சரியாக நின்று கொண்டு. அவனுக்குப் போன தைரியம் மெதுவாக மீண்டு வந்தது.

"அப்பா என்னை அனுப்பினார்."

அவள் விழிகளை எதற்காக இருக்கும் என்று யோசிப்பது போல மேலே புரட்டினாள். புலப்படவில்லை போலிருக்கிறது. சாதாரணமாகக் கண்களைத் திருப்பிக் கொண்டு வந்தாள்.

"எதற்காக?" என்று கேட்டும் வைத்தாள்.

'அப்பா அனுப்பியிருக்கமாட்டார் என்று நினைக்கிறாளோ' என்று அவன் எண்ணியபோது குப்பென்று அவன் உடல் எல்லாமே வேர்த்தது.

"அப்பாதான் அனுப்பினார். இதோ சாவி" என்று உணர்ச்சிமேலிட, தன் புனிதத் தன்மையை நிரூபணம் செய்தான். பழைய காலத்தில் அரசர்கள் ஆபத்துக்கு உதவும்படி முத்திரையிட்ட மோதிரம் ஒன்றைக் கொடுப்பார்களாம். அதை எடுத்துக் காட்டுவது போன்ற நினைப்பு வந்தது அவனுக்கு.

"ஒஹோ" என்றாள் அவள்.

"இரும்புப் பெட்டியைத் திறந்து 'செக்' புஸ்தகத்தை எடுத்து வாங்கி வரும்படி சொன்னார். போகும் போது ...."

"எடுத்துக் கொண்டு போக மறந்துவிட்டாரா?" என்றாள் மதுரமான குரலில்.

"ஆமாம்" என்று தலையை ஆட்டினான் அவன்.

விநாயகமூர்த்தியின் பெண் அல்லவா? ஒரு விரலை உதட்டில் வைத்துச் சிறிது நேரம் என்னவோ யோசித்தாள்.

"சரி; அதோ ... சோபாவில் கொஞ்சம் உட்காருங்கள். இதோ வந்து விட்டேன்" என்று அவனுக்கு ஹாலில் உள்ள சோபாவைக் காட்டி விட்டுச் சிட்டுக் குருவியைப் போல மேலே ஓடினாள்.

ஐந்து நிமிஷங்கள் கூட இருக்காது. திரும்பி வந்து, "சரி, சாவியைக் கொடுங்கள். இதோ எடுத்துத் தருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே கையை நீட்டினாள்.

பலராமன் அவள் அருகில் நெருங்குமுன்னமே சாவியைக் கீழே வைத்துவிட்டான். அவள் சுபாவமே சிரித்த முகம் போலிருக்கிறது. வெண்மையான பற்களின் வரிசை மின்ன அவள் அதைக் குனிந்து எடுத்துக் கொண்டு மேலே ஓடினாள். ஓட்டமும் விசையும் அவள் பரபரப்பைப் பலராமனுக்கு நன்கு உணர்த்தின. 'பெண் நல்ல குணசாலி. அப்பாவைப் போல' என்று அவன் எண்ணிக் கொண்டான்.

போகும்போதே அவள் சீக்கிரம் வந்துவிடுவாள் என்பது பலராமனுக்குத் தெரியும். அதைப் போலவே அவள் வந்துவிட்டாள். சாவிக் கொத்தை மறுபடியும் அவனிடம் நீட்டினாள். சந்தோஷத்துடன் சர்வ ஜாக்கிரதையாக அவன் அதைப் பெற்றுக் கொண்டான். 'செக்' புஸ்தகத்தை அவள் நீட்டும் போது அவள் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே, "உங்கள் பெயர்?" என்று நாசூக்காகக் கேட்டாள். அவளுக்குத்தான் எப்பொழுதும் அழகு பொங்கச் சிரிக்கும் முகமாயிற்றே!

"பலராமன்" என்று கூறிக் கொண்டே அவன் எழுந்தான்.

"சரி; நமஸ்காரம்" என்றாள் அவள். அவளுடைய சிரித்த முகம் ரோஜாப் புஷ்பம் போல மாறிப் போயிற்று.

4

"கொண்டு வந்து விட்டாயா! நடந்து போயும் இவ்வளவு சீக்கிரமாய்த் திரும்பிவிட்டாயே, பேஷ்" என்றார் விநாயகமூர்த்தி.

கொஞ்சம் நேரமாகிவிட்டது என்றாலும் அவர் கொஞ்சம் தட்டிக் கொடுக்கும் பேர்வழி. வேலை வாங்கிய நபரை அலுப்புக் கொள்ளாமல் ஆச்வாசப் படுத்துவதில் அவர் தனி சமர்த்தர்.

பலராமனுக்கு ரொம்ப உத்ஸாகமாய் இருந்தது. "சைகிள் தெரிந்திருந்தால் இந்த நேரம் கூட ஆகியிருக்காது" என்றான் அவன் விநயத்துடன். பணிவுக்கும் அடக்கத்துக்கும் அவன் பேர் போனவன் என்பதை அவனை வேலைக்குச் சிபாரிசு செய்திருந்தவரே விநாயகமூர்த்திக்குத் தெரிவித்திருந்தார்.

"பையன் பெரிய இடத்துப் பையன். அப்பொழுது கொஞ்சம் சளைத்துப் போய்விட்டது வாஸ்தவம். ஆனாலும் ரொம்ப நாணயமுள்ளவன். ரொம்பச் சூடிகை. பி.ஏ., படித்திருக்கிறான். அடக்கமான ஸ்வபாவம். உங்களைத் தவிர வேறு இடத்துக்கு அவனை அனுப்ப அவன் பெற்றோர்கள் சம்மதப் பட மாட்டார்கள்"

என்றும் அவனைச் சிபாரிசு செய்திருந்தவர் விநாயக மூர்த்தியிடம் தெரிவித்திருந்தார்.

"சரி; நேரமாகிவிட்டது. வீட்டுக்குப் போய் ஒய்வு எடுத்துக்கொள். அலைந்திருக்கிறாய்" என்றார் அவர்.

பலராமன் நன்றி பொங்கும் கண்களுடன் விடை பெற்றுக் கொண்டான்.

5

'செக்' புஸ்தகத்தைச் சாவகாசமாய் விநாயகமூர்த்தி பிரித்தார். தொப்பென்று ஒரு கடிதம் கீழே விழுந்தது. ஆச்சரியத்துடன் அவர் அதைப் பிரித்துப் பார்த்தார். ஓரங்கள் எல்லாம் மஞ்சள் தடவியிருந்தது. அது தம் பெண் ஜயந்தியின் ஜாதக நகல் என்பதைக் கண்டு கொள்ள அவருக்கு வெகு நேரம் ஆகவில்லை.

இவ்வளவு ஐசுவரியமும், தாமே முன்னுக்குக் கொணர்ந்து வளர்த்த காரியாலயமும், அதற்குரியவளான ஒரே பெண்ணை ஜயந்தியும் எங்கோ கண் காணாமல் இருக்கும் ஒருவனுக்குப் போய்விடுமோ என்று பயந்து கொண்டே இருந்த விநாயகமூர்த்தியின் முகம் பிரகாசமாய் ஜொலித்தது. தம் பெண், பையன் பிடித்துவிட்டதற்கடையாளமாகத் தன் ஜாதக நகலை அனுப்பிவைத்ததைக் கண்டு அதில் ஒரு புன்சிரிப்பும் படர்ந்தது.

பலராமன் முதல் நாள் விழித்தவர் முகத்திலேயே மறுநாளும் விழித்தான். பொருத்தம் அவ்வளவு சரியாக இருந்தது.

* * *

"ஏது இன்னிக்கு மழைதான் வரப்போகிறது. இவ்வளவு சீக்கிரம் எழுந்து விட்டீர்களே?" என்று சொல்லிக் கொண்டே ஜயந்தி மேலேறி வந்தாள். அவன் வேண்டுமென்றே காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல் இருந்தான்.

பிறகு, சிறிது நேரம் வரை யாதொரு சந்தடியும் இல்லை. ஆனால் கட்டுரைகளில் வரும் கதா நாயகனுக்குரிய

பொறுமை அவனுக்குச் சிறிதும் இல்லை. திரும்பிப் பார்த்துவிட்டான்.

"கண்ணைக் குத்து" என்று கண்களைப் பொத்த வராத அந்தப் பசப்புக் காரியின் கைகள் முன்னால் நீண்டன.

"உன் கைகள் புஷ்பமாயிற்றே. குத்தினால் வலிக்கும் படி செய்ய அதில் முட்கள் கூட இருக்கின்றனவா?" என்று கேட்டான் அவன்.

"நாளும் கிழமையுமாய் இன்று உங்கள் முகத்தில் விழித்தேன்" என்று கூறி கொண்டே அவள் அவன் முரட்டுப் பிடியிலிருந்து திமிர முயன்றாள்.

WOODLANDS

Your Perfect Place

for everything in Hotel

Comfort and Parties

ROYAPETTAH, MADRAS

"கோமதி, கோமதி...நான் அரை மணியா அலறிண்டிருக்கேன்... பதிலே காணோமே?" என்று பதறினான் சாமா.

"வீட்டிலே ஒருத்தி இருக்காளான்னு பார்த்துட்டுன்னா, தொண்டை வலிக்க மெதுவா கூப்பிடணும்," என்று கூறிய வண்ணம் பிரசன்னமானாள் கோமதி.

"சரி எங்கே போயிருந்தே?"

"இத்தனை நாழி என் ஜன்மமே மாறியிருந்தது."

"மாறிப் போச்சா?"



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

போட்டோ: [illegible]



" உன் மழலை இன்பத்தைவிட ஸ்பூன் இன்பம் பெரிதா ?

போட்டோ : மாருதிராஜ்.

"காத்து, நின்னு, நின்னு..."

"காத்து நின்னு, கை வலியை கவனிக்காம விசிறிண்டாப் போறது."

"உங்க கோண புத்தியை கொஞ்ச நேரமாவது கட்டி வையுங்கோ."

"வெச்சா அது சும்மா யிருக்குமா?"

"சொன்னு மட்டும் கோபம் பொத்துண்டு வாது. வீட்லே என்ன சாமான் தட்டிப்போனுலும், பையைத் தூக்கிண்டு நான் கிளம்ப வேண்டியிருக்கு. அட போனோம் வந்தோம் யிருந்தா தேவல்லே. அது ஏதோ 'கூ'வாமே?"

"என்ன? என்ன! 'கூ'வா? ஒவ்வொரு கடையிலும் இப்போ எல்லாம் குயில் வேறே வச்சிருக்காளு?"

"அதெல்லா மில்லே. நம்ப ஜனங்களுக்குத்தான் பொறுமை கிடையாதே. நீ முந்தி நான் முந்தின்னு மத்தவா எல்லாரையும் கீழே தள்றதிலே தானே நம்ம சாமர்த்திய மெல்லாமிருக்கு."

"அதனுலே தான், கோமதி, க்யூ வரிசை உதயமா யிருக்கோ!"

"நல்ல க்யூ போங்கோ. குரங்கு பாலம் மாதிரி ஒருத்தர் பின்னுலே ஒருத்தர் நின்னுண்டு...போதும் போதும்."

"இந்த க்யூ பெண்களுக்கு ரொம்ப அவசியம். எல்லோரும் ஒரே சமயத்திலே மூச்சு விடாம பேசறதை விட்டுட்டு, க்யூ வரிசையிலே பேசினு கேக்கறதுக்கு எத்தனே நன்னுயிருக்கும்?"

"யுத்தம் வந்தது. அதன் வாலேப் பிடிச்சுண்டு ராம லக்ஷ்மணு மாதிரி இதுவும் வந்துடுத்து."

"யுத்தமோ நின்னு போச்சு."

"க்யூ நம்ப கிட்டேயே நின்னுடுத்து."

"கோமதி. இதன் அழகே தனி. பிச்சைக்காரங்க எத்தனே அழகா ஒருத்தருக்கு முந்தி ஒருத்தன் சொல்லி

வச்சாப்பிலே வரான். ஒரே சமயத்திலே வீட்டு வாசல்லே நின்னிண்டு 'வாத்ய கோஷம்' ஆரம்பிக்காம."

"இந்தக் கஷ்டம் உக்களுக்கென்ன தெரியும்? மொத்தமா வந்தா ஒருத்தனுக்குப் போட்டுடலாம். இப்போ அது பலிக்காதே."

"நீ என்னத்தான் சொல்லு, கோமதி, இதிலே இருக்கிற ஒழுங்கு, அழகு, கம்பீரம், சமத்துவம்........."

"உங்களுக்கென்ன பேசுவேள்? அரை மணிக்கு முன்னேதான் அகோரத்தின் கடை முன்னே க்யூ வரிசையிலே நின்னேன். நின்னு நின்னு கால்தான் கடுத்தது. க்யூ கரையற வழியால்லே."

"வேடிக்கையா யிருக்கு. இது என்ன சிரஞ்சீவிக் க்யூவா? என்றும் முப்பதா வாழ்ந்ததுக்கு?"

"என் கால்வலிதான் சிரஞ்சீவியா யிருக்கு."

"கோமதி க்யூவிலே நின்னுபுட்டா போதுமா? அதுக்கு பங்கம் ஏற்படாதபடி அதைக் காப்பாத்தறது ஒரு தனிக் கலை."

"இந்த விக்ரமாதித்தன் வித்தையைக் கத்துக்க குருகுல வாசம் பண்ணணுமோ?"

"இதோ பாரு. அட்டை மாதிரி க்யூவின் வாலிலே ஒட்டிக்கணும். நாமே முன்னேறச்சதான் அபாயம் எல்லாம் இருக்கு. எவனாவது தவறி கீழே விழுந்தான். நெஞ்சு துணிஞ்சு அவன் மார்மேலே நிக்கணும்."

"அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துண்டு போற மட்டுமா?"

"கேளேன். மனம் கலங்காமே இலக்கை நோக்கி முன்னேறணும். இதிலே தற்காப்புத்தான் அவசியம். எதிரிகள் விலகிப் போறப்பிலே பாய்ச்சல் காண்பிச்சி, முன் வரிசைக்கு வெடிகுண்டு வச்சூடுவாங்க. அதை 'டார்பிடோ' பண்ணணும் உடனுக்குடனே!"

"வெடிகுண்டுப் பிரயோகம்கூட உண்டோ?"

"வெடிகுண்டா! நன்னச் சொன்னே; கோமதி! இடுப்பிலே விழற குத்துக்கு வெடிகுண்டு எம்மாத்திரம்? இந்த ஐந்தாம்படை வேலேக்கு சர்வ ஜாக்கிரதை வேணும். கண் அசைத்தோம் போயே போய்டும்!"

"எது?"

"மணிபர்ஸுதான்.'!

"கையிலேயே வச்சுண்டா!"

"முதலுக்கே ஆபத்துதான்."

"இத்தனை ஆபத்துகள் இருக்கிற க்யூவுக்கு ஏன் இத்தனை கௌரவம்?"

"நாமா கொடுத்தோம். பிதுரார்ஜித மாதிரி அது நம்மை சேர்ந்தூட்டுது."

"கலிகாலத்தின் செல்லப்பிள்ளை அது. கேக்கணுமா?"

"தொட்டில் சங்கிலி மாதிரி தெருவெல்லாம் இருக்கே."

"நல்ல தாலாட்டு போங்கோ!"

"உண்மையிலேயே கோமதி, இது தாலாட்டுதான். ஜனங்க இத்தனை சாவகாசமா நடுத்தெருவிலே தூங்கற துக்கு ரொம்ப சௌகரியமா யிருக்கு."

"மத்த காரிய மெல்லாம் என்ன ஆறதாம்?"

"க்யூவுக்கு முந்தி மத்த காரிய மெல்லாம் மூச்சு காண்பிக்க முடியுமா?"

"இனிமே என்னுலே இந்த க்யூவோடோ சரஸமா பழக முடியவே முடியாது," என்று ஒரு போடு போட்டாள் கோமதி.

"கோமதி, தெருத்திண்ணையிலேயே உட்கார்ந்துண்டு, மத்தியானம் முழுதும் காலக்ஷேபம் பண்ணும, காலம்பர போய் சாயந்திரம் வரை கின்னுண்டு பேசிட்டு, காரியத்தையும் முடிச்சூட்டு வந்தா இது ஒரு தனி வெற்றி இல்லியா?"

"சாமான் வாங்கிண்டு வரணுமே !"

"நைஸாப் பேசி குடும்ப பாரத்தை என் தலையிலே ஏத்திப்புட்டே ?"

"தாங்க முடியாட்டா ஒரு பியூன் போட்டு அவனை வச்சுக்கலாமே ?"

"வர சம்பளத்துக்கு அவன் ஒருவன் தான் பாக்கி... சரி, நேரமாய்டுத்து. காப்பி தயார் ஆய்டுத்தா ?"

"இத்தனை கல்யாணமும் அதுக்குத்தான்."

"பேஷ்......சரி, வெளியிலே போய்ட்டு வரேன்," என்று சொல்லி விட்டு தெருவில் நடையைக் கட்டினான் சாமா.

* * *

"அடேடே! திருமலையா! மன்னிச்சக்கணும்," என்று மன்றாடினார் மூர்த்தி மாமா, தியேட்டர் வாசலில் சிக்குண்டு கிடக்கும் தம் நண்பர் திருமலையை நோக்கி.

"பரவாயில்லை !" என்றார் திருமலை.

"ரொம்ப மெதிச்சுட்டேனே ?"

"காலே மரத்துப் போய் ஒரு மணி ஆச்சு... அதனாலே."

"அது சரி, கொஞ்சம் கீழே பாருங்கோ. என் காலு தரையிலே இருக்கா அல்லது......"

"காப்பி சாப்பிட்டு இரண்டு மணி ஆறது தலை சுத்தறது. கண்ணை சொருகிண்டு வரது. ஏதாவது தெரிஞ்சாத்தானே சொல்ல முடியும் ?"

"இந்த க்யூவிலே எப்போ மாட்டிண்டேள் ?" என்று பரிதாபகரமாகக் கேட்டார் மூர்த்தி.

"நானா மாட்டிண்டேன் ? அந்த வயித்தெரிச்சலை கிளப்பாதிங்கோ."

"அடாடா, நீங்க சினிமாவுக்கு டிக்கட் வாங்க காத்திண்டிருக்கேள்னு நினைச்சேன்."

"நேரமாச்சே, பீச்சுக்குப் போகலாம்னு நான் கிளம்பினேன். இந்த சினிமா வாசல் வழியா போயிக் கொண்டிருந்தேனு? ஒரு கும்பல்லே சிக்கிண்டேன். பிரக்ஞை தப்பி வந்தவுடனே சுத்திப் பார்த்தா நான் இந்த க்யூவிலே மாட்டிண்டிருக்கேன். கழட்டிண்டு போகலாம்ஞ விட்டாத்தானே?" என்ருர் அழாத குறை யாய் திருமலே.

"உதறிட்டுப் போக முடியல்லயோ?"

"சம்சார சாகரத்தை நீஞ்சிண்டு போயிடலாம் போலிருக்கு. ஆனு இந்த வரிசையிலிருந்து விலகிக்க முடியாது போலிருக்கு."

"அதான் பார்த்தேன். கொட்டகை வாசல்லே உங் களைக் காண்றது துர்லபம்னு எனக்குத் தெரியாதா?"

"ஹா!" என்று வீரிட்டார் திருமலே.

"என்ன, ஸார்?"

"என் பின்தி நிற்கரான் பாருங்கோ கடோர்கஜனை. அவன் என் உயிரைத் தொட்டே பார்க்கருன், ஸார்."

"நீங்க அதன் பேரிலே இத்தனை அசட்டையாயிருக் கக் கூடாது."

"விடுதலே இன்னிக்கு சாயங்கிரம் நிச்சயம் இல்லே."

"உதறிண்டு வெளியேறுங்களேன்."

"உதறிண்டா? நன்னச் சொன்னேள். அவனைத் திரும்பிப் பார்த்தேன். அவன் கண்ணை உருட்டறதை கவனிச்சா, எனக்கு ஏண்டா இந்த உலகத்திலே இவன் இருக்கிற காலத்திலே பிறந்தோம்னு இருக்கு."

"ஸார், மெள்ளப் பேசுங்கோ அவன் காதிலே விழப்போறது."

"அந்த பயமில்லே."

"ஏன்?"

"அவன் காதுலிக்காரன்."

208425
208425

"நீங்க இத்தனை நாழி உயிரோடே இருக்கிற இரகசியம் இப்போ தெரியாது."

"ஆட்டம் எப்போ?" என்றார் திருமலை, பெரு மூச்சு விட்டுக் கொண்டே.

"கவலைப் படாதீங்கோ. டிக்கட்டு இதோ கொடுக்க ஆரம்பிச்சூடுவான்."

"இந்த க்யூ என்ன ஹநுமார் வால் மாதிரி நிமிஷத்துக்கு நிமிஷம் வளர்ந்திண்டே வரதே?"

"இப்போ வளர் பிறை. இரண்டு நிமிஷம் கழிச்சுப் பாருங்கோ. தேய் பிறை ஆரம்பிச்சுடும்."

"அப்போ நமக்கு பாக்கி இருக்கிற உயிரும் தேய ஆரம்பிச்சூடும்."

"திருமலை! க்யூ எத்தனை நீளம் பார்த்தேளா?"

"இது 'டிராபிக்குக்கு' இடைஞ்சல் இல்லே?"

"அதான் வரிசையா நிக்கரோமே!"

"ஏன், மூர்த்தி, நம்ப பகீரதப் பிரயத்தனம் எடுத்துண்டு இந்த க்யூயாகப் பண்றோமே? பலன் கிட்டாட்டா?"

"கீதையை ஞாபகப் படுத்திக் கோங்கோ. அவ்வளவு தான் மனுஷாளாலே முடியும்."

அவர்களுக்கு சற்று முன் சாமா நிற்பது திருமலைக்குத் தென்பட்டது. அவர் சற்று பரவசமடைந்து, "ஏன் ஸார். அதோ உங்க நண்பர் சாமா இருக்காரே. அவரையே டிக்கட் வாங்கச் சொன்னா," என்று சொல்லி முடிப்பதற்குள் "பரோபகாரத்தை இந்த க்ஷேத்திரத்திலே எதிர் பார்க்கறது அத்தனை உசிதமில்லே. சொந்த தகப்பனுக்குக் கூட துணிஞ்சு மகன் உபகாரம் பண்ணமாட்டான். க்யூவின் மகிமை இது.

"எனக்கென்னமோ பயமா யிருக்கு, இத்தனை நேரம் ாகத்துண்டு நின்னூட்டு கடைசியிலே ஏமாந்து போனா.........."

"அதனுலேதான் க்யூவை ஒரு படிபபினேன்னு சொல்லணும். நிஷ்களங்கமா வந்து நிக்கணும், கிடைச்சா சந்தோஷம்; இல்லே, பரம சந்தோஷம்" என்று ஆறுதல் கூறினர் மூர்த்தி.

"நல்ல க்யூ யோகம் போங்கோ" என்று அவர் சொல்லி முடிப்பதற்குள் மூர்த்தி பதறி "திருமலே! திருமலே! சுவர்க்க வாசல் திறந்துட்டான்!" என்று அலறினர்.

மறுநிமிஷம் ஒரே இரைச்சல். யுத்தம் உடனே மூண்டது. எங்கும் கைகலப்பு. க்யூ வரிசைக்கு சோதனைக் காலம் பிறந்து அது அற்பாயுசாக முடிந்தது.

இந்த அமளியில் மூர்ச்சையான திருமலே சிறிது நேரம் ஆனபின் தன் கண்விழித்து மூர்த்தியை அழைத்தார்.

"அடாடா! திருமலேயா! உம்மைத் திரும்பக்காண்ற பாக்யமாவது எனக்குக் கிட்டித்தே!" என்று அவரைத் தழுவிக்கொண்டார் மூர்த்தி.

"மூர்த்தி! என்னை நன்கு கவனிச்சுப் பாருங்கோ என் உடம்பிலே ஏதாவது ஒரு அவயவம் குறைஞ்சு போயிடலயே?' என்று அழுதவண்ணம் கேட்டார்.

அந்த சமயத்திலே அங்கு ஆஜரான சாமா அவர்கள் இருவரையும் அன்பு குழைய நோக்கி, "உங்க ரெண்டு பேரையும் பார்த்தா எனக்கு ஏதேதோ ஞாபகம் வரது. உங்களுக்கு இப்போ உடனே வேண்டியது சிரமபரிகாரம்" என்று எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் கூறினன்.

"நன்ருகச் சொன்னே சாமா. நடுத்தெருவிலேதான் சிரமபரிகாரம் செய்துகொள்வதோ?" என்று எறிந்து விழுந்தார்.

"நான் சொல்றபடி செய்யுங்கோ. ரெண்டுபேரும் தியேட்டர்குள்ளே போய்டுங்கோ!" என்ருர் சாமா நிதானமாய்.

"தியேட்டர்குள்ளே போறதா! புத்தி யிருந்துதான் பேசறயா?" என்று கடிந்தார் மூர்த்தி.

"தெய்வாதீனமா நான் இரண்டு டிக்கட்டு வாங்கிப் புட்டேன். நீங்க இதை எடுத்துண்டு உள்ளே போங்கோ" என்றான் சாமா தியாகமே உருவாய்.

"சாமா! நீ மனுஷப் பிறவியில்லை. நீ புருஷ தெய்வம்!" என்றார் திருமலை, உணர்ச்சிப் பெருக்கில்.

"உங்க சந்தோஷம் தான் எனக்கு முக்கியம்,' என்றான் சாமா.

"சரி சாமா, நீங்க எங்கே போறேள்?" என்று கேட்டார் மூர்த்தி.

"ஆஸ்பத்திரிக்கு."

"ஆஸ்பத்திரிக்கா? வீட்டுக்கு இல்லே?" என்று திகைப்புடன் கேட்டார் மூர்த்தி.

"உடம்பிலே ஏதோ ஒரு எலும்பு காணோம்னு தோன்றது. அதைக் கண்டு பிடிக்கத்தான் என்று சொல்லிக்கொண்டே கூட்டத்தில் நழுவினான் சாமா.

ஆர். ஆர். பிரதர்ஸ் & கோ,
மெஷினரி மர்சண்ட்ஸ்
306, லிங்கி செட்டி தெரு, ஜி. டி., மதராஸ்.

நெல் அல்லர், மாவு, மிளகாய், சீயக்காய் அரைக்கக்கூடிய மிஷின்களும், அவைகளுக்கு வேண்டிய சில்லறை சாமான்களும், பெல்டு வகையருக்களும் எங்களிடம் கிடைக்கும்.

சகாயமான விலை உறுதியான வேலைப்பாடு

R. R. BROTHERS & CO.,
MACHINERY MERCHANTS
306, LINGI CHETTY ST., G.T., MADRAS

மழையே நில்!

என். நாராயணன் பி.ஏ.

“நல்லவேளை! மழை நின்று விட்டது; சீக்கிரமாகப் போய்விடலாம்.” என்று தீர்மானித்து, நேற்று சாயங் காலம் வீட்டிலிருந்து கிளம்பினேன். புறப்பட்டு மூன்று நிமிஷங்கள் கூட ஆகவில்லை. திடீரென்று ‘பட பட’ வென்று மழை பெய்ய ஆரம்பித்தது. பக்கத்திலுள்ள ஒரு கடைக்குள் ஒதுங்குவதற்குள், என் சட்டை, வேஷ்டி எல்லாம் நனைந்து பாழாகிவிட்டன. கடந்த பதினைந்து நாட்களாக, வண்ணானுடன் வாதாடிக் கூத்தாடி நேற்றுத் தான் வாங்கி வந்திருந்த புத்தப் புதிய சரிகை அங்க வஸ்திரம், கண் மூடித்திறக்கும் நேரத்தில் உருவழிந்து, வாடி வதங்கிச் சுருங்கி விட்டது.

அப்பொழுதுதான் என்னையு மறியாமல் இந்தப் பாழாய்ப்போன மழையின்மேல் கட்டுக் கடங்காத கோபம் உண்டாயிற்று.

“மழை எதற்காகப் பெய்ய வேண்டும்?...

யாரைக் கேட்டுக்கொண்டு பெய்கிறது?" என்ற கேள்விகள் கிளம்பின.

"கையில் குடையுடன் செல்வதற்கென்ன?'' என்று நீங்கள் கேட்கலாம்.

பிறவியிலிருந்து, என் குறைகளில் தலைசிறந்து விளங்குவது எனது ஞாபக மறதிதான். (எனது மற்றக் குறைகள் என்ன வென்பது எனக்கு ஞாபகமில்லை). ஞாபக மறதியின் பயனாக, நான் இதுவரையில் 27-குடைகளைத் தொலைத்திருக்கிறேன். இனி—இப்பொழுது குடைகள் விற்கும் விலையில்—குடைகள் வாங்குவதில்லை என்றும், முடிந்த வரையில், வேறு யாருடைய குடையின் கீழாவது அடைக்கலம் புகுவது, இல்லையேல் மழையில் நனைந்து போவதே மேல் என்றும் தீர்மானித்து விட்டேன்.

எனக்கென்னவோ இந்த மழையைக்கண்டாலே வெறுப்புத்தான் உண்டாகிறது. மழைபெய்வதால், யாருக்கும் எவ்விதப் பிரயோசனமும் இருப்பதாகத் தெரியவில்லை! ஆனால், கீழ்க்கண்ட அசௌகரியங்கள் நிச்சயமாக உண்டாகின்றன அல்லவா?

(1) வெள்ளை வேஷ்டி சட்டைகள் நனைந்து பாழாகின்றன.

(2) அவசரமாகப் போகவேண்டிய இடங்களுக்குப் போக முடிவதில்லை.

(3) நாம் குடியிருக்கும் வீட்டின் நான்கு புறங்களிலிருந்தும் உள்நோக்கிப் பாயும் மழைத் தண்ணீர் அடுப்பங்கரையிலும் படுக்கை அறையிலும் தேங்கி நின்று விடுகிறது.

(4) நம் வீட்டில் முகாம் செய்திருக்கும் விருந்தாளிகள், மழையின்மேல் பழியைச் சுமத்தி, ஊருக்குக் கிளம்புவதை ஒத்திப்போட்டு விடுகின்றனர்.

(5) விறகுகளிலுள்ள ஈரம் அடுப்பிலுள்ள கொஞ்ச நஞ்சம் நெருப்பையும் அணைத்து விடுகிறது!

(6) தெருவில் நடந்து செல்கையில், வேகமாகச் செல்லும் மோட்டார்கள், தெருவிலுள்ள மழைத்தண்ணீரையும், சேற்றையும் நம் மீது அமோகமாக வாரியிறைத்துச் செல்கின்றன.

இன்னும் இவை போன்ற கணக்கற்ற இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன!

இவைகளைப் பற்றி நினைக்கும் பொழுதுதான் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது ; "இந்தக் காலத்தில் விஞ்ஞானத்தின் உதவியால், தினந்தோறும் ஏதாவது ஒரு புதிய இயந்திர சாதனம் கண்டு பிடிக்கப்பட்டு வருகிறதல்லவா ?.........அணு குண்டைக் கண்டுபிடித்த மனிதன், இந்த மழையை நிறுத்துவதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிக்க முடியாதா, என்ன ?"

'மழை பெய்யாது' என்ருல், குடையைத் தேட வேண்டிய அவசிய மேற்படாது ! பிறகு அதைக் கெட்டுப் போக்கவும் நேரிடாது !

ஒரு வேளை, மனிதனுல், மழை பெய்வதை அடியோடு நிறுத்த முடியாவிட்டாலும், அதை நம்மிஷ்டம்போல், நமக்குச் சௌகரியமான பிரதேசத்தின் மீது, நமக்குச் சௌகரியமான சமயத்தில், பெய்யும்படி ஏற்பாடு செய்ய முடியாதா, என்ன ? இப்பொழுது, சில இடங்களில் மழை மூச்சு விடாமல் பெய்கிறது ; மற்றும் சில இடங்களில் மருந்துக்குக் கூட மழை பெய்யமாட்டேன் என்கிறது ! இது மகா மோசமான, விரும்பத்தகாத, நிலைமையல்லவா ? மழையைத் தற்காலிகமாக நிறுத்திப் பிறகு நம்மிஷ்டம்போல பெய்ய வைப்பது சாத்தியமாகி விட்டால், எவ்வளவு சௌகரியங்கள் ஏற்படும் !

அப்பொழுது, கீழ்க்கண்ட கேள்விகளுக்கு இடமிருக்காதல்லவா ?

(க) இந்த ஊரில் எப்பொழுது தான் மழை பெய்யுமோ, தெரியவில்லையே !

(ங) சாயங்காலம் மழை பிடித்துக்கொண்டால், ஊருக்கு எப்படி கிளம்ப முடியும் ?

(ச) எங்கள் ஊரில் மழையே கிடையாதா, என்ன ?

—இத்தியாதி—

* * *

மழை மனிதனின் ஆதிக்கத்துக்கு உள்ளாகி விட்டால் அப்புறம் தினசரிகளில் ‘காலதேச வர்த்தமானம்’ என்ற பத்தியில், கீழ்க்கண்ட சுவாரஸ்யமான அறிக்கைகளை நாம் எதிர்பார்க்கலாம் !

(1) வருகிற வெள்ளிக்கிழமை இரவு பத்துமணியிலிருந்து பனிரெண்டு மணி வரையில், பாரீஸ் கார்னரிலிருந்து மைலாப்பூர் வரையில், மழை சற்றுக் கனமாகவே பெய்யும். இடி மின்னல்கள் ஒன்று இரண்டு இருக்கலாம் !

(2) அடுத்த சனிக்கிழமையிலிருந்து புதன்கிழமை வரையில், கீழ்ப்பாக்கத்திற்கும், சென்ட்ரல் ஸ்டேஷனுக்கும் இடையே லேசாகத் தூறிக்கொண்டிருக்கும். மாலை நான்கு மணிக்குமேல் தூற்றல் நிறுத்திவைக்கப்படும்.

(3) தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, அன்று தென்னிந்தியா முழுவதும் மழை சுத்தமாக பெய்யாது.

(4) வருகிற டிசம்பர் மாதம் 15-ம் தேதியிலிருந்து ஜனவரி மாதம் மூன்றும் தேதி வரையில், சங்கீத விழாக்களை முன்னிட்டு, சென்னையிலும் அதைச் சுற்றி மூன்று மைல் வரையிலும், மழை சுத்தமாக நிறுத்தி வைக்கப்படும்.

குழந்தை

பெ. தூரன்

பச்சைக் குழந்தை என்றால்—எனக்கொரு
பாசம் பிறக்கு தம்மா—அதன்
கொச்சை மழலையிலே—என்னுள்ளம் 1
கொஞ்சிக் களிக்கு தம்மா

சின்னஞ் சிறு சிரிப்பில்—கவலைகள்
தேய்ந்து மடியு தம்மா—அதன்
மின்னும் உடல் வளைவில்—அமுதின் 2
விண்சுவை ஏறு தம்மா

வண்ணச் சிறு விருந்தை—அன்பில்லா
வார்த்தைகள் சொல்லாதீர்—அதன்
கண்ணில் கலக்கம் என்றால்—என்னுள்ளம் 3
கன்றிக் கரையு தம்மா

தெய்வச் சிறு மலரை—என்றுமே
சீறி விழிக் காதீர்—அதன்
மெய்யில் அடியும் பட்டால்—என்னுள்ளம் 4
வெடித்து போகுதம்மா

ஆட்டங்கள் காட்டிடு வீர்—குழந்தையை
அன்பில் வளர்த்திடு வீர்—அதன்
நாட்டங்கள் அத்தனையும்—மகிழ்வுடன் 5
நாளும் கொடுத்திடு வீர்

அன்பில் மலர்ந்து விட்டால்—இளம்பூ
ஆனந்தத் தேன் சொரியும்—அதன்
இன்பப் பெரு வாழ்வே—நமக்கினி 6
என்றும் இனிப்ப தம்மா.

பாவம் கோதண்டராமன்

நாகர்கோவில் மகாதேவன்

கோதைக் கிராமம் கோதண்டராமனுக்கு, 1945-ம் வருடம், ஜூன் மாதம், 29-ம் தேதி காலை 9-55 மணிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. வழக்கமாக 10-மணிக்கு எழுந்திருப்பவன் அன்று 9-55 மணிக்கே படுக்கையை விட்டு எழுந்து விட்டான்; பழயதும் நீர் மோரும் குடித்த பிறகு பல் தேய்ப்பவன் அன்று இரண்டு காரியத்தையும் ஒரே சமயத்தில் செய்து முடித்தான். "ஏண்டா, கொழந்தே! ஒரு நாளுமில்லாத திருநாளா இன்னிக்கு இப்படியெல்லாம் செய்யறே?" என்று காமாக்ஷி பாட்டி கேட்கவே, கோதண்டராமனின் பெரிய கண்களில் நீர் தளும்பிற்று; உடனேயே கண்ணில் விழுந்த தூசியை அகற்றிவிட்டு, "அம்மா! என்னால் இனிமேலும் பொறுக்க முடியாது; நான் இந்த க்ஷணமே சென்னைக்குப் போகவேண்டும்; சென்னையில் போய் அவளைப் பார்க்கவேண்டும்!" என்று ஆவேசம் வந்தவன்போல் கூறினான். காமாக்ஷி பாட்டி ஒரு மூச்சு அழுகை அழுது விட்டு மூக்கையும் சிந்திக்கொண்டே, "அப்பா கொழந்தே! நீ மூணுவயசாயிருக்கறப்போ அவா செத்துப்போனா! அந்த நாள்ளேயிருந்து நானும், அப்பளாம், முறுக்கு, சீடை வியாபாரம் பண்ணி உன்னை ஒரு குறைவுமில்லாமே வளர்த்து ஆளாக்கிட்டேன். இன்னும் கொஞ்ச நாள் தான் நான் உயிரோடிருக்கப் போகிறேன்......அதுக்குள்ளே உனக்கு ஒரு கல்யாணம் பண்ணி,

நீ குழந்தையும் குட்டியுமா இருக்கறதைப் பார்க்கணம்னு ஆசைப்படறேன்......நீயானல்......எவளோ......சிங்காரி ஓய்யாரின்னுட்டு சினிமாக்காரி பேரைச் சொல்லறே...... அப்பா கோதண்டா! இதெல்லாம் உனக்கு வேண்டவே வேண்டாம்டா!'' என்று கூறினள். கோதண்டராமனின் செவிகளில் அவை ஒன்றும் ஏறவேயில்லை. அடர்த்தியாய் வளர்ந்திருக்கும் தன் கூந்தலை நன்ருக கோதிவிட்டு வாரிக்கொண்டான். ''அம்மா! கவலைப்படாதே. நம்ம ஊர்ப் பசங்களெல்லாம் என்னை அரைப் பைத்தியம்னு சொல்ருங்க! இன்னும் கொஞ்ச நாளிலே நான் அரைப்பைத்தியமா அல்லது அவர்கள் அரைப்பைத்தியமா என்பதைக் காண்பிக்கிறேன்............இப்போ எனக்கு ஒரு பத்து ரூபாய் கொடு.........நீ தராவிட்டால் நான் நடந்தாவது பட்டணம்போய் பிரபல சினிமா நடிகை மிஸ். அலங்காரியைப் பார்ப்பேன்; நீதான் என் தெய்வம்; நீதான் என் உசிர் என்று சொல்லுவேன்............ அப்புறம்............அப்புறம் என்ன? அவளையே கல்யாணம் பண்ணிண்டு, அவளோடு காரிலேயே "ஜம் ஜம்"னு ஊருக்குவந்து, "அடே முட்டாள்களே! யாருடா இப்போ அரைப்பைத்தியம்?'' என்று நம்ம பசங்களிடம் கேட்பேன்............அவர்கள்............முகத்தை தொங்கவிட்டுக்கொண்டு, "நாங்கள் தான்," என்று சொல்வார்கள். அப்புறம் தான் நான் சமாதானமாக பழையது சாப்பிடுவேன்,'' என்று கூறிவிட்டு ரூபாய்க்காக கையை நீட்டினன். பிள்ளையின் முகத்தில் கோபம் தாண்டவமாடுவதைக்கண்டு பயந்த காமாக்ஷி பாட்டி பெருங்காய டப்பியைத் திறந்து அதிலிருந்த ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து, "கொழந்தே ராமா! கண்காணுத காட்டுக்குப் பிள்ளையை அனுப்பின கோசலைமாதிரி உன்னையும் நான் இப்போ அனுப்பறேன். என்னமோ......நீ......சௌக்கியமா திரும்பிவறதுவரை எனக்குக் கண்ணே மூடாது!'' என்று கூறி அவன் கையில் கொடுத்தாள். கோதண்டராமனும் கம்பீரமாக சென்னையை நோக்கிப் புறப்பட்டான். (இப்பொழுது புரிந்ததா, கோதண்டராமனுக்கு திடீரென்று பைத்தியம் பிடித்த காரணம்?)

கோதண்டராமனுக்கு அலங்காரி பைத்தியம் பிடித்து மூன்று வருஷமாகிறது; ஆரம்ப காலத்தில் அது சாதாரண

நிலையிலிருந்து, கடைசியில் "முத்திப்போன" நிலைக்கு வந்து விட்டது. மிஸ். அலங்காரி, ஒரு சினிமா நக்ஷத்திரம்—ஆமாம். பிரபல நக்ஷத்திரம் தான். அவளுடைய 300-பவுண்டு நிறையுள்ள "சின்ன" சரீரத்தையும், அரைக்கால் இஞ்ச் (inch) நீளமுள்ள மூக்கையும் சினிமாத் திரையில் பார்த்தப்பிறகு, எவ்வளவோ வாலிபர்கள் "அலங்காரி பைத்தியம்" பிடித்தலைந்தாலும், கோதைக் கிராமம் கோதண்டராமனே அவர்களுக்கெல்லாம் "ராஜா" வாய் விளங்கினன். "மணந்தால் அவளை மணக்கவேண்டும்; இல்லையேல் பழையது பானை மணமே மேலென்றிருக்கவேண்டும்!" என்று வைராக்கியம் கூட செய்து விட்டானென்றால், அப்புறம் அவனது "அலங்காரி காதலை"ப்பற்றி நமக்கு என்ன சொல்லமுடியும்?

* * * *

கோதண்டராமன் சென்னை வந்து சேர்ந்தான். "கோதைக் கிராமமே" இந்தியாவின் பாரீஸ் என்று நினைத்துக்கொண்டிருந்தவனுக்கு சென்னை மிகுந்த பிரமிப்பை விளைவித்தது. கலைந்த தலையை வாராமலும், திறந்த வாயை மூடாமலும் ஒவ்வொரு இடங்களையும் பார்த்துக்கொண்டே சென்றான். கடைசியில தான் சென்னை வந்தது பட்டணம் பார்க்க அல்லவென்றும் அலங்காரியைப் பார்ப்பதே தன் நோக்கம் என்றும் நினைத்துக் கொண்டு, வழியில் போவோரிடமும் வருவோரிடமும் "நடிகை அலங்காரியின் பங்களா எங்கேயிருக்கிறது?" என்று கேட்க ஆரம்பித்தான். சில குறும்புக்கார பேர்வழிகள் அவனை கிண்டல் செய்ய எண்ணி, "அம்பி! உனக்கு அலங்காரியைப் பார்க்கணுமா? நேரே கீழ்ப்பாக்கம் என்கிற இடத்துக்குப்போ: அங்கேதான் அவள் பங்களா இருக்கு: உன்னைப் போன்ற ஆசாமிகளையெல்லாம் அந்த பங்காளாவுக்குள் தாராளமாகப் போக விடுவார்கள்!" என்பார்கள். வேறு சிலர் "ஓய் கர்நாடகமே! உமக்கு எதற்கு ஓய் இந்த வீண் ஆசை? அலங்காரியை யாவது நீர் பார்ப்பதாவது; அவளுடைய படிப்பெங்கே, அழகெங்கே, கௌரவமெங்கே.........அடடா: உம்மை அவள் வீட்டு நாய்கூடக் கவனியாதே ஓய்!" என்றார்கள். ஆனல் கோதண்டராமன் மனம் சலிக்க

காலம் மாறுகிறது!

விறகு பஞ்சத்தின் விளைவா?

போட்டோ: பாசரசு

வில்லை ; அங்கு மிங்கும் அலைந்து கடைசியில், அலங்காரி யின் பங்களாவுக்கு வந்து சேர்ந்தான். வாயிற்காப் போன் அவனை உள்ளேவிட மறுத்தான். "என்ன அனி யாயமாயிருக்கு ? கோதைக் கிராமத்திலே யிருந்து இவ் வளவு சிரமப்பட்டு வந்திருக்கிறேன், என்னைப் போகக் கூடா தென்று தடுக்கிறீரே ?" என்று கோ. ராமன் இரைந்தான் ; இந்த சப்தத்தைக்கேட்டு மிஸ். அலங்காரி வெளியேவந்தாள். "என்னடா சப்தம் ?" என்று கேட் டாள். "என்னமோ கோதைக் கிராமமாம்.........இவரு அங்கிருந்து வருராம்......உங்களைப் பார்க்கணுமாம்......" என்ருன் வாயிற்காப்போன். "என்ன, கோதைக் கிரா மமா ?" என்று ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டே அவனருகில் வந்தாள் அலங்காரி ; கோதண்டராமனை சிறிது நேரம் உற்றுப்பார்த்தாள். மறு நிமிஷம், சந்தோ ஷம் பொங்கும் குரலில் "வாங்க, வாங்க ! உள்ளே வாங்க !" என்ருள். கோதண்டராமனுக்கு ஒன்றுமே புரிய வில்லை. அந்த "பூலோக ரம்பை" தன்னைத்தான் கூப்பிடுகிருளா அல்லது வேறு யாரையாவது கூப்பிடு கிருளா என்றெண்ணி சுற்றுமுற்றும் பார்த்தான். 'அட, நான் உங்களைக் கூப்பிடறேன், நீங்கோ எங்கோயோ பார்க்கிறேளே ! வாங்க, உள்ளே போகலாம் !" என்று அவள் திரும்பவும் கூறவே, "சரி, நம்மைத்தான் கூப்பிடு கிருள் !" என்று தீர்மானித்துக்கொண்டு பக்தி சிரத்தை யோடு அவள் பின்னல் பங்களாவுக்குள் போனான். பெரிய ஹால்; மெத்தை தைத்த நாற்காலிகளும், சோபாக் களும், வெள்ளித் தட்டங்களும்.........அதுவும் இதுவு மாக ஏக தடபுடலாக யிருந்தது. "அப்படி உட்கா ருங்க !" என்று அலங்காரி ஒரு சோபாவைக் காட்டி ஞள். கோதண்டராமன் பிரமிப்புடன் உட்கார்ந்தான். "கொஞ்சம் காப்பி சாப்பிடுங்கோேன் !" என்று கூறி ஒரு வெள்ளிடம்ளர் நிறையக் காப்பியை அவன் முன் கொண்டுவைத்தாள். "நம்ப அம்மாவையும் இப்போ கூட்டிண்டு வந்திருந்தால் அவள் எவ்வளவு சந்தோஷப் படுவாள் ? ஒரு சினிமாக்காரி இவ்வளவு நல்லவளா யிருப்பாளா ?" என்றெல்லாம் எண்ணிக்கொண்டான். அலங்காரி சிரிப்பு பொங்க, "அம்மா, அம்மா ! நம்ம பங்களாவுக்கு யார் வந்திருக்கிருரு பாரு !" என்று

யாரையோ கூப்பிட்டாள். மறு நிமிஷம் ஒரு வய தான பெண்மணி அங்கே வந்தாள். "குஷன் சோபா" மேல் குந்திக் கிடக்கும் நம் கதாநாயகனைப் பார்த்து விட்டு, "இது யாரு......ச. மு?" என்று கேட்டாள். "அதென்னம்மா அப்படி கேட்கறே? இவரை நீ பார்த்த தில்லையா? அப்பளாம், வடாம், சீடை எல்லாம் பண்ணி விப்பாங்களே கமாக்ஷிப் பாட்டி, அவரு பிள்ளையில்லா இவரு!" என்றாள் அலங்காரி.

கோதண்டராமனுக்கு மூளை சுழன்றது. "மூன்று அடுக்கு கட்டிடத்தில் மகாராணி மாதிரி யிருக்கும் அலங் காரி யெங்கே, சின்ன வீட்டில் அப்பளாம் வியாபாரம் பண்ணும் காமாக்ஷிப் பாட்டி யெங்கே.........இவாளுக்கு எப்படி அதெல்லாம் தெரிந்தது?" என்றெண்ணி குழம் பிக் கொண்டிருந்தான்........."அடே! நம்ப காமாக்ஷிப் பாட்டி பிள்ளையா இவரு? பேரு கூட...... என்னமோ ....கோணங்கிராமன்னு சொல்லுவாங்களே........... சாமி! உங்க தாயாரு மகாராசியா யிருக்கணும். அந்தக் காலத்திலே.....நாங்க கட்டப்படற சமயத்திலே உங்க அம்மா எவ்வளவு அரிசியும் துட்டும் தந்து எங்களைக் காப் பாத்தி யிருக்கிறாங்க.........," என்றாள் அலங்காரியின் தாயார். கோதண்டராமனின் ஆச்சரியம் கரைகடந்து விட்டது. "நீங்க சொல்ற தொன்னும் எனக்குப் புரிய லியே!.........எங்கம்மாவையும் என்னையும் உங்களுக்கு எப்படி தெரியும்?" என்று தைரியத்துடன் கேட்டான். "அதென்ன சாமி, அப்படிக் கேட்கிறீங்க? நாங்க பொறந்து வளர்ந்த ஊரே கோதைக் கிராமம் தானே! ....உங்க வீட்டிலே பாத்திரம் தேச்சுக்கிட்டும், நெல் லுக் குத்திக்கிட்டு மிருந்தாளே முத்தாயி.........அவதான் ....இப்போ அலங்காரமாக மாறியிருக்கா!......நான் தான் அவ தாயாரு செல்லம்மை," என்றாள் மாஜி முத் தாயின் தாயார். கோதண்டராமனின் கண்கள் இருண் டன. என்ன? பரட்டைத் தலையும், அழுக்குப் பாவாடை யும், சாணிக் குட்டையும் கையுமா யிருந்தாளே......அந்த முத்தாயியா.........இந்த அலங்காரி? மூணு வார்த்தை பேச நாலு நாள் விக்கி விக்கி பிராணனை விடும் அந்த அசட்டு முத்தாயியா......இந்த அலங்காரி! அட பகவானே!"

என்று பிரமிப்புடன் கூறினன். மறு நிமிடம் பிரக்ஞை யற்று கீழே சாய்ந்து விட்டான்!

* * * *

கறு கறு வென்று வளர்ந்திருக்கும் அடர்த்தியான மயிர், பாசி பிடித்த கம்மல், ஒரு கையில் மட்டும் காட்சி யளிக்கும் காப்பு............இவ்வளவு அலங்காரங் களுடன், "அலங்காரியாவது, கிலங்காரியாவது!" என்று புலம்பிக்கொண்டு திரியும் ஒரு ஆத்மாவை எங்கேயாவது கண்டால், தயவுசெய்து, "காமாக்ஷி அம்மாள், அப்பளாம் வியாபாரம், கோதைக் கிராமம்" என்ற விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதி தகவல் கொடுக்கவும். பாவம்! அந்த அம்மாள் ரொம்பவும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிருள்!

தயாராகிறது!

கண்ணனை பக்தி செய்து, கண்ணனைக் காதலித்து
கண்ணனையே மணந்துகொண்ட காரிகை

ஸ்ரீ ஆண்டாள்

(சூடிக் கொடுத்த சுடர்க் கொடி)

பாட்டல்கள்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

ஸினேரியோ டைரக்ஷன்: வேல்சாமி கவி

ஸ்டூடியோ: மாடர்ன் தியேட்டர்ஸ்

உங்கள் அபிமான நக்ஷத்திரங்கள்
அனைவரும் நடிக்கிருர்கள்

மூர்த்தி பிக்சர்ஸ்
எக்ஸ்டன்ஷன் - சேலம்

அந்த வாழ்வு!

வி. என். சம்பந்தம்

எங்களருந் தமிழ் நாட்டை எண்ணும் போதெல்லாம்
ஏறுகின்ற தின்ப வெறி : எழுகின்ற தெழில் வீரம்
துங்க முறும் முத்தமிழாம் தூய வெளி தன்னில்
துரிய நட மிடுகின்றாள் அரிய தமிழன்னை !
எங்கெங்கும் காணுவது பசும் பொன்னும் மணியும்
இணையில்லாத்தமிழ்க் கொடியும் இரயனைத்தாவும்
சங்கங்கள், கழகங்கள், சாந்திதரும் மடங்கள்
சமரஸக் கொள்கைகள் தாண்டவமே புரியும் !
ஏகபுத்திரன் என்பதனை எண்ணாமல், “போரில்
எதிரேரிச்செல்” லென்றே ஏவினளோர் நங்கை.
சாகவென துணிந்தாளா? அன்றன்றென் றாளும்
சாகாத புகழ் பெறவே தனியுறுதி கொண்டான் !
தீர ஆராயாது தீர்ப்பளித்த வேந்தன்
சிறுமதியை உலகுணரச் செய்திடவே தமிழ்ப்
பெண்
வீரா வேசங் கொண்டு கற்பென்ற தீயால்
வீடிலா லவாவ்ய் முற்றும் வேகச்செய்தாளே !
வற்றாது செல்வத்தை வந்தடைந்தோர்க்கெல்லாம்
வாரி யிறைத்தான் அன்று வளர் சீதக்காதி,
பற்றுக் கோடற்ற ஒரு முற்றிய நற்கொடிக்குப்
பரிந்தளித்தான் தன் தேரைப் பார்புகழும் பாரி !
நாங்கள் தினம் உண்ணுவது நற்றமிழ் நாட்டுணவே !
நாங்கள் தினம் பூண்பதுவும் நற்றமிழ் நாட்ட
ணியே !
நாங்கள் தினம் செய்திடுதல் நற்றமிழ்ப் பணியென்றே
நற்சபதம் கொண்டார்கள் நல்ல தமிழ் வீரர் !
மூலையிலே விதியென்று முக்காடிட் டாயுள்
முடியும் வரை முனங்காது, முயற்சியால் வாழ்வில்
ஏலேலம் பாடினர் நம் தமிழர், அந்த வாழ்வு
எந்த நாள் வருமென்று ஏங்குதே நெஞ்சம் !

இளங்கோ வரைந்த
நாட்டியராணி

பி. கோதண்டராமன், எம்.ஏ., பி.எல்.

ஆண்டவனின் பல அம்சங்கள் அடங்கிய முழு உண்மையை முற்றும் உணர்ந்த முனிவர், உயிரினம் யாவும் அவனது சொரூபமே யென்றும், அழகின் அவதாரங்களான பெண்மணிகள், அழகு யாவும் ஒருங்கமைந்த அப்பேரழகனின் பரிணாமங்களே என்றும் பிரத்யட்சமாகக் காண்பர். உள்ளத்தில் உண்மை யொளி காணாதவரும் ஒருமை யுணர்ச்சி யற்றவருமான போலித் துறவிகளே, உயிர்கள்பால் விருப்பு வெறுப்புற்றவராயும், அழகையும் அழகின் வெளிப்பாடுகளான மாதரையும் வெறுத்து இழிமை செய்பவராயும், அழகுணர்ச்சியைப் புறத்தே வெளிப்படுத்தும் கலைகளான ஆடல் பாடல்களைத் தீத்தொழிலென விலக்குபவராயும் இருப்பர். தமிழ்த் தாய்க்குச் சிலப்பதிகாரமெனும் சிலம்புச் செல்வம் அணிவித்த பெருந்தகையரான இளங்கோவடிகள் இத்தகைய போலித் துறவிகளுள் ஒருவரல்லர். முற்று முணர்ந்த முனிவரான அவர், ஆண்டவனின் அறிவொளிக் கதிர்களைப் போலவே அழகொளிக் கதிர்களும் உலகெங்கும் பரவி யிருக்கக் கண்டு அவற்றைத் தம் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தின்மூலம் உலகிற் களித்தார். சிலப்பதிகாரத்தில் பிரதான கதாபாத்திரங்களுள் ஒருத்தி மாதவி. நாட்டியராணியாயும், அழகு ராணியாயும் விளங்கும் அவளைக் கலைஞரான இளங்கோவடிகள் கற்பும் பொற்பும் உடைய குலமகளாகவே சித்திரித்திருக்கிறார். ஆடல் அரங்கு ஆடல் பாடல் காட்சிகளைக் கலையறிவும் கலைநயமும் பொலிய வரைந்திருக்கிறார். இன்றை சினிமா நட்சத்திரங்களும் வியக்குமாறு மாதவியின் ஆடை அலங்கார அணிகலன்களை விவரமாக வருணித்திருக்கிறார். இக்

காலத்தில் 'லிப்—ஸ்டிக்' எனப்படும் உதட்டுக்குச் சாய மிடும் வழக்கம் அக்காலத்திலும் இருந்தது என்பது, கட லாடு காதையில் வித்யாதரன் ஒருவன் புகார் நகரில் இந்திர விழா கொண்டாடப் படுவதைத் தன் காதலிக்கு உரைத்த போது, "துவர் இதழ்ச் செவ்வாய்த் துடி யிடையோய்" (செந்நிறமுடைய உதட்டினையும் சிவந்த வாயையுமுடைய உடுக்கையின் நடுப் போலும் இடையை உடையோய்) என்று சொன்னதிலிருந்து தெரிகிறது. கலாரசிகரான இளங்கோ இவ்வளவு விவரமாகக் கூறி யுள்ள காட்சிகளுள், மாதவி தன்னை எங்ஙனம் அலங்க ரித்துக் கொண்டு கோவலனை அடைந்தாள் என்ற பகு தியை மட்டும் சிறிது விவரிப்போம். முதலில், இம் மாதவியைப் பற்றி ஒரு சிறிது அறிந்துகொள்வோம்.

ஊர்வசியின் வழித்தோன்றல்

அரவுபோலும் அல்குலை யுடையவளும், கரிமலர் போலும் நெடிய கண்களை யுடையவளும், நாடகக் கணி கையர் குலத்தில் பிறந்தும் குலமகட் குரிய கற்பும், பொற் பும் உடையவளாய் விளங்கியவளும், கோவலன் மாண்ட பின், புத்த மரதவர்பால் அறங்கேட்டு புத்த பிக்குணியான வளுமான மாதவி, இந்திரலோகத்தைச் சார்ந்த ஊர்வசி யின் மரபில் வந்தவள். பழங்கதையாகிய இதை இளங்கோ வித்யாதரன் வாயிலாக இங்ஙனம் கூறுகிறார் : ஒரு காலத் தில் அகத்தியன் பொதிகையிலிருந்து இந்திரன் அவைக்கு வந்தான். அப்போது இந்திரன் பாடலோடு ஊர்வசியின் ஆடலும் நடத்த உத்தரவிட்டான். அங்கே இந்திரன் மகனான சயந்தன் கள்ளத்தனமாகப் புகுந்து பாடினான். ஊர்வசியும் அவனும் ஒருவரை யொருவர் கண்டு காமுற் றனர். அவளது ஆடல் நெகிழ்ந்தது; அதனால் ஏனைக் கரு விகளெல்லாம் நெகிழ்ந்தன. நாரதன் இதனை யறிவிக் கக் கருதித் தன் வீணையில் பகை நரம்புபடப் பாடினான். இவற்றை யெல்லாம் உணர்ந்த குறுமுனிவன் நாரதனது வீணை மங்கல மிழந்து மண்ணிலே மணையாய்க் கிடக்கு மாறும், ஊர்வசி புவியிலே பிறக்குமாறும், சயந்தன் பூமி யில் மூங்கிலாய்த் தோன்றுமாறும் சபித்தான். ஊர்வசி மண்ணில் மாதவியாய்ப் பிறந்தாள். அவள் வழிப் பிறந் தவளே இம் மாதவி.

அரங்கேற்று விழா

காவிரிப்பூம் பட்டினத்தில் கணிகையர் குலத்தில் தோன்றிய மாதவி, ஆடல் பாடல் அழகு என்னும் மூன்றிலும் யாதொரு குறைபாடுமின்றிச் சிறப்புடன் விளங்கினாள். ஐந்தாம் ஆண்டிலேயே தண்டியம் பிடித்து ஆடப் பயின்ற அவள், ஏழு ஆண்டுகளுள் இசை நாடகக் கலையைக் கசடறக் கற்றாள். பிறகு வழக்கப்படி அரங்கேறிக் கூத்துக்களை ஆடிக் காட்டவேண்டிய சமயம் வந்தது. கரிகாற் பெருவளத்தான் அவளுக்குத் தலைக் கோலாகத்தான் அவளுக்குத் தான் வென்ற பகையரசரின் கொற்றக் குடையின் காம்புகளைத் தந்து அவற்றிற்குக் கணுக்கால்களில் பொற்பூண் இட்டுக் கொடுத்தான். அக்கோலை நீராட்டி மாலையிட்டு யானையின் கையில் கொடுத்தனர். மன்னன் பிரதானிகள் யாவரும் புடைசூழ அது ஊர்வலம் வந்தபின் அரங்கில் வைக்கப்பட்டது. மாதவி அரங்கேறி வலது காலை முன் வைத்து மன்னனுக்கு அகக் கூத்து புறக்கூத்துக்களை நூன்முறை வழுவாது பொன்னணியன்ற பூங்கொடி நடிப்பது போல அபிநயம் தோன்ற ஆடிக் காட்டினாள். அரசனது பச்சை மாலையும் தலைக் கோல் பட்டமும் பெற்றாள். தலைவரிசையாக ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பரியமும் பெற்றாள். மன்னனது திட்டப்படியே ஆயிரத்தெண் கழஞ்சு பொன் கொடுத்து அம் மாலையை வாங்கின கோவலன் அவளுக்கு மணமகனானான்.

சிங்காரியின் அலங்காரம்

இந்திர விழா நடந்தது. அதன்போது மாதவி அரங்கேறி பதினொரு வகை ஆடல்களையும் ஆடி மக்களை மகிழ்வித்தாள். ஆடலும், ஆடற்குச் சமைந்த கோலமும், ஆடுதலாற் பிறந்த அழகும் முடிந்தன. ஊடற்கோலமோடிருந்த கோவலன் உவகையெய்தும்படி, கூந்தலை நீராட்டி அணியணிந்து அவனை விரைந்து பள்ளியிடத்தே சேர்ந்தாள். மாதவி தன்னை எங்ஙனம் அலங்கரித்துக் கொண்டாள் என்பதை இளங்கோ இங்ஙனம் விரித்துரைக்கிறார் :

மாதவி நாவல், நெல்லி, ஆல், அரசு, அத்தி, மாந்தளிர் முதலிய பத்து வகைப்பட்ட துவர்ப்பு மருந்துப் பொருள்

களும்; அகில் தகரம் முதலிய ஐந்து வகைப்பட்ட விரையும் லவங்கம், நன்னாரி, கஸ்தூரி முதலிய முப்பத்திரண்டு வகைப்பட்ட வாசனைப் பொருள்களும் ஊறிக் காய்ந்த தண்ணீரில் வாசநெய் தேய்த்து மணங் கமழும் கரிய கூந் தலை நலம்பெற ஆட்டினாள். பின்னர் அகிற் புகையால் ஈரம் புலர்த்திய பூ போன்ற அம் மெல்லிய கூந்தலை ஐந்து வகையாக வகுத்த வகைதோறும் கொழுவிய கஸத்தூரிக் குழம்பு ஊட்டினாள்.

தன் அழகிய சிவந்த சிற்றடிக்குச் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டி அதன் மெல்லிய விரல்களுக்கு மகரவாய் மோதிரம் முதலிய அணிகளைச் சூட்டினாள். காற்சவடி, சிலம்பு, பாடகம், சதங்கை, பாதசரம் என்னும் காலணி களைக் காலுக்குப் பொருத்தமுற அணிந்தாள். குறங்கு செறி என்னும் அணியைத் திரண்ட துடையிடத்தே செறித்தாள்.

பூத்தொழிலை யுடைய நீலப் பட்டாடை உடுத்து அதன் மீது பருமுத்தின் கோவை முப்பத்திரண்டால் செய்த மேகலையைப் பூண்டாள்.

அழகிய கண்டிகை என்னும் அணியுடன் சேர்த்துக் கட்டிய முத்து வளையைத் தோளுக்கு அணிந்தாள். முகப் பிற் கட்டிய மாணிக்கத்தோடே பத்திகளில் வைரங்கள் அழுத்தப்பட்ட, சித்திரத் தொழிலையுடைய செம்பொன் வளையல், நவமணி வளையல், சங்க வளையல், பலவாகிய பவழ வளையல் ஆகியவற்றை மெல்லிய மயிரையுடைய முன்கைக்குப் பொருத்தமுற அணிந்தாள். வாளை மீனின் அங்காந்த வாயை யொக்கும் முடக்கு மோதிரமும், ஒளி மிக்க செந்நிறம் விளங்கும் மாணிக்கம் பதித்த மோதிர மும், பக்கத்தே வளைந்து திரையும் ஒளியை யுடைய, வயி ரம் சூழ்ந்த மரகத மணியும் என்னும் இவற்றை மெல்லிய விரல்கள் மறையும்படி அணிந்தாள்.

வீர சங்கிலியும், நுண்ணிய சங்கிலியும் பூணப்படும் சரடும், புனையப்பட்ட தொழில்களுடைய் சவடி, சரப் பளி முதலியனவும் ஆகியவற்றை அழகிய கழுத்தில் முத் தாரத்தோடு அணிந்தாள். முற்கூறிய சங்கிலி முதலிய வற்றை ஒன்றுபிணைத்த கொக்கியினின்று பின்புறம்

தாழ்ந்த, தூய முத்தினுற் செய்யப்பட்ட கோவையாகிய பின்ருலியால் முதுகை மறைத்தாள்.

இந்திர நீலத்துடன் இடையிடையே திரண்ட வயிரத்தால் கட்டப்பட்டு அழகு பெற்ற குதும்பை என்னும் அணியைக் காதில் அழகு மிகும்படி அணிந்தாள்.

சீதேவி என்னும் ஆபரணத்துடன் வலம்புரிச் சங்கும் தொய்யகம், புல்லகம் என்பனவும் தம்மில் தொடர்ந்து ஒன்ருன தலையணிகளைத் தன் கரிய பெரிய கூந்தலுக்கு அழகுறும்படி அணிந்தாள்.

இங்ஙனமாகக் கட்டழகியான மாதவி சர்வாலங்கார பூஷிதையாய்க் கோவலனிடம் சென்று கூடுதலையும் பின்னர் ஊடுதலையும் அவனுக்களித்துப் படுத்தலமைந்த சேக்கையாகிய பள்ளியிடத்தே இருந்தாள்.

ஹாஸ்யம் மனிதன் வாழ்நாளை அதிகப்படுத்துகிறது

அதிக நாள் வாழ்ந்திருக்க ஒரே டானிக்

அம்பி

(பாசரசு எழுதியது)

★ 104 பக்கங்கள்

★ சித்திரங்கள் நிறைந்தது

விலை ரூ. 1—0—0
தபாலில் ரூ. 1—4—0

பாசரசு காரியாலயம்

45-46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை 1

புலிக்குப்பிறந்தது

வி.ஜி.ஸ்ரீநிவாசன்

மாலை நேரம். வானம் சினந்து காட்டியது. செங்கனி போல் சுழன்ற கதிரவன் சிவந்த வண்ணம் தெளித்தான். நேர விருக்கும் ரத்தக் களறியின் அறிகுறியா ?

மேலும் கீழுமாக உலவிக் கொண்டிருந்தார். தாடியைத் தடவிய வண்ணம் வானத்தை நோக்கிச் சிறிது நிதானித்தார். ஏரியில் தத்தளித்த ஜலம் இவரது மனச் சஞ்சலத்தை நன்கு எடுத்துக் காட்டியது. கம்பீரமான முகத்தில் சுருக்கம் தெரிந்தன. ஆம், மெய்யாகவே அவர் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தார். "என் வாழ்வின் குறிக்கோள் என்ன! அதை நான் எட்டிப் பிடிப்பது முடியுமா? சிறகடித்து பறக்கும் எனது எண்ணப் பறவைகள் சிறகொடிந்து விழுந்துவிடுமா? நான் கட்டும் ஆனந்தக் கோட்டை கற்பனையளவிலே நின்று ஆகாயக் கோட்டையாகி விடுமா? என் எண்ணம் மண்ணாகி விட்டால்......" இப்படித்தான் யோசித்துக் கொண்டிருந்தார் சீக்கிய சிங்கம் குரு கோவிந்தசிங்.

புன்மாலை அந்திப் பொழுது இருளுக்கு இடங்கொடுத்துக் கொண்டிருந்தது. இருளும் பரவத் தொடங்கியது. கிழக்கே இரண்டு விண்மீன்கள் சுடர் தெறித்தன. குரு தனது எண்ணங்களிலேயே லயித்திருந்தார். யாரோ தன்னை நோக்கி வரும் காலடிச் சத்தம் கேட்டவுடன் அவர் தியானம் கலைந்தது; கனவு குலைந்தது; திட்டம் தொலைந்தது. நிமிர்ந்து நோக்கினார். எதிரில் பட்டாணியன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். கற்பனை கலைந்ததால் கோபம் பெருகியது. தன் ஏகாந்தத்தைக் கலைக்க

இப்படி யொருவன் வருவான் என அவர் எதிர்பார்க்க வில்லை.

"நான் என் சொந்த நாட்டிற்குப் போகவேண்டும்; இன்னும், தாங்கள் என்னிடம் குதிரை வாங்கியதற்குப் பணம் தரவில்லை," என்றான் பட்டாணி.

"நாளை வந்தால் பணம் கிடைக்கும்," என்றார் குரு.

பட்டாணி இணங்கவில்லை. "நாளை பின்னை என்பது இல்லை என்பதற்கு அடையாளம். என்ன திருட்டுத் தனமா? இந்தமாதிரி வியாபாரம் எனக்குப் பிடிக்காது. இன்றே என்னிடம் பணம் வந்து சேரவேண்டும்," என்று கண்டிப்பான தோரணையில் கூறிவிட்டான் குதிரைக்காரப் பட்டாணி.

இந்த அவமானம் குருவிற்குப் பொறுக்கவில்லை. மட்டுக் கடங்காக் கோபம் கண்டது. தசைகளில் மின்சாரம் பாய்வது போலிருந்தது. நரம்புகள் துடித்தன. கையில் வாளேறியது. அடுத்த கணம் பட்டாணியின் சிரம் தரையில் துள்ளித் துடித்தது.

அவனும் அந்த சமயத்தில் வந்திருக்க வேண்டாம். குருவும் நிதானம் தவறிப் பொறுமை யிழந்திருக்கவேண்டாம்.

தன் செயலை நினைந்து கோவிந்தர் பெரிதும் வருந்தினார். தரையிலே கிடந்து தத்தளிக்கும் சிரத்தைக் கண்ட குருவின் கண்களில் நீர் மல்கியது. இருகைகளினாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு அழுதுவிட்டார். "என் கைவாளினாலா இந்தக் கொலை? இந்தக் களங்கத்தைப் போக்கிக் கொள்வது எப்படி? ஏதாவது பிராயச்சித்தமாகச் செய்தால்தான் என் மனம் அமைதிபெறும்," என்ற தீர்மானம் கொண்டார்.

பட்டாணியனின் சிறு குமாரனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டார். வெகு அருமையுடனும் அபிமானத்துடனும் தனது சொந்தக் குழந்தைபோலவே சீராட்டிப் பாராட்டி வளர்க்க ஆரம்பித்து விட்டார்!

அன்னிய மதத்தைச் சார்ந்தவன், தங்கள் குருவிடம் இப்படிக் கொஞ்சிக் குலவுவதா? இவ்வளவு அபிமான

மும் அன்பும் பெறுவதா ? சீக்கிய மக்களுக்கு ஆச்சரியம் வலுத்தது, கோபமும் பெருகியது. தங்கள் குருவின் போக்கு அவர்களுக் கெல்லாம் விளங்காப் புதிராகவே இருந்தது.

“குரு மகராஜ்! தாங்கள் செய்வது முறையா ? தகுமா ? தர்மமா ? சற்று யோசித்துப் பாருங்கள். எவ்வளவுதான் பால் வார்த்துப் பரிபாலித்து வளர்த்தாலும் பாம்புக்குட்டி தன் சுபாவத்தைக் காட்டாது விடுமா? நாங்கள் தங்களுக்கு உபதேசம் செய்யவில்லை குருவே, இன்று புலிக்குட்டி தான்! நாளை பெரும்புலியாகிவிடும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். என்னதான் இருந்தாலும் புலிக்குப் பிறந்தது பூனையாகி விடாது என்ற உண்மை தாங்கள் அறியாததல்லவே! ஏதோ சொன்னோம். மகராஜ் மன்னிக்கவும்” என நயத்துடனும் பயத்துடனும், மரியாதையுடன் மொழிந்தார்கள் கோவிந்தரின் சிஷ்யர்கள்.

அவர்கள் சொல்வதை அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

நீங்கள் சொல்வது சரி. அது எனக்குத் தெரிந்த உண்மையுமாகும். புலிக்குட்டி பெரிய புலியாகிவிட வேண்டும் என்றுதான் நானும் விரும்புகிறேன்,” என்று அமைதியுடனும் கம்பீரத்தோடும் சொன்னார் குரு.

இம்மாதிரியாக, தம்மை கேள்வி கேட்டு, யோசனை கூற வரும் அனைவருக்கும் ஏதோ சமாதானம் சொல்லி அவர்கள் வாயை அடக்கிவிடுவார் அவர்.

உண்மையாகவே கோவிந்தர் அந்தப் பையனை முழு மனத்துடன் நேசித்தார். பையன் குருஜியின் போஷணையிலே வளர்ந்து பெரியவனானான். நல்ல வயது வந்த வாலிபனாகிவிட்டான். வயதிற்கேற்ற உயரம், பருமன், உருவம், வளர்ச்சி, பலம், அழகு, வீரம் எல்லாம் அளவோடு அமைந்தன. வாலிபனும் கோவிந்தரைத் தனது தந்தையாகவும், குருவாகவும் எண்ணி வணங்கி, வழிபட்டு,

பயபக்தியுடன் நடந்து உரிய மரியாதையைச் செலுத்தி வந்தான். எப்போதும் நிழலைப்போல அவரைப் பின் தொடர்ந்தான். எப்போது குருவாக்காக எந்த வார்த்தை வரும் என எதிர்நோக்கிப் பணிவிடை செய்யக் காத்துக் கிடந்தான். குருவும் தனது அன்பு முழுவதையும் இப் பட்டாணிய வாலிபனிடமே சொறிந்திருந்தார். வாலிப னும் குருவின் கண்மணியென விளங்கினான், உயிருக்குயி ராகத் திகழ்ந்தான்.

ஓர் நாள் காலை, வாலிபன் குருவின் அருகே வந்தான். அவருடைய காலைத் தொட்டுக் கும்பிட்டு, ஒதுங்கி நின்று, 'ஐயனே, எனக்கு உற்ற வயது வந்துவிட்டது. நான் என், காலூன்றி நிற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது. என், கைகால்களைக் கொண்டு உழைத்து உண்ணவேண் டிய காலமும் வந்துவிடவேண்டும். நான் இனியும் தங்க ளுக்கு பாரமாக இருக்கக்கூடாது. நான் எங்கேயாவது சென்று பிழைத்துக் கொள்கிறேன். விடை தந்தருள வேண்டுகிறேன்,'' என்றான் பட்டாணிய வாலிபன்.

குரு வெகு அன்புடனே அவனது தோளின்மீது கையைப் போட்டுக்கொண்டு, "உனது கருத்தை நானறிந் தேன். கொஞ்சகாலம் பொறு. கடைசியாக உனக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டிய பாடம் ஒன்று எஞ்சி யிருக்கிறது. அதையும் கற்றுக்கொண்டு போய்விடு'' என்றார் கோவிந்தர்.

மறுநாள் விடிந்துவிட்டது. குரு பட்டாணிய வாலி பனை விளித்து, ''கையில் கத்தியை எடுத்துக்கொண்டு என்னோடு வா'' என்றார். பட்டாணிய வாலிபனும் வாளேந்திய கரத்துடன் பின் தொடர்ந்தான்.

இப்படி இவர்கள் செல்வதைக் கண்ட சிஷ்யர்களுக் கும் பணியாட்களுக்கும் மிகவும் விநோதமாக இருந்தது. அச்சமும், ஐயமும் அவர்களைப் பிடித்து வாட்டின. அவர் களும் குருவைப் பின் தொடர ஆரம்பித்தனர். குரு அனைவரையும் வரவிடாது தடுத்துவிட்டார்.

ஆள் பழக்கம் அவ்வளவாக இல்லாத ஏரிக்கரை. ஆல மரங்கள் வானுர ஓங்கி வளம்பெற்று நின்றன. நீர் ஆலை

மோதியது. எங்கும் அமைதி நிலவியது. போய்க் கொண்டே யிருந்த குரு சட்டென ஓரிடத்தில் நின்றார். பையனும் தயங்கி நின்றான்.

" இங்குதான்......ஆம் இங்கேயே தான்......' என இழுத்தார் குரு.

" மகராஜ், என்ன? தாங்கள் சொல்வது புரிய வில்லை."

" இங்குதான் ஒரு கோரக் கொலை நடந்தது."

" நடந்திருந்தால் நமக்கென்ன ?"

" அந்தக் கொலை செய்தவன் நான்தான்."

" என்ன மகராஜ்? இதெல்லாம் எனக்குத் தெரிய வேண்டிய விஷயங்கள் அல்லவே !"

" கொலையுண்டது ஒரு குதிரை வியாபாரியான பட்டாணியன். அவன் உன் தகப்பன். உனது கை வாளினல் என்னைக் கொன்று விடு. உன் தகப்பனைக் கொன்ற கொலைக்காரனைப் பழி வாங்கு," என உணர்ச்சியோடு மொழிந்தார்: பையன் அசைவற்று நின்றான்.

" ஏன் சும்மா நிற்கிறாய். உன் தகப்பன் குற்றமற்றவன். இங்கு நான் உனது எதிரியாக நிற்கிறேன். இப்போது உன் முறை. என் குருதியில் உன் தகப்பனின் ஆவிக்குத் திருப்தியை உண்டாக்கு" என்றார் கோவிந்தர்.

வாலிபப் பட்டாணியன் தன் முன்பு தன் அருமைத் தந்தையைக் கொன்ற கொலை பாதகன் நின்றிருப்பதைக் கண்டான். கண்கள் சினம் தெறித்தன. வலது கை வாளை உறுதியாகப் பற்றியது. குருஜி உறுதியோடு அமைதியாக நின்று கொண்டிருந்தார். கையை உயர்த்தி வாளை ஓங்கும்போது வாலிபனின் கண்கள் குருவின் ஒளி பொருந்திய கண்களைச் சந்தித்தன. உறுதி குலைந்தது, பிடி தளர்ந்தது, வாள் நழுவியது, வாளைத் தூர எறிந்தான். பொத்தென்று குருவின் காலடியில் வீழ்ந்தான்.

" குருதேவா ! இந்தச் சனியனிடம் இம்மாதிரியெல்லாம் எதற்காக விளையாடுகிறீர்கள். என் தந்தையை முற்

றிலும் மறந்து விட்டேன். அவருடைய உருவம் எனக்குத் தெளிவாக நினைவில் இல்லை. தந்தை, குரு, சகோதரர் எல்லாம் தாங்கள்தான். தயவு கூர்ந்து இனிமேல் இம்மாதிரி சோதனை நிகழ்த்த வேண்டாம்" என்றான் அவன். அவனது குரல் தழு தழுத்தது, கண் நீர் பெருகியது,

குரு அவனை அன்புடன் அணைத்துக் கொண்டார். வாலிபன் குருவை நிமிர்ந்து பார்க்கவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு அவன் சென்று விட்டான்.

கூடிய மட்டில் குருவிடமிருந்து விலகி யிருக்கவே முற்பட்டான் வாலிபன். குருவுடன் சேர்ந்து வேட்டையாடச் செல்வதை நிறுத்திக் கொண்டான். ஆயுத மேந்தி குரு தனியாக இருக்கும் இடங்களுக்குச் செல்வதும் கிடையாது. தன்னையும் மீறித் தனது மிருக வெறியானது பழிக்குப் பழி எண்ணத்தைத் தூண்டிக் கொலை செய்யச் செய்து விடுமோ என்ற பயமும் சந்தேகமும் அவனுக்கிருந்தது.

பொழுபோக்கிற்காக குருவும் பட்டாணிய வாலிபனும் சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தனர். குருவிற்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது. வாலிபன் தோற்றுக் கொண்டே போனான். பகல் பொழுது சாய்ந்தது. அந்தி மயங்கியது. இருள் கவிந்தது. விளையாட்டு மாத்திரம் நடந்து கொண்டே யிருந்தது. வினையாக முடிவதற்காகவா? ஒருவர் பின் ஒருவராக எல்லாரும் எழுந்து சென்று விட்டனர். ஆனல், வாலிபன் மாத்திரம் விளையாட்டை விடுத்து எழுந்திருக் வில்லை.

தோல்வி மேல் தோல்வி அடுத்தடுத்து வந்ததனல் உள்ளூற வருத்தமும், கோபமும், ரோசமும் மாறி மாறி மேலோங்கி நின்றன. அவன் முகத்திலே அவற்றின் சாயை மாறி மாறிப் படர்ந்தன. அடிபட்ட புலிபோல் அவன் பொருமிக் கொண்டிருந்தான். எல்லாவற்றையும் கோவிந்தர் கவனித்துக் கொண்டிருந்தார். வாலிபனின் கோபத்தையும் அளந்து கொண்டார். அக்கம் பக்கத்தில் ஆட்கள் இல்லை என்பதையும் கண்டார்.

"வெறி பிடித்தவன் போல விளையாடுவதனால், உனது தகப்பனைக் கொன்றவனுடன் விளையாடுவதில், வெற்றி கிடைத்து விடுமா? என்ன?" என்றார் குரு கோவிந்த சிங்.

குரு இதைச் சொல்லி முடிக்க வில்லை. பட்டாணிய வாலிபன் தன் கை வாளை அவர் மார்பில் புதைத்து விட்டான். புலி தன் சுபாவத்தைக் காட்டி விட்டது.

"என் மனம் குளிர்ந்தது. நான் கடைசியாகச் சொல்லித் தரவேண்டிய பாடமும் முடிவுற்றது. எனது மனப்பூர்வமான ஆசி. நான் உன்னை வளர்த்ததன் நோக்கம் நிறைவேறி விட்டது," என்றார். அமைதியோடு ஆவி துறந்தார்.

மனிதரின் குரு தேவனாகி விட்டார்.

குருவின் சீடன் புலியாகி நின்றான்.

Established 1888 Telephone: No. 3693

C. COOMARASAWMY NAIDU & SONS

Prop: CAXTON PRESS & LITHO WORKS

27, Chinnathambi Street,

G, T., MADRAS

For Books for class use on up-to-date lines, Picture Alphabet Sheets in all Vernaculars, Story Illustration Pictures, etc., etc.

COLOUR PRINTING, DESIGNING AND POSTER PRINTING—A SPECIALITY

கிரிஜா எம். ஏ.

எம். எஸ். ராஜன்

"அம்மா! நிஜமாத்தான் சொல்றயா ?"

"பொய்யென்னடா உங்கிட்டே! நன்னாருக்கடா நீ குதிக்கிற குதி! எனக்கென்ன விளையாட்டு வேண்டி கிடக்கு ?"

சுந்திரத்தின் முகத்தில் நீர் வராதது தான் பாக்கி. பேயடித்தவன் போல் நின்று விட்டான் அவன். அவன் பதிலுக்காக அவன் வாயையே பார்த்த வண்ணம் இருந்தாள் அவன் தாய். இவர்கள் சம்பாஷணையை மறைந்திருந்து கேட்ட இருவர் ஜானகியும் அவள் தாயாரும்.

ஜானகி, சுந்திரத்தின் சகோதரி பெண். சுந்திரத்தின் சகோதரி விதவை. பத்தாயிர்த்துக்குக் கொஞ்சம் அதிகமாகவே நிலபுலன்கள் இருந்தன. அவள் உயிர் வாழ என்றே அவளுக்கு ஒரு பெண் ஜானகி இருந்தாள். குழந்தையைக் கொடுத்து அவள் புருஷன் இறந்த வருத்தத்தை அகற்ற எண்ணினான் போலும், கடவுள்! பாவம்! இதுவரை ஜானகிக்காக வருத்தப்படாமலிருந்தவளுக்கு இப்போது அவசியம் ஏற்பட்டது. மேலே அம்மாவும் பிள்ளையும் பேசிக்கொள்வது காதில் கேட்டது.

"உனக்கென்ன வலிக்கிறதோ! செக்கச் சிவக்க ராஜாத்திபோல பத்தாயிரம் ரூபா சொத்தோடு உனக்கு பெண் கொடுக்க யாரோ காத்திண்டிருக்காளாக்கும்! அவளும் தான், தம்பியை மாப்பிள்ளையாக்கிண்டா பணம் பிறவழி போகதுன்னு பெண்ணை பெத்த அன்னிலிருந்து சொல்லிண்டிருக்கா."

“ அதற்கு இவ்வளவு படிப்பு படிக்கணுமா? அப்பவே இரண்டு எருமைக்கடா மேய்க்கப் போயிருக்கலாமே, இந்த பட்டிக்காடை கட்டிக்க? ”

“ பிரமாத படிப்பு படிச்சுட்டே ! பணங்கட்ற பரீட்சை பாஸ் பண்றத்துக்குள்ளே, பத்துதரம் ‘ பைல் ’ இந்த லக்ஷணத்துலே, படிச்சிட்டானும், பிரமாதமா ? அடுத்தாத்து வாத்தியார் ஆம்படையா என்னடா படிச்சிருக்கா ? அந்த பிராமணன் ‘ எம். ஏ. ’ படிச்சாரென்னு கர்வப்பட்டிண்டு அவளைக் கல்யாணம் பண்ணிக்காம இருந்தாரோ ? நீ இருக்கிற லக்ஷணத்துக்கு இதைவிட கொட்டித்தரப்போருளாக்கும்.........”

“ அம்மா ! அனுவசியமா பேச்சை வளக்காதே ! நான் பண்ணிக்கொள்ள முடியாது என்ருல் முடியாது தான். எனக்கு எப்படியிருந்தாலும் இதைப்போல, பிடாரி பல்லே இளிச்சிண்டு பைத்தியம் வராது. வேண்டுமானல் பாத்திண்டேரு, ” என்ருன் சுந்திரம்.

“ நான் என்னத்துக்கடா பாக்கணும் ? நான் சொல்றதை கேட்காட்டா, இந்த வீட்டுப்படியே ஏருதே. அப்படியே போய்விடு, ” என்று கத்தினள் அவன் தாய்.

சுந்திரம் முறைத்து விட்டு அறையை விட்டு வெளியேறினன். வாயிற்படியில் அவன் அக்காவும், ஜானகியும் நிலையிருந்ததைப் பார்த்ததும் அவனுக்குக் கோபம் அதிகமாய்த்தான் வந்தது. திரும்பிக்கூட பார்க்காமல் வாசலிலிருந்த தன் அறைக்குள் சென்று, கதவை அடைத்துக் கொண்டான். ஜானகி வறண்ட கண்களுடன் தன் தாயைப் பார்த்தாள். தன் அம்மா அழுவதைக்கண்டு முதல் முதலாக அவள் இளித்தவாறு இருக்கும் இரண்டு உதடுகளும் மூடிக்கொண்டன.

அன்றுவரை அசடாயிருந்த ஜானகி அன்றையிலிருந்து சமத்தாயிருக்க ஆரம்பித்தாள் என்று அவள் பாட்டி சொன்னுள். அன்று மூடிய அவள் பற்கள் பின் தெரியவேயில்லே. அன்றுதான் வெளியே போனன் சுந்திரம். பின் எங்கிருக்கிருனே யார் கண்டது ? ஜானகி கூட பாட்டியைக் கடிந்து கொண்டாள்.

"வம் பாட்டி! ஆத்திலே இருந்த ஒரு ஆண்பிள்ளை மாமா! அவரையும் வீட்டை விட்டு விரட்டிட்டயே! நான் என்ன கலியாணம் செய்து கொள்ள அப்படி குது ராட்டமாவா வளர்ந்திருக்கேன்?"

"சீ! நீ போடி! அவனைப்பற்றி எங்கிட்டே பேசாதே!" என்று பாட்டி சொன்னாள். ஜானகிக்கு என்னமோ, வயது ஒன்பது தான். சற்று நன்றாக வளர்ந்திருந்தாள். அவள் பாட்டி இருபது வயது பெண்களையெல்லாம் தன் வகையை சேர்ந்தவர்களாகக் கருதும், 'சாரதா சட்டத் துக்கு,' முன்காலப் பாட்டி. ஒன்பது வயது ஜானகி ஓங்கி வளர்ந்து கொடிபோல் நிற்பது கஷ்டமாயிருந்தது. ஜானகியின் தாயார், பாவம்! தான் பெற்ற பெண் அவ்வளவு இளப்பமாக, 'பைத்தியமாய்' தோன்றி விட்டாளே, தன் தம்பிக்கு, என்ற குமுறலில் குன்றிப் போயிருந்தாள்.

ஜானகி ஐந்தாவது வகுப்பு படித்து வந்தாளே தவிர, ஏழாவது வகுப்புக்கு வேண்டியளவு கற்றிருந்தாள். முக வெட்டு அவ்வளவாக விரும்பதக்கதல்ல. கோரமாயிருக் குமோ என்றால் அதுவுமல்ல! ஒட்டிய கன்னங்கள், போதுமான வளர்ச்சியின்றி வெளியே தெரியும் பற்கள், ஒத்தைநாடி, அவளுக்கு சொந்தமான பத்தாயிரம் ரூபாய் தான் அவளை 'பகட்டு'ப் பட்டியலில் சேர்ந்திருந்தது. ஜானகியின் தாய் சாது. அவளைவிட பரம சாது, ஜானகி யின் பாட்டி. மூவரும் தங்களுக்கு ஏற்பட்ட வருத்தத் தினால் அந்த ஊரை விட்டே கிளம்ப விரும்பினர். ஊரா ரின் வாய்ச் சொற்கள் வேறு, அவர்களை விரட்டின.

சுந்திரம் எவ்வளவோ பாடுபட்டு 'பணம் கட்டும் பரீட்சை' படிக்கட்டை ஏறினான். வேலைக்கு வலைவிரித் திருந்தான், நாவல்கள் படிப்பதில் அவனுக்கு ஆர்வம் அதி கம். பெண்ணைக்கொடுக்க பலர் வந்தனர். ஆனால் சுந்தி ரத்தின் கற்பனைக் கண்களுக்கு அவர்களைப் பிடிக்க வில்லை. ஆதி முதல் தாய், ஜானகியைத் தான் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென சொல்லி வந்தாள். தாய்க்குத் தெரியாமல் சில இடங்களுக்குச் சென்று பெண்களைப் பார்த்து வந்தான். தற்கால போக்குப்படி 'பளிச் சென்ற

வெள்ளைப் புடைவை, வளைவு வைத்த 'ப்ரொவ்ஸ்' ரவிக்கை, கழுத்தில் மெல்லிய சங்கிலி, காதில் நீள மாட்டல், பாழ் நெற்றி, பவுடர் கன்னம், குட்டை மயிர், குமிழ்ப்பூட்சு கள் அணிந்த அணங்கைத் தேடி அலைந்தான். கட்டை கொலுசு அணிந்த பெண்கள் அரக்கிகளாகத் தோன்றி னர், அவனுக்கு.

தாய் சொன்னுள் 'படி வராதே' என்று. அவள் வார்த்தைக்கு அடிபணிந்தான். எங்கு சென்ருனே, அவ னுக்கே தெரியாது. யாரோ சொன்னுர்கள், மிலிடரி யில் வேலை கிடைக்குமென்று. சென்று விசாரித்தான். நிச்சயமாகக் கிடைத்து விட்டது. கப்பல் ஏறினுன். இந்தியாவை விட்டே சென்று விட்டான். அவன் அம்மா பாவம் "வீட்டை விட்டுப் போ," என்று தான் சொன் னுள் !

அவன் கற்பனைப் பெண்ணுக்கு அதிகமாகவே பெண் கள் மேல் நாடுகளில் இருந்தனர். எத்தனையோ நண்பர் களுடன் பழகினுன். ஏன் மேலே மேலே தனக்குப் பதவி ஏற்படுவதே 'இந்தியாவை விட்டுவந்த' அதிர்ஷ்டம் என்றே எண்ணினுன். ஜானகி பெறவேண்டிய இடத்தை 'ஜோன்ஸ்' பெற்ருள். ஆயிரக்கணகில் அவன் சம்பளம் வாங்கும்போது அவன் அம்மா சொன்னவை கள் ஞாபகம் வரும். பத்தாயிரத்து சொத்துக்காக அந்த ஜானகியை தான் கட்டிக்கொண்டிருந்தால் தன் நிலை எப் படி என்று யோசிப்பான். சிரிப்பு வரும். அந்த பத்தா யிரம், அவனுக்குப் பத்து மாத சம்பளம் இப்போது. பக் கத்தில் உட்கார்ந்திருக்கும் ஜோன்ஸ் என்ன என்று கேட் பாள். உடனே சுந்திரம் 'ஒன்று மில்லை' உன்னை இன் னும் சற்று நாகரீகமாக்குவது எப்படி என யோசித் தேன்" என்பான். இருவரும் சிரிப்பார்கள்.

காலம் போய்க்கொண்டுதானிருந்தது. ஜானகி படித்துக் கொண்டிருந்தாள். அவள் பெயர் ஜானகி அல்ல, கினஜா ! ஒட்டிய கன்னங்கள் ஒப்பி யிருந்தன. நீண்டிருந்த பற்கள் மறைந்து கிடந்தன. ஒன்பது வயது ஜானகி, பதினைந்து வயது கினஜா 'எப். ஏ.' ஆனுள். பாட்டியே இப்போது அவளைக்கண்டு வெறுக்க ஆரம்பித்

தாள். கலியாணம் செய்து கொள்ள எவ்வளவோ வற்புறுத்தியும் கினஜா மறுத்துவிட்டாள்.

பாட்டிக்கே 'டூப்' கொடுத்தவள் அம்மாவுக்கு பயப்படப் போறாளா என்ன? ஆனால் கினஜாவின் மனதில் ஒன்றுமட்டும் அழுத்தமாக பதிந்திருந்தது. "பிடாரி, பல்லிளிச்சிண்டு, பையித்தியம் வறது," யார் பிடாரி? யார் பைத்தியம்? தன்னிடம் சுந்திரத்தை மன்னிப்புகேட்க வைக்கத்தான் அவள் காத்திருந்தாள். சுந்திரம் எப்படியும் திரும்பி வருவான் என்ற நிச்சயம் மட்டும் அவளுக்கிருந்தது.

சண்டையில் உயிர்தப்பிவிட்டான் சுந்திரம். ஜோன்ஸ் எப்போதோ அவனை விட்டுப் பிரிந்து விட்டாள். ஐந்து வருட சண்டையில் வரவு செலவு பார்க்கும்போதுதான் தான் சம்பாதித்த பணத்தில் முக்கால் பாகமும் ஜோன்ஸின் 'டாயிலெட்' டுகளுக்குச் சென்றிருப்பதைக் கண்டான். அவைகளை சேர்த்து வைத்திருந்தால் கூட இன்று சுகமாக வைத்துக்கொண்டிருக்கலாமே! இப்போது எங்கே போவது என்று யோசித்த போதுதான் தன் வீடு ஞாபகம் வந்தது. ஜானகி, அக்கா. அம்மா ஞாபகம் வரவே, சே, என்ன தவறு செய்து விட்டேன். பாவம்! அமமா, என்ன நினைத்திருப்பாள்? இப்போது ஜானகி எப்படியிருப்பாள்? என் யாருக்கோ கல்யாணமாயிருக்கும் என்றவாறு எண்ணமிட்டான். ஆனால் அன்று விட்டை விட்டுப் போனபின் தானாகவே வீடு திரும்புவதற்கு அவன் மனம் இடந்தரவில்லை. மிலிடரியில் வேலை செய்த காரணத்தால் 'குரும்பபாடி' கிராமத்தில் அவனுக்கு உபாத்தியாயர் வேலைகிடைத்தது. அன்று ஆயிர ரூபாய் வாங்கிய கை, இன்று ஐம்பது ரூபாய்க்காக வணங்கி நின்றது.

ஆறுவது வகுப்புக்கு சுந்திரம் உபாத்தியாயர். பாடம் நடத்துவதில் கூட அவனுக்கு அவ்வளவு சிரத்தை கிடையாது. ஆனல் தான் சண்டையில் சேர்ந்தது முதல் நிகழ்ந்த பல சம்பவங்களைச் சித்திரிப்பதில் தான் நாட்களை கழிப்பான். அப்போது தான் கினஜா அதே பள்ளிக்கூடத்திற்கு உபாத்தியாயினியாய் வந்து சேர்ந்தாள். அன்று

ஜோன்ஸை 'இன்னும் சற்று நாகரீக மாக்க முடியுமா' என்று யோசித்தவனுக்கு கினஜாவின் நடை, உடை நன்ருகப் பிடித்திருந்தது. ஜோன்ஸை விட, நாகரீகம், நடை அழகு யாவற்றிலும் இவளே மேம்பட்டவள் என்ற தீர் மானத்திற்கு வந்து சேர்ந்தான்.

கினஜா இதுவரை காதலேக் கனவில்கூட கருதாதவள். ஆனல் சுந்திரத்தைக் கண்டபோது அவள் மனது கலங்க ஆரம்பித்தது. அவள் அவன் அழகுக்காக ஆசைப்பட வில்லே. எதோ, ஒன்று, அவளுக்கு எப்படி சொல்லத் தெரியும்; அவளே, அவனே அடிக்கடி பார்க்கத் தூண்டிற்று.

முதலில் கண்கள் பேசின. பின் கடிதங்கள் பேச ஆரம்பித்தன. இதழ்கள் பேசுவதுதான் பாக்கி. கினஜா வுக்கு அவன் தான் தன் மாமன் சுந்திரம் என்பது தெரிந்து விட்டது. அவன் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. தன் எண்ணமும் உடன் வந்தது. அவனேத் தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தாள். சுந்திரம் தான் காத்துக்கிடக்கி ருனே! பள்ளிக்கூடம் முடிந்ததும் இருவரும் வீடு சென் றனர்.

கூடத்தில் அம்மாளும் அவள் பாட்டியும் உட்கார்ந்தி ருந்தனர். சுந்திரம் தன் கிழத்தாயாரைக் கண்டவுன் ஓடி காலடியில் வீழ்ந்தான். தன்னே மன்னிக்குமாறு வேண் டிக்கொண்டான். என்ன இருந்தாலும் தாயன்பு குறைந்து விடுமா? ஜானகியை விட அவள் அம்மாவுக் குத் தான் சுந்திரம் வந்ததில் திருப்தி. பத்து வருடங்கள் பிரிந்திருந்தவர்கள் கூடினல் சந்தோஷத்திற்குக் கேட்பா னேன்.

கினஜாதான் தன் மருமாள் ஜானகி என்றறிந்த போது அவன் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லே. அவ ளுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லே என்பது தான் அவ னுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது. பழைய ஜானகி, கினஜா! அடேயப்பா என்ன மாறுதல்?

கல்யாணப் பேச்சு மறுபடியும் ஆரம்பித்தது கிரிஜா மறுத்தாள். உள்ளே கிரிஜா, பாட்டி, அக்கா எல்லோரும் பேசிக்கொண்டிருந்தது கேட்டது.

"என்டி பொண்ணே! இப்போ உன்னுடைய முறையா? அப்போ அவன் மாட்டேன்னு, இப்போ நீ சொல்றே" என்றாள் பாட்டி.

'பாட்டி போயும் போயும் சுந்திர மாமாவையா? பிடாரி மாதிரி கிராப்பு. மம்பட்டி பற்கள். அசல் பைத்திய மாதிரி இருக்காரே அவரைக் கல்யாணம் பண்ணிக்கவா, நான் எவ்வளவு படிப்பு படித்தேன்."

சுந்திரத்திற்கு 'சுருக்'கென்று தைத்தது. கண்ணாடியைப் பார்த்தான். உண்மைதான். அவன் உருமாறிப் போயிருந்தான். மிலிடெரி கிராப்பு பிடாரி மாதிரித் தானிருந்தது. சற்று பற்கள் முன்னுக்குத் தள்ளி வந்திருந்தன. அன்று ஜானகியிருந்த நிலையில் தானிருந்தான்.

கிரிஜாவுக்கு திருப்தியாயிற்று. அவள் எதிர்பார்த்த படியே சுந்திரம் வந்தான். அவள் கவனியாதது போல் படித்துக் கொண்டிருந்தாள். 'ஜானகி' என்று கூப்பிட்டான். அழுத்தலாக திரும்பிப் பார்த்தாள் கிரிஜா. கண்ணில் நீர் ததும்ப சுந்திரம் ஏதோ பேச முயன்றான். நா எழுவில்லை.

கிரிஜாவுக்கு கூட பரிதாபமா யிருந்தது. "மாமா! ஏன் கூப்பிட்டீர்கள்" என்றாள்.

சுந்திரம் சற்று நிதானித்துக்கொண்டு, "ஜானகி! என் தவறை நான் உணர்ந்துக்கொண்டேன். என் கர்வம் என்னை குலைத்து விட்டது, என்னை மன்னித்துவிடு," என்று சொல்லிவிட்டு 'விர்ரென' வெளியே சென்று விட்டான்.

கிரிஜாவுக்கு சந்தோஷம் தாங்க வில்லை. பாட்டியிடம் ஓடினாள்.

ஒரு நல்ல தினத்தில் சுந்திரமும் கிரிஜாவும் தம்பதிகளாயினர். உண்மையில் அவர்கள் மணந்து கொண்டதில் சந்தோஷமடைந்தவள் கிரிஜாவின் தாய் தான்!

கையெழுத்தும் தலையெழுத்தும்

"ஆனந்தன்"

சிலர் எழுதுகிறார்கள். சிலர் உழுகிறார்கள். உழுகிறவர்களில் சிலர் அகல உழுகிறார்கள். சிலர் ஆழ உழுகிறார்கள். இவர்கள் ஔவையார் சொற்படி கேட்பவர்கள். உழுத இடத்தில் விதை விதைப்பது போன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக பேனாவைத் துள்ள விட்டு எழுதுபவர்களும் இருக்கிறார்கள். மூன்றும் மாத நெற்பயிர் போல வானோங்கு மெழுத்து எழுதுபவர்களுமுண்டு.

மேடும் பள்ளமுமாக அலை அலையாக சிலர் எழுதுகிறார்கள். சிலருடைய எழுத்து முன் பக்கம் சாய்ந்து தொண்டு கிழவனைப் போல நடக்கும். சிலரின் எழுத்து பின் பக்கம் சாய்ந்து 'வெள்ளைக் குதிரை' ஏறியவர்களைப் போல போகும். தேன்தட்டு, புளிமூட்டை எழுத்துக்களும் எழுதுகிறார்கள். தவளையைப் போல தத்தும் எழுத்துக்களும் குதிரையைப் போல பாயும் எழுத்துக்களும் உண்டு. பாம்பைப் போல் நெளியும் எழுத்தும் யானையைப் போல் அசைந்தாடும் எழுத்தும் உண்டு. நொண்டி அடித்துக் கொண்டு போகிற எழுத்து ஒருவர் எழுதினால், அவரைப் பரிகசிப்பது போலவே ஆகாசவிமான எழுத்து ஒருவர் எழுதுவார். உலகத்தில் எத்தனை நபர்கள் உண்டோ அத்தனை விதமாக கையெழுத்துக்களும் உண்டு.

திருநெல்வேலி நண்பர் ஒருவருக்கு சுடுகாடு என்றால் ரொம்பப் பிடிக்கும். ஓய்வு நேரம் கிடைத்தால் சுடுகாடும் இடுகாடும் சுற்றத் தவற மாட்டார். அந்த நண்பரைத் தேடி வீட்டிற்குச் சென்றால், அவர் சம்சாரம் கொஞ்சங்

கூட தயக்கப்படாமல், 'அவர் சுடு காட்டிற்குப் போயிருக்கிறார். நீங்கள் வந்தால் உங்களையும் அங்கே வரச் சொன்னார்' என்று கூறிவிடுவாள். அந்த நண்பருடன் ஒரு நாள் சுடு காட்டில் உலாவி வரும்போது ஒரு மண்டை ஓட்டை எடுத்து வைத்துக்கொண்டு, எலும்புப் பொருத்துக்களைக் காட்டி, 'இது தான் தலை யெழுத்து' என்றார். எனக்கு உடனே அவருடைய கையெழுத்து ஞாபகம் வந்தது. அந்த எலும்புப் பொருத்து வளைந்து வளைந்து இருப்பது போலத்தான் அவருடைய கையெழுத்து மிருக்கும். "கையெழுத்திற்கும் தலை யெழுத்திற்கும் சம்பந்தம் உண்டா?" என்று கேட்டேன். "இந்த மண்டை ஓட்டின் சொந்தக்காரருடைய ஜீவியத்தை ஆராய்ச்சி செய்து சொல்லுகிறேன்" என்றார்.

கையெழுத்திற்கும் தலை யெழுத்திற்கும் சம்பந்தம் உண்டா வென்று ஆராய அவர் பல நாட்கள் ஊணும் உறக்கமு மில்லாமல் தவித்த பின்பு, கையெழுத்திற்கும் தலை யெழுத்திற்கும் 'ஸ்நான பிராப்தி' கிடையாதென்று தீர்ப்புக் கூறி விட்டார். அந்தத் தீர்ப்பை பத்திரிகைகளில் தக்க ஆதாரங்களுடன் பிரசுரமும் செய்து விட்டார்.

இந்தத் தீர்ப்பு வெளியாயிற்றோ இல்லையோ நாட்டில் ஒரு சல சலப்பு உண்டாயிற்று. அழகாக எழுதுகிறானென்ற ஒரே காரணத்தால் குமாஸ்தா மேல் நல்ல அபிப்பிராயம் வைத்திருந்த மானேஜர் தம் அபிப்பிராயத்தை திடீரென்று வாபஸ் பெற்றுக் கொண்டு, குமாஸ்தாவை, 'பராமுகம் எனையா' என்று பாடும்படி வைத்து விட்டார். தகப்பனார் பையனைக் கார்வார் பண்ண ஆரம்பித்து, 'எக்கேடும் கெட்டுப்போ' வென்று சொல்லி, இரும்புப் பெட்டியின் சாவியை இடுப்பில் இறுகச் சொருகிக் கொண்டார். மாமனார் மருமகனை அலட்சியமாக நடக்க எண்ணங்கொண்டு தீபாவளிக்குக் கூட அழைக்க வில்லை. விரல்கணுக்களில் அடி பட்டு காப்பி நோட்டு 'குரோஸ்' கணக்கில் எழுதி உருவாக்கிய மணி மணியான எழுத்திற்கு மதிப்பில்லாமல் போனதைக் குறித்து வருத்தப்பட்டு, அழகிய எழுத்தாளர்கள் விரல்களைச் சொடுக்கிக் கொண்டார்கள்.

'அச்சுக் குண்டாக, எழுதும் நபர்களின் கதி இப்படியிருக்கக் 'கோழி கிண்டு'வது போல எழுதும் நபர்களின்

கதி மிகவும் மோசமாகி விட்டது. தாங்கள் நிர்வகித்து வந்த நல்ல நல்ல உத்தியோகங்களிலிருந்து விடுதலை பெற்றார்கள். தங்களுடைய குறைகளைச் சொல்லி அழ தினசரிப் பத்திரிகைகளுக்கு கடிதங்கள் எழுதினார்கள். 'கையெழுத்து ஸ்பஷ்டமாயில்லை' யென்று கடிதங்கள் திரும்பி வந்து விட்டன. அம்பிகளாக யிருந்த போது ஆரம்பப் பாடசாலையில் காப்பி நோட்டுகள் சரியாக எழுதாமல் 'டிமிக்கி' கொடுத்து வந்ததை நினைத்துப் புலம்பினார்கள். புலம்பிப் புண்ணியம் இல்லை யென்று தெரிந்து 'நேரடி நடவடிக்கை' எடுக்க யோசனை செய்தார்கள். புத்தகக் கடைகளை முற்றுகை யிட்டு, தங்கள் பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் வாங்குவதாகப் பொய் சொல்லி, காப்பி நோட்டுகள் வாங்கினார்கள். வீட்டில் பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் தூங்கிய பிறகு, இரவு பன்னிரண்டு மணிக்கு மேல், காப்பி நோட்டை எடுத்து வைத்துக் கொண்டு, 'படம், பட்டம். மடம், மட்டம், வடம், வட்டம்.' எழுத ஆரம்பித்தார்கள். இப்படியாக நெற்றி வியர்வை காப்பி நோட்டில் சிந்த உழைத்ததால் அவர்கள் எழுத்து 'எழுத்து' என்று சொல்லும் படியாக யிருந்தது. உடனே ஆசிரியருக்குக் கடிதம் எழுதினார்கள். கடிதமும் பிரசுரிக்கப் பட்டது. அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஒரு குட்டித் தலையங்கமும் ஆசிரியர் எழுதி விட்டார். வெற்றி நிச்சய மெனக் கருதி, திருந்தப்பட்ட எழுத்தாளர்கள் உடனே தங்கள் கைப்படவே மனு எழுதி பழைய உத்தியோகங்களைக் கேட்டார்கள். அழகிய எழுத்துக்களைப் பார்த்த எஜமானர்கள் ஆச்சரியப்பட்டு, வேலை கொடுத்தார்கள். இப்படியாகக் கையெழுத்தைக் கொண்டு தலை யெழுத்தை நிர்ணயம் பண்ணிக்கொண்டார்கள் கோழி கிண்டிய எழுத்தாளர்கள்.

'பெரிய மனிதர்களுக்குக் கையெழுத்தைப் பற்றிக் கவலை கிடையாது. ரேகை புரட்டும் பெரிய மனிதர்களும், பேனாவைத் தொட்டுக் கொடுக்கும் பெரிய மனிதர்களும் இருக்கிறார்கள். எழுதத் தெரியும் பெரிய மனிதர்களில் பலருடைய எழுத்து, அவர்களுக்கே வாசிக்க முடியாது. இந்த எழுத்து அடுத்தவர் கைக்குப் போய் விட்டாலோ கேட்க வேண்டிய தில்லை.

பிரபல ஹாஸ்ய எழுத்தாளர் ஒருவர் சுகவீனமாக யிருந்த போது, அவருடைய நிலைமையை அறியாத ஒரு மாது, அவரை விருந்துக்கு அழைத்திருந்தாள். விருந்துக்கு எழுத்தாளர் போகவில்லை. ஒரு சீட்டு மட்டும் போயிற்று. அதை வைத்துக் கொண்டு அந்தச் சீமாட்டி சிரி சிரி யென்று சிரித்தாள். ஆடினாள், பாடினாள். குதூகலம் தாங்க வில்லை. 'தங்கள் சீட்டுக் கிடைத்தது. எழுத்துப் புரியவில்லை. ஆனால் நீங்கள் ஏதாவது விகட்மாகத் தான் எழுதி யிருப்பீர்களென்று நினைத்து, நான் சிரித்துக்கொண் டிருக்கிறேன்,' என்று பதில் எழுதினாள் அந்தப் பெண்.

அந்த ஹாஸ்ய எழுத்தாளரின் சீட்டில் 'நீயும் உன் விருந்தும் நாசமாய்ப் போக' என்று எழுதியிருந்ததை அவள் கண்டாளா, என்ன!

'அந்தரங்கம்—அவசரம்' என்று குறிப்பிட்ட கடிதம் ஒன்று ஒரு பெரிய மனிதருக்கு இன்னொரு பெரிய மனித ரிடமிருந்து வந்திருந்தது. எழுத்தை வாசிக்க முடிய வில்லை. கடிதம் அந்தரங்க அவசரமாக யிருந்ததால் எப்படி யும் புரிந்து கொள்ள வேண்டுமென்று பிரயத் தனப் பட்டுக் கொண்டிருந்தார். இந்த நேரத்தில் ஒருவன் கொட்டாப் புளியைத் தூக்கிக் கொண்டு அவர் எதிரில் வந்தான். 'உம்மைக் கொலை செய்யப் போகிறேன்' என்று அவன் பச்சையாகச் சொன்னான். 'சரி, அதைப் பின்னால் கவனித்துக் கொள்ளலாம். இந்த எழுத்துப் புரி கிறதா, பார்' என்று கடிதத்தைக் கொட்டாப் புளிக்கார னிடம் நீட்டினார். கொட்டாப் புளிக்காரனும் கடிதத்தை வாங்கி வாசிக்க முயன்றான். அவனுக்கும் புரிய வில்லை. இந்த நிலையில் கடிதம் எழுதினவரே நேரில் வந்துவிட்டார். அவர் திடீரென்று கொட்டாப் புளிக்காரன் மேல் பாய்ந்து அவனைக் கீழே தள்ளி கொட்டாப் புளியை அவனிட மிருந்து பிடுங்கிக் கொண்டார். பெரிய மனிதருக்கு ஒன்றும் விளங்க வில்லை. கடிதம் எழுதிய பெரிய மனிதர் சொன்னார் :—"இவன் உங்களைக் கொலை புரிய திட்டம் போட்டிருந்தான். அதைத் தெரிவிக்கவே கடிதம் எழுதினேன்." இரண்டு பேரும் சேர்ந்து இடி இடி யென்று சிரித்தார்கள். கொட்டாப் புளிக்காரனைப் போலீஸ் வசம் ஒப்புவித்தார்கள்.

இதே போன்று எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன. காதலன் எழுத்தை காதலி புரிந்து கொள்ள முடியாமலும், காதலி எழுத்தைக்காதலன் புரிந்துகொள்ள முடியாமலும் மனதை உருக்கும் சம்பவங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. புரியாத எழுத்தை எழுதி அழியாத அவமானத்தை தேடிக் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் டாக்டர்களுக்கு மட்டும் இந்தப் புரியாத எழுத்து அவசியம். பெண்கள் போல உருட்டி எழுதும் டாக்டரானாலும், நோயாளிக்கு மருந்து எழுதித் தரும் போது, எழுத்தை ஓட்டத்தில் விட்டு, ஒரு சுருட்டுச் சுருட்டி முடித்து விடுவார்கள். அதனால் தான் நோயாளி தன் தலையெழுத்தையும் டாக்டரின் கையெழுத்தையும் புகழ இடம் கிடைக்கிறது.

புரியாதபடிக்கும், கஷ்டப்பட்டால் புரியும்படிக்கும், சாதாரணமாகவே புரியும்படிக்கும் பலவிதமாக எழுதுபவர்களும் உண்டு. ஆபீஸுக்கு லீவு போட வேண்டுமானால் காய்ச்சல்காரன் எழுதுவது போல,எழுத்திற்கு ஒரு வளைவும், நடுக்கமும் கொடுத்து எழுதுவார்கள். பிறர் தம்மை சிலாகிக்க எழுதும் எழுத்து தனிரகமாயிருக்கும். அடுத்தவன் பேரில் புகார் எழுதுவதற்கு வேறு விதக் கையெழுத்து. அடுத்தவன் கையெழுத்தை லாபகரமாக உபயோகப் படுத்தாத வரை நல்லது தான்.

வெகு நாள் கழித்து சுடுகாட்டு நண்பரைச் சந்தித்தேன்.

"உங்கள் தலையெழுத்தைக் கண்டு ரொம்ப நாளாய் விட்டதே" என்றேன்.

"தலையெழுத்திற்கும் கையெழுத்திற்கும் சம்பந்தமில்லை யென்று முன்பு ஒரு நாள் சொன்னேனல்லவா? புனராலோசனை செய்து பார்த்தேன். தலையெழுத்து நன்றாயிருந்தால் கையெழுத்துத் தேவை யில்லை" என்று கூறி விட்டு, 'சட்'டென்று 'டிராம்' ஏறி விட்டார். நான் விழித்துக் கொண்டு நின்றேன்.

டிராம் போய்க் கொண்டிருக்கும் போதே, "போய் விபரமாய் எழுதுகிறேன்" என்று கத்தினார்.

அவர் கையெழுத்தைப் படிப்பது என் தலையெழுத்து!

ருத்ரம்மா

வெங்கடலட்சுமி

நல்ல ஆழ்ந்த நடுநிசி. வாரங்கல் நகர் முழுதும் மையிருட்போர்வையால் மறைக்கப்பட்டிருந்தது. வான வீதியில் அடர்ந்து கிடந்த மேகத்திரைகளினூடே அங்கங்கே தலை நீட்டிக் கண் சிமிட்டிய தாரகைகளின் சிறுவெளிச்சம் இருளின் பயங்கரத்தை மிகைப்படுத்திக் காட்டியது. நகரத்தின் மாடமாளிகைகளுக்கும், கோட்டை கொத்தளங்களுக்கும், மலர்ப்பொழில்களுக்கும் நடுவே, கங்குலின் கருமையுடன் கலந்த அவ்வெளிச்சம் விதம் விதமான நிழலுருவங்களை யமைத்து விளையாடியது.—நேரம் செல்லச் செல்ல சிறு காற்றும் எழும்பியது.—பளீர் பளீரென மின்வெட்டுக்களுடன் பெரிய பெரிய மழைத்துளிகள் பூமியில் விழலாயின.

பேய்களும் வெளிவர அஞ்சும் இக்கொடிய இரவில், தன் அரண்மனையின் உப்பரிகையில் தன்னந்தனியே நின்றிருந்தாள் இளவரசி ருத்ரம்மா. அவள் கரங்கள் மார்பின் மீது கட்டப்பட்டிருந்தன—தன்னைச் சூழ்ந்திருந்த இயற்கையின் பயங்கரத்தை அவள் பொருட்படுத்தவில்லை—தனக்குள்ளேயே பொங்கிப் பொருமிய துயரத்தையும் கோபத்தையும் அடக்க முயன்றவளாய் அசைவற்ற சிற்பம்போல் நின்றிருந்தாள்—அவளுடைய அழகிய மார்பகம் விம்மித்தணிந்து கொண்டிருந்தது—ஆழ்ந்த பெருமூச்சுடன் உப்பரிகைச் சுவற்றில் சாய்ந்த வண்ணமே தலைகுனிந்தவளாய் அன்று அரண்மனையில் நடந்த விபரீதத்தைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படி நின்றிருந்தாளோ, அவளுக்குத்தெரியாது. மழைத்துளிகள் தன் மீது விழுந்து தன்னுடலையும் உடையையும் நனைத்துச் சென்றதையும் அவள் உணரவில்லை.

வாரங்கல் கோட்டையிலிருந்த பெரிய மணியின் கணகணவென்ற சப்தம் நடுநிசியானதைக் குறிப்பிட்டு, நகர் முற்றும் எதிரொலியைக் கிளப்பிவிட்டு அடங்கியது. திடுக்கிட்டவளாய், உடல் சிலிர்க்கத் தன்னினைவடைந்தாள் இளவரசி—தன் மீதிருந்த உடைகளெல்லாம் நனைந்து போய் ஈரமாயிருந்தது அவளுக்கே ஆச்சர்யமாயிருந்தது—தன் கூந்தலிலிருந்து தரையில் சொட்டிக்கொண்டிருந்த ஜலத்தை உதறியவளாய்ச் சட்டென்று அங்கிருந்து தன் விடுதியை நோக்கிப்போகலானாள்—உடலுடன் ஒட்டிக்கொண்டிருந்த அவளுடைகள் சதக் சதக்கென ஓசை செய்தன.

தன் அந்தப்புரத்தை யடைந்ததும் வாயிலை மறைத்துக்கொண்டிருந்த பட்டுத் திரைகளை ஒரு கையால் ஒதுக்கிப்பிடித்துக் கொண்டு உள்ளே நோக்கினாள்.

உட்புறம் வெள்ளி தீபமொன்று மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. தரையில் பரப்பப்பட்டிருந்த விலையுயர்ந்த பாரஸீக ஜமுக்காளத்தின் மீது விதவிதமான அழகிய ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. பொன்னும் மணியும் இழைத்த போகப் பொருட்கள் அவ்வறை முற்றும் குவிந்திருந்தன. வண்ணச் சாந்து பூசிய சுவர்களில் உள்ளத்துக்கே உவகை யூட்டும் ஓவியங்கள் தொங்கின. நாற்புறமும் சிங்காரப் பீடங்களில், ஜலம் நிரம்பிய தங்கக் கிண்ணங்களில் வைக்கப்பட்டிருந்த பூங்கொத்துகளின் நறுமணமும், லேசாகப் புகைந்து கொண்டிருந்த அகில், சாம்பிராணிகளின் பரிமணமும் ஒன்று கூடி அவ் விடுதிக்குள் நுழைவோரை மயக்கத்திலாழ்த்தின.

ஒரு புறமாகக் காணப்பட்ட சாளரத்தருகில் தந்த மஞ்ச மொன்று காணப்பட்டது. அதன் நாற்புறமும் மெல்லிய நீலவர்ணப்பட்டுத் திரைகள் தொங்கின.—அருகே தரையில் உட்கார்ந்து கொண்டிருந்த தாதி

யொருத்தி, கட்டிற் காலின்மீது தலையைச் சாய்த்த வளாய்த் தூங்கி விழுந்து கொண்டிருந்தாள்.

இதைக் கண்ட இளவரசிக்கு முதலில் சிரிப்பு வந்தது. சட்டென்று அதை மறைத்துக் கொண்டவளாய் முகத்தைக்கடுமையாய் வைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

"கிருஷ்ணம்மா!..." என்று அதட்டிக் கூப்பிட்டாள்

திடுக்கிட்டெழுந்த தாதி கண்களைக் கசக்கிக்கொண்டு அவளை நோக்கினாள்.

எதிரே நிற்பது யாரெனத் தெரிந்ததும் அவள் முகத்தில் பயம் தோன்றியது. சட்டென்று எழுந்தவளாய் வணக்கத்துடன் தலை குனிந்து நின்றாள்.

"குழந்தை தூங்கி விட்டானா?"

"ஆம், தேவி; அப்பொழுதே தூங்கி விட்டான்."

"உடனே நீயும் தூங்கிவிட்டாய் போலும்! நன்றாயிருக்கிறது நீ குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் லட்சணம்!"

இதைக் கூறியபடியே கட்டிலின் திரைகளை மெதுவாக விலக்கினாள் இளவரசி. கட்டிலின் மீது ஆழ்ந்த நித்திரையிலிருந்தான் பச்சைப் பாலகனொருவன். வயது ஐந்தேயிருக்கும்;—பால் வடிந்த அவனுடைய பிஞ்சு முகத்தில் முறுவலொன்று அரும்பிக் கொண்டிருந்தது-உறக்கத்தில் மூடியிருந்த அவன் கண்ணிதழ்கள் லேசாகத் துடித்தன—ஏதோ குழந்தை கனவு கண்டான் போலும், ஆழ்ந்த நித்திரையிலும் தன் மலர்க்கன்னம் குழியப், பூவிதழ்களில் குறுநகை கொண்டான்.

பார்த்துக் கொண்டே சற்றுநேரம் நின்றாள் ருத்ரம்மா. அவள் விழிக் கடைகளில் இரண்டு கண்ணீர்த் துளிகள் திரண்டு நின்றன.

"கண்மணி!...உலகமே திரண்டு வந்து என்னை எதிர்த்த போதிலும் உன்னை யிழக்கச் சம்மதியேன்;...... மரணத்தறுவாயில் என் தந்தைக்குச் செய்து கொடுத்த வாக்குப்படி வாரங்கல் நகரின் சிம்மாதன மேறி நீ பட்

டம் ஏற்றுக் கொள்ளும் வரையிலும் எப்பாடு பட்டாவது இவ் வரசைக் காத்து வருவேன்!...இவ் வரசு உன்னுடையது;—இதை அன்னியர் அபகரிக்கச் சம்மதியேன்!...என்னுடலி லிருக்கும் ஒவ்வொரு துளி ரத்தத்தையும் நான் உனக்காகச் சிந்தத் தயாரா யிருக்கிறேன்! ......தேவன் எனக்கு உதவி புரியவேண்டுமே!"......

இவ்வாறு ஆவேசத்துடன் முணு முணுத்தபடியே சட்டென்று குனிந்து குழந்தையின் கனிவாயில் முத்தமிட்டாள்.

முகிழ் விரிக்கும் மலர்போல் தன் விழிகளை லேசாகத் திறந்து அரைத் தூக்கத்துடன் அவளை நோக்கினான் பாலகன்.

அடக்க முடியா ஆவலுடன் அவனைத் தன் கரங்களிலெடுத்து மார்புறத் தழுவி மீண்டும் மீண்டும் முத்தமிட்டாள் இளவரசி.

பின்பு மீண்டும் அவனை மஞ்சத்திற் கிடத்திப் போர்வையால் போர்த்தினாள். புரண்டு படுத்தபடியே உறக்கத்தி லாழ்ந்தான் குழந்தை.

அவனை ஒரு வினாடி நோக்கி விட்டுத் தாதியை நோக்கித் திரும்பினாள் இளவரசி.

"கிருஷ்ணம்மா!"

"தேவி!"

"குழந்தையை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்;...நான் போய் உனக்குத் துணையாகத் தாரம்மாவையும் அனுப்புகிறேன்," என்று உத்தர விட்டு வெளியே போகத் திரும்பியவள் எதையோ நினைத்துக் கொண்டவளாய்ச் சட்டென்று திரும்பி, "கிருஷ்ணம்மா!...ஹரிஹரன் எங்கே?"—என்று கேட்டாள்.

"வெளியே காவலிருக்கிறான், தேவி," என்று வணக்கத்துடன் பதிலளித்தாள் தாதி.

"சரிதான்; நான் அவனை வழியில் பார்த்துப் பேசிக் கொள்ளுகிறேன். தாரம்மா வந்தவுடன் நீங்கள் ஒருவர் மாற்றி யொருவர் குழந்தையைக் கவனித்துக் கொள்

மேக்கப் கலையில் நிபுணர்

(ரவிவர்மா கதாகளி பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெற்றவர்)

10 வருடகாலமாக சினிமாத் துறையில் தன் கைத்திறனைக் காட்டி பிரபலமடைந்து வருகிறார்

ஹாலிவுட் படங்களில் பார்க்கும் சில பயங்கர உருவங்களைப்போல மேக்கப் செய்வதில் கைதேர்ந்தவர்

இவரது அற்புதங்களை 'ஏகம்பவாணன்' தமிழ்ப் படத்தில் கண்டு களியுங்கள்

★

விபரங்களுக்கு:

K. V. குமார்,

மேக்கப்மேன்,

55, மௌபரீஸ் ரோடு,

ராயப்பேட்டை,

சென்னை

ஸ்ரீ அம்பிகா சுதேசி ஸ்டோர்ஸ்

Props : **M. S.** *பிரதர்ஸ்*

— ஜவுளி வியாபாரம் —

37, அரண்மனைக்கார தெரு, மதராஸ்

☆

எங்களிடம் எக்ஸ்போர்ட்டுக்கு தேவையுள்ள ஷர்டிங்கு, உயர்தர கைலி ரகங்களும், வாயில், பீஸ் தரங்களும், பல ஊர் பட்டு, ஜரிகை, பேட், சாதா வேஷ்டி, சேலை, துப்டா தரங்களும், பெட்ஷீட்டு, டவல் மடிகளும் சொந்த தரியில் தயாரித்து மொத்தமாகவும், சில்லரையாகவும் விலை சரசமாக வியாபாரிகளுக்கு கொடுக்கப் படும்.

☆

SRI AMBIKA SWADESI STORES,

Props : **M. S. BROS**

Whole Sale dealers in Handloom Textiles

No. 37, Armenian St.. - MADRAS

நல்ல முறையில்
சினிமா பானர், கட்
டவுட், என்லார்ஜ்
மெண்ட், போஸ்
டர், லே அவுட்,
முதலிய சகல
வேலைகளையும் சரி
வர செய்வார்கள்.

பாலு பிரதர்ஸ்

8, பஜார் ரோட்

ராயப்பேட்டை - சென்னை

முபாரக் பிக்சர்ஸ் லிட்.,

தயாரிப்பு

கே. ஆர். ராமசாமி — எம். ஜயஸ்ரீ
ர. ஆர். சகுந்தலா — கே. எஸ். அங்கமுத்து
ஆர். பாலசரஸ்வதி — புளிமூட்டை

☆

பில்ஹணா

(தமிழ்)

☆

விவரங்களுக்கு :—

A. P. M. S. கிஸார் கம்பெனி

47, லாங்ஸ் கார்டன் ரோடு, , புதுப்பேட்டை, சென்னை

ளுங்கள் ; பத்திரம்! இருவரும் சேர்ந்தாற்போல் உறங்கி விடாதீர்கள்!...ஏதாவது அவசியமானல் ஹரிஹரனைக் கூப்பிடுங்கள் ;--அவன் வந்து வேண்டிய ஒத்தாசை செய்வான் !"

"ஆகட்டும். தேவி !"

"குழந்தை பத்திரம் !"

இவ்வாறு மீண்டும் எச்சரித்துவிட்டுத் திரைகளை விலக்கிக்கொண்டு வெளியே போனுள் ருத்ரம்மா.

அந்தப்புரம் முற்றும் நிசப்தம் பரவியிருந்தது. ஆங்காங்கு எரிந்து கொண்டிருந்த தீபங்கள் மங்கலான வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. இளவரசி தன்னுடைய இடுப்பில் மறைவாய்ச் செருகியிருந்த உடைவாள் பத்திரமா யிருக்கிறதா வென்று தொட்டுப்பார்த்துக் கொண்டவளாய் எதிர்ப்புறமிருந்த விடுதிக்குள் நுழைந்தாள்.

"யாரது ?" இரும்புக்குரலில் இக்கேள்வியைக் கேட்டபடியே உருவின கத்தியுடன் இருளிலிருந்து வெளிப்பட்டான் வீரனொருவன்.

சட்டென்று திரும்பியவளாய், "ஹரிஹரா ?" என்ருள் ருத்ரம்மா.

"தேவி! மன்னிக்கவேண்டும் ; யாரோவென்றெண்ணினேன் !" என்று கூறினபடியே கத்தியை உறையிலிட்டுவிட்டு வணங்கினன் அவன்.

"பரவாயில்லை ஹரிஹரா! நீ ஜாக்கிரதையாயிருப்பது நல்லது தான். கிழக்கு வாசலில் யாரிருக்கிருர்கள்?"

"ராயப்பன் இருக்கிருன், தேவி."

"நல்லது, மற்றவர்களெல்லாம் ?"

"சுற்றி வந்துகொண்டே யிருக்கிருர்கள், தேவி,"

"சரி; ஹரிஹரா! சின்ன ராஜாவை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்கு உங்களை யெல்லாம் தான் நம்பியிருக்கிறேன் !"

"அப்படிக் கூறவேண்டாம் தேவி; எங்கள் உடலி லிருக்கும் ஒவ்வொரு துளி ரத்தத்தையும் சின்ன அரசருக் காகவும் உங்களுக்காகவும் சிந்தத்தயாரா யிருக்கிறோம்! இதைத் தாங்கள் நிச்சயமாய் நம்பலாம்."

உணர்ச்சி ததும்ப இவ்வார்த்தைகளைக் கூறினன் அவன்.

இதைக்கேட்ட இளவரசியின் முகத்திலிருந்த கடுமை மறைந்து அவள் முகம் புன்னகையினல் மலர்ந்தது.

ஒரு விஞடி அவனை ஊடுருவி நோக்கினள்.

தலை குனிந்து அவளெதிரில் நின்முன் ஹரிஹரன்.

"நீ போகலாம்!"

சட்டென்று திரும்பி இருளில் மறைந்தான் அவன்.

ஆழ்ந்த ஒரு பெரு மூச்சுடன் தன் விடுதிக்குள் நுழைந்தாள் இளவரசி.

அங்கிருந்த மஞ்சத்திற் படுத்தவளாய்க் கண்களை இறுக மூடிக்கொண்டாள். இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவங்ளெல்லாம் அவள் மனக்கண் முன்பு ஒவ்வொன்ருய் வந்து நின்றன.

ருத்ரம்மாவின் தந்தையான கணபதி நாகன் மரணப் படுக்கையிலிருந்தான். நகர் முழுதும துயரத்திலாழ்ந் திருந்தது.

மன்னன் மரிப்பதற்கு முன்தினம் இதே போன்ற காரிருள் சூழ்ந்த இரவு மஞ்சத்திற் படுத்திருந்த மன் னன் வேதனையினல் துடித்துக் கொண்டிருந்தான்—துய ரத்தினலும் வேதனையினலும் தவித்துக் கொண்டிருந்த அவனுடைய ஆத்மா கூட்டினின்றும் விடுதலையடையச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது.

தந்தையின் தளர்ந்துபோன சரீரத்தைத் தடவிய வாறே கண்ணீர் மல்குப் விழிகளுடன் மஞ்சத்தருகில் ஒரு பீடத்திலுட்கார்ந்திருந்தாள் இளவரசி.

"குழந்தாய்!" மிக மிகச் சிரமப்பட்டுப் பேசினன் மன்னன்.

"தந்தையே!" இளவரசியின் குரல் தழ தழத்துப் போயிற்று.

"உன் வாக்கைக் காப்பாயல்லவா?"

"ஆம்;—என்ன நேர்ந்தபோதிலும் என் வாக்கைக் காப்பேன்; தங்களுக்குக் கவலை வேண்டாம்!"

ருத்ரம்மாவின் விழிகள் ஒளிவீசின. உறுதித்வனிக்கும் குரலில் இவ்வார்த்தைகளைக் கூறிவிட்டுத் தந்தையின் கரங்களைப் பிடித்துக்கொண்டாள்.

அரசனின் பஞ்சடைந்த விழிகள் அவளை ஒரு விநாடி திருப்தியுடன் நோக்கின. சற்றுப்பொறுத்து மீண்டும், "குழந்தாய்! உன் தம்பிகளான பாபிகளிருவரும் கலகத்துக்கு எத்தனித்தால், விஜயனை நம் கண்மணியை எப்படி என்னால் காக்கமுடியும்?" என்று கவலை தோய்ந்த குரலிற்கேட்டான்.

ஒரு கணம் மௌனம் சாதித்தாள் இளவரசி. அவள் கருவிழிகளில் கண்ணீரின் புரையோடியது.

"தந்தையே! என் சகோதரன் சிலருத்ரன் போர்க்களத்தில் மடிந்த பொழுது குழந்தை விஜயாலயனை என்னிடமளித்துவிட்டு உடன்கட்டை யேறினாள் அவன் அன்னை இப்பொழுது தாங்களும் மீளாவியாதியாய்ப் படுத்துவிட்டீர்கள்!—குழந்தை விஜயலாயனை வளர்த்து, வாரங்கல் சிம்மாதனத்தில் அவன் ஏறும் வரையில் எப்பாடுபட்டாயினும் இளவரசை நான் காத்து வருவேன்; இது சத்தியம்!—சத்தியம்!—என் உயிரைக் கொடுத்தாயினும் விஜயனைக் காத்துவருவேன்!—என்னை நம்புங்கள்!"—

இவ்வாறு தன் தந்தைக்கு வாக்குக் கொடுத்தாள் இளவரசி.

கணபதி நாகன் மனச்சாந்தியுடன் மரித்தான்.

ஒரு வயதுக் குழந்தையான விஜயாலயனைக் கண்மணிபோல் காத்துவரலானாள்.

கணபதி நாகன் இருக்கையில் அவனுடைய பிள்ளைகளான கங்காருத்ரனும், மங்களருத்ரனும் த்வாரசமுத்ரம்

சென்றிருந்தார்கள். இறந்து போன தன் மூத்த மகனை சீலருத்ரன் விட்டுச் சென்ற குழந்தை விஜயாலயன் வாரங்கல்லுக்கு அரசனுக வேண்டுமென்பது கணபதிநாகனின் அவா. அக் குழந்தையைத் தன் பிள்ளைகளிடம் ஒப்படைக்க விரும்பவில்லை அவன்.—அவ் விருவரும் சிறு வயதிலிருந்தே மகா குரூரஸ்வபாவம் வாய்ந்தவர்கள். தந்தைக்கெதிராக அவர்கள் செய்த சதியாலோசனைகளும் கலகங்களும் கணக்கே யில்லை. அவர்களுக்காக ஏங்கி மனமுறிந்து இறந்து போனுள் அவர்கள் தாயான ராணி நீலம்மா. மன்னனின் மரணத்துக்கும் அவர்களே காரணமென தேச மக்கள் பேசிக் கொண்டனர்.

கடைசியாகத் தன் செல்வ மகள் ருத்ரம்மாவிடமே நம்பிக்கை வைத்தான் மன்னன்.

இளவரசிக்கு வயது இருபது. அவளுடைய அழகும் கல்வி யறிவும் யாவரும் விரும்பத் தக்கனவா யிருந்தன. பல தேச மன்னர்கள் அவளை மணக்க முன் வந்தனர். ஆனல் ஏனே, ருத்ரம்மா அவர்கள் ஒருவரையும் விரும்பவில்லை. கணபதி நாகன் இறக்கும்பொழுது கன்னிகையாகவே யிருந்தாள்.

நான்கு வருடங்கள் ஓடி விட்டன. குழந்தை விஜயாலயனுக்காக அரசுரிமையைத் தானே தாங்கித் திறம்பட நடத்தி வந்தாள் ருத்ரம்மா.

*　　*　　*　　*

அன்று காலை அருணேதய சமயம். ஸ்நானம் செய்து பூஜை முடித்துவிட்டுத் தன் விடுதியி லுட்கார்ந்து ஏதோ அரச காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள் ருத்ரம்மா. அவள் காலடியி லுட்கார்ந்து தன் மழலைச் சொற்களால் ஏதேதோ பேசியபடியே விளையாடிக் கொண்டிருந்தான் விஜயாலயன். இளவரசி அவனுடைய கேள்விகளுக்குப் பதில் கூறிக் கொண்டும் இடை யிடையே தன் கையிலிருந்த ஓலை நறுக்குகளைப் பார்த்துக் கொண்டும் காலம் கடத்திக் கொண்டிருந்தாள். குழந்தையின் தாதிகளான கிருஷ்ணம்மா, தாரம்மா, இருவரும் ஒரு புறமாக உட்கார்ந்து அவனுக்காக ஏதோ துணிகள் தைத்துக் கொண்டிருந்தனர்.

மந்திரி கௌரீ சங்கரர் அவசரமாக உள்ளே நுழைந்தார்.

"தேவி!...தேவி!...விபரீதம் நேர்ந்து விட்டது!... சீக்கிரம் புறப்படுங்கள்! நம் படைகளை யுத்த சன்னத்தமாக உத்தரவிடுங்கள்!.........தங்கள் தம்பியரிருவரும் ஹொய்சால மன்னனின் படைகளைச் சேர்த்துக்கொண்டு வாரங்கல்லை எதிர்க்க வந்து கொண்டிருக்கிறார்களாம்; கிருஷ்ணா நதியின் அக்கரையிலிருந்த நம் ஒற்றர்கள் செய்திகொண்டு வந்திருக்கிறார்கள்; துரிதமாய் வந்து கொண்டிருக்கிறார்களாம்; நாள் மூன்றுக்குள் நம் கோட்டையை நெருங்கி விடுவார்களெனத் தெரிகிறது."

கைகளைப் பிசைந்தபடியே பேசினார் மந்திரி. அவர் முகம் பெருங் கவலையையும் பீதியையும் காண்பித்தது.

திடுக்கிட்டெழுந்தாள் இளவரசி. ஒரு விநாடி மௌனம் சாதித்தாள். அவள் கருவிழிகளில் ஒரு மின்னல் தோன்றி மறைந்தது. கையிலிருந்த ஓலை நறுக்குகளைக் கீழே வீசியெறிந்து விட்டுச் சட்டென்று குனிந்து, ஒன்றும் விளங்காமல், அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்த பாலகனைக் கைகளிலெடுத்து மார்போடணைத்துக் கொண்டாள்.

குழந்தை தன் முத்துப்பற்கள் தெரியக் கலீரெனச் சிரித்தபடியே அவள் தோளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

புன்னகையுடன் பேசினாள் ருத்ரம்மா.

"மந்திரி!—நெடுநாளாக நாம் எதிர்பார்த்ததுதானே இது! வீண் கவலையேன்? தந்தை இறந்துபோன அன்றையதினத்திலிருந்தே நான் இதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேனே! இது வரையில் அவர்கள் தாமதித்ததுதான் எனக்கு அதிசயம்! நம் படைகளுக்கு இடவேண்டிய உத்தரவுகளைத் தாங்களே இட்டுவிடுங்கள்! நம் தேசத்தில் போருக்குச் செல்லக்கூடிய ஒவ்வொரு ஆண்மகனையும் யுத்த சன்னத்தமாகச் சொல்லுங்கள்! எப்படியானாலும் விஜயலாயனுக்கு ஒரு தீங்கும் நேரிடக் கூடாது! தந்தைக்குச் செய்து கொடுத்த வாக்கை எப்

படியாவது காப்பாற்ற வேண்டும்! நம் யாவருடைய உயிர்போயினும் பெரிதல்ல; குழந்தையைக் காக்க வேண்டும்!" மந்திரி கொரிசங்கரர் அவளை அதிசயத்துடன் நோக்கினர். வயதான கிழவர் அவர்; ருத்ரம்மாவிடம் என்றுமே அளவற்ற வாஞ்சை கொண்டவர். அவளுடைய திறமையிலும் புத்திசாதுர்யத்திலும் அவருக்குப் பெருமதிப்பு உண்டு.

நிமிர்ந்து நின்று அவளை ஊடுருவி நோக்கியபடியே, "தேவி!—கடவுள் கிருபையால் எல்லாம் இனிதாகவே முடியும்! நான் போய் வேண்டிய உத்தரவுகளைப் போட்டுவிட்டு மீண்டும் வருகிறேன்," என்று கூறிவிட்டு வெளியே சென்றார்.

அவர் போனவுடன் கையிலிருந்த குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு, "விஜயா! நீ இங்கேயே விளையாடிக்கொண் டிருக்கிறாயா?" என்று கேட்டாள் இளவரசி. "இம்", என்று தலையசைத்தான் பாலகன்.

சற்று தூரத்தில் பெரும் பீதியுடன் நின்று கொண்டிருந்த தாதிகளை நோக்கி, "குழந்தை இவ் வறையை விட்டுச் செல்ல வேண்டாம்!—அவனுக்கு ஆபத்து நெருங்குகிறது!......என் உத்தரவின்றி அவனை நீங்கள் இனிமேல் நந்தவனத்துக்குக் கூட எடுத்துப் போகக் கூடாது!" என்று உத்தரவிட்டாள்.

"ஆகட்டும் தேவி." என்று இருவரும் பயத்துடன் கூறினார்கள்.

இளவரசி குனிந்து குழந்தையை முத்தமிட்டாள்.

'விர்'.........என்று ஒரு சப்தம்.

திறந்திருந்த சாரளத்தின் வழியாக அம்பு ஒன்று மின்னல் வேகத்தில் பறந்து வந்து டங் என்ற சப்தத்துடன் இளவரசியின் காலடியில் விழுந்தது.

தாதிகளிருவரும் திகிலுடன் ஹா ஹா வென்று கூவினார்கள்.

விஜயாலயன் பிரமித்து நின்றான்.

இளவரசி ஒளி வீசும் கண்களுடன் அவ் வம்பைக் கையிலெடுத்தாள். அவளுடைய முகம் கறுத்தது. அம்பை ஒரு புறமாக எறிந்து விட்டு, "கிருஷ்ணம்மா! சாளரத்தை மூடிவிட்டுக் குழந்தையுடன் நீங்களிருவரும் உள்ளறைக்குப் போய்விடுங்கள்!—இனிமேல் அஜாக்கிரதையா யிருக்கக் கூடாது!" என்று கூறிவிட்டுத் தன் விடுதியை விட்டு ஜ்வலிக்கும் விழிகளுடன் துரிதமாக வெளியே போனாள்.

* * * *

ஒரே விநாடியில் நகர் முழுதும் செய்தி யறிந்து விட்டது. குழந்தையைக் கொல்வதற்காக அரண்மனை நந்தவனத்திலிருந்து யாரோ சதிகாரர்கள் அந்தப்புரத்துக்குள் அம்பு எய்த விஷயம் ஜனங்களின் மனதைக் கொதிக்கச் செய்தது. அரண்மனையைச் சுற்றிலும் பலமான காவல் வைக்கப்பட்டது. கவசமணிந்த வீரர்கள் அந்தப்புரத்தைக் காத்து நின்றார்கள்.

மந்திரி கௌரி சங்கருடன் கிளம்பிச் சென்ற ருத்ரம்மா வாரங்கல் கோட்டையில் வெள்ளம் போல் திரண்டு நின்ற படைகளின் அணிவகுப்பைப் பார்வை யிட்டாள். .....ஜனங்கள் தன்னிடம் வைத்திருந்த அபாரமான நம்பிக்கையும் அன்பும் அவள் மனதைத் திருப்தியடையச் செய்தன. படைகளிடம் உணர்ச்சி ததும்பப் பேசிவிட்டு அரண்மனை வந்து சேர்ந்தாள.

வாரங்கல் நகர் வெளிக்கு அமைதியாகவே யிருந்தது. ஆனால் ஜனங்கள் ஆத்திரத்தினாலும் கோபத்தினாலும் குமுறிக் கொண்டிருந்தனர்.

3

அடுத்த மூன்றாவது தினம் பகல்.

ஹொய்சால மன்னனின் படைகளுடன் ருத்ரம்மாவின் தம்பிகளிருவரும் கிருஷ்ணா நதியின் அக்கரையில் கூடார மடித்துத் தங்கி யிருப்பதாகச் செய்தி வந்தது.

நகர் அல்லோலகல்லோலப்பட்டது. ஆனால் உடல் முற்றும் கவசமணிந்து குதிரையேறித் தன் படைகளுக்

குத் தலைமை வகித்த இளவரசியைக் கண்டதும் ஜனங்கள் அமைதியடைந்து விட்டனர்.

"ருத்ரம்மாவுக்கு ஜே!" என்று அவர்கள் ஆர்ப் பரித்த சப்தம் வானைப்பிளந்து சென்றது.

யுத்தத்துக்குப் புறப்படு முன்பு ஒரு விஞடி மந்திரி கௌரீசங்கரரிடம் தனித்துப் பேசினுள் இளவரசி.

"எனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் விஜயாலயன் உங்கள் அடைக்கலம்!"

கம்பீரமான குரலில் இவ்வார்த்தைகளைக் கூறினுள் ருத்ரம்மா. குழந்தை அவள் கையைப் பிடித்தபடி அருகே நின்றிருந்தான்.

கௌரீசங்கரர் கண்ணீர் நிறைந்த விழிகளுடன், "தேவி!—நான் வரவேண்டிய தில்லையா?" என்று கேட் டார்.

ருத்ரம்மாவின் இதழ்க்கடையில் புன்னகையின் சாயல் தோன்றியது.

"தள்ளாத வயதில் நீர் போர்க்கோலம் பூண்டு ஆயுதம் தாங்குவதைவிட, அரண்மனையிலிருந்து, காகதீய வம்சத்தின் ஒரே தீபமான இக்குழந்தையைக் காப்பதே மேலென்பது என் எண்ணம்; யுத்தகளத்தில் எனக்கு ஏதாகிலும் ஆபத்து நேர்ந்தால் விஜயாலயனைப் பார்த்துக் கொள்ள உங்களைத் தவிர தகுதிவாய்ந்தவர்கள் வேறில்லையென்று எனக்குத் தோன்றுகிறது," என்றுள்.

கிழவர் சற்று நேரம் ஒன்றுமே பேசவில்லை. சற் றுப்பொறுத்து, "தேவி! உங்கள் சித்தப்படியே," என்றுர். அவர் தொண்டை கம்மியது.

இளவரசி குனிந்து பாலகனைத் தழுவி முத்தமளித் தாள்.

"விஜயா! நான் போய் வரட்டுமா?"

"இம்" என்றுன் குழந்தை.

ருத்ரம்மாவின் நெஞ்சம் ஒரு கணம் விம்மித் தணிந்தது.

கண்ணீர்ப் புரையோடிய தனது விழிகளைத் தாழ்த்திய படியே துரிதமாய் அறையிலிருந்து வெளியே போய் விட்டாள்.

கௌரீசங்கரர் குழந்தையைக்கையில் பிடித்தபடியே அவள் போவதைப் பார்த்துக்கொண்டு அசைவற்று நின்றார்.

* * * *

நகர் முழுதும் தாரை தப்பட்டைகளின் முழக்கம் ஜனங்கள் அணைகடந்த வெள்ளம் போல் ஆர்ப்பரித்தனர். வாரங்கல் படைகளைத் தலைமை வகித்துப் போருக்குச் சென்றாள் இளவரசி.

கிருஷ்ணா நதிக்கரையில் மூன்று நாள் அகோர யுத்தம் முடிவில் காகதீயர்களுக்கே ஜெயம். யுத்தத்தில் கங்காருத்ரனும் மங்களருத்ரனும் இறந்தனர். அவர் களில் கங்காருத்ரன் கையால் அவன் இறக்கு முன்பு படுகாயமடைந்தாள் ருத்ரம்மா. அவளைக் கொன்று விட்ட குதூகலத்துடனேயே மரித்தான் கங்காருத்ரன்.

தன் படைகள் ஜெயமடைந்த செய்தியைக்கேட்கும் வரையில் உயிருடனிருந்தாள் ருத்ரம்மா. வாரங்கல சிம்மாதனத்துக்குக் குழந்தை விஜயாலயனுக் கெதிராக இனி ஒருவரும் வரமாட்டார்களென அறிந்ததும் மனச் சாந்தியுடன் மரணமடைந்தாள்.

தங்கள் வீரராணியின் மரணத்தையறிந்த வாரங்கல் பிரஜைகள் அளவற்ற துயரமடைந்தனர். மந்திரி கௌரீ சங்கரர் சிறு குழந்தையைப் போல் கண்ணீர் விட்டுக் கதறினர்.

ருத்ரம்மாவின் சரீரம் வீரசின்னங்களுடன் கிருஷ்ணா நதிக்கரையில் அடக்கம் செய்யப்பட்டது.

பார்த்துக்கொண்டே யிருக்கையில் நேர்த்தியான சமாதியொன்றும் அதன் மேல் எழும்பியது.

*   *   *   *

நிற்காமல் ஓடிச்சென்ற காலச்சக்கரம் இருபது வருடங்களையும் தன்னுடன் உருட்டிச் சென்றது.

மாரிகாலம் முடிந்து கிருஷ்ணுவில் புது வெள்ளம் பெருகிச் சல சலத்துக் கொண்டிருந்தது. கண்ணுக் கெட்டியதூரம் ஒரே மரகதச்சாயை. அஸ்தமனஸமயம். மறைந்து கொண்டிருந்த சூரியன் செப்புத் தகடெனச் சிவந்து மின்னினன்.

கரையோரமாகப் படகொன்று வந்து ஒதுங்கியது. அதிலிருந்து கரையிற் குதித்தான் இளைஞன் ஒருவன். படகில் உட்கார்ந்திருந்த கிழவரை மெதுவாக இறக்கினன்

இருவரும் அங்கேயிருந்த சமாதியை நெருங்கினர்கள்.

கண்ணீருடன் தன் தலையைத் தாழ்த்திச் சமாதியை வணங்கினன் இளைஞன். "விஜயாலயா!" என்ருர் கிழவர். அவர் குரல் தழுதழுத்தது.

அன்று தான் விஜயாலயன் முடி சூட்டிக் கொண்ட தினம். இளவரசி ருத்ரம்மாவின் சபதம் நிறைவேறியது.

"தேவி!—தேவி!" என்று பொங்கிய கண்ணீருடன் முணுமுணுத்தார் கௌரீசங்கரர்.

விடுதலை

குகப்ரியை

நடுநிசி. சிறைச்சாலையின் இருள் நிறைந்த அறை. வெகுதூரத்தில் வைத்திருந்த இராந்தலின் ஊமை வெளிச்சம் கொஞ்சமாய்த் தெரிந்து கொண்டிருந்தது. சற்று நேரத்திற் கொரு முறை கேட்கும் கோட்டானின் அலறல், வார்டனின் காலடி ஓசை இவைகளைத் தவிர வேறு ஒருவிதமான சந்தடியுமில்லை. இருண்ட அந்தச் சிறையின் பயங்கரத்தைப் பின்னும் அதிகமாக்கிக் காண்பித்துக் கொண்டிருந்தது மற்ற கைதிகளின் குறட்டை ஓசைகள். சற்று நேரத்திற் கொருமுறை எங்கேயாவது ஒரு நாய் ஊளையிடும், அப்பொழுதே தூக்கத்திலிருந்து விழித்த பறவை சிறகைப் பட பட வென்று அடித்துக் கொள்ளும்.

உலகம் முழுவதும் நித்திரையில் ஆழ்ந்திருந்த அந்த நள்ளிரவில் ஒரே ஒரு ஜீவன் மட்டும் தூக்கம் பிடியாமல் விழித்திருந்தது. ஏன்? அவன் சிறை புகுந்து வருஷம் ஐந்து முடிய இன்னும் சில மாதங்கள் இருக்கின்றன. இருந்தாலும் நன்னடத்தைக்காகக் கழிக்கப்பட்ட சில தினங்கள் போக விடுதலை வெகு சமீபத்தில் அதிலும் நாளைக்கே வந்துவிட்ட தென்றால்?—சந்தோஷ மிகுதியினால் அவனுக்கு தூக்கமே வரவில்லை. அறையில் முன்னும் பின்னுமாய் அடியிட்டு அளப்பதுபோல் உலவலா

ஞன். கால வெள்ளத்தை எதிர்த்து நெடுந்தூரம் பின் நோக்கிச் சென்றன அவன் சிந்தனைகள்.

* • *

ஆம்! வருஷங்கள் ஆறு எப்படியோ உருண்டோடி விட்டன. அன்று கோர்ட்டிலே தேர்க்கூட்டம், திருவிழாக் கூட்டம், சேட் சாட்சிக் கூண்டிலும் அவன் கைதிக் கூண்டிலும். "பணம் போய்விட்டது உண்மைதான். ஆனால் நான் இவனைச் சந்தேகிக்கவில்லை. முதலில் இவனை யும் சந்தேகித்ததுண்டு. ஆனால் இன்று இவன் எடுத்திருப் பானென்று எனக்குத் தோன்றவேயில்லை. பதினைந்தாவது வயது முதல் சொந்தமகன் போலப் பாராட்டி வளர்த்த இவன் என் பணத்தையே திருடியிருப்பானா, இல்லை, ஒரு நாளும் திருடி யிருக்கமாட்டான் என்று உறுதியாய்ச் சொன்னார் சேட். ஆனால் வழக்கைப் போலீசார் விட்டு விடுவார்களா? ஆகவே சந்தர்ப்ப சாட்சியங்களிலிருந்து இவனைக் குற்றவாளி என்றே தீர்ப்பு அளிக்கப்பட்டது.

"ஐந்து வருஷம் கடுங் காவல்".

இந்தத் தொடர் செவிகளுள் விழுந்ததும் மிகுந்த ஏமாற்றத்தோடு அவனை ஏறிட்டுப் பார்த்தார் அமார்சந்த் சேட்.

அந்தப் பார்வை? அவர் தன்னிடம் காண்பித்த அனு தாபம் இவைகள் அவன் கண் முன்னே தோன்றின. ஐயோ? பாவம்! கடைசிவரையில் நம்மை நிரபராதி என்றே நினைத்து விட்டார். பெற்ற தகப்பனுரை விட நூறு மடங்கு அன்பாய்த்தான் நடந்து கொண்டார். நான்தான் திருடினே னென்று அவர் கனவிலும் நினைத் திருக்கமாட்டார் என்று நினைத்த பொழுது அவனையும் அறியாமலே உரக்கச் சிரித்து விட்டான் அவன்.

அவனது சிரிப்பின் ஒலி இருண்ட அறையின் சுவர் களின்மீது மோதி எதிரொலித்தது. இதனால் விழிப் படைந்த மற்றொரு கைதி, "என்ன அண்ணே! ஐஞ்சு வருசமாப் பழகின எங்களை விட்டுட்டி பெஞ்சாதி, புள்ளே மொவத்தைப் பார்க்கப் போறமேண்ணு சிரிக் கிறயா?" என்றான் தூக்கக் கலக்கத்தோடு.

"ஹூம்! பொஞ்சாதியாவது பிள்ளையாவது? என்னமோ கௌரவமாப் பொழைச்ச காலம் போச்சு. இந்தப் பக்கமே தலை காட்டாமெ எங்கேயானும் தூர தேசம் போய் மானமா காலந் தள்ளணும்."

"என்னப்பா! அந்த சேட்தான் நீ மறுபடி வந்தா வேலை கொடுக்கறேண்ணாராமே? அது இல்லெண்ணு விடுதலைக் கைதிங்களுக்கு ஒத்தாசை பண்ற சங்கம் ஒண்ணு இருக்குதாம்."

"அதெல்லாம் என்னத்துக்கப்பா? நம்மெப் படைச்சவன் அதுக்கு ஒரு வழி விடாமலா போவான்," என்று வேதாந்தம் பேசினான் கைதி. வாய் விரக்தியோடு வேதாந்தம் பேசிற்றே யன்றி அவன் மனம் கட்டுக் கடங்காத சந்தோஷத்தினால் பூரித்துக் கொண்டிருந்தது.

"விடுதலையானவுடன் கையிலிருக்கிற சொற்பத் தொகையை எடுத்துக் கொண்டு நேரே மதுரையை நோக்கிப் புறப்பட வேண்டியது. போய், குழ அழ. காயப்ப செட்டியாரைக் கண்டு ரொக்கத்தை வாங்கிக் கொண்டு, ஏதாவது ஒரு நல்ல தொழில் செய்கிறது. இந்தச் சென்னப் பட்டணம் பக்கம் தலை நீட்டக் கூடாது. இங்கிருந்து எவனாவது தெரிந்தவன் அறிந்தவன் வந்தாலும் தெரியாதது போல் தான் பாவிக்கவேணும்" என்று நினைத்தவனாய்க் கண் அயர்ந்தான் அவன்.

* * *

மற்ற கைதிகளுக்கெல்லாம் பொழுது வழக்கம் போலத்தான் புலர்ந்தது. ஆனால் அந்த உதய சூரியன் சந்தோஷத்தோடு துள்ளி யெழுந்து கனவேகமாய் வருவது போல் தோன்றிற்று அவனுக்கு. "அடா! வீட்டில் நம்மவள் என்று ஒருத்தி இருந்தால் எவ்வளவு குதூகலமான வரவேற்பு கிடைக்கும். சேட்ஜீதான் பரியம் போடப் பணமும், ஈடு கட்டுவதற்கு நகையும் கொடுக்கிறேன் என்றாரே, என் பேராசையினாலல்லவா அவசரப் பட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டேன். இப்பொழுது நமக்கென்று என்ன உண்டு......ஒரு வேளை கைதி என்று அவமதிக்கவும் கூடும், பெண்களின் மன நிலையாருக்குத் தெரியும். ஆனால் சேட்ஜீ தான் நிரபராதி என்று ஒப்புக்

கொள்ளுகிறாரா......எப்படியிருந்தாலும் திருடன் திருடன் தான்! திருடன் என்று நினைத்தால்மட்டும் குற்றமா?..............எப்படி யிருந்தாலென்ன? நாளைக்குப் பால சுந்தரம் பிள்ளை பெரிய வியாபாரி என்றால் நான் நீ என்று ஓடிவரமாட்டார்களா? மதுரை புது மண்டபத்தில் ஒரு நல்ல கடை போட வேண்டியது.........ஐயோ பாவம்! அந்தக் கிழவி இருந்தால்—எவ்வளவோ ஆசையும் அருமையுமாய், வெந்நீர் போட்டு வைத்து, சமையல் செய்து வைத்துக் காத்திருக்கமாட்டாளா? என்னைப்பற்றிய ஏக்கமேதான் அவளும் போய்ச் சேர்ந்தாள். ஐயோ பாவம்! என்னை மகனைப் பெற்று அவள் தான் என்ன சௌக்யத்தைக் கண்டாள?......அந்தக் கிழவன் உள்ள மட்டும் குடித்து, விட்டு அடித்து நொறுக்கினான். என்னைப்பற்றியோ கேட்கவே வேண்டியதில்லை. அவள் உயிருடனிருந்து தான் கண்ட பலன் என்ன? என்று நினைத்தவனாய் தான் முன்பு குடியிருந்த வீட்டிற்குப் போவோமென்று திரும்பினான்.

கடைசியாகக் கையில் விலங்குடன் தலையில் முக்காடு போட்டு தான் வீதி வழியே சென்றதும், வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு தலைவிரி கோலமாய்த் தன் தாய் பின் தொடர்ந்து ஓடி வந்ததும் நினைவிற்கு வர அவனையும் அறியாமல் கண்ணீர் பெருகிற்று.

சரி! அங்கே போவது சரியல்ல, என்று நினைப்பவன் திரும்பிப் பார்க்கை நோக்கி நடந்தான். வீதியில் செல்லும் ஒவ்வொருவரும் தன்னையே பார்ப்பது போல் தோன்றிற்று. அழகாய் க்ஷவரம் செய்து கொண்டு வேற்று உடையிலிருக்கும் தன்னைப் பார்க்கமாட்டார்கள் என்று சமாதானப் படுத்திக்கொண்டான். மெல்ல மெல்ல நடந்து 'பார்க்கை' அடைந்தான். அங்கேயுள்ள செடிகளும் கொடிகளும் கூடத் தன்னை 'ஏ கைதி! ஏ கைதி!!' என்று பரிகசிப்பது போல் தோன்றிற்று.

* * * *

எழும்பூர் ஸ்டேஷன். டிக்கெட் வாங்கி வண்டியைப் பிடிப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது அவனுக்கு. எப்படியோ வண்டியில் இடம் பிடித்து உட்

கார்ந்து கொண்டான். வண்டியின் ஒவ்வொரு அசைவிலும் அவனுடைய இன்பக் கனவுகள் உருவாகிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு ஸ்டேஷனை தாண்டிய உடனே ஒரு பெரு மூச்சு. தன் லக்ஷ்யத்தை நோக்கி வெகு சமீபத்தில் சென்று கொண்டிருக்கிறோம் என்ற இன்ப நினைவுகள்; கோடியிலே ஒரு பிரயாணி தினசரியை வாசித்துக் கொண்டிருந்தார். எங்கெங்கேயோ நடந்த கொலைகள், கொள்ளைகள் அதை ஒட்டிய சுவாரஸ்யமான விவாதங்கள், இவைகள் வெகு தீவிரமாய் நடந்து கொண்டிருந்தன.

மூலையிலே உட்கார்ந்திருந்த ஒரு பாட்டியம்மாள் 'ரயில்வே' திருட்டுக்களை தனக்குத் தெரிந்ததும் தெரியாததுமான பல சம்பவங்களை அழகு பெற இசைத்து உபமான உபமேயங்களுடன் விளக்கிக் கொண்டிருந்தாள். அவன் அவர்களுடன் கலந்துக் கொள்ளாமல் ஜன்னல் புறம் திரும்பி வெளியே வெகு வேகமாய் ஓடும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். வண்டியில் ஏற்படும் ஓசையோடு எல்லோருடைய குரலும் சேர்ந்து தன்னைத் "திருடா! திருடா!" என்று கூப்பிடுவது போல் தோன்றிற்று.

எப்பொழுது கண்ணயர்ந்தானோ தெரியாது. கண்ணை விழித்த பொழுது வண்டி மதுரை பாலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. சோம்பல் முறித்த வண்ணம் சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். எல்லாம் புதிய முகங்கள். அப்பாடா வென்று பெரு மூச்செறிந்தான்.

வண்டி மதுரையை நெருங்க நெருங்க அவன் மனதிலிருந்த உத்ஸாகம் குறையத் தொடங்கிற்று. தன்னுடைய பணத்திற்கு வட்டி எவ்வளவு ஆயிருக்குமோ? செட்டியார் ஊரிலிருக்கிறாரோ? இல்லையோ? ஒரு வேளை எழெட்டு நாட்கள் வெளியில் தங்க நேர்ந்தால்? மதுரைப் பட்டிணத்திலே சோற்றிற்கா பஞ்சம், ஏதாவது ஒரு கோயிலில் தேசாந்திரி கட்டளை இல்லாமலா போய்விடும் என்று நினைத்தான்.

அவன் செட்டியார் வீட்டை யடைந்த பொழுது மணி பனிரெண்டு இருக்கும். தோம்பு துணியினால் உறை

யிட்ட அழகிய குதிரை வண்டி வாசலில் நின்று கொண் டிருந்தது. தெருத் திண்ணையைத் தாண்டி நடையில் நின்று, "செட்டியார் இருக்கிருரா?" என்று விசாரித்தான்.

"வெளியே போயிருக்கிருர். இதோ வந்து விடுவார்," என்ருள் ஒரு சிறு பெண்.

சற்று நேரத்திற் கெல்லாம் சுமார் முப்பது வயதுள்ள ஒரு செட்டியார் உள்ளே நுழைந்தார். "செட்டியார் எப்பொ வருவாரு," என்று கேட்டான்.

"செட்டியாரா, எந்த செட்டியாரைக் கேக்கறீங்க."

"மெய்யப்ப செட்டியாரைத் தாங்க."

"அவுக போயி மூணு வருசமாச்சே, நான் அவரு மகன்தான். உங்களுக்கு என்ன வேணும்?"

"இல்லே, அவரண்டை கொஞ்சம் பணம் கொடுத் திருந்தேன்."

"சீட்டு இருக்கா?"

"சீட்டு வீடு தீ பற்றி எரிஞ்சு போச்சுங்க."

"எத்தனை வருஷத்துக்கு முன்னே எவ்வளவு கொடுத் திருந்தே?"

"சுமார் ஆறு வருஷ மிருக்கும், ஒரு கார்த்திகை மாசம்."

"சரி, உன் பெயரை சொல்லி விட்டுப் போ. பேரேட்டு புஸ்தகத்தைப் பார்த்து வைக்கிறேன். நாளை இன்னேரத்துக்கு வா."

"அப்பொழுதுதான் அவன் மூளை பளிச்சென்று சுழன்றது. தான் செட்டியாரிடம் பணத்தைத்தன் சொந்த பெயரால் கொடுக்க வில்லை. ஏதோ ஒரு புனைப் பெயரைச் சொல்லி வைத்தான். ஆனல் அந்த பெயர் அடியோடு ஞாபகமே வரவில்லை. "ஐயையோ" என்று அலறியவன் திண்ணையை விட்டு கீழே யிறங்கினன் அவன். "என் னய்யா, பெயரைச் சொல்லி விட்டுப் போ" என்ருர் செட்டியார்.

"நாளைக்கு வருகிறேன்" என்று நடையைக் கட்டினன்.

"இவன் என்ன பைத்தியமா?" என்று நினைப்பவர் போல் புருவத்தைச் சுருக்கிக் கொண்டு பார்த்தார் செட்டியார்.

இரவு பத்து மணி வரையில் மதுரையிலுள்ள ஒவ் வொரு வீதியையும் வலம் வந்து கொண்டிருந்தான் அவன். கோயிலிலும் குளத்திலும், சந்தையிலும் யாரா வது ஒருவரை யொருவர் கூப்பிடமாட்டார்களா அதை ஒட்டியாவது அந்தப் பெயர் நினைவு வராதா என்று நினைத்தான். ஆனல் அந்தப் பாழும் பெயர் ஊரில் ஒரு வருக்குமே இல்லையா?

நேரம் செல்லச் செல்ல அவன் மனம் குழம்பத் தொடங்கிற்று. ஒரு காசா இரண்டு காசா ரூபாய் ஐயாயிரம்! அதை நம்பித்தானே ஜெயில் கஷ்டங்களை யெல்லாம் பொருட் படுத்தாமல் கல் உடைத்தேன் என்று நினைத்தவனை மனம் போனபடி போய்க் கொண்டிருந் தான் அவன்.

வைகை ஆற்றிலே வெள்ளம் கரை புரள ஓடிக் கொண்டிருந்தது. ஏதேதோ எண்ணமிட்டுக் கொண் டிருந்த அவன் அது ஆறு என்பதையாவது, வெள்ளம் வந்திருக்கிறது என்பதையாவது பொருட்படுத்தாமல் போய்க் கொண்டிருந்தான். கரை யோரம் வந்து கொண்டிருந்த அவன் நிலை தவறி தண்ணீரில் விழுந்தான். ஒரு முறை முழுகித் தலையைத் தூக்கினன். அப்பொழுது தான் அந்த பெயர் அவனுக்கு ஞாபகம் வந்தது. "ஐயோ காப்பாற்றுங்கள்......ஞாபகம் வந்து விட்டது நமச்சிவாயம் பிள்ளை, நமச்சிவாயம்," என்று கூச்சலிட் டான்; அவ்வளவுதான்!

'டபக்' என்ற ஒரு நீர்க்குமிழி.

வைகை நொப்பும் நுரையுமாய் ஒன்றுமே நடவாதது போல் ஓடிக்கொண்டிருந்தது.

ஸில்க்ஜாகெட்

ஸ்வாமிநாத ஆத்ரேயன்

இரவு மணி பதினொன்றும் ஆகிவிட்டது. அவன் இன்னும் தொந்திரவு பண்ணிக்கொண் டிருந்தான்! அவளுக்கும் குறும்பு தணியவில்லை!

வெடுக்கென விடுவித்துக்கொண்டு லைட்டைப் போட்டாள். பொங்கிச் சூழ்ந்த ஒளிவெள்ளத்தைக் கண்டு சிரித்தாள். அவன் சிரிக்கவில்லை.

அவனுக்குக் கொஞ்சம் அதிருப்திதான். அதை அவள் புறிந்துகொண்டு விட்டாள். அதற்காகச் சுணங்க மனமில்லாமல் மறுபடியும் சிரித்தாள்.

அவன் திரும்பித் தலையணையில் சாய்ந்தான். அவளும் அப்பாலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"இப்பொழுது நீ என்ன செய்யப் போகிறாய்?"—என்று எரிச்சலுடன் கேட்டான்.

"நானா?"...........என்று ஆரம்பித்தாள். என்ன பதில் சொல்வதென்று திகைத்துத் திரும்பிப் பார்த்தாள். சுவரோரமா யிருந்த அவனது பெட்டி திணிக்கப்பட்ட உடைகள் கொள்ளாமல் வாய் பிளந்து கிடந்தது. அவளுக்கும் உள்ளம்கொள்ளாமல் உவகை பூரித்திருந்தது. அந்தப் பெட்டியைப் பங்கீடு பண்ணினால்—மனதும் ஒருவாறு பங்கீடு அடையும்—என்று தோன்றியது.

சென்று பெட்டியைத் திறந்தாள். அந்தச் சத்தம் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான்.

"என்ன செய்கிருய் நீ ?"

"இதை எடுத்து ஒழுங்காக அடுக்கப் போகிறேன்."

"இப்பொழுதுதான் சமயம் பார்த்தாயோ ?"

அவள் சிரித்துக்கொண்டே பெட்டியைத் திறந்து ஒவ்வொன்ருக எடுத்து வெளியே போட்டுக் கொண்டிருந்தாள்.

அவளுக்கே ஆச்சரியமாக விருந்தது. அவனுக்கும் அவளுக்கும் கல்யாணமாகி இன்னும் ஒரு வாரமாக வில்லை. அதற்குள் அவளுக்கு எங்கிருந்து இப்படி.........

வயதாகியும் கல்யாணம் செய்துவைக்கத் தோது இல்லாத பெற்ருேர்கள் ஒருபுறம் சிணுங்க—அவளாகப் பட்ட வேதனைகள் செல்லரித்து விட்டன. பிறந்தது சாப்பிடுவதற்கும் மூச்சு விடுவதற்கும்—என்று விலங்கினக் கொள்கைக்கு மாருக மனுஷ்யத்தனம் பெற்றுவிட்ட பெருமையில் சிறுகச் சிறுகச் சலிப்பு - இதற்கு விடியாமூஞ்சித்தனம் என்று பட்டப் பெயர் வைத்து அவ்வளது தோழிகள் - கலியாணமானவர்கள் படுத்தி வைத்த பாடு—இதெல்லாம் நீங்கி அவளுக்கு வாய்த்த இந்த வாழ்க்கை !

அப்பொழுதெல்லாம் மனைவியாகி விடுவது வாழ்க்கையில் ஒரு உரிமை. அதை அடையாவிட்டால் வாழ உரிமை கிடையாது என்பதை அவளால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. கொஞ்ச நாட்களுக்குப் பிறகுதான் அது ஒரு தேவையென்பது புலப்பட்டது. அப்பொழுது அவள் பட்ட வேதனை—!

ஆனல் அவளது கற்பனையில்கூட மனைவியாகிவிட்ட பிறகு ஏற்பட்ட இன்பம்-அவ்வளவு காணவில்லை.

கல்யாணம் ஆன அன்று அவள் தாயாரும் மற்றவரும் சூழ்ந்து நிற்க, அவளது மாமி வந்து, "நீ கொடுத்து வைத்தவள்," என்று ஆசீர்வாதம் செய்தாள்; அப்

பொழுது பக்கத்திலிருந்த அவளது தாயார் அதை ஆமோதித்ததாகத் தெரியவில்லை.

அதை அவள் கண்டுகொண்டாள். அதற்கு காரணம் அவளுடைய கணவன் மூத்த தாரத்தைத் தள்ளிவைத்துப் பெண் தேடினன். அவனுக்கு அவள் அகப்பட்டாள்; என்ன இருந்தாலும் சமூகத்தின் கண்ணில் அவளது நிலைமை அவ்வளவு உயர்வாகத் தென்படாததுதான். ஆனல் என்ன? இன்று அவள் இருக்கும் நிலைமையில் உலக அபிப்பிராயங்களுக்கு எள்ளளவும் மதிப்பில்லை. துன்பப்பட்டால் அதை உண்மை என்று உணரவே உலகம் தயங்கும். உணர்ந்தாலும் அனுதாபம் காண்பிக்கும். அவ்வளவுதானே? அதைப்பற்றி இன்றைய ஸௌக்ய நிலைக்குக் கொண்டு வைக்க சக்தியற்ற உலக அபிப்பிராயத்தைப்பற்றி கவலைப்பட அவள் தயாரில்லை.

அவளது மலர்ந்த உள்ளம்போல் பெட்டியும் மலர்ந்திருந்தது. அவளது எண்ணங்கள் போல் உடைகள் தனித்தனியே வெளிப்பட்டன. பெட்டியின் அடியிலிருந்து கடைசியாக வெளிப்பட்டது ஒரு ஸில்க் ஜாக்கெட். புத்தம் புதிது. கண்ணைக் கவர்ந்தது.

"இது இன்னும் எதற்கு உங்கள் பெட்டியிலிருக்கிறது?" என்று வினவினள்.

"எது?" என்று திரும்பினன்.

அவள் அதைத் தன் மார்பில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சாந்தி! (இது அவன் வைத்த பெயர்) நீ அதைத் தொடாதே," என்று எழுந்து வந்தான். அவன் குரல் பதறிற்று. சாந்தி நடுங்கிப் போய் விட்டாள்.

பின் சமாளித்துக் கொண்டு, "என்? எனக்குத் தானே?" என்று கேட்டாள்.

"உனக்கில்லை அது," என்று பிடுங்கி உள்ளே வைத்தான்.

"பின் யாருக்காகவாம்?" என்று சற்று முணகலுடன் கேட்டாள்.

" சாந்தி! நீயும் மூணக ஆரம்பித்து விட்டாயா? சீ," என்று எழுந்திருந்தான். அவனது முகத்தில் ஏற்பட்ட அருவருப்பைக் காண அவளுக்குச் சகிக்கவில்லை.

அவன் எழுந்திருந்து சென்று படுக்கையில் உட்கார்ந் தான். அவளும் மௌனமாக மற்ற உடைகளையும் எடுத்து அழகாக அடுக்கினுள் பெட்டியில். அதைவிட மனதில் தோன்றிய அளவு கடந்த ஆவலாதிகளை அடக்கி அழுகையைத் தேக்குவதற்குத்தான் அவளது முழு ஊக்க மும் சென்றிருந்தது. கீழுதடுகளைப் பற்களால் கடித்துக் கொண்டவண்ணம் உடைகள் எல்லாவற்றையும் அடுக்கி விட்டாள். பெட்டியில் இன்னும் பாதிக்குமேல் இடம் காலி.

அவளுடைய மனதும் பாதிக்குமேல் வெறிச் சென் றிருந்தது. பெட்டி வாய் மூடாமல் திணறிக்கொண் டிருந்த நிலை எவ்வளவுக்கெவ்வளவு உற்சாகத்தை அளித் ததோ-அவ்வளவுக்கவ்வளவு பெட்டியின் அடக்கம் உற் சாகப் பங்கத்தை அளித்தது. என்ன செய்வது? பெட்டி யைச் சத்தம் செய்யாமல் மூடினுள். மெதுவாக எழுந் திருந்து கட்டிலண்டை வந்தாள்.

கட்டிலில் உட்கார்ந்திருந்தவன் அவள் கையைப் பிடித்தான். அவள் இழுத்துக் கொண்டு மறுபடியும் நகர்ந்தாள்.

" ஏன்?"

" இருங்கள், லைட்டை அணைத்துவிட்டு வருகிறேன்," என்ருள் சாந்தி அறை வார்த்தையும் கால் வார்த்தையு மாக.

" வேண்டாம். நீ உட்கார் இப்படி ...."

அவள் அவன் அருகில் உட்கார்ந்தாள். அவளது கைகளிரண்டையும் பிடித்துக்கொண்டான்.

" சாந்தி! உனக்குச் சொல்லட்டுமா? ஏன் அது உனக்கில்லை யென்று ...."

அவளுக்கு அதை அறிய வேண்டுமென்று ஆவலே இல்லை. எப்படியாவது சற்று முன் ஏற்பட்ட நெருக்கடி

தீர்ந்தால் போதும் என்றுதான் இருந்தாள். அதற்குத் தான் அவனும் வழி தேடுகிறுன் என அறிந்து ஆவலை வரவழைத்துக் கொண்டாள்.

"சொல்லுங்கள்."

"அதை நான் கல்யாணிக்காக வாங்கினேன்."

கல்யாணி அவனுடைய மூத்ததாரம் என்று புரிந்ததே ஒழிய அவள் அகன்றபிறகு அவள் ஸ்தானத்தில் வந்த தனக்கு ஏன் அது கிடையாது? என்பதற்குப் போதிய சமாதானமாக அது துலங்கவில்லை.

"எவ்வளவு ஆசையாக அதை வாங்கி வந்தேன் தெரியுமா? அதைப் போட்டுக்கொள்ள அவள் கொடுத்து வைக்கவில்லை," என்றுன் மறுபடியும்.

மற்ஞெரு சமயமா யிருந்தால் சாந்தியினுடைய பெண்மை இதற்கொரு முணகலை விடுத்திருக்கும். அவள் பூரணப் பொறுமையுடன் அவனுடைய முகத்தை உற்று நோக்கினுள்.

"என்ன சாந்தி! ஸ்வாரஸ்யமாகக் கேட்கமாட்டேன் என்கிருயே!' என்று குலுக்கினுன் அவளது கைகளை—வளையல்கள் கூசாமல் கொஞ்சின. அது ஊட்டிய உற்சாகத்தினுல் மறுபடியும் பேச ஆரம்பித்தான்.

"அவளிடம் எவ்வளவு ஆசை தெரியுமா? எனக்கு!"

சாந்திக்குத் தெரிந்தது. தன்னிடம் வைத்திருக்கும் ஆசையின் அளவைக்கொண்டு அவனுடைய பேச்சில் துளிக்கும் ஆர்வத்தைக் கொண்டு ஒருவாறு அறிய முடிந்தது.

ஆனுல் அவ்வளவு ஆசை வைத்த கல்யாணியை ஏனிப்படி......? அதன் துப்புத் துலங்குமா இப்பொழுது?

"சாந்தி! கல்யாணி ரொம்ப நல்லவள்தான். அவளுக்கும் என்னிடம் ரொம்ப ஆசை."

இதைச் சாந்திக்கு அவன் சொல்லவே தேவையில்லை. அவளிடம் பழகிய பிறகு எவளா யிருந்தாலும் சரி, எவ்வளவு பணக்கர்வமோ அழகுக் கர்வமோ இருந்தாலும்

சரி. பெண்ணுகப் பிறந்தவள் அவளை நேசிக்காமல் இருக்க முடியாது.

"இருந்தாலும் பார் சாந்தி! பாலைக் காய்ச்சி அதை ஊற்றி ஆற்றி ஆற்றி தனித்துப் பொங்கிய நுரையையும் பாலின் திரவத்துடன் கலந்துவிட்டால் ஏற்படுமல்லவா மிதப்பு அந்த மிதப்பில் பால் ருசியாகத்தா னிருக்கும். டம்ளரும் நிரம்பி வழியும். ஆனல் அதைச் சீப்பிச் சாப்பிட இடங் கொடுக்காது. அப்படி ஆகிவிட்டது அவளுடன் என்னுடைய வாழ்க்கை. அவளுடைய மிதப்பு எனக்கு இன்பத்தை அளிப்பதற்கு பதிலாக என் ஆண் மைக்கு அங்குசமாகி விட்டது."

"என்னவோ சொல்கிறீர்களே!" என்ருள் சாந்தி. அவளுடைய பேச்சின் ஆழத்தைத் தொட முடியவில்லை.

"சாந்தி! அவளுக்காக இந்த ஜாக்கெட்டை வாங்கிக் கொண்டு வந்த அன்று ஒரு பிடிவாதம் பிடித்தாள். நாம் தனியாகப் போய்விடுவோம். உங்கள் தாய் தந்தையரை விட்டுவிட்டு வாருங்கள். ஸ்வயேச்சையாக இருப்போம்" என்று ஆரம்பித்தாள். இது வெகுநாள் பாட்டு. அவ்வப்பொழுது "சரி சரி" யென்று நான் அதை கவனிக்காமலேயே இருந்துவிடுவேன். அதற்கு ஒருவிதம் முடிவு சொன்னல்தான் அந்த ஜாக்கெட்டைப் போட்டுக் கொள்வேன்—என்று பிடிவாதம் பிடித்தாள்..."

இதைச் சொல்லும்பொழுது அவளது வேதனை சொற்களிலே குமுறிற்று. சாந்தி திகிலுடன் அச் செய்திகளை விழுங்கினுள்.

"சாந்தி! என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தேன். என்னவோ அவள் அந்த ஜாக்கெட்டைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று அவ்வளவு ஆசை எனக்கு. அதை அவள் கொஞ்சம்கூட லட்சியம் செய்யாமல் பிடிவாதம் பிடித்தாள். சீ என்று உதைத்து வெளியில் பிடித்துத் தள்ளிவிட்டேன், அவ்வளவுதான்..." என்று திணரி முடித்தான்.

சாந்தியின் கைகளைப் பிடித்துக்கொண்டிருந்த அவனது கைகள் துடித்தன. சாந்தி தன்கைகளை அவன்

பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு அவனது கைகளைத் தான் பிடித்துக்கொண்டாள். அந்த வேகத்தில் அவன் தன்னையும் உதறித் தள்ளினாலும் தான் பிடியை விடாமல் பிடித்துக் கொள்ளலாம் அல்லவா? என்று எண்ணம் போலும் அவளுக்கு.

"சாந்தி! அவள் அப்படிச் செய்யலாமா? நீ சொல்லு," என்று ஆர்வத்திலும் பரபரப்பு மிகுந்து கேட்டான்.

"போனால் போகிறாள் அவள்; வருத்தப்படாதீர்கள்."

"அதற்கில்லை சாந்தி! அவள் அப்படிச் செய்தது எவ்வளவு தப்பு?"

"மிகவும் தப்பு"—என்றவள் உணர்ச்சிப் பெருக்கில், "இப்பொழுது நான் போட்டுக்கொள்கிறேன் பாருங்கள்," என்று எழுந்திருந்தாள்.

அவன் அவளைப் பிடித்திழுத்து வைத்துக்கொண்டு, "வேண்டாம்! அது உனக்கில்லை. அவளுக்காக வாங்கியது. அவள் கொடுத்து வைக்கவில்லை...அது பெட்டியிலேயே இருக்கட்டும்," என்று சாய்ந்தான் அவளுடைய தோளில். அவனுடைய பெருமூச்சின் உஷ்ணத்தை அவளால் தாங்கமுடியவில்லை.

"எனக்குத் தூக்கம் வருகிறது," என்றாள் அவள்.

"நீ தூங்கு."

"நீங்கள்......"

"புழுக்கமாக இருக்கிறது. நான் சற்று மாடிக்குப் போய்விட்டு வருகிறேன்."

"நானும் வருகிறேனே!"

"வேண்டாம...அங்கு பனி" என்று அவள்மேல் போர்வையை இழுத்துப் போர்த்திவிட்டுச் சென்றான்.

அதிவிரைவில் உங்கள் நகரில் எதிர்பாருங்கள்

M.V. ராஜம்மா • M.J. ஆண்டாள்
சௌதாமினி • ராஜேஸ்வரி
B.R. பந்துலு • T.R. ராமச்சந்திரன்
S.V. சுப்பையா • T.K. உபேந்திரா
தோடி கண்ணன் நடித்த...

ஸ்டார் கம்பைன்ஸ் & ப்ரகதி பிக்சர்ஸ் தயாரித்த

விஜயலக்ஷ்மி

(தமிழ்)

டைரக்ஷன்:
P. புல்லையா B.A.

கதை, வசனம்:
A.T. கிருஷ்ணஸ்வாமி B.A.

ஸ்டுடியோ: **ப்ரகதி**

For Particulars:
STAR COMBINES LTD. MADRAS.2

[நீண்ட காலமாகத் தமிழ் நாட்டு நாடக மேடையின் மீது ஒரு பழி சுமத்தப்பட்டு வருகிறது. அதாவது, இப்பொழுதுதான் தமிழ் நாட்டு நாடகக் கலையில் சிறிது ஹாஸ்ய ரஸம் கலந்திருப்பதாகச் சில விமரிசகர்கள் சாதிக்கிறார்கள். என்னைக் கேட்டால் அந்தக் காலத்து நாடகக் கலையிலேயே ஹாஸ்ய ரஸம் பெரிதும் இடம் பெற்றிருந்தது என்பேன். "எப்படி?" என்று கேட்கிறீர்கள்? இதோ. அதற்காகத்தான் பின் வரும் நாடகம் நடக்கிறது.]

காட்சி 1.

இடம் : இலங்கையில் போர்க்களம்.

இராவணன் பயங்கரமான ஆகிருதியுடனும், கிருதா மீசையுடனும் கையில் கதாயுதத்தை ஏந்தி,

“அண்ட சராசரங்களும் கிடுகிடென்ன” என்று வீர நடை போட்டுப் பாடிக் கொண்டே ஹார்மோனியப் பெட்டியை நெருங்குகிறான். அவனுடைய புஜபல பராக்கிரமத்தினால் அண்ட சராசரங்கள் ‘கிடு கிடு’ என்று அதிரா

விட்டாலும், தபேலாக்காரரின் புஜபல பராக்கிரமத்தினால் மேடை ‘தட தட’ வென்று ஆடுகிறது.

இராவணன் : ஹஹ், ஹஹ், ஹா! (அட்டகாசச் சிரிப்பு) என்ன ஆச்சரியம்! ஒரு மானிடப் பதர்—அற்ப ஆயுள் படைத்த மானிடப் பதர்—நம்மை என்ன பாடு படுத்தி விட்டான்! இந்திராதி தேவர்களை யெல்

லாம் கதற அடித்த என் மைந்தன் இந்திரசித்தையே (குர லில் இப்பொழுது ஒரு துளி அழுகை கலந்திருக்கிறது) அந்த நராதமர்கள் வேலை தீர்த்து விட்டார்களே! (சற்று மௌனம்—பிறகு பெரு மூச்சு) கடந்து போனதை யெண்ணி வருந்துவது மதியாகாது! வீரப் போர் புரிந்து வீர சொர்க்கம் புகுந்த என் வீர மைந்தனை நினைத்து வருந்துவது என் போன்ற வீரனுக்கு அழகில்லை. ஹா! ஹா! இதோ அந்த மானிடப் பதர்களை அழிப்பேன்.

வீரப் பார்வையுடன் நிற்கிறான். சபையில் கரகோஷ ஆரவாரம்.

சபையில் ஒருவர்: ஒரு பாட்டு!

உடனே உற்சாகத்துடன் இன்னும் அவருடன் சேர்ந்த அநேகர் "பாட்டு! பாட்டு" என்று கத்து கிறார்கள். இராவணன் பாட ஆரம்பிக்கிறான்.

"ஸீதம்ம மாயம்ம ஸ்ரீராமுடு........."

பாட்டு பிரமாதப்படுகிறது. ஸ்வரப்பிரஸ்தாரங்களு டன் பாட்டை முடிக்கிறான். பலத்த கரகோஷம்.

காட்சி 2.

இடம்: காரிருள் கவிந்த கானகம்.

கட்டுண்ட கையுடன் வெட்டுப்பாறையில் கோவலன் கதறும் காட்சி.

"கற்பிற் சிறந்த எந்தன் கனியே! ஏ!"

கோவலனின் சோக வெள்ளம் ஆலாபனையாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அரசனின் கட்டளையை நிறைவேற்றி வைக்க வந்த ஈவிரக்கமற்ற கொலையாளிகள் அவனுடைய பாட்டைப் பொறுமையுடன் நின்று கேட் டுக் கொண்டிருக்கிறார்கள். பாட்டு முடிகிறது. ரஸிகர் களுக்குப் பாட்டிலேயே எல்லாம் விளங்கி விடுமா, என்ன? பேச ஆரம்பிக்கிறான் கோவலன்.

கோவலன்; கற்பிற் சிறந்த கண்ணகியே! அக்கினி சாட்சியாக, ஆகாசவாணி பூமாதேவி சாட்சியாக, உன்

மலர்க்கரம் பிடித்து, 'கனவிலும் உன்னைக் கணமும் பிரியேன்!' என்று வாக்குக் கொடுத்த நான், உன்னிடம் சொல்லிக் கொள்ளாமலே பிரிகிறேன்! பதிவிரதா சிரோமணியாகிய உன்னை அலட்சியம் செய்த பாபம் தான் எனக்கு இப்படிக் கோர மரணமாகச் சம்பவித்

திருக்கிறது. கண்ணகி, ஆறிலும் சாவு, நூறிலும் சாவு! ஆனால், பொய்யன் என்ற பெயருடன்—கள்ளன் என்ற பெயருடன்—இராஜ தண்டனை அடைந்து கொலைகாரர் கையில் கோவலன் மரணமடைந்தான்' என்று உலகம் என்னை ஏசும் என்பதை நினைக்கும்போதுதான் என் நெஞ்சம் கூசுகின்றது. மார்பு பிளக்கிறது! ஹா! கண்ணகி! கண்ணகி!

சிரம் குனிகின்றான். கொலைகாரர் வெட்டுகின்றனர். சபையில் சோக நாதம்.

சபையில் ஒருவர்: த்ஸோ! த்ஸோ! அருமையான நடிப்பு! ஆகா! ஒன்ஸ் மோர்!

உடனே கொட்டகையின் நாலாபுறங்களிலிருந்தும் 'ஒன்ஸ் மோர் !' என்னும் ஆரவாரம். வெட்டுண்ட கோவலன் எழுந்திருக்கிருன். மீண்டும் ஒரு முறை முதலிலிருந்து பேசி நடித்து மீண்டும் வெட்டுண்டு வீழ்கிருன்.

காட்சி 3.

இடம் : காட்டு வழி.

பட்டினத்தடிகள் விபூதி பூசிய மேனியுடன் தோன்றுகிருர். சற்று முன் இல்லறத்திலிருந்தபோது வழ வழ வென்று காணப்பட்ட அவர் முகம் இப்போது ஒரு முழ நீளம் தாடி, மீசையுடன் காட்சி யளிக்கிறது.

பட்டினத்தடிகள் :

"பூணும் பணிக் கல்ல
பொன்னுக்குத் தானல்ல
பூமிதனைக் காணும் படிக்கல்ல......................

....
சாணும் வளர்க்க அடியேன் படுந் துயர்
சற்றல்லவே ?"

இரண்டு சாணுக்குமேல் இருக்கும் அடிகளின் பருத்த தொந்தியை அவர் ஒரு சாண் என்று கூறியதை இங்கே அவை யடக்கமாகக் கொள்ள வேண்டும்.

அன்பே உருவான ஆண்டவனே ! நான் இந்த உலகத்தில் அல்லலுற்று அவதிப் படுவதெல்லாம் பொன்னபரணங்களைப் பூணும் பொருட்டல்ல ; பணத்தின் மேல் ஏற்பட்ட ஆசையினுல் அல்ல ; நல்ல அழகு வாய்ந்த மங்கையர்களுக்காகவும் அல்ல—பின் நான் என் மனங் கலங்கி வருந்துகின்றேன் ? இந்த ஒரு சாண் வயிற்றுக்காகத் தான் இந்த வையக முழுவதும் அலைந்து திரிகின்றேன் !

பாவத்துடன் பேசி முடிக்கிருர். சபையில் பலத்த கரகோஷம். பட்டினத்தடிகளின் நடிப்பில் தம்மையே மறந்து சொக்கிப்போன ஒரு ரஸிகர் ஒரு காஷ்மீர் சால்வையைப் பரிசாக அளிக்கிருர்.

பரிசைப் பெற்றுக் கொண்ட பட்டினத்தடிகளுக்கு மீண்டும் ஒரு கரகோஷம்! "பூணும்பணிக் கல்ல" என்று கதறிச் சபையோரையும் விரக்தியடையச் செய்த வீரத் துறவியான அடிகள் அந்தப் பரிசைப் பெற்றுக் கொள்ளக் கொஞ்சமாவது 'பிகு' செய்து கொள்ள வேண்டுமே! ஊஹூம்! கிடையவே கிடையாது?

காட்சி 4.

இடம் : நந்தவனம்.

ராஜகுமாரன் சோகங் குடி கொண்ட முகத்துடன் உலாவுகிறான்.

ராஜகுமாரன் : ஆகா, நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது சரியா யிருக்கிறது! அஞ்சுகத்தை விட்டு அரைக் கணமும் பிரிந்து அறியாத நான் இன்று அவளை விட்டுப் பிரிந்து ஒருவாரமாகியும் உயிருடன் இருக்கிறேனே! காதலியைக் காண வெற்றியுடன் திரும்புவேன் என்று நினைத்திருந்தேனே! கடைசியில் பகைவனல் சிறை பிடிக்கப்பட்டுக் கைதியாக அல்லவோ இருக்கிறேன்! ஹா! என் கண்மணி அஞ்சுகம்! பாலும் நீரும் போலவும், பரீட்சையும் பயமும் போலவும், பாட்டும் சுருதியும் போலவும், நீயும் நானும் இணை பிரியாமல் இருப்போம் என்று நினைத்தேனே! (குலுங்கக் குலுங்க அழுதுவிட்டுச் சற்று யோசனை) ஆம். ஒரு குதிரைமட்டும் இப்பொழுது யாராவது கொடுத்து உதவினல் நான் என் ஆருயிர்க் காதலியிடம் எப்படியாவது சென்று விடுவேன்!

(யோசித்தவண்ணம் உலாவுகிறான்.)

நாடகம் பார்ப்பவர்; (அவர் நடிப்பில் வெறுப்புக் கொண்டு) ஏன் உமக்கொரு கழுதை போதாதா?

ராஜகுமாரன்: பேஷாய்ப் போதும்! நீ மேடைக்கு வா!

(சபையில் ஒரே ஆரவாரச் சிரிப்பு.)

ருக்மாங்கதன்

தமிழ்

ஜி.என்.பி. • யோக-மங்களம்
P.A.பெரியநாயகி • P.A.ராஜாமணி
L.நாரயண ராவ் • C.T.ராஜகாந்தம் • M.S.சம்பந்தம்

டைரக்ஷன் P.S.V.அய்யர்

ஸ்டுடியோ ஜெமினி

எம். எஸ். கமலா

தேவர்கள் முதல் மானிடர்கள் வரை, மகிழ்ந்து மனம் ஒத்து, ஆனந்தித்த அதிஅற்புத கல்யாணம் நடந்தது மிதிலையில். விசுவாமித்திருடன் தன் அருமந்த மைந்தர்களை அனுப்பச் சற்றுத் தயங்கிய தசரதருக்கு, கருணையுள்ள தன் கண்களைத் திருப்பித் திருப்தியை அளித்தார் குல குரு வசிஷ்டமஹாரிஷி. ராம லக்ஷ்மணர்களின் சகாயத்தால் யாகரக்ஷணைப் பெறவிரும்பி, ரகுநந்தனர்களைத் தம்முடன் ஆசிரமத்திற்கு அனுப்பும்படி கேட்டார் ராஜரிஷி விசுவாமித்திரர். சாதாரணமாய் பிள்ளைகளைப்

கைகேயியின் பெருந்தன்மை

பெற்ற தாய் தந்தையர்களுக்கே தங்கள் குழந்தைகளை யாராகிலும் அழைத்துச் செல்ல அழைத்தால் சற்று அச்சம் ஏற்பட்டு, கேட்டவர்கள் மேல் அருவருப்பும் தோன்றும். அதிலும் அறுபதினாயிரம் வருடங்கள் சந்தான பாக்கியமில்லாது எத்தனையோ கஷ்டப்பட்டு யக்ஞ யாகங்கள் செய்து பெற்ற அழகுக் குவியல்களான மைந்தர்களை அழைத்தால் எக்கிழத் தந்தைக்குத்தான் தயக்கம் ஏற்படாது?

விசுவாமித்திரருடன் சென்ற ராம லக்ஷ்மணர்கள் தவமுனிவரின் யாகத்தை ரக்ஷித்தனர். அச்சிறுவர்கள் தனக்குச் செய்த மஹோபகாரத்திற்கு மகிழ்ந்து மாமுனி 'பலாதிபல' என்ற மந்திரோபதேசம் செய்ததுமன்றி, மிதிலைக்கு அழைத்துச் சென்று மைதிலியின் சுயம்வர மண்டபத்தில் நிறுத்தி ஈசன் வில்லை முறிக்கச் செய்தார். சீதையை மணக்க பந்தயப் பொருளாய் வைக்கப்பட்ட அந்த வில்லை அசைக்க முடியாமல் அசுரர்களே திணறிய போது அறியாப் பாலகன் போல் வந்து நின்ற அந்த சூரியகுலச் சிறுவன் அரை க்ஷணத்தில் முறித்து விட்டான்.

ஆனந்தத்தில் உளம் பூரித்த விதேஹநாதன் விடுத்தான். ஓலையை அயோத்திக்கு, தசரத சக்கிரவர்த்தியின் நான்கு மைந்தர்களுக்கும், தன் பெண்கள் இருவரையும், தன் சகோதரனின் பெண்கள் இருவரையும்கொடுப்பதாய்.

தன் பிள்ளைகளின் திருக் கலியாணங்கள் முடிவுற்ற பின், பிள்ளைகளுடனும், நாட்டுப் பெண்களுடனும் அயோத்திக்கு வந்தார் ஆனந்தமாய் தசரதர். தானும் ஜனக்ராஜன் செய்ததைப் போல் ஓர் மங்கள நாளை செய்ய வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. என்ன செய்யலாமென்று யோசனை செய்தார். ஸ்ரீராம சந்திரனுக்கு இளவரசு பட்டங் கட்டலாமென்று தோன்றியது

★

அதற்குள் பரதன் தாத்தாவையும், தாய்மாமன் களையும் பார்த்து வரலாமென்று சத்துருக்கனனுடன் கேகய தேசம் சென்றான். இது தான் தக்க சமயமென்று நினைத்த தசரதர் தான் பிழைத்திருக்கும் போதே ராமச் சந்திரனைச் சக்கிரவர்த்தியாய் செய்ய நினைத்தார். பாபம்.

இனி தாமதித்தால் முடியாதென்று அவர் மனதில் தோன்றவே, தன் நிச்சயத்தை செய்கையில் காட்டத் தொடங்கினர். மந்திரிகளுக்கு தன் உத்தேசத்தை வெளியிட்டார். மந்திரிகள் சரியென்று தங்கள் சந்தோஷத்தை வெளியிட்டனர். தன் பிரஜைகள் சிற்றரசர்கள் மற்ற அரசர்கள் எல்லோரையும் அழைக்கச் செய்தார். ஆனல்...கேகய அரசனையும், ஜனக மஹாராஜனையும் அழைக்கவில்லை.

சபையைக்கூட்டினர். நிரைந்த சபையிலமர்ந்து ஸ்ரீ ராமச்சந்திரனுக்குப் பட்டம் கட்ட தனக்கு உத்தேசமிருப்பதாகச் சொல்லாமல் சொல்லி, சபையோர்களின் வாயாலேயே ஸ்ரீ ராமச்சந்திரனுக்குப் பட்டம் கட்ட வேண்டுமென்று சொல்லச்செய்தார். ராஜதந்திரத்தில் அறுபதினயிர வருட அனுபவ மல்லவா ? எல்லோரும் ஒரு முகமாய் தங்கள் ஆனந்தத்தை வெளியிட்டனர்.

“சுபஸ்யசீக்ரம்.” ஆனல் நாளைக்கே பட்டாபிஷேகம். அதற்கு வேண்டியதெல்லா வற்றையும் விடிவதற்குள் ஏற்பாடு செய்து கொள்ளும்படி வசிஷ்டரிடம் சொல்லி விட்டார். தசரதரின் ஆனந்தம் உச்சநிலையை அடைந்து விட்டது. பச்சிளம் குழந்தைபோலானார். பழுத்த ராஜ சேகரர், தன் அன்பு மைந்தன் ராமச்சந்திரனைக் கட்டி அணைத்து, “ராமா! உனக்கு நாளைக்குப் பட்டாபிஷேகம்” என்றார். ராமச்சந்திரர் நகைத்தப்படி விடைபெற்றுச் சென்றார்.

மறுபடியும், “உடனே ராமச்சந்திரனை வரச்சொல்,” என்று மந்திரி சுமந்திரனுக்கு உத்திரவிட்டார். ராமச் சந்திரர் வெட்கமடைந்து, தந்தையருகில் சென்று வணங்கி நின்றார்.

“ராமா! தூரதேசத்திற்குச் சென்றிருக்கும் உன் தம்பி பரதன் எதுவரை வராமலிருக்கிறானோ அதுவரை உனக்கு பட்டாபிஷேகத்திற்கு உகந்த காலமென்று தோன்றுகிறது,” என்றார்.

(அயோத்தியா காண்டம். ஆறும் சர்க்கம். 25.ம் ஸ்லோகம்

ஸ்ரீ ராமச்சந்திரன் இச்சுப செய்தியைத் தாயாரிட மும், ஸீதையிடமும், சுமித்திரையிடமும், லக்ஷ்மணன் முத லியவர்களிடமும் சொன்னான். அனைவரும் அளப்பறிய ஆனந்தமடைந்தனர்.

அயோத்திமா நகர் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந் தது. ராமர் பட்டாபிஷேகச் செய்தி மின்சாரவேகத்தில் அயோத்தி ஜனங்களுக்கு எட்டியது. ஜனங்கள் உற்சா கத்துடன் கோலாகலமாய் நகர் முழுவதும் சுற்றிக் கொண்டு தத்தம் வேலையில்லாழ்ந்திருந்தனர். தான தர்மங் கள் இடைவிடாது நடைபெற்றன. கைகேயிக்கு இவ் விஷயம் ஒன்றும் தெரியாது. கைகேயியின் பணிப்பெண் ணான மந்தரை உப்பரிக்கைமேல் நின்று அயோத்தியில் உற்சாகமாய் பறைசாற்றுவதை அறிந்தாள். எப்பொழு தும்வெளியில் வந்து தானதர்மம் செய்யாத கௌசல்யை இன்று அளவற்ற தானம் செய்கிறாளே! என்று ஆச்சரி யத்துடன், பக்கத்திலிருந்த மற்றோர் பணிப் பெண்ணைக் கேட்டாள். பணிப்பெண் பட்டாபிஷேக நற்செய்தியைச்

சொன்னதும் மந்தரை உக்ரசண்டியைப்போல் குதித்தாள். க்ரோதாக்னியால் சுடப்பட்டவளாய் கைகேயியிடம் ஓடோடி வந்தாள்.

கைகேயி தன் சயன அறையில் சப்ரமஞ்சத்தில் படுத்து ஏதோ ஆனந்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

"அறிவில்லாதவளே! எழுந்திரு!! ஏன் படுத்திருக்கிறாய்? உனக்கு இப்பொழுது பெரிய அபாயம் காத்து நிற்கிறது. இனியும் வெகு துக்கங்கள் நேரப்போவதை அறியாமல் ஏன் இருக்கிறாய்," என்று திடீரென்று சொல்லவே, கைகேயி ஒன்றும் புரியாமல் அக்ஞான சிசு தன் தாயின் முகத்தைப் பாவா பாவமற்றுப் பார்ப்பதைப் போல் பார்த்தாள் நிர்மலமான பார்வையுடன்.

மந்தரை அவள் நிச்சலபார்வையில் தன் பொறுமையை இன்னும் அதிகமாய் இழந்தவளாய்,

"அடியே, கேகா! உண்மையாய் நீ உன் அகமுடையான் பிரியத்தை இழந்தவள். மேலுக்குத்தான் நீ சகல சௌபாக்கியங்களுக்கும் இருப்பிட மானவள்போல் தென்படுகிறாய். நீயே சொல்லிக்கொண்டிருந்தாய் தற்பெருமையுடன் "எல்லாச் சலுகையும் என்னுடையவைதான்" என்று. இப்பொழுது வேனிற்கால ஆற்று வெள்ளம் போலாகிவிட்டது. உன் பாக்கியமெல்லாம் நாசமாகப் போகிறது," என்றாள்.

கோபத்தின் உருவமும், பாபத்தையே செய்ய விரும்புபவளுமாகிய மந்தரையின் சுடுசரங்களைக்கேட்ட கைகேயி மனத்தாங்கலுடன்,

"மந்தரா! எனக்குச் சுகமில்லையா? என் முகத்தில் துக்கக்கீற்றுகள் விழுந்து விட்டதினால் நீ அதிகமாய் வேதனைப்படுகிறாயென்று தெரிகிறது. அப்படித்தானே!" என்றாள் பரிதாபமாய் கைகேயி.

சமயத்திற்கேற்றபடி பேசும் மந்தரை, சினங் கொண்டிருப்பினும் சிந்தையுருகும்படி கனிந்துபேசும் கைகேயியைப்பார்த்து. "கைகேயி! ராணியாகிய உனக்கு ஈடுசெய்ய முடியாத தீங்கு செய்து, உன்னை அடியுடன்

தாழ்த்த பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன,'' என்றாள்.

அதற்கு கைகேயி ஒன்றும் சொல்லாமலிருக்கவே, அவளை அழும்படிசெய்து, ராமன்மேல் விரோதமும் தோன்றும்படி, "தசரதமகாராஜர் ராமச்சந்திரனுக்குப் பட்டம் கட்டப்போகிறாராம்......'' என்று அவள் முகத்தை உற்றுப்பார்த்தாள்.

அம்முகத்தில் நீர் நிரம்பிய குடத்தைப்போன்ற ஆழ்ந்த அமைதியும், கனமான கம்பீரமும் பிரகாசிக்கவே, மிதியுண்ட சர்ப்பம்போல் சீறியபடி.

"ஏ மஹாராணீ! நான் எப்பொழுதும் உன் உயர்வையே விரும்புபவளாதலால் இப்படி நடப்பதை யறிந்ததும் பயத்துடன் துக்கம் மீறிக்கொண்டுவர, உனக்கு வரப்போகும் அபாயத்தை நீக்கும் பொருட்டு இவ்விடம் வந்தேன்,'' என்றாள்.

கைகேயி மந்திரையின் மதிமயக்கத்தைக் கண்டு மருளாமல் நகைத்தாள்.

"கைகேயி! உனக்குக் கஷ்டம் வந்தால் எனக்குக் கஷ்டமம்மா! நீ சந்தோஷப்பட்டால் எனக்குச் சந்தோஷம், இதில் சந்தேகமே இல்லை.........''

"...............................''

"என் கண்மணி! நீ அரசகுலத்தில் பிறந்தாய்!! மஹாசக்ரவர்த்தியான தசரதரின் அன்பு மனைவியாக இருக்கும் உனகது...............இமமாதிரி. ....த்ரோகம்............இந்த அரசர்களின் நடத்தையே............ அதிவிசித்திரம்..............''

அப்பொழுதும் கைகேயி அசைவற்ற கற்சிலைபோல் இருக்கவே...........,

"உன் கணவன் தசரதன் வாயால்தான் தர்மத்தைப் பறைசாற்றுகிறான். சுபாவத்தில்.........ரகசியமாய்...... தீங்குகள்தான் செய்வான். மேலுக்கு அதிக அன்பாய் பேசுகிறான். மஹா க்ரூரன் நீதான் கள்ளம் கபட மறியா

தவள். அதனல்தான் அவன் நடிப்பையெல்லாம் சத்திய பென்று நப்புகிருய். உன்னை அவன் மோசம் செய்கிருன்.'

கைகேயி தன் அழகிய கண்களை அகலவிழித்து ஆச்சரியத்துடன் மந்தரையின் முகத்தைப் பார்த்தாள்.

"உன் கணவன் சமயத்திற்கேற்ற பசப்பு வார்த்தைகளால் உன்னைச் சந்தோஷப்படுத்தி, இப்பொழுதுகோசலை ராஜன் மகளுக்கு உயரியபதவியை அளித்தான். தசரதனின் மனைவியானதன் பலிதத்தை அவள் அடைந்து விட்டாள்..."

கைகேயி வாயைவிட்டு 'கக்கட கட'வென்று நகைத்தாள் மந்தரையின் அமாயகப் பேச்சிற்கு வியந்தவளாய்.

"அடி அப்பாவிப் பெண்ணே! துராத்மாவான உன் கணவன் துர்புத்தியை நீயேதான் தெரிந்து கொள்ளேண்டி.! உன் பிறந்தகத்திற்குக் கண்மணி பரதனை விரட்டிவிட்டு அவன் இல்லாத போது, நாளை அதிகாலையில் நல்ல சுப முகூர்த்தத்தில் ஸ்ரீராமச்சந்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்போகிருன்.''

கைகேயியின் கண்கள் வலித்து அவள் உள்ளத்தில் பொங்கும் உற்சாகத்தை வெளியிட்டன.

"பாம்புடன் விளையாடும் குழந்தை எப்படி அதனிடமிருக்கும் விஷயத்தை யறிமாமல் தன் துடைமேல் வைத்துக்கொண்டு விளையாடுமோ, அப்படித்தான் நீயும் உன்கணவன் தசரதனை உன் சத்துரு வென்றறியாமல் உன் அன்பிற்குகந்தவன்...ஆகை...ஆருயிர்......இப்படி நினைத்து, அவனை உன் துடைமேல் வைத்துக்கொண்டு சரஸங்கள் செய்கிருய்,'' என்ருள். கைகேயி பதில் சொல்லாமல் சிரித்தாள்.

"கைகேயி! உன் புத்தி எனடீ இப்படி மழுங்கி விட்டது? நீ எப்பொழுதும் சுகத்தை அனுபவிக்கப் பிறந்தவள். ஒன்றும் அறியாதவள். துரோகியான தசரதன் இத்தனை நாள் அன்பு வசனங்களால் உன்னை மோசம் செய்து, இப்பொழுது ராமனுக்கு ராஜ்ஜியத்தை



சிரஞ்சீவிச் சிற்பங்கள்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அழியாத பெருமை வாய்ந்த சிற்ப சித்திரங்களை நம் முன்னோர் நமக்கு அளித்திருக்கின்றனர். அத்தகைய சிற்ப சித்திரங்கள் சிறந்து விளங்கும் பிரதேசங்களுள் மாமல்லபுரமும் ஒன்று. சகலகலா வல்லவனும் மகா ரஸிகனுமான மாமல்ல நரசிம்ம பல்லவன் தன் இருதயக் கனவுகளை யெல்லாம் சிறந்த சிற்பிகளைக் கொண்டு கால வெள்ளத்தில் கரைந்து போகாத கல்லில் செதுக்கி வைத்தான். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு சிருஷ்டி செய்யப்பட்ட அந்தச் சிற்பங்களெல்லாம் இன்று போய்ப் பார்த்தாலும் நம்முடன் பேசுகின்றன; கற்பனையில் அடங்காத கவிதைகளை நம் மனத் திரையில் எழுதுகின்றன.

வீரர்களின் சிற்பங்களைப் பார்த்தால் நமக்கும் வீராவேசம் பொங்குகின்றது. காதல் தெரியும் கன்னிகைகளின் சிற்பங்களைப் பார்த்தால் நம்முள்ளத்தில் காதல் கனவுகள் கனவேகமாய் எழுகின்றன.

பல்லூழி காலத்துக்கும் அழியாத இந்தச் சிரஞ்சீவி சிற்பங்களை நம் சித்திரக்காரர் நேரில் கண்டு வந்து தம் கைத் திறமையின் மூலம் நமக்கும் காட்டுகிறார்.

பாசர.சு
பிரசுரம்
சிகை

படும் பாடு
குஞ்சரன்

முக்கிய அறிவிப்பு

நவராத்ரி, தீபாவளி பண்டிகைக்கு
ஸ்பெஷல் கொள்ளேகாலம்
பட்டுப் புடவைகளுக்கும் மற்றும் ஜவுளிகளுக்கும்
பிரக்யாதி பெற்ற இடம்

R. S. E.

நேரில் விஜயம் செய்யுங்கள்

ராதா ஸில்க் எம்போரியம்
போன் நெ. 8016
1/14, சன்னதித் தெரு, மயிலாப்பூர்
பிரான்ஞ்ச் :—பெரிய தெரு, கும்பகோணம்

N. B.—போலிக் கொள்ளேகாலம் புடவையைக் கண்டு ஏமாராதிர்கள்

யளித்து, உன்னையும் உன் பிள்ளையையும் கெடுக்க நினைக்கிறான்.''

கைகேயிக்கு மந்தரை பேச்சில் ரோஷம் பற்றிக் கொண்டு வந்தது. வாயைத்திறந்து ஏதாவது சொல்லி யிருப்பாள். ஆனால் அவளைக் குழந்தைப் பருவம் முதல் கண்டித்தும் தண்டித்தும் அன்பைப் பொழிந்தும், ஆசை யைப்பூரியும், ஆனந்தத்தை அபிஷேகம் செய்தும் வளர்த்த கிழக்கூனியை ஒன்றும் சொல்ல வாய்வரவில்லை. தன் அழகிய கண்களை ஒரு சுழற்று சுழற்றினாள் ஆச் சரியத்துடன்.

''பார்ப்பவர்களை ஆச்சரியத்தி லாழ்த்தும் கண்களை யுடையவளே! நீ உன் சக்களத்திகள் முன் தாழ்மை யடையப் போகிறாய். ஆதலால் நீ இப்பொழுதே உனக்கு வேண்டிய சௌகரியத்தைச் செய்து கொள் ளடீ, கண்ணே!!'' என்று அவள் கன்னத்தை வருடி கண்ணீர் வடியும் தன் கன்னங்களில் விரல்களை மடக்கி, தன் அன்பை வெளியிட்டாள்.

மந்தரையின் பந்திர சொற்களை மௌனமாய் கேட் டுக்கொண்டிருந்த கைகேயி, அவள் கைகள் தன்முகத்தில் பட்டதும் அவள் அழகிய முகம் கார்த்திகை மதியைப் போல் மின்ன கட்டிலை விட்டு எழுந்தாள்

''அதிவஸாது ஸம்துஷ்டா!
கைகேயீ விஸ்வம யான்விதா!
ஏகமா பரணம் தஸ்யை:
குப்ஜாயை ப்ரததௌ சுபம்!''

அப்பேர்ப்பட்ட எதிர்பாராத ஆனந்தம் தனக்குக் கிட்டிய தற்கு ஆச்சரிபப்பட்டு மந்தரையைப் பார்த்து கழுத்தி லிருந்த ஆபரணத்தைக் கழற்றியபடியே—

''மந்தரா! நீ எனக்கு எப்பேர்பட்ட ஆனந்தச்செய் தியைச் சொன்ன உனக்கு இதைவிட என்ன செய்யப் போகிறேன். ராமனைலும், பரதனைலும் எனக்கு இரு வரும் ஒன்றுதான். எனக்கு ஒரு குறைவுமில்லை. பைத் தியக்காரி! சக்ரவர்த்தி ராமச்சந்திரனுக்குப் பட்டாபி

ஷேகம் செய்வதை அறிந்து அளப்பறிய ஆனந்தம் கொண்டேன்.

என் அன்புள்ள மந்தரா ! நீ சந்தோஷத்திற் குறியவள். எல்லோர் பனதிற்கும் சந்தோஷத்தையே அளிப்பவள். ராமச்சந்திரனின் பட்டாபிஷேக வார்த்தையை விட பரிபூரண ஆனந்தத்தை அளிக்கும் நற்செய்தியும் உண்டா? இதைவிட திருப்தியும் சந்தோஷமும் தரும் செய்தி வேறு சொல்லப்போவதில்லை. ஆதலால் உனக்கு அதிக சந்தோஷத்தை அளிக்கும் பொருளைத் தருகிறேன். பெற்றுக்கொள்..........." என்று அவள் கழுத்திலிருந்த நவரத்தின மாலையை மந்தரையிடமளித்து, "இன்னும் எது வேண்டுமோ கேள்?" என்ருள் அதிக அன்புடன்.

மந்தரை "கைகேயியின் பெருந்தன்மையை"க்கண்டு திகைத்து நின்ருள்.

K. S. P. பாலகிருஷ்ணன் & கம்பெனி

38, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., மதருஸ்

Phone No. 3044

'K. S மார்க்' பளையகாட் சாரங்களும், கம்பாயங்களும் பிரசித்தமானவை நேர்த்தியான ஷர்டிங் ரகங்களும் விதவிதமான டோரியா

TRADE MARK
BALAKRISHNAN
K.S.
K.S.P. & Co
MADRAS
BEST PALAYAKAT

வாயில்களும் ஏராளமாக எங்கள் சொந்தத் தரியில் உற்பத்தி செய்து வியாபாரிகளுக்குக் கொடுத்து வருகிருேம்.

கிளைகள் :

அம்மயப்பன், (தஞ்சை ஜில்லா)

12, ஏகாம்பரர் சன்னதி, பெரிய காஞ்சீபுரம்.

மேற்கண்ட சரக்குகள் கிடைக்குமிடம் :

தி சௌத் இந்தியா பளையகாட் கம்பெனி,

2, மால்வடம்போக்கித் தெரு, மதுரை.

1944 * 1945 * 1946
தீபாவளி
இடை விடாத ஓடும்
மதராஸ் பிராட்வே
டாக்கீஸில்
19-10-46 முதல். மதராஸ்..
சன் தியேட்டரில்
ராயல்
ஹரிதாஸ்
(முழு வர்ணப் படம்)
எல்லோருக்கும் எங்கள்
தீபாவளி வாழ்த்துக்கள்
RAYAL TALKIE
ராயல் டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸ்
மதுரை
பெஜவாடா

சர்வதேச மஹா சபைகள்

சே. ரா. பட்டாபிராமன்

அயல் நாட்டாருடன் நல்லுறவு

சாதாரணமாகப் பொதுமக்கள் அயல்நாட்டினரைப் பற்றி சிந்திப்பதில்லை. அந்த தேசத்திலிருந்து வந்திருக்கு முணவையுண்டும், ஆடைகளை யணிந்தும் கூட, அந்தப் பொருள்களை யுற்பத்தி செய்பவர்களைப் பற்றி நினைப்பதில்லை. தங்களுக்கு அவஸ்யமான சாமான்கள் கிடைக்காமற் போனால்தான், அசட்டை நீங்கி, ஆத்திரமுண்டாகிறது. தேசங்களை யொன்று சேர்ப்பது மாகிலத்துப் பண்டங்கள் தான், மக்களுடைய மனப்பான்மையல்ல, என்று டிலைல் பர்ன்ஸ் என்றப் பேராசிரியர் அழகாக எடுத்துரைத்திருக்கிறார். மக்கள் தம் நாட்டிலும் ஒரு நீதியையும் நெறியையும், பிற நாட்டாரிடம் மாற்றான முறைகளையும் கையாளுகிறார்கள். ஸ்வதேசம், விதேசம் என்ற வேற்றுமையில்லாமல் சமத்ருஷ்டியுடன் பார்க்கும் பெருந்தன்மை யில்லாததினால் தான் உலகத்தில் இவ்வளவு துன்பமும் நோயும் தலைவிரித்தாடுகின்றன. இந்த சமயத்ருஷ்டியை தேசத் துரோகமென்று இகழ்ந்து வந்த நாடுகளுமுண்டு.

தேசங்களில் பரஸ்பரம்—பந்தம் சமீப காலங்களில் மூன்று அங்கங்களில் அமைகின்றதென்பர். முதலங்கத்தில் 17-வது நூற்றாண்டைச் சார்ந்த சர்வதேச நியாய நிபுணர்கள் பாத்திரங்களா யிருந்தனர். இதைத்தான் எஜ் ஆப் டிப்லமஸி, அல்லது அரசியல் தந்திரயுகம் என்பர். இரண்டாவது பிரெஞ்சுப் புரட்சியுடனும் நெப்போலியனுடனும் முடிவுற்றது. இதை எஜ் ஆப் பவர், அல்லது வல்லரசு சமநிலை யுகமென்பர். மூன்றாவது அங்கம் நெப்போலியனுடைய வீழ்ச்சியிலிருந்து தொடங்கிற்றெனலாம். உள்நாட்டபிமானம், சர்வதேசப் பொருளாதார

முன்னேற்றத்திலாக்கம், இவைகளை முக்கிய லக்ஷ்யங்களாகக் கொண்டு நிகழ்ந்து வருகிறது.

இப்பொழுது இந்த விஷயத்தைச் சற்று விவரிப்போம். முதலங்கத்தில், தேசங்களுக்குள் ஏற்படக் கூடிய வியவகாரங்களை, சாதாரணமாகப் பிறநாட்டுத் தலைநகர்களில் வசிக்குமாறு அனுப்பி வைத்துள்ள அரசியல் தூதர்கள் மூலமாகவும், வேண்டுமென்றால் மகாநாடுகளைக் கூட்டியும், நடத்தி வந்தார்கள். தேசங்களுக்குள் யுத்தமொன்றே அக்காலத்திய முக்கிய நடவடிக்கையாயிருந்ததால் இப்பிரதிநிதிகளைக் கிட்டத்தட்ட ஒற்றர்களென்றே சொல்லலாம். அரசாங்க தூதனென்றால் அயல்நாட்டினரைப் பொய்யால் வஞ்சிக்க அனுப்பப்பட்டவனென்று அர்த்தம் என்று அந்நாட்களில் சொல்வதுண்டு. அக்காலத்தில் ராஜதந்திரத்தில் பெயர் பெற்ற க்ரோஷியஸ் என்பவரால் எழுதப்பட்ட நூலானது பெரும்பாலும் யுத்தத்தைப் பற்றியே விஸ்தரித்துவிட்டு, கடைசி அத்யாயத்தில் சொல்ப இடத்தைத்தான் சமாதானத்திற்கும் அமைதிக்கும் தருகிறது.

இரண்டாவது அங்கத்தில், ஐரோப்பாவில் வல்லரசுகள் கிளம்பி மற்றக் கண்டங்களிலுள்ள பொருள்களுக்குப் போட்டியிடத் தலைப்பட்டன. வாணிபம் வளர வளர, அதைக் காப்பதற்காக வல்லரசு சம வலிமையை நிலை நிறுத்துவதச்யமாயிற்று. வியாபாரத்தில் அரசாங்கங்களும் கலந்து கொள்ளவே ஸைன்ய பலங்களையும் அதிகரிக்க வேண்டியதாயிற்று. இந்தக் கூத்து 1815, நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பிறகு கூடிய வியன்ன மகாநாட்டுடன் முடிந்தது.

மூன்றுவதங்கத்தில் புது வல்லரசுகள் ஏற்பட்டன. சின்ன பின்னமாயிருந்த இத்தாலியும், ஜெர்மனியும் அகண்ட தேசங்களாயின. பால்கன் நாடுகள் துருக்கிய ஆட்சியிலிருந்து விடுபட்டன. அமெரிக்கா கண்டத்தில் ஸ்பெயின் போர்ச்சுகலைச் சார்ந்த குடியேற்ற நாடுகள், கத்தரித்துக்கொண்டு குடியரசு நாடுகளாயின. தங்களுடைய தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களைப் பெருவதற்கோ அல்லது தங்களுடைய செய்

பொருள்களை விற்பதற்கோ, முன்னேற்ற மடையாத தேசங்களை தன் வசப்படுத்தவோ, அல்லது அத்தேசங்களில் தம் செல்வாக்கை விருத்தி செய்வதற்கோ பட்ட 'ப்ரயத்தினங்களினால் தான் அக்காலத்தில் சிக்கல்கள் முக்கியமாக ஏற்பட்டன. ஆனாலும் தேசங்களின் பொது நன்மைக்கான பிரச்னைகள் அக்காலத்தில் தலைகாட்டாமலில்லை. 1815-ம் வருஷத்திய மகாநாட்டிற்குப் பிந்தின மகாநாடுகளில் சுபநலம் மாத்திரமன்றி பொது நலமும் சற்று கவனிக்கப்பட்டு வந்தது.

1899-ம் வருஷத்திய ஹேக்மகாநாட்டிலிருந்து சஸ்த்களைக் குறைத்தல், தர்மயுத்த முறைகளைக் கடைப்பிடித்தல், மத்யஸ்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தல் முதலியன ஆலோசிக்கப்பட்டன. ஆனால் துரதிருஷ்டவசமாக தேசங்களொருவரோடொருவர் நல்லுறவாட வேண்டியதற்கான சட்ட முறை அமைக்கப்படவில்லை. அரசாங்கங்களால் கட்டப்பட்டவை தவிற தனி முறையில் அநேக அமைப்புகள் 19-ம் நூற்றாண்டில் ஏற்பட்டன. ஆனால் இவைகள் அறிஞர்களுக்குள் பொதுப்படையான விஷயங்களைப்பற்றி நடைபெற்றன. வைத்தியர்களின் பல் நாட்டு மகாநாடுகள் அவ்வப்போது கூடி, சிகிச்சை முறைகள் ரணவைத்தியம், மருந்து வகைகள் முதலியவைகளில் தத்தம் முற்போக்கை ஒப்பிட்டுப் பார்த்து அபிவிருத்தியடைய சாதகமாயின. பல் நாட்டு வணிகக் கழகங்கள் தம்கடமையை நிறைவேற்றிவந்தன. தபால் தந்தி, மின்சாரம், பெட்ரோல் முதலிய விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கவும், உலோகம், கல் முதலான வஸ்துக்களை ஆய்வதற்கும் சங்கங்களேற்பட்டன. பல நாட்டுத் தொழிலாளர் சங்கம், நாவாய்ச்சங்கம், ரெட்க்ராஸ்-செஞ்சிலுவைச் சங்கம், அடிமைத்தன நிவாரணச் சங்கம் முதலியவை 19-ம் நூற்றாண்டு முடிவதற்குள்ளேயே ஆரம்பித்து விட்டன. 1901-ம் வருஷத்தில் 20 தேசத்தியத் தொழிலாளச் சங்கங்கள் சேர்ந்து ஒரு பெரிய கூட்டுச் சங்கத்தை யேற்படுத்தின. 1913-ம் வருஷத்திற்குள 70 லக்ஷம் தொழிலாளிகள் இந்தச் சங்கத்தில் சேர்திருந்தனர்.

சர்வமத மகாநாடொன்று சிகாகோவில் கூடியதும், அதில் இந்தியா முக்கியமான பங்கெடுத்துக் கொண்டதும்

ப்ரஸித்தமான விஷயம். இதுபோல் எவ்வளவோ சங்கங்களின் பெயர்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

1914–18-ம் வருஷத்திய முதல் மகாயுத்தத்தில் ஒரு தலை முறை முழுதும் அடைந்த சேதம் சொல்லொணுது. இரண்டாம் மகாயுத்தத்தில் நாம் கண்ட கஷ்டங்களுக்குச் சற்றேறக்குறைய சமானமென்றே சொல்லலாம். இருதிரத்திலும் மாண்ட யுத்தவீரர்களின் தொகை ஒருகோடியே முப்பது லக்ஷம். யுத்தத்தினுல் மடிந்த பொதுமக்களின் தொகை மூன்று கோடியே எழுபதுலக்ஷம். இந்த யுத்தத்தில் அநேகக் குடும்பங்களில் ஏற்பட்ட சேதங்கள், இரண்டாம் மஹா யுத்தம் ஆரம்ப காலத்தில் கூடப் பூராவாக பரிஹாரம் அடையவில்லை. யுத்தத்திற்காக சம்பந்தப்பட்ட அஸ்திரங்கள் நாகரிகத்தையே விழுங்கி விடுமென்ற கவலை உலகத்தில் உண்டாயிற்று. சிக்கல்களை நயத்தினுல் நீக்க ஏற்பாடுகள் வேண்டும் என்பது நோக்கமாயிற்று. ஜனுதிபதி வில்ஸன் உயரிய நோக்கங்களுடன் சர்வ தேச சங்கத்தை ஸ்தாபித்தார். அமைதியை நிலை நிறுத்தவும் பரஸ்பர சச்சரவுகளை சட்ட ரீதியாகவோ, சபையில் வாதித்தோ, மத்யஸ்தம் வாயிலாகவோ. தர்மத்தையும் நீதியையும் முன்கொண்டு தீர்க்கவேண்டுமென்று அந்தச் சபை விரதம் கொண்டது. இந்த நோக்கங்களை நிறைவேற்ற அந்தச் சபை நான்கு ரூபங்களை எடுத்துக் கொண்டது, முதலாவது, சபையின் பொதுக் கூட்டம், வருஷத்திற்கொருமுறை இதில் உலக அமைதியைப்பற்றிய பொது விஷயங்கள் ஆலோசிக்கப்படும். இரண்டாவது, சபையின் மந்த்ரண சபை. 5 சாச்வத அங்கத்தினர்களும், 9 தற்கால அங்கத்தினர்களும் கூடியது. இதைச் செயலாளர் உட்கழகம் என்று சொல்லலாம். மூன்றாவது, அமைச்ச இலாகா. இது எப்பொழுதும் வேலை செய்துகொண்டிருக்கும். ஒரு தேசத்திற்குள் இருக்கும் சர்க்கார் ஊழியர் திட்டத்திற்கு இதையொப்பிடலாம். நான்காவது, ஹேக்கில் ஸ்தாபிக்கப்பட்ட சாச்வத நீதி மன்றம். தேசங்களின் நடுவே ஏற்படும் வழக்குகளைத் தீர்க்க அதிகாரம் கொண்டது. அது தவிர பொதுச் சபையிலிருந்தோ உட்கழகத்திலிருந்தோ வரும் பிரச்னைகளின் அபிப்பிராயமோ, புத்திமதியோ கொடுக்க இம் மன்றத்திற்கு திறமை உண்டு.

ஸர்வ தேச சபை நல்ல சுப சின்னங்களுடன்தான் ஆரம்பித்தது. ஒப்படை நாடுகளின் பரிபாலன விஷயத்திற்கும், தொழிலாளர் நிலைமை, ஆரோக்கியம் முதலியவைகளைப்பற்றித் தகவல்கள் சேர்ப்பதிலும், அபினி முதலான லாகிரி வஸ்துக்களிலிருந்து வந்த வியாபாரத்தையொழிப்பதிலும், நன்ருகத்தான் வேலை செய்தது. தேசங்களில் புதிதாக ஏற்படும் நூற்றுக்கணக்கான, அம்சங்களை ஒருவரிடமிருந்தொருவர் கிரஹித்துக் கொள்ள அது ஒரு கேந்த்ரமா யிருந்தது.

அதற்கு பலக் குறைவுகள் சகஜமாய் ஏற்பட்டன. ரஷ்யாவும், யுனைடெட் ஸ்டேட்ஸும் அங்கத்தினர்களாய்ச் சேராமற் போனதே அதன் ஜீவ ஹானிக்கு முதல் காரணம். தனக்கென்று ராணுவ சிப்பந்திகள் அல்லது போலீஸார் இல்லாததால், தன்னுடைய தீர்ப்புகளைத் தண்டனைகளாக நிறைவேற்ற சக்திபற்ற தென்ற விஷயம், இத்தாலி அக்ரமமாக அபிஸீனியாவைத் தாக்கினபொழுதும் ஜப்பான் மஞ்சூரியாவில் அட்டூழியங்கள் இழைத்த போதும், வெட்ட வெளிச்சமாயிற்று. மேலும் மற்ற வல்லரசுகள் தலையிடாமல வேடிக்கை பார்த்து வந்தது மிகவும் துக்ககரமான விஷயம்.

இரண்டாவது மஹா யுத்தம் ஐரோப்பாவில் ஐந்து வருஷ காலமும், சாந்தி சமுத்திரப் பிராந்தியத்தில் மூனறு வருஷமும் நடந்த பிறகு, 25-4-45 ந் தேதியில், ஐக்ய மகா நாடு ஸான்ப்ரான்ஸிஸ்கோவில் கூடிற்று. சீனுவின் சுதந்திரப் போர் 10 வருஷங்களாக நடந்து வந்த தென்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இரண்டாவது மகா யுத்தத்திலிருந்த யுத்த வீரர்களின் தொகை இரண்டு கோடி. காயமடைந்தவர்களும் சிறைப்பட்டவர்களும் ஐந்து கோடி. பொது மக்களில் மாண்டவர்கள், அங்க ஹீனமடைந்தவர்கள், காயமடைந்தவர்கள், எவ்வளவென்று கணக்கெடுத்தால் பயங்கரமா யிருக்கும். சேதமடைந்த பண்டங்கள், கட்டடங்கள், தொழிற் சாலைகள், கப்பல்கள் முதலானவைகளின் ஜாபிதா போட முயன்ருல் மனம் திடுக்கிடும்.

இதுபோன்ற கோர சம்பவங்கள் மூன்ரும் தடவை வராமல் தடுக்க வேண்டு மென்றே ஐக்ய தேசங்கள் ஸான்

பிரான்ஸிஸ்கோவில் கூடினார்கள். எல்லாத் தேசங்களின் உள்ளங்களில் குடி கொண்டிருக்கும் அமைதி வேண்டு மென்ற ஆசையை நிறைவேற்றக் கூடிய ஸ்தாபனத்திற்கு ஒரு சாஸனத்தை அமைக்க வெண்டும் என்பது அவர்களுடைய அவா. இந்த மஹா சபைக்கு வேண்டிய முன்னேற்பாடுகளை மாஸ்கோவில் 1943-ம் வருஷத்திலேயே அமெரிக்காவும், ரஷ்யாவும், பிரிட்டனும், சீனாவும் செய்து கொண்டன. அமைதிக்கும் பத்திரத்திற்கும் ஒத்துழைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டன.

1944-ம் வருஷம் டம்பார்டன் ஓக்ஸ் என்ற இடத்தில் இந்த நான்கு நேச தேசங்களும் ஒன்றுகூடி உலக சமாதான அமைப்புக்கு வேண்டிய அம்சங்களைப் பற்றி ஏகமனதாகத் தீர்மானித்தன. பிறகு 1945-ம் வருஷம் பிப்ரவரி மாதம் யால்டாவில் தங்கள் கூட்டுறவின் அளவை அதிகரித்துக் கொண்டன.

தங்களுடைய அபிப்பிராயங்களை உலகத்தார் அறியவும், விமர்சிக்கவும் ப்ரகடனம் செய்தனர். ஸான்ப்ரான்ஸிஸ்கோவில் நடந்த சபை யுத்தப் முடிபுமுன்னரே கூடிற்று. அங்கு வந்திருந்த தேசங்கள் பயங்கரமான யுத்தத்தில் ஈடுபட்டு உழன்று கொண்டிருந்தனர். இது போன்ற யுத்தங்கள் இனிமேல் நடக்காதபடித் தடுக்காவிட்டால், சர்வ நாசம்தான் என்று கண்டுகொண்டவைகள். அதுகாறும் எதிர்பார்க்காத பயங்கரமான ஆயுதங்கள் ப்ரயோகப்படுத்தப் படுமென்றும் உலகத்தில் போக்கிடமே யிராதென்று மறிந்தவர்கள். ஆகையினால்தான் ஒரே உறுதியுடன் அந்த ஐம்பது தேசங்களும் தங்களுடைய சாஸனத்தை 25-6-45 ந் தேதியன்று நிறைவேற்றின. அதனுடைய ஷரத்துக்கள் பின்வருமாறு.

1. ஐக்கிய தேசங்கள் ப்ரபஞ்ச அமைதியையும், பத்திரத்தையும் நிலை நிறுத்தவேண்டும்.

2. சுயாதிபத்தியம், சம உரிமை யென்ற கொள்கைகளை கொண்டவைகளாக தேசங்களை ஒவ்வொன்றுடன் சிநேகபாவமாக நல்லுறவு கொள்ளவேண்டும்.

3. ப்ரபஞ்சப் பிரச்னைகளை சர்வ தேசங்களும் கூட்டுறவுடன் உழைத்து தீர்க்கவேண்டும். மனிதவர்க்க

தின் உரிமைகளையும் எல்லோருக்கும் அடிப்படையான சுதந்திரங்களையும் காப்பதில் ஊக்கம் உண்டாக்கவேண்டும். அடிப்படையான உரிமைகளில் ஜாதி, மதம், பாஷை, ஆண், பெண் என்ற வித்தியாசம் கூடாது. இந்த சாஸனத்தில் கையெழுத்திட்ட தேசங்கள் அனைத்தும் சம அந்தஸ்துள்ளனவாக ஒப்புக்கொள்ளப் பட்டது.

ஐக்கிய தேசங்களின் ஸ்தாபனத்தின் அங்கங்கள் பின்வருமாறு.

1. பத்ரமண்டலி என்ற செயலாளர் உட்கழகம் அங்கத்தினர்களான தேசங்களால் அனுப்பப் பட்ட ஸைன்னிய சிப்பந்திகளுடைய உதவியினால் தன்னுடைய நோக்கத்தை அமுலுக்கு கொண்டு வரச் சக்தியுள்ளது.

2. பொது விஷயங்களை விவாதிக்கப் பொதுச் சபை.

3. பொருளாக்க சமூக மந்த்ரணம், சுகாதாரம், வாணிபம். தொழில், செல்வாதாரம், முதலிய விஷயங்களைப் பரிசீலித்து சபைக்கோ, உட்கழகத்திற்கோ, அங்கத்தினர்களுக்கோ சிபார்சுகள் செய்ய ஏற்படுத்தப்பட்டது. மொத்தத்தில் மனிதர்களுடைய ஆற்றல்களை மனிதர்களுடைய லாபங்களாக மாற்ற முயலுவது இந்த ஸ்தாபனம்.

4. சர்வ தேச நீதி மன்றம் :—

இம்மாதிரி ஸ்தாபனங்களில் இந்தியாவும் சில வருஷங்களாக நமோதான பங்கு எடுத்துக் கொண்டு வருகிறது. இந்தியாவுடைய அந்தஸ்து உயர உயர மேலும் மேலும் முக்கியமான பதவியை அடையும் என்பது திண்ணம். வல்லரசுகளில் அமெரிக்காவிற்கும், ருஷியாவிற்கும்தான் சரியாக நமது தேசத்தை ஒப்பிடலாம். சீனாவைப்போல் நம்முடைய மூலச் செல்வங்கள் எவ்வளவோ அதிகம். இனிமேல் எந்த தேசமும்—இந்தியா உள்பட மற்ற தேசங்களை அசட்டை செய்து தன்னந் தனியாய் நிற்க முடியாது. அறிவியல் முன்னேற்றத்தினாலும் சீக்கிர வாகன சாதனங்களாலும் உலக முழுவதையும் ஒரு சந்தைபேட்டையாகி விட்டது. உணவுப் பொருள்களும்; மருந்து வகைகளும்

உலகத்தில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குப் பறக்கும் வகையைப் பார்த்தால் பிரபஞ்சம் குறுகிவிட்டாற் போல் தோன்றுகிறது.

இந்த சர்வதேச இயக்கத்தில் நமது தேசம் செய்யக் கூடிய உபகாரம் சிறிதல்ல. நம்முடைய அத்யாத்ம மனப்பான்மை உலகக் கோளாறுகளுக்கு ஓர் அருமருந்து. யுத்தத்தில் நேச தேசத்தார் ஜயம் கொண்டது போல் அமைதியையும், சாந்தியையும் சாதிக்கவல்லரா? அஹிம்சை யென்ற அஸ்திவாரத்தின் மேல்தான் அமைதி யென்ற மாளிகையைக் கட்டலாம் அன்றோ? இந்த சாந்தி மாளிகையை கட்டுவதில் இந்தியர்கள் முன் நிற்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கண்ணாடியில் பாருங்கள்!

உங்கள் முகத்தை அழகு செய்யும்
சிறந்த பவுடர்கள்

★ ரமணி

★ மீரா

★ விமலா

வாசனை பொருந்தியது எங்கும் கிடைக்கும்

M. C. R. PRODUCTIONS
MADRAS

ரயிலில்.....

“பிரம்மம்”

ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் வண்டி வந்து நின்றதும், அவசர அவசரமாக இறங்குபவர்களுக்குக் கூட இடம் விடாமல், முண்டியடித்து உள்ளே புகும் ஸ்ரீமான்கள் பிரயாணிகளுடன், நானும் என் வலுவுள்ள வரை முயற்சித்து, வண்டியின் நீளத்தை இந்தக் கோடி முதல் அந்தக் கோடிவரை இரண்டுமுறை அளந்துவிட்டு, கடைசியாக ஏதோ ஒரு கேரேஜுக்குள் பிரசவ வேதனையுடன் திணிக்கப்பட்டேன். உள்ளே புகுந்த சில நிமிஷங்களுக்குப் பிறகுதான், சகோதர பிரயாணிகள் அரவணைப்பிலிருந்து விடுபட்டதால், சுய உணர்வு உண்டாயிற்று ; அதுமட்டுமல்ல—வரும்போது என்னை யறியாமல் ஒரு யுவதியின் மிருதுவான மலரடிகளை என் மிதியடிகளால் மிதித்ததும், அவள் தன் பவழவிதழ்களைத் திறந்து விற்புருவத்தைச் சுளித்து, குயிலினுமினிய குரலில், “நீ நாசமாய்ப் போக!” என்று ஆசீர்வதித்ததும்கூட நினைவிற்கு வந்தது.

அந்த அழகியின் குரலினிமையை மீண்டும் கேட்க வேண்டும் போலத் தோன்றியதால் மெதுவாக அவளைப் பார்த்து, “மன்னிக்க வேண்டும்” என்றேன்.

“உன்னையா ?” என்று கேட்டாள் அவள்—இல்லை, கேட்க நினைத்துக்கொண்டாள். பதில் சொல்வதற்காகத் தலையை நிமிர்த்திய அவள் என்னைப் பார்த்து உடனே தலையைத் தாழ்த்திக்கொண்டாள். அவளுடைய அந்த அழகிய வதனத்தில் தோன்றிய உணர்ச்சி ரேகைகள் சொல்லின : “உன்னையா மன்னிப்பது ?” என்று.

ஆச்சரியமாக இருக்கலாம் ; அகப்பாவிதமாகக் கூட இருக்கலாம். ஆனாலும் வாழ்க்கையின் வழியிலே சந்திக்கும் பலவித சந்தர்ப்பங்கள் கற்பனைக்கும் முரண்பட்டவை ; அவைகளுக்குக் காரணம் கூற முடியாது.

ஆமாம் ! சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ; நான் தேசாந்திரியாகத் திரிந்த காலம் அது—எதையோ நாடி, எங்கெல்லாமோ, எல்லையின்றி மனம்போன போக்கில் நாடோடியாக நடித்த காலத்தில் நிகழ்ந்த ஒரு காக்ஷி அது. ஆபத்து அவமானம் என்ற சொற்கள் எனது அனுபவ அகராதியில் இல்லாத அந்தக் காலத்தில் டிக்கெட் இல்லாமலேயே பிரயாணம் செய்வது எனக்கு சர்வ சகஜம். அனாதையைப் போல அலைந்தேன்..........

எங்கோ, என்றோ ஒருநாள், இதே போல ரயில் வண்டியில் அமர்ந்து, மோன நிஷ்டையில் ஆழ்ந்து, உள்ளக் கடலின் அடித்தளத்தின் அமைதியை ரஸித்துக்கொண்டிருந்தேன் ஆனந்தமாக.

அமைதியைக் குலைக்கும் புயலைப் போல வந்து சேர்ந்தார் ஒரு டிக்கெட் பரிசோதகர்.

"மிஸ்டர் ! டிக்கெட் ப்ளீஸ் !" என்றார். அவர் கூப்பிட்டது எனக்குக் கேட்கவில்லை.

"சார் ! உங்களைத்தான். டிக்கெட் எங்கே ?" என்றார் பொறுமையை இழந்து.

திடீரென்று விழித்துக்கொண்டேன். என்னுடைய டிக்கெட் எங்கே ?

நான் எந்த ஸ்டேஷனில் ஏறினேனோ, அங்குள்ள புக்கிங் ஆபீசில்—ஒரு சிறு பீரோவில் அடுக்கடுக்காக அழகாக வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான புத்தம் புதிய டிக்கெட்டுகளில் நான் வாங்கி யிருக்க வேண்டிய அந்த டிக்கெட் நிச்சயமாக இருக்க வேண்டும். அல்லது ஒருவேளை வேறு யாராவது வாங்கி யிருக்கலாம். அது இப்போது இங்கே எப்படி வரும் ?

"இன்னுமா தூக்கக் கலவரம் ? என்ன விழிக்கிறாய் ?" என்றார் மகாகனம் பொருந்திய டிக்கெட் பரி

சோதகர், என் சுய மரியாதையில் ஒரு மாத்திரையைக் குறைத்து.

சடக்கென்று ஒரு வெட்டுக் கிளி என் மடி மீது பாய்ந்து வந்து விழுந்தது; எழுந்து நின்று வேஷ்டியை உதறினேன்.

ஒரு டிக்கெட் கீழே விழுந்தது!

அந்த டிக்கெட் பரிசோதகர் அதை எடுத்து அப்படியும் இப்படியும் பார்த்துவிட்டு, பின்புறம் எதையோ கிறுக்கி என்னிடம் அதைக் கொடுப்பதற்கும், வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனில் நிற்பதற்கும் சரியாக இருந்தது. உடனே அவர் கீழே இறங்கிப் போய்விட்டார்.

வண்டி மீண்டும் புறப்பட்டு விட்டது, புகையைக் கிளப்பிக் கொண்டு.

"தயவு செய்து அந்த டிக்கெட்டை இப்படித் தருகிறீர்களா?" என்று கேட்டது மெல்லிய ஒரு குரல், எனக்குப் பின் புறமாக.

திகைப்புடன் திரும்பி உற்றுப்பார்த்தேன். ஒரு நவ யவ்வன மங்கை புன்னகையோடு என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு விநாடியில் எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. "டிக்கெட் உங்களுடையதா? உங்கள் உதவிக்கு என் வந்தனம்" என்றேன். அந்த டிக்கெட்டை அவளிடம் கொடுத்து விட்டேன். எனக்கெதற்கு அது இனி?

"ஐயோ! ஜானு! என் டிக்கெட் எங்கேயோ காணமடி" என்றார் அப்பொழுதுதான் தூங்கிவிழித்த ஒரு பெரியவர், தம் மடியைத் தடவிக்கொண்டு.

"எங்கும் போகவில்லை. இதோ இருக்கிறது" என்றாள் அவள், வெடுக்கென்று. புன்னகை தவழ்ந்த அவள் முகத்தில் வெறுப்பும், சோகமும் துளிர்த்தன.

அவர் அவளுடைய தந்தையாக இருக்க முடியாது என்ற உண்மையை அவளது முகபாவமும் நடத்தையும் நன்கு தெரிவித்தன. சமூகத்தின் சட்ட திட்டங்களுக்குக்

கட்டுப்பட்ட முறையில்—முறைமையில் அவள் அவன் மனைவி; அவன் அவள் கணவன்.

அவன் மறுபடியும் நிம்மதியாகத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான், குறட்டையுடன். அவன் மட்டுமல்ல, அந்த கேரேஜில் எல்லோருமே தூக்கத்தில்தான் இருந்தனர். பிணம் விழுந்த வீட்டில் பிரலாபத்துக்குப்பின் நிலவும் பேரமைதியைப்போல்.

அந்த அகால வேளையில் அமைதியின்றி விழித்துக் கொண்டிருந்த இரு ஆத்மாக்களில் ஒன்று நான், மற்றது அவள்—ஜானகி.

"இந்த எதிர் சீட்டில் இடமிருக்கிறது இப்படி வருகிறீர்களா, பேசிக் கொண்டிருப்போம்."

தன் வயதுக் கேற்ற வாலிபனுடன் பிணைக்கப் பட்டிருந்தால் என் போன்ற மூன்றுவது மனிதனுடன் இப்படிப் பேச அவளுக்குத் தைரியம் வந்திருக்காது, விரும்பவும் மாட்டாள். ஆனால் நைந்து போன நாரில் தொடுக்கப் பட்ட மலர் நாற்ற மெடுக்க ஆரம்பிக்கிறது.

என்னைப் பொறுத்தவரை நான் யாருடனும் எதுவும் பேசத் தயங்கினதில்லை. ஆண், பெண் எல்லோருடனும் சகஜமாகப் பழகுவது என் ஸ்வபாவம். என் போன்ற நாடோடி இளைஞர்களுக்கு இயற்கை அது. "சரி, வருகிறேன்" என்று, அவள் எதிரில் சென்று அமர்ந்தேன்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

"எந்தக் குறிப்பிட்ட இடத்துக்குப் போகவில்லை. எங்கே இறங்க வேண்டும் போலத் தோன்றுகிறதோ அங்கே இறங்கி விடுவேன்."

கல கலவென்று அவள் சிரித்தாள். கணீரென்ற அந்தப்பொற் சலங்கை யொலி; என் இதயத்தில் ஊடுறிவிப் பாய்ந்தது.

"உங்களுக்கு......?" என்று ஏதோ கேட்க வந்த வள் வெட்கத்தால் நிறுத்திக் கொண்டாள்.

"இல்லை! எனக்கு இன்னும் மணமாகவில்லை" என்று விடையளித்தேன், அவளுடைய கேள்வியை ஊகித்துக்கொண்டு.

இந்தப் பதிலை அவள் எதிர் பார்த்தாளோ இல்லையோ எனக்குத் தெரியாது. சர்வ சாதாரணமாகச் சொன்ன என்னுடைய இந்த வார்த்தைகள் அகாரணமாக அவளுடைய மனதைத் தொட்டிருக்க வேண்டும். அவளுடைய அந்த மரண—மௌனமும், எரிமலைப் பெரு மூச்சும், பயங்கரப் பார்வையும் அவள் எங்கெல்லாமோ சுற்றுகிருள் என்று பறை சாற்றின.

தன் கால்களை என் பெஞ்சுக்கடியில் நீட்டிக்கொண்டாள். என்னுடைய பாதங்களும் அவளுடையவும் உராயந்தன. அவள் என்னையே, இமைக்காமல் கூட உற்றுப் பார்த்தாள்—உறிஞ்சி விடுபவள் போல நல்ல பருவம், நிறைந்த அழகு, திரண்ட அங்கங்கள், அவைகளில் அசாத்ய ஆகர்ஷணம்.

அவளின் கணவனே ஒரு கிழவன். அவளுடைய மீறிடும் பருவ வேட்கையிலே பாதிகூடத் தணிக்கத் திறமையற்ற அவன் அவளுக்குப் பதி! பாவம்!

மனித சமூகமோ, அன்றி முன் வினையோ செய்து விட்ட இச் சதிக்குப் பழி வாங்கும் பொருட்டு, அவள் காத்துக் கிடந்தாள்.

அப்படித்தான் தோன்றிற்று, அவளைப் பார்த்ததில்.

திடீரென்று எழுந்து நின்றவள், மயங்கி என்மீது சாய்ந்து, முகத்தோடு முகம் புதைத்து அழுத்தினுள். எனக்கோ ஒன்றுமே விளங்கவில்லை. பரிவோடு அவளை அணைத்துக் கொண்டு தலை முதல் இடுப்பு வரைத் தடவிக் கொடுத்தேன்.

வன் எதற்காக இப்படிச் செய்தேன் என்று எனக்குத் தெரியாது. ஆயினும் நான் அவளை ஆர்வத்தோடு முத்தமிட்டேன்.—

காமமோ காதலோ அல்ல இதன் காரணம். கனிந்த என் உள்ளத்திலே தோன்றிய கருணையால்தான் இப்படிச் செய்திருப்பேன். பருவ வாலிபன்தான் நான்; ஆனால் பண்பட்டது என் மனம்.

யவ்வன மதுவின் போதையிலே—லாகிரியிலே அவள் மயங்கிக் கிடந்தாள், தேனுண்ட வண்டெனe.

'லொக், லொக்' என்று இருமிக் கொண்டு திரும்பிப் படுத்தான், அவள் கணவன். அவளுக்கு 'மூர்ச்சை' தெளிந்தது. பாம்பை மிதித்து விட்டவள் போல படபடப்புடன் என் அணைப்பினின்றும் விடுபட்டுத் தன்னிடம் சென்று அமர்ந்தாள். என்னைப் பார்க்காமல் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

ஆச்சர்யமாக இருந்தது—அவள் செய்கை, அவளே வேண்டுமென்று, அவளாகவே விரும்பிச் செய்த இந்தக் காரியத்தில் நான் இழைத்த குற்றம் என்ன? என் மேல் அவளுக்குக் கோபமோ வெறுப்போ உண்டாகவேண்டிய காரணம் தான் என்ன? படைப்பின் தத்துவத்தை யாவது கண்டறியலாம்; ஆனால் இந்தப் பெண்களின் உள்ளத்தை உணர முடியாது போலும்!

அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும் அவளிடம் சொல்லிக் கொள்ளாமலேயே இறங்கி விட்டேன்.

அதே ஜானகி தான் இவள். இரண்டு வருடங்களுக்குப் பிறகு இன்று இந்த வண்டியில் மறுபடியும் சந்தித்தாள். அவள் கணவனும் அருகில்தான் இருந்தான். இன்னும் சற்று அதிகமாகக் கிழடுதட்டி யிருந்தது அவனுக்கு. அவளோ முன்னைக் கிப்போது பின்னும் எழிலுடன் விளங்கினாள்.

சற்றும் எதிர்பாராத வகையில் என்னைச் சந்தித்ததும், என்னைப் போலவே அவளுக்கும் பழைய ஞாபகங்

கள் வந்திருக்க வேண்டும். அதன் பிரதிபலிப்பாக அவருடைய நெற்றி முத்து முத்தாக வியர்த்தது. வண்டி போய்க்கொண்டே யிருந்தது, மனிதனின் மனப் போக்கை லக்ஷ்யம் செய்யாத, ஆயுளைப் போல. இரு மருங்கிலும் பல பல காக்ஷிகள் பின்னோக்கி ஓடிக் கொண்டிருந்தன, எங்கள் நினைவைப் போல.

ஏதோ ஒரு இடத்தில் வண்டி நின்றது. அந்தக் கிழவன் அவசரமாக இறங்கி, "அடி! ஜானு! சீக்கிரமா இறங்கு" என்று அலறினான்.

கன வுலகிலிருந்து விழித்துக் கொண்ட அவள், கடைசி முறையாக என்னைப் பார்த்தாள். "போய் வருகிறேன்", இல்லை—"போகிறேன்" என்று சொல்வது போல இருந்தது, சோகம் தோய்ந்து குழையும் அந்தப் பார்வை!

முன்னேற்றமே பிராபல்யத்தை நிரூபிக்கின்றது!

"லக்ஷ்மி"யின் வரவு செலவுகளின் பரிமாணத்தையும் அதனுடைய நீடித்த தீவிர முன்னேற்றத்தையும், அதிக கியாதியையும் இவ்விலக்கங்களே தெரிவிக்கின்றன

வருஷம்	புதிய வியாபாரம் மேலாக	மொத்த ஆஸ்திகள் மேலாக	அமுலிலுள்ளது மேலாக
1941	1 கோடி 1 லக்ஷம்	1 கோ 95 லக்ஷ.	8 கோ. 36 லக்ஷ
1943	2 ,, 20 ,,	2 ,, 50 ,,	10 ,, 53 ,,
1945	3 ,, 75 ,,	3 ,, 41 ,,	14 ,, 87 ,,

1945ம் வருஷத்தில புதிய வியாபாரம் 1 கோடி 15 லக்ஷத்துக்குமேல் [illegible]

"லக்ஷ்மி"யிடம் வருஷா வருஷம் பொது மக்கள் இன்ஷ்யூர் செய்து கொள்வதுடன் அதிக எண்ணிக்கையுள்ள பாலிஸிதாரர்கள் இந்தப் பெரிய தேசிய ஸ்தாபனத்தில் திரும்பத் திரும்ப புதுப் பாலிஸிகளையும் பெற்றுக் கொள்கிறார்கள்

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

(தலைமை ஆபீஸ்: லாகூர்)

C. R. சேஷன், M.A.
பிராஞ்சு மானேஜர்
மதராஸ் பிராஞ்சு:
4/105, அரமணைக்காரத் தெரு, ஜி.டி.

C. குட்டன் நாயர்
சப் பிராஞ்சு மானேஜர்
5/11B, இம்பீரியல் பாங்க்
ரோட், கோயமுத்தூர்

தீபாவளி
ரிலீஸ்
ஜூபிடர்ஸ்
ஸ்ரீ முருகன்
டைரக்ஷன்: M.சோமசுந்தரம் & V.S.நாராயணன்
அஸோஸியேட் டைரக்ஷன் & வசனம் A.S.A.சாமி B.A.Hons
பாட்டு: சிவன்
மலபார் விநியோக உரிமை
வர்மா பிக்சர்ஸ்
திருப்பணித்துறை
சந்துரு பிலிம்ஸ்
எர்ணாகுளம்
மைசூர் விநியோக உரிமை
ஜூபிடர்ஸ்
வித்யாபதி
டைரக்ஷன் A.T.கிருஷ்ணஸ்வாமி, B.A.
ஜூபிடர்
ரிலீஸ்
ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், மதுரை
ஜூபிடர்ஸ்
வால்மீகி
பிரபாத் & ஜானகிராம்
டாக்கீஸ்
மதராஸ்
தயாராகிறது!
ராஜகுமாரி
விப்ரநாராயண
அபிமன்யூ
கிருஷ்ண விஜயம்
ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட், மதராஸ் & திருப்பூர்

அந்தப் பிரதேசங்களிலுள்ள
மக்கள் உற்சாகத்துடன் உயிர்
வாழ, சென்னை விவசாய
மந்திரி குமாரசாமி ராஜா
சிபார்சு செய்வது என்ன?

தேநீர் கொடுத்து தெம்பு கொடுக்கிறார்.



உங்கள் உற்சாகத்திற்கும் ஊக்கத்திற்கும்
ஏற்றது

சிசர்ஸ் டீ

வெள்ளி, தங்கம், வைர நகைகளுக்கு

P. A. ராஜு செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர்
தந்தி : ராஜா
போன் : 218. A

G.H.RAO

Printed at the Commercial Printing & Publishing House, 45-46, Armenian Street
G. T., Madras.—M.S. 120A